
உயிரென
நீ வந்தாய்...!
பிரேமலதா பாலசுப்ரமணியம்
உயிரென நீ வந்தாய்...! ★ பிரேமலதா பாலசுப்ரமணியம்
உயிரென
நீ வந்தாய்...!
பிரேமலதா பாலசுப்ரமணியம்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உயிரென நீ வந்தாய்..! |
| ஆசிரியர் | : பிரேமலதா பாலசுப்ரமணியம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : அக்டோபர், 2012 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 284 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |




# உயிரென
# நீ வந்தாய்..!

# உயிரென
# நீ வந்தாய்..!

## 1

''குறை ஒன்றும் இல்லை, மறைமூர்த்தி கண்ணா...

குறை ஒன்றும் இல்லை, கண்ணா...

குறை ஒன்றும் இல்லை, கோவிந்தா...''

அலுவலகத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்த ஆதித்யனுக்கு, பக்கத்தில் இருந்த பெருமாள் கோயிலில் ஒலித்துக் கொண்டருந்த எம்எஸ் அம்மாவின் குரல் எப்பொழுதும் போல பிரமிப்பை ஏற்படுத்தியதோடு அவனது அம்மாவின் ஞாபகத்தையும் வரவழைத்தது.

ஆண்டவனிடம் முழு சரணாகதி அடைந்த ஒரு பக்தனின் மன வெளிப்பாடாக அமைந்த அந்தப் பாடல், அம்மாவுக்கு ரொம்பவும் பிடிக்கும். அம்மா தினமும் பூஜையில் பாடுவார்கள். ஆதித்யன் கூட அம்மாவை

கேலி செய்வான். "குறை ஒன்றும் இல்லைன்னு பாடிட்டு, எப்படிம்மா வரிசையா வேண்டுதலையும் வைக்கறீங்க?" என்று.

"கடவுள் கிட்ட பிரார்த்தனை செய்யறதைக் கேலி பண்ணக் கூடாது, கண்ணா!" என்று அம்மா சொல்வார்கள். எதற்குமே கோபம் வராது அம்மாவுக்கு.

அம்மாவைப் பற்றி நினைத்ததும், அவர்களைப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது. ஆனால்... ம்ஹூம், இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால், அலுவலகம் செல்ல நேரமாகி விடும் என்று நினைத்தவன், வேகமாகக் கிளம்பினான்.

கிளம்பி வெளியே வந்தவனை, எதிர்த்த பிளாட்டில் வசிக்கும் தம்பதியினரின் நான்கு வயது குழந்தை ரம்யாவின் "குட் மார்னிங், அங்கிள்!" என்ற மழலையான குரல் எதிர்கொண்டது.

"வெரிகுட் மார்னிங் ரம்யா குட்டி... குட்டிம்மா இன்னைக்கு ஸ்கூலுக்குப் போகலையா?"

"இல்ல அங்கிள், இன்னைக்கு நான் லீவ்..." என்ற குழந்தை அவனை நோக்கி தன் சின்ன கையை நீட்டியது.

"என்னடா?"

"சாக்லேட்."

"சாக்லேட்டா? வாரத்துக்கு ஒண்ணுதானே சொன்னேன்... அஞ்சு நாள்தானே ஆச்சு?"

"சரிதான் அங்கிள், இன்னைக்கு எங்க சித்தி கல்யாணத்துக்காக ஊருக்குப் போறோம்... ஒரு வாரம் கழிச்சுதான் வருவோம்... அப்புறம் இந்த வார சாக்லேட் மிஸ் ஆயிடும் இல்ல... அதுதான் இப்பவே வாங்கிக்கலாம்னு கேட்டேன்" என்ற குழந்தையின் சாமர்த்தியத்தை வியந்து



கொண்டே, தன் பாக்கெட்டில் இருந்து சாக்லேட்டை எடுத்துக் கொடுத்தவன், குழந்தையின் உயரத்துக்கு குனிந்து கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டு விட்டுக் கிளம்பினான்.

அவனுக்கும் தெரியும் இன்று அவர்கள் ஊருக்குப் போகிறார்கள் என்று. அவள் அப்பா நேற்றே சொல்லி இருந்தார். அதனால்தான் அவளுக்குக் கொடுப்பதற்காக சாக்லேட் வாங்கி வைத்திருந்தான்.

ஆனாலும் குழந்தை சாக்லேட்டை வாங்கிய விதத்தை நினைத்துச் சிரித்தவனுக்கு, ரம்யாவை முதலில் பார்த்த ஞாபகம் வந்தது.

இந்த பிளாட்டுக்கு வந்த முதல் நாள், அவன் கதவைத் திறந்தபோது, "நீங்கதான், இங்கே புதுசா வரப் போறவங்களா?" என்ற குரல் கேட்டுத் திரும்பியவன் கண்ணில் ஆராய்ச்சிப் பார்வையுடன் நின்ற குழந்தை கண்ணில் பட்டது.

"ஆமாம்..."

"ஆன்ட்டி வரலையா?" என்ற கேள்வியில் ஆச்சரியமடைந்தவன், "ஏன், ஆன்ட்டிக்கு எதாவது வச்சிருக்கிங்களா?" என்றான்.

"இல்ல அங்கிள், போன தடவ வந்த ஆன்ட்டி, முதல் நாள் வந்தப்போ, மில்க் ஷேக் ஒண்ணு கொடுத்தாங்க, ரொம்ப டேஸ்டா இருந்தது, அதான் கேட்டேன்" என்று குழந்தை சொல்ல, பாயசத்தைத்தான் மில்க் ஷேக் என்று சொல்கிறது என்று தெரிந்ததும் ஆதித்யனுக்கு புன்னகை மலர்ந்தது.

"நான் மட்டும்தான் இங்கே வரப் போறேன். ஆன்ட்டி எல்லாம் கிடையாது" என்று சொன்னவுடன் குழந்தையின்

முகம் வாடியது. உடனே, ''உங்களுக்கு அந்த மில்க் ஷேக் செய்யத் தெரியுமா?'' என்று ஆவலுடன் கேட்ட குழந்தைக்கு அவன் பதில் சொல்லுமுன், ''ரம்யா... ரம்யா...'' என்று உள்ளே இருந்து குரல் கேட்டதும், குழந்தை உள்ளே ஓடி விட்டது.

குழந்தையின் வாடிய முகம் ஏனோ மனதை வருத்த, கடைக்குச் சென்று ஒரு பெரிய மில்கி பார் வாங்கிக் கொண்டு வந்து, குழந்தையின் வீட்டுக் கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர், ''என்ன வேணும் சார் உங்களுக்கு?'' என்று கேட்க, அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, தனக்கும் குழந்தைக்கும் நடந்த உரையாடலை சொல்லி, இப்பொழுது சாக்லேட் கொடுக்க வந்திருப்பதாகவும் சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்டவர், ''சாரி சார். வந்த அன்னைக்கே உங்களைத் தொந்தரவு பண்ணிட்டா போலிருக்கு...'' என்று சொல்லி அவனை உள்ளே அழைத்தார்.

''அதெல்லாம் இல்லை... குழந்தைகளால் மட்டும் தான் சார், அப்படி மனதில் பட்டதை உடனே பேச முடியும்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்தக் குழந்தை ஒரு பெண்மணியோடு ஹாலுக்கு வந்தது.

குழந்தையைப் பார்த்ததும், ''ஹாய் ரம்யா... எனக்கு மில்க் ஷேக் எல்லாம் பண்ணத் தெரியாது... அதான் உனக்கு மில்கி பார் வாங்கிட்டு வந்தேன்'' என்று சொல்லிக் கொடுக்க, அது வாங்காமல், அந்தப் பெண்மணியைப் பார்க்க, கொஞ்ச நேரம் முன்பு அந்த போடு போட்ட குழந்தை இப்பொழுது சாக்லேட்டை வாங்க



அனுமதி கேட்பதைப் பார்த்ததும், அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஒரு வழியாக ''தேங்க் யூ!'' சொல்லி சாக்லேட்டை வாங்கிக் கொண்டது குழந்தை.

பரஸ்பரம் வேலை பற்றிய அறிமுகம் முடிந்ததும், ''குழந்தை ரொம்ப ஸ்வீட்... உங்களுடைய பேத்தியா சார்?'' என்று அவன் கேட்டதும், பெரியவர்கள் இருவரின் முகமும் மாறியது. அவரையும் அந்தப் பெண்மணியையும் மாறி மாறிப் பார்த்தவன், தான் ஏதாவது தவறாகக் கேட்டு விட்டோமோ என்று எண்ணி, என்னவென்று கேட்பதற்குள், பெரியவர் சமாளித்துக் கொண்டு, ''இல்லை சார், எங்க குழந்தைதான், லேட் மேரேஜ்'' என்று சொல்லவும் அவனுக்கு தன் மேலேயே கோபம் வந்தது.

''சாரி சார், சாரி... வெரி வெரி சாரி...'' என்று அவன் சாரி கேட்டுக் கொண்டே போக, அவர் ''பரவாயில்லை சார், தெரிஞ்சவங்களே கேலி பண்றாங்க... நீங்க தெரியாமல் கேட்டதுக்கு போய் ஏன் இவ்வளவு பீல் பண்றிங்க?'' என்றார்.

அதற்குள் குழந்தை பாதி சாக்லேட்டை சாப்பிட்டு முடித்து, வாயைக் கொப்புளித்து விட்டு, மீதியை பிரிட்ஜில் வைத்திருந்தது. இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தவன், ''நல்ல பழக்கம் சொல்லிக் கொடுத்திருக்கிங்க மேடம்'' எனவும் அந்தத் தாயின் முகம் மலர்ந்தது.

குழந்தையை அருகில் அழைத்தவன், படிக்கும் பள்ளி மற்றும் வகுப்பைக் கேட்க, உற்சாகத்துடன் பதில் சொல்லிய குழந்தை, தான் எப்பவும் மிஸ்ஸிடம் 'குட் கேர்ள்' என்று பேர் எடுப்பதைப் பெருமையுடன் சொல்ல, பேசிக்கொண்டே இருந்ததில் வாரத்துக்கு ஒரு சாக்லேட்

தருவதாக, குழந்தைக்கும் அவனுக்கும் ஒப்பந்தம் ஆனது.

அவன் இயல்பாகப் பழகிய விதத்தைப் பார்த்து, ரம்யாவின் தந்தை ராமநாதனுக்கு ஆதியை ரொம்பப் பிடித்துப் போனது. தினமும் இரவு படுக்கப் போகும் முன் அவருடன் பேசுவது வழக்கமாயிற்று. அவனுக்கும், தேவை இல்லாத கேள்விகள் இல்லாமல் அவர் இயல்பாகப் பேசுவது பிடித்தது. ஒரு நாள் அப்படி பேசிக் கொண்டிருக்கும்போது, ராமநாதன், ''எனக்கு என்ன வயசு இருக்கும்னு நினைக்கிறீங்க?'' என்று கேட்டார்.

அவாது கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''ஏற்கனவே எதோ உளறி உங்க மனசைக் கஷ்டப்படுத்திட்டேன் சார், நீங்களே சொல்லுங்க'' என்றான்.

''நாற்பத்தி மூணு'' என்றார் அவர்.

ஆதிக்கு ஆச்சரியமாக இருந்தது. தலை முக்கால் பாகம் நரைத்திருந்த அவர் உருவத்தை வைத்துப் பார்த்தால் நிச்சயம் ஐம்பதுக்கு மேல்தான் சொல்ல முடியும். நல்ல வேளை... தான் எதாவது உளராமல் இருந்தோமே என்று இருந்தது அவனுக்கு.

அவனது ஆச்சரியத்தைப் பார்த்தவர், சிரித்துக் கொண்டே ''அம்மா அப்பா நான் வேலைக்குச் சேர்ந்த உடனேயே இறந்துட்டாங்க தம்பி, எனக்குப் பிறகு பிறந்த மூன்று தங்கைகளுக்குக் கல்யாணம் செஞ்சு வச்சிட்டு நிமிர்ந்த போதே வயசு முப்பத்து ஆறு ஆயிடுச்சு. இதுக்கு மேல் கல்யாணம் எதுக்குன்னு ரெண்டு வருஷம், தங்கைகள் குடும்பத்துக்காகவே உழைச்சிட்டு இருந்தேன். ஒரு நாள் திடீர்னு உடம்புக்கு வந்தது தம்பி... ஹாஸ்பிடல்ல சேர்க்க வேண்டிய நிலைமை...



தங்கச்சிங்க மூணு பேரும் வந்து பார்த்ததோட சரி... என் கூட யாருமே இல்லை... அப்போதான் நம்மளுக்குன்னு ஒரு துணை வேணும்னு தோணுச்சு... அப்புறம் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்து என்னை மாதிரியே துணை தேவைப்படுற சங்கரியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்... ரம்யா பிறந்ததுக்கு அப்புறம் வாழ்க்கைக்கே ஒரு புது அர்த்தம் வந்த மாதிரி இருக்கு... என்ன இருந்தாலும் நமக்குன்னு ஒரு மனைவி, குழந்தை இருப்பது ஒரு சந்தோசம்தான்'' என்று அவர் சொன்னதை நினைத்துப் பார்த்தவனுக்கு ஒரு பெருமூச்சு எழுந்தது.

அலுவலகத்தின் உள்ளே சென்றதும், வரவேற்பில் இருந்த நிஷா, ''ஹாய் ஆதி! குட் மார்னிங்'' என்றாள். பதிலுக்கு ''குட் மார்னிங்'' சொல்லி விட்டு அவன் நகரும் போது, ''ஒரு நிமிஷம்...'' என்று சொல்லி அவனை நிறுத்தியவள், ''ஒரு வாரமா உங்ககிட்ட பேசணும்னு சொல்லிட்டு இருக்கேனே... இன்னைக்காவது, சாயந்தரம் காபி ஷாப் போகலாமா?'' என்றாள்.

ஆதிக்கு ஆயாசமாக வந்தது. இவளும் ஒரு வாரமாகக் கேட்கிறாள். இவனும் ஒவ்வொரு நாளும், வர முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். இருந்தும் அவள் சளைக்கவில்லை. இன்றைக்கு இதற்கு ஒரு முடிவு கட்டி விட வேண்டும் என்ற நினைப்புடன் அவளை பார்த்தவன், ''சாரி நிஷா... இன்னைக்கு என் கேர்ள் பிரண்டோடு வெளியில் போகணும்,

இன்னைக்குன்னு இல்லை... இனிமேல் எப்போவும் என்னை எங்கேயும் கூப்பிடாதிங்க... ஏன்னா, அவளுக்கு நான் எந்தப் பெண்ணோடும் வெளியில் போறது பிடிக்காது... அவளுக்கு மட்டுமில்லை... எனக்கும் பிடிக்காது''

என்று சொன்னவன், அவள் முகம் மாறியதை கவனிக்காமல் உள்ளே சென்றான்.

அவன் பின்னேயே வந்த அருள், ''ஹேய் ஆதி, நீ நிஷா கிட்ட சொன்னது உண்மையா? ஆளு பூனை மாதிரி இருந்துகிட்டு, இதெல்லாம் வேற இருக்கா?'' என்று கேலி செய்ய, ''நீ வேறப்பா, டெய்லி அவங்களும் கூப்பிடறாங்க... நானும் எதாவது ஒரு காரணம் சொல்றேன்... இதுக்கு ஒரு முடிவு கட்டணும்னுதான் அப்படிச் சொன்னேன்'' என்றான்.

''என் ஆதி, நிஷா அழகாத்தானே இருக்கிறாள்... நல்ல பொண்ணும் கூட... எனக்குத் தெரிஞ்சு அவள் வேற யார்கிட்டயும் இப்படிப் பேசினதே இல்லப்பா... நான் கூட ரெண்டு தரம் முயற்சி பண்ணிப் பார்த்திருக்கேன்... அவள் பிடி கொடுத்துப் பேசவில்லை... ஒருவேளை அவளுக்கு உன் மேல் உண்மையிலேயே காதல் இன்ட்ரெஸ்ட் இருக்கோ என்னமோ?''

''ப்ளீஸ் அருள்... இந்த விஷயத்தை இதோடு விடு. எனக்கு இதில எல்லாம் விருப்பம் இல்லை'' என்று சொன்னவன், அதோடு வேலையில் இறங்கினான்.

வேலை நேரம் முடிந்ததும், அவசரமாகக் கிளம்பிய ஆதியைப் பார்த்த அருள், ''ஹேய்... நீ தினமும் வேலை முடிஞ்சதும் அவசரமாய் கிளம்புவதைப் பார்த்தால், காலையில் நிஷா கிட்ட சொன்ன மாதிரி உண்மையிலேயே கேர்ள் பிரண்டைப் பார்க்கப் போற மாதிரிதான் இருக்கு'' என்று கிண்டல் செய்ய, ஆதி பதில் சொல்லாமல் ஒரு சிரிப்புடன் கிளம்பினான்.

''அதானே... உன் வாயில் இருந்து ஒரு முத்தும் உதிராதே... சரியான கல்லுளி மங்கன்'' என்று அருள்



சலித்துக் கொண்டான். ஆதி வேலையில் சேர்ந்த இந்த இரண்டு வாரத்தில், யாரிடமும் தேவைக்கு அதிகமாகப் பேசுவதில்லை. மற்றவர்கள் அவன் பேச மாட்டான் என்று ஒதுங்கிப் போக, அருள்தான் ஆதியிடம் தானாக வந்து பேசுவான். தானாக வந்து பேசுகிறவனிடம் எப்படிப் பேசாமல் இருப்பது என்று ஆதியும் அருளிடம் பேசுவான்.

பேச்சு சொந்த விஷயங்களைப் பற்றி ஆரம்பித்து விட்டால், ஆதி ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு நகர்ந்து விடுவான். அருளுக்கு அதில் வருத்தம் இருந்தாலும், ஆதியிடம் இருந்த எதோ ஒன்று அருளை ஆதியிடம் இருந்து ஒதுங்கி போகாமல் இருக்க வைத்தது.

வேலை முடிந்ததும், நேராக அன்னை இல்லத்துக்குச் சென்றான். எப்பொழுதும் ஆறு மணிக்கெல்லாம் அங்கே போய் விடுவான். அம்மா, அப்பாவை விட்டு விட்டு இங்கே வந்த இந்த இரண்டு வாரத்தில், அலுவலக நேரம் முடிந்ததும், அவனுக்கு பொழுது போவது அன்னை இல்லத்தில்தான்.

அங்கே சென்று பிள்ளைகளிடம் விளையாடுவது, பாடம் சொல்லிக் கொடுப்பது என்று பொழுது போகும். பிறகு, இரவு எட்டு மணிக்குக் கிளம்பினால், ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, ரம்யா வீட்டினரோடு கொஞ்ச நேரம் பேசி இருந்து விட்டுத் தூங்கப் போவான்.

காலையில் இருந்தே காதல், கல்யாணம் என்றெல்லாம் பேச்சு நடந்தது அவன் மனதில் சஞ்சலத்தை உண்டு பண்ணி இருந்தது. அவனுக்கும் ஆசையில்லையா என்ன? ஆனால்... 'இப்போது எதற்கு அந்த எண்ணம்?' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு வேகமாக நடந்தான்.

ஆதி, அன்னை இல்லத்தின் வாயிலை அடைந்த போது, அங்கே இருந்த மாமரத்தின் கீழே இருந்து பிள்ளைகள் ஆரவாரம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

மரத்தின் மேலே இருந்து, ''சண்டை போடாமல் ஒவ்வொருத்தரா நான் போடற மாங்காயைப் பிடிக்கணும், சண்டை போட்டால், நான் கீழே இறங்கி வந்துடுவேன், சொல்லிட்டேன்...'' என்ற கண்டிப்பு குரல் கேட்டது. குரலில் கண்டிப்பு இருந்தாலும், அதில் இருந்த இனிமை ஆதியின் மனதை வருட, யார் மரத்தின் மேல் இருக்கிறார்கள் என்று நின்ற இடத்தில் இருந்தே பார்க்க, இளமஞ்சள் நிற சல்வார் அணிந்த பெண்ணின் கால் தெரிந்தது. அவன் கொஞ்ச தூரத்தில் இருந்தே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

அவளின் கண்டிப்பு குரல் வேலை செய்தது. அதுவரை, 'எனக்கு... உனக்கு...' என்று சண்டையிட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள், சமர்த்தாக தங்களுக்கான மாங்காயை அவள் மேலிருந்து போட பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

'கெட்டிக்காரிதான்' என்று அவன் மனதுக்குள் மெச்சும் போதே, அவள் குரல் மீண்டும் கேட்டது. ''எல்லாருக்கும் மாங்காய் கிடைச்சாச்சு இல்லை... நான் இறங்கிடவா?'' என்று கேட்டவள், பிள்ளைகள் ஒத்துக் கொண்டதும், ''ரவி, மது... ரெண்டு பெரும் ஏணியை நல்லா பிடிங்கப்பா, அது ஏற்கனவே கொஞ்சம் சரியில்லை போல'' என்று சொல்லிக் கொண்டே ஏணியில் காலை வைத்தாள்.

அதுவரை கொஞ்சம் தூரத்தில் நின்று கொண்டிருந்த ஆதி, அவள் முகத்தைப் பார்க்கும் ஆவலில் வேகமாக



மரத்தை நெருங்கினான். அவனைப் பார்த்தும், ஏணியைப் பிடித்துக் கொண்டிருந்த ரவி, ''ஹை... ஆதி அண்ணன் வந்திட்டாரு'' என்று கூச்சலிட, அந்த திடீர் சத்தத்தில் ஏணியில் இறங்கிக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டுத் திரும்ப, கால் இடறி கீழே விழப் போனாள்.

அவளையே பார்த்துக் கொண்டு வந்த ஆதியின் கண்களில் அவள் விழப்போவது பட, வேகமாக ஓடி வந்தவன், அவள் இடையைத் தாங்கிப் பிடித்து விழாமல் நிறுத்தினான்.

மீதி இருந்த இரண்டு படிகளை சமாளித்துக் கொண்டு இறங்கியவள், அவனைப் பார்த்துக் கூச்சத்துடன் சிரித்தபடி, ''தேங்க்ஸ்...'' என்றாள். ஏற்கனவே அவளது குரலால் கவரப்பட்டிருந்த ஆதியை, அந்த சின்னச் சிரிப்பு இன்னும் வசியப்படுத்த, கண் சிமிட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

தன்னுடைய நன்றிக்கு எந்தப் பிரதிபலிப்பும் காட்டாமல், தன்னையே பார்த்துக் கொண்டிருந்தவன் முகத்துக்கு நேராக தன் கையை ஆட்டியவள், ''ஹலோ! என்ன ஆச்சு? நின்னுகிட்டே தூங்கறிங்களா என்ன?'' என்று கேலி செய்யவும், தன் தலையை உலுக்கிக் கொண்டவன், ''ஏணியில் இறங்கும்போது, அதில் கவனம் இல்லாமல் தூங்கிக் கொண்டிருந்தவங்க கேட்கிற கேள்வியைப் பார்'' என்று சத்தமாகவே முணுமுணுத்தான்.

''ஹலோ! யார் சார் தூங்கிட்டு இருந்தாங்க? யாரோ வி.ஐ.பி. வர ரேஞ்சுக்கு இந்தப் பையன் போட்ட சத்தத்தில் கொஞ்சம் தடுமாறி விழ இருந்தேன்... அதுக்கு போய் என்ன என்னமோ சொல்றீங்க? நீங்க பிடிக்கலைன்னாலும் நானே சமாளிச்சு இருப்பேன்'' என்று

படபடவெனப் பொரிந்தவளின் முக பாவத்தை ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, அவளை இன்னமும் சீண்டத் தோன்றியது.

''அப்படியா? உதவி பண்ணது என் தப்புதான்... குரங்கு மாதிரி மரத்தில் ஏறி மாங்காய் பறிச்சவங்களுக்கு, கீழே விழாமல் சமாளிச்சிருக்க முடியும்னு தெரியாமப் போயிடுச்சு.''

''ஹலோ! யாரைப் பார்த்துக் குரங்குன்னு சொல்றீங்க? மரத்தில் ஏறி மாங்காய் பறிக்கிறவங்க எல்லாம் உங்களுக்கு குரங்கா?'' என்று பதிலுக்கு அவள் கோபத்துடன் கேட்க, அவள் கோபத்தைக் கண்டு கொள்ளாத ஆதி, ''என்ன ஆச்சு? எதாவது போனை முழுங்கிட்டீங்களா என்ன? வார்த்தைக்கு வார்த்தை ஹலோ போடறீங்க?'' என்று கிண்டல் செய்தான்.

''ஹ...'' என்று தொடங்கியவள் சமாளித்துக் கொண்டு, ''அது எப்படி என்னைப் பார்த்து நீங்க குரங்குன்னு சொல்லலாம்? என்னைப் பார்த்தா அப்படியா தெரியுது?'' என்றாள் கோபக்குரலில். என்னதான் குரலில் கோபம் இருந்தாலும், அதில் கொஞ்சம் ஆதங்கமும் சேர்ந்து இருந்ததோ?

பதிலுக்காகக் காத்திருந்தவளைப் பார்த்த ஆதிக்கு, கோபத்தில் சிவந்திருந்த அவளது முகம் அவளது அழகை சற்றும் குறைக்கவில்லை என்பது தெரிந்தது. அவளைச் சீண்ட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் குரங்கு என்று சொன்னது கொஞ்சம் அதிகப்படிதான் என்று தோன்ற, ''சாரி... நான் அப்படி நினைத்துச் சொல்லவில்லை'' என்றான்.

அவன் சாரி சொன்னதும், அவள் முகம் சட்டென்று சரியானதைப் பார்த்த ஆதிக்கு ஆச்சரியமாக இருந்தது.



அவனது ஆச்சரியத்தைப் பொருட்படுத்தாமல் அவள், தாங்கள் பேசிக் கொண்டிருப்பதை சுவாரசியமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகளை நோக்கி, ''போங்க.. போங்க... உங்க ஆதி அண்ணன் வந்திட்டார்... புத்தகத்தை எடுத்திட்டு வந்து படிக்க ஆரம்பிங்க'' என்று அனுப்பி வைத்தாள்.

பிள்ளைகள் சென்றதும், ''சும்மா உங்களைக் கிண்டல் செய்யப் போய் அந்த மாதிரி சொல்லிட்டேன், மறுபடியும் சாரி'' என்று உண்மையான வருத்தத்துடன் சொன்னவனை நோக்கிப் புன்னகையை சிந்தியவள், ''இட்ஸ் ஓகே... நான் வந்தனா... இங்கே சேர்ந்திருக்கும் புது நர்ஸ்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். ஆளைப் போலவே பெயரும் அழகாக இருக்கிறது என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

''அதென்ன வந்த அன்னைக்கே மரத்தில ஏறிட்டீங்க?''

''இல்லை... ரெண்டு நாளா குழந்தைங்க செக்யூரிட்டி அண்ணன் கிட்ட கேட்டுட்டு இருக்காங்களாம்... அவர் கால்ல சுளுக்கு இருக்கவே ஏற முடியாதுன்னு சொல்லிட்டாராம்.... பசங்க பேசும்போது கேட்டேன்... எனக்கும் மாங்காயைப் பார்த்தவுடன், சின்ன வயசில மரத்தில ஏறி மாங்காய் பறிச்சது எல்லாம் ஞாபகத்துக்கு வந்ததா? அதான் ஏறிட்டேன்.''

அவள் படபடவென்று பேசுவதை ரசித்துக் கேட்ட ஆதி, பிள்ளைகள் படிக்கும் அறையை நோக்கிச் சென்று, குழந்தைகளோடு ஒன்றிப்போனான்.

வேலை முடிந்ததும், எப்போதும் போல அன்னை இல்லத்தின் தலைவியான சாரதா அம்மாவின் அறைக்குப் போனவன், அவரிடம் கொஞ்ச நேரம் பேசி விட்டுக் கிளம்பும்போது, எதிரில் வந்தனா வந்தாள்.

''ஆதி... நம்ம இல்லத்தில் ஒரு நர்ஸ் இருந்தால் நல்ல
துன்னு அடிக்கடி சொல்லிட்டே இருப்பீங்களே, இன்
னைக்குத்தான் சேர்ந்திருக்காங்க... அலுவலக வேலை
யிலும் ரொம்ப உதவியாக இருக்காங்க... பேர் வந்தனா''
என்று அறிமுகம் செய்தவர், ''வந்தனா, நான் சொன்
னேனே மிஸ்டர். ஆதி... பொருளால் மட்டுமில்லாமல்
பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித்தர சர்வீசும் செய்யற
வர் என்று... அது இவர்தான்'' என்று இருவருக்கும் அறி
முகம் செய்து வைக்க, இருவரும், தாங்கள் ஏற்கனவே
அறிமுகமாகி விட்டதை எண்ணிப் புன்னகையுடன்
தலை அசைத்தனர்.

அந்த புன்னகையோடு, வெளியே வந்த ஆதிக்கு வீடு
செல்லும் வரையிலும் புன்னகை மறையவில்லை.
குளித்துவிட்டு மெத்தையில் சாய்ந்து கண்களை மூடி
யதும், காத்திருந்ததைப் போல, வந்தனாவைப் பார்த்த
காட்சியே மலர்ந்தது. முகத்தைப் பார்க்கும் முன்பே
அவனைக் கவர்ந்த அந்தக் கண்டிப்பான குரல், சிறு
கூச்சத்துடன் கூடிய சிரிப்பு, அவளது கோபம், சாரி
சொன்னவுடன் அலட்டிக் கொள்ளாமல் புன்னகையில்
மலர்ந்த அவளது முகம் என்று முழுக்க முழுக்க அவளது
எண்ணமே தோன்றி தூக்கம் வராமல் இம்சை செய்தது.

பெண்களிடம் எப்போதுமே அளவோடு பேச்சை
நிறுத்திக் கொள்ளும் அவன், அவளிடம் வம்பிழுத்தது
அவனுக்கே ஆச்சரியம்தான். அதுக்கு குரங்கு மாதிரி
என்று சொன்னது அவனுக்கே மனம் ஆறவில்லை.
அவள் இடத்தில வேறு யாரும் இருந்திருந்தால், அவன்
கன்னம் இன்று பழுத்திருக்கும். அவன் சாரி சொன்ன
வுடன், எவ்வளவு எளிதாகக் கோபத்தை மறந்து புன்



னகைத்தாள். அவனுக்கு அவளது புன்னகை நிறைந்த
முகத்தை நினைத்துக் கொண்டிருப்பதே சுகமாக இருந்தது.

பெயர் கூட அழகுதான் 'வந்தனா' என்று உச்சரித்துப்
பார்த்தான். செல்லமாக எப்படிக் கூப்பிடுவது என்று
யோசித்தவன், 'வது' என்று சொல்லிப் பார்த்தான். நன்
றாக இருந்தது. அவளுக்குப் பிடிக்குமா? என்று யோசிக்
கும்போதே, அவளுக்கு எதற்குப் பிடிக்க வேண்டும்?
என்ற கேள்வி தோன்றியது. முதலில் தான் ஏன் அவளைச்
செல்லமாகக் கூப்பிட வேண்டும் என்ற கேள்வி
தொடர்ந்தது. படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவன்,
'என்ன முட்டாள்தனம் இது... இன்றைக்குத்தான் பார்த்த
பெண்ணைப் பற்றி இவ்வளவு நேரம் நினைத்துக் கொண்
டிருக்கிறேன்? அதுவும் செல்ல பெயர் வரை... இதற்கு
என்ன அர்த்தம்?' என்று யோசித்தான். தன் கேள்விக்கு
மனம் தந்த பதிலால் அதிர்ந்து போய், அவளைப் பற்றி
இனிமேல் நினைக்கக் கூடாது என்று தன் மனதுக்கு
உத்தரவு போட்டு விட்டுப் படுக்கையில் சரிந்தான்.
அவன் மனம் அவனது உத்தரவுக்கு செவி சாய்க்குமா?

## 2

ஆதி, என்னதான் வந்தனாவைப் பற்றி நினைக்கவே
கூடாது என்று நினைத்திருந்தாலும், காலையில் எழுந்த
துமே, அழையா விருந்தாளியாய் அவள் நினைவுதான்
வந்தது. தன் பேச்சைக் கேட்காத மனதை நொந்து
கொண்டே, வேலைகளைச் செய்தவன் அலுவலகத்துக்குக்
கிளம்பினான்.

நேற்று அவ்வளவு சொல்லியும், அருள் ஆதியைப் பார்த்தவுடன், ''என்னப்பா, நேற்று கேர்ள் பிரண்டோடு வெளியில் போயிருந்தியே, எப்படி இருந்தது அவுடிங்?'' என்று கேட்டபோதும், நேற்று வந்தனாவைப் பார்த்தது நினைவுக்கு வந்தது. 'இவன் வேற' என்று மனதில் சலித்துக் கொண்டு, வேலையைப் பார்க்கத் தொடங்கியவனுக்கு, எப்போதும் போல முழு மனதோடு வேலை செய்ய முடியவில்லை.

பார்க்கும், கேட்கும் எந்த விஷயமும், ஏதோ ஒரு வகையில் அவளை ஞாபகப்படுத்த, ஒரே நாளில் ஒரு பெண்ணால் தன்னுள் இத்தனை பாதிப்பை ஏற்படுத்த முடியுமா? என்று ஆச்சரியமாக இருந்தது.

ரொம்பவும் யோசித்து தலை வலிப்பது போல் இருந்தது. காபி குடிக்கலாம் என்று காபி மெஷின் இருந்த அறையை நோக்கி நடந்தான். எதிரே நிஷா நடந்து வந்தாள். எப்போதும் போல இவனைப் பார்த்து புன்னகைக்க முயன்றவள், அது முடியாமல் விலகிப் போனாள்.

நிஷாவைப் பார்த்தவுடன், வந்தனாவின் நினைவு மறுபடியும் வந்தது. இந்த நிஷாவும் கூடத்தான், அவனிடம் காதல் சொல்ல முயற்சி செய்திருக்கிறாள். அப்போதெல்லாம் அவனுக்கு ஒரு சின்ன சலனம் கூட எழுந்ததில்லையே. எப்படி அவளைத் தவிர்ப்பது என்றுதான் யோசித்திருக்கிறான்.

நிஷாவும் அழகுதான். பழகிய வரையில் நல்ல பெண்ணும் கூட. அப்படியானால், நேற்று தன் மனம் சொன்னது போல, வந்தனாவிடம் தனக்குத் தோன்றியது, ஈர்ப்பைத் தாண்டியது காதல்தானா? என்ற கேள்வி எழுந்தது. காதல், கல்யாணம் என்று எதையும்



இப்போதைக்கு யோசிக்க முடியாத நிலையில் இருந்தவனுக்கு, இந்த எண்ணம் பயத்தைத் தந்தது.

ஒரு வேளை அவளைத் திரும்பவும் பார்க்காமல் இருந்தால், இந்த சலனம் மறந்து விடுமோ? என்று எண்ணியவன், எப்படிப் பார்க்காமல் இருப்பது என்று யோசித்தான். அன்னை இல்லத்துக்குப் போகாமல் இருக்க முடியாது. சரி, அவளைப் பார்த்தாலும் பேசாமல் இருந்துவிட வேண்டியதுதான், அதுதான் இருவருக்குமே நல்லது என்று முடிவெடுத்த பின் மனம் வேலையில் ஈடுபட்டது.

கொஞ்ச நேரம் சரியாக வேலை செய்ய முடியாததால், அவனது வேலை முடிய எப்போதையும் விட கொஞ்ச நேரம் ஆனது. ஒரு மணி நேரம் தாமதமாய், அன்னை இல்லத்துக்குச் சென்றவன், பிள்ளைகள் படிக்கும் அறைக்குள் நுழைய, நேற்று போலவே இன்றும் அவளது குரல்தான் வரவேற்றது.

''உங்க ஆதி அண்ணனுக்கு நேற்று உன் கணக்குப் பாடத்தைப் பார்த்து பயம் வந்திருக்கும். அதான் இன்னைக்கு ஆள் எஸ்கேப் ஆயிட்டாரு... நீ என்கிட்டே உன் வீட்டுப் பாடத்தை முடிச்சிடு... அப்போதான் சாப்பிட்டு சரியான நேரத்துக்குப் படுக்க முடியும், சரியா?'' என்று ஆதிக்கு முதுகைக் காட்டியபடி அமர்ந்து ஒரு பையனிடம் அதட்டிக் கொண்டிருந்தாள்.

அந்த பையன், ஆதி வருவதைப் பார்த்துவிட்டு, ''அண்ணன் வந்திட்டாரு!'' என்று குதூகலக் குரலில் சொல்ல, சட்டென்று திரும்பிப் பார்த்த வந்தனாவின் முகத்தில் அசடு வழிந்தது.

அவன் எதுவும் கேட்குமுன்னேயே, ''இல்லை... ரொம்ப லேட்டாயிடுச்சு... இவன் உங்க கிட்டதான்

வீட்டுப் பாடம் பண்ணுவேன்னு அடம் பிடிச்சிட்டு இருந்தான்... எல்லாத்தையும் சரியான நேரத்துக்கு முடிச்சால் தானே, எல்லார் கூடவும் உட்கார்ந்து சாப்பிட முடியும், அதான்...'' என்று இழுத்தவளைப் பார்த்தவுடன், ஆதிக்கு தப்பு செய்து விட்டு விழிக்கும் குழந்தை போலத் தோன்ற, சிரிப்புதான் வந்தது.

அவளைப் பார்த்தாலும் பேசக்கூடாது என்று எடுத்திருந்த வைராக்கியம் காற்றில் பறக்க, ''அதுக்காக, நேற்று தான் பார்த்த ஒருத்தரைப் பற்றி இப்படிப் பேசலாமா?'' என்று வேண்டுமென்றே வரவழைத்த கறார் குரலில் கேட்டான்.

''சாரி...'' என்று முகம் வாட சொன்னவளைப் பார்த்த பிறகு, கோபமாக நடிப்பது கூட அவனால் முடியவில்லை. ''இட்ஸ் ஒகே...'' என்று நேற்று அவள் சொன்ன மாதிரியே சொல்லிக் காட்டியவன், பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலையில் மூழ்கினான். அவளுமே, செய்து கொண்டிருந்த வேலையைத் தொடர, கிடைத்த இடைவெளிகளில், அடுத்தவர் பார்க்காத போது, இருவரது கண்களும் ஒருவரை ஒருவர் தழுவிய வண்ணம் இருந்தது.

வேலை முடிந்து எப்போதும் போல சாரதா அம்மாவிடம் கொஞ்சம் நேரம் பேசி இருந்து விட்டுக் கிளம்பியவன், அவளைத் தேடிய கண்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு நடந்தான்.

அவன் வாயிலை நெருங்கியதும், ''ஒரு நிமிஷம்...'' என்று வந்தனாவின் குரல் தடுத்தது. அவள் குரல் கேட்டுத் துள்ளத் துவங்கிய மனதை கட்டுப்படுத்திக் கொண்டு சாதாரணமாகத் திரும்ப அவன் ரொம்பவே பாடுபட வேண்டியதாயிற்று. அவன் நின்றதும், அவசரமாக அவன் அருகில் வந்தவள், ''சாரி...'' என்றாள்.



''அதுதான் ஏற்கனவே சொல்லிட்டீங்களே, அதுக்குக் காரணம் வேற சொல்லியாச்சே...'' என்று அவன் சொல்ல, அவள் ஒரு நிமிடம் அமைதியாக இருந்து விட்டு ''அது மட்டும் காரணமில்லை...'' என்று அவள் இழுக்க,

''பின்னே?''

''நீங்க எப்பவும் சரியான நேரத்துக்கு வந்துடுவீங்கன்னு பசங்க சொன்னாங்க... அந்த நேரம் கடந்தும் நீங்க வரலைன்ன உடனே எனக்குக் கொஞ்சம் டென்ஷன் ஆயிடுச்சு, அதான்...''

'நான் சரியான நேரத்துக்கு வரவில்லை என்றால் உனக்கு என்ன?' என்று வாய் வரை வந்த கேள்வியை அடக்கியவன், ''சரி நான் கிளம்பறேன்'' என்று சொல்லி வாயிலை நோக்கி நடக்கத் துவங்கினான்.

''நாளைக்கு சரியா வந்துடுவீங்கதானே?'' என்று அவள் ஆவலுடன் கேட்டவுடன், அதுவரை அதிகம் பேசாமல் இருந்தவனால் இப்போது அது முடியவில்லை.

''பின்னே? இல்லன்னா பாடம் சொல்லிக் கொடுக்க பயந்து போய் எஸ்கேப் ஆயிட்டேன் என்று கெட்ட பெயர் வருமே'' என்று அவன் சிரிப்புடன் சொல்ல,

''ஹே... அதான் ரெண்டு தரம் சாரி சொல்லிட்டேன் இல்ல...'' என்று அவள் சின்னச் சிணுங்கலுடன் சொல்ல, ஆதிக்கு அவள் முகத்தில் இருந்து பார்வையை விலக்கவே முடியவில்லை.

முயன்று தன்னை சமாளித்துக் கொண்டவன், ''சும்மா சொன்னேன்... கண்டிப்பா சரியான நேரத்துக்கு வந்துடுவேன்... சரியா?'' என்று மென்மையாகச் சொல்ல, அவள் முகம் மலர்ந்து ''தேங்க்ஸ்...'' என்றாள்.

திற்கு மேல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால், எதாவது உளறி விடுவோமோ என்று எண்ணிய ஆதி வேகமாக அங்கிருந்து நகன்றான்.

அங்கிருந்து கிளம்பி, ஹோட்டலுக்குச் சென்று பேருக்குச் சாப்பிட்டுவிட்டு, படுக்கையில் விழும் வரையிலும் அவளுடைய மலர்ந்த முகமே மனதில் நிறைந்து இருந்தது. அவளுடைய அந்தச் செல்லச் சிணுங்கல், அடிக்கடி மனதில் தோன்றி, முந்தைய நாளைப் போலவே தூக்கத்தைக் கெடுத்தது.

அவளது நினைவில் அவன் சஞ்சரித்துக் கொண்டிருந்த போது, அவனது போன் அழைக்க, எடுத்துப் பார்த்தவன், அவனது நண்பன் ரகுவின் அழைப்பு என்று தெரிந்ததும், வேகமாக எடுத்தான்.

"சொல்லு ரகு, எப்படி இருக்க? அம்மா, அப்பா எல்லாம் எப்படி இருக்காங்க?" என்றான்.

"நான் நல்லா இருக்கேன் ஆதி... அம்மாதான் ரொம்பவும் உடைஞ்சு போய் இருக்காங்க... நீ சொன்னதுக்காக தினமும் அவங்களைப் போய்ப் பார்த்துப் பேசிட்டு இருக்கேன்... ஒவ்வொரு நாளும் அவங்க பலவீனமா ஆயிட்டே இருக்கிற மாதிரி இருக்கு... வார்த்தைக்கு வார்த்தை உன் பேச்சுதான்... நீ பேசாமல் இங்கே வந்துடேன் ஆதி... என்னால அவங்களை இந்த நிலைமையில் பார்க்கவே முடியலை... உங்கப்பா வேற என்னை வில்லனைப் பார்க்கிற மாதிரியே பார்க்கிறார்" என்று தன் வழக்கத்துக்கு மாறாக, படபடவெனப் பேசிய நண்பனின் பேச்சைக் கேட்டதும், ஆதிக்கும் அம்மாவை உடனே பார்க்க வேண்டும் போலத் தோன்றியது.

"இன்னும் ரெண்டு மாசம் தானே ரகு, நானே வந்துடுவேன்" என்றான் ஆதி.



"இங்கே உன் அப்பா, என் கிட்ட சொல்றார். 'அவன் விருப்பத்துக்கு மாறா எதுவும் நடக்காது... அவனை உடனே வரச் சொல்லுன்னு' எனக்கு அவன் எங்கே இருக்கான்னு தெரியாதுன்னு சொன்னால், அவர் நம்பற மாதிரி இல்லை. என் போன் பில்லை எடுத்து, நான் போன் பண்ண எல்லார் நம்பரையும் செக் பண்ணிட்டார் போல... நாம பேசறதுக்கு தனி நம்பர் வச்சிருக்கோம்னு அவருக்குத் தெரியாதில்லையா?"

"இப்போ அப்படித்தான் சொல்வார் ரகு... பட், அவர் நினைச்சதை எப்படியும் செய்யத்தான் பார்ப்பார்... சோ, இப்போதைக்கு நான் அங்கே வராமல் இருக்கிறதுதான் நல்லது... அம்மாவை நினைச்சாதான் கஷ்டமா இருக்கு."

"ஒரே ஒரு தரம் போன்லயாவது பேசேன் ஆதி."

"நீதானே இப்போ சொன்னே... அப்பா போன் பில் எல்லாம் செக் பண்றார்னு... நான் அம்மாகிட்ட பேசாமல் இருக்க மாட்டேன்னு வீட்டு போனையும் கண்டிப்பா பார்ப்பார்... அதோட அம்மா கிட்ட பேசினால், அங்க வரச் சொல்லுவாங்க... அவங்களோட என்னாலையும் தட்ட முடியாது..."

நண்பன் சொல்லுவது ரகுவுக்கும் புரிந்தது. ஒரு பெருமூச்சு, பேச்சை மாற்றினான். "சரி நீ எப்படி இருக்க? எதாவது புது ப்ரெண்ட்ஸ் கிடைச்சாங்களா? இந்த சன்டே நான் வரட்டுமா ஆதி?" என்று ரகு விசாரிக்கவும், ஆதிக்கு வந்தனாவின் நினைவு வந்தது. எதையும் நண்பனுடன் பகிர்ந்து கொள்பவனுக்கு, வந்தனாவைப் பற்றிச் சொல்ல மனம் வரவில்லை.

"நீ எதுவும் கவலைப்படாதே... நான் இங்கே நல்லா இருக்கேன்... நீ இங்கே வரவேண்டாம்... அப்பா உன்னை

கண்காணிச்சிட்டே இருப்பார்'' என்று அவசரமாக மறுத்தான்.

''டேக் கேர்! ஆதி'' என்று சொல்லி ரகு போனை வைக்க, போன் வரும் வரை வந்தனாவின் நினைவில் சந்தோஷமாக இருந்த ஆதியின் மனதில், பெரிய பாரம் ஏறி அமர்ந்த மாதிரி இருந்தது.

அவள் மேல் தனக்குத் தோன்றியது காதல்தான் என்று நிச்சயமான நிலையில், 'இனிமேல் அவளைப் பார்த்துப் பழகுவது சரிதானா?' என்று மூளை கேள்வி கேட்க, மனமோ 'அவளைப் பார்க்காமல் பேசாமல் இருக்கவே முடியாது' என்று அழுத்தமாகப் பதில் சொன்னது. குழப்பத்தோடு தலையைப் பிடித்துக் கொண்டு கொஞ்ச நேரம் அமர்ந்தான்.

இந்த ஒரு மாதமாக தன் வாழ்வில் என்ன என்னமோ நடந்து விட, தான் அமைதியின்றி தவித்தது நினைவு வந்தது. ஆனால் வந்தனாவைப் பார்த்த இந்த இரண்டு நாட்களில், வேறு எதைப் பற்றிய எண்ணமும் அவனுக்கு வரவில்லை.

அவளைப் பற்றிய எண்ணங்களே மனதை நிறைக்க, அது அவனுக்கு எல்லை இல்லாத சந்தோஷத்தையும் கொடுத்தது. அதை கெடுத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை.

பாலைவனத்தில் தண்ணீர் இல்லாமல் தவித்தவனுக்கு, அமிர்தமே கிடைத்த மாதிரி, வந்தனாவின் அருகாமை இருப்பதாக உணர்ந்தான்.

காதல், கல்யாணம் என்று போனால் தானே பிரச்சனை, தானாக காதல் என்று சொல்லப் போவதில்லை. அதனால், இங்கே இருக்கும் வரையில், நட்பாக அவளிடம்



பழகும் சந்தர்ப்பத்தை கை விட்டு விடக் கூடாது என்று முடிவு செய்தான்.

முடிவு என்று ஒன்றை எடுத்த பின்னர், அவன் மனம் லேசாகி விட, திரும்பவும் அவளைப் பற்றிய நினைவில் ஆழ்ந்தான். தான் நேரமாகியும் வரவில்லை என்றதும், கவலையாக இருந்தது என்றாளே. ஒரு வேளை அவளுக்கும், தன்னுள் தோன்றிய மாதிரி பாதிப்பு இருக்குமோ என்ற நினைப்பு, ஒரே சமயத்தில் அவனுக்கு சந்தோஷத்தையும், வருத்தத்தையும் தந்தது.

அப்படி இருக்கும் பட்சத்தில், தான் அவளுடன் பழகுவது, அவளது மனதில் தேவை இல்லாமல் ஆசையை உண்டு பண்ணுவது போல இருக்காதா? கடவுளே! இப்போதுதான் ஒரு முடிவு எடுத்திருப்பதாக நினைத்தான். அதற்குள் குழப்பமா? எப்போதும் போல பாரத்தை கடவுளிடம் விட்டு விட்டு, தூங்க முயற்சி செய்தவனை, ரொம்ப நேரம் கழித்துத் தூக்கம் தழுவியது.

அடுத்த நாள் காலையில் கண் விழித்தவனுக்கு, முந்தைய நாளைப் போலவே, அவளது நினைவுதான் வந்தது. அலுவலகம் சென்றால், நேற்று மாதிரியே ஆகி விடுமோ என்று நினைத்தவன், லீவு போடலாமா என்று யோசித்தான். வீட்டில் சும்மா உட்கார்ந்திருந்தால், இன்னமும் அவளது நினைவுதான் வரும் என்று எண்ணி, அலுவலகத்துக்குக் கிளம்பினான்.

மாலை அன்னை இல்லத்தின் வாயிலில் தயக்கத்துடன் கால் வைத்தவனை, ''ஹாய் ஆதி... வாங்க, உங்களுக்காகத்தான் காத்திட்டு இருக்கேன்'' என்று வந்தனா வரவேற்றாள். தான் விலகிப் போக நினைத்தாலும், இவள் விட மாட்டாள் போல இருக்கிறதே என்று நினைத்தவன்,

பட்டும் படாமல் ''நீங்க ஏன் எனக்காகக் காத்திருக்கணும்?'' என்றான்.

ஒரு கணம், அவனது குரல் மாறுபாட்டில் அவனது முகத்தை உற்று நோக்கியவள், அவன் எந்தவித உணர்ச்சியும் காண்பிக்காமல் நிற்கவும், ''அதை மேடம் சொல்லுவாங்க. நீங்க வந்ததும் கூட்டிட்டு வரச் சொன்னாங்க'' என்று சொல்லி சாரதா அம்மாவின் அறையை நோக்கி நடந்தாள். அவள் பின்னே நடந்தவனுக்கு, சற்று முன் அவள் தன் முகத்தை உற்றுப் பார்த்தது நினைவு வந்தது. இவள் முன்னே, தன் உணர்ச்சிகளை மறைப்பது எவ்வளவு கடினம் என்பது புரிந்தது.

''வாங்க ஆதி... அடுத்த வாரம், நம்ம இல்லத்தோட இருபத்தி ஐந்தாவது ஆண்டு விழா. நிதி அமைச்சர் தலைமை விருந்தினரா வர ஒத்துக்கிட்டு இருக்காரு. எப்பவும் குழந்தைகளை வச்சு சில ப்ரோகிராம் பண்ணுவோம். இந்த தடவை அமைச்சர் வரார் என்பதால், கொஞ்சம் கிராண்டாகப் பண்ணலாம் என்று நினைக்கிறோம். அவர் மனசு வைத்தால், நமக்கு இன்னுமே நிதி உதவிகள் கிடைக்கலாம். அதுவும் இல்லாமல், நம்ம கிட்ட இருக்கிற நிறைய பிள்ளைகள் கிட்ட தனிப்பட்ட திறமைகள் நிறைய இருக்கு. அதை வெளிக்கொண்டு வரும் வகையில் எதாவது செய்யலாம் என்று வந்தனா சொன்னாங்க. நம்மால், அவங்களோட தனிப்பட்ட திறமைகளை ஊக்குவிக்கிற வகையில் எதுவும் தனியா இப்போதைக்கு செய்ய முடியலை. அதனால், வரும் விருந்தினர்களிடம் பிள்ளைகளோட தனிப்பட்ட திறமைகளை இன்னும் சிறப்பா செய்யறதுக்கு நிதி உதவி கேட்கலாம்னு ஐடியா சொன்னாங்க. நீங்களும் வந்தனாவுடன் சேர்ந்து, விழாவுக்கான ஏற்பாட்டையும், பிள்ளைகளோட நிகழ்ச்சிகளையும் கவனித்துக் கொண்டால் எனக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும். உங்களால் முடியுமா ஆதி?'' என்று சாரதா அம்மா கேட்டபோது அவனால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.



அதுவும் இல்லாமல், நிதி உதவி கேட்பதற்காக வந்தனா சொன்ன ஐடியாவும் அவனுக்குப் பிடித்திருந்தது. இருக்கும் குழந்தைகளுக்கு நல்ல உணவு, கல்வி என்று கொடுப்பதே இல்லத்துக்குப் பெரிய செலவுதான்.

இதில் தனித்திறமைகளை வளர்க்க செலவு செய்வது கஷ்டம்தான். இல்லத்துக்கு தன்னால் ஆனதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும், அவனை சாரதா அம்மாவின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க வைத்தது. அவனுக்குமே வந்தனாவுடன் சேர்ந்து வேலை செய்ய கிடைத்த வாய்ப்பைத் தவற விட மனமில்லை.

நிகழ்ச்சியில் பங்கேற்கப் போகும் பிள்ளைகள், அவர்கள் வெளிக்காட்டப் போகும் திறமைகள் பற்றிய விவரங்களை எடுக்கும்போதுதான், இந்த இரண்டு நாட்களாய் அவள் செய்து வைத்திருந்த வேலை அவனுக்குத் தெரிந்தது.

''மது, நீ வரைஞ்சு வச்சிருந்தியே அந்த பெயிண்டிங் அதை எடுத்து வா.''

''வசு, 'குறை ஒன்றும் இல்லை' பாட்டை உங்க ஆதி அண்ணனுக்கு பாடிக்காட்டு.''

''ரவி, உன்னோட டான்ஸ் மூவ்மெண்டை கொஞ்சம் காட்டேன்.''

இப்படி, ஒவ்வொருவரின் திறமையையும் அவள் சொல்லச் சொல்ல, அவனுக்கு அவள் மேல் மதிப்பு

கூடியது. அவனும்தான் இரண்டு வாரமாக இங்கே வருகிறான். பிள்ளைகளோடு பழகுகிறான். இவ்வளவு திறமைகள் இவர்களுக்குள் ஒளிந்திருப்பதை அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவள் வந்து இரண்டே நாட்களில், எப்படி இதை எல்லாம் செய்ய முடிந்தது என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பிள்ளைகளும், 'அக்கா... அக்கா' என்று அவளை ஒட்டிக் கொண்டு அலைந்தனர். இவளிடம் எதோ மாயசக்தி இருப்பதைப் போல அவன் உணர்ந்தான்.

இதை எல்லாம் உணராமல், அவள் ஒரு பெண்ணிடம், எதோ பேசிச் சிரிக்க, அவள் சிரிப்பு சத்தத்தில் தன் சிந்தனையில் இருந்து மீண்டவன், அவளது சிரித்த முகத்தையே பார்த்தபடி நின்றான்.

உள்ளுணர்வு உந்த அவனைத் திரும்பிப் பார்த்த வந்தனா, அவன் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைக் கண்டு முகம் சிவந்தாள். அவனது பார்வை தன்னை விட்டு அகலவில்லை என்றதும், அவனது அருகில் வந்து மெல்லிய குரலில் ''பிள்ளைகள் முன்னாடி இதென்ன பார்வை?'' என்றாள்.

அவளது உரிமையான அதட்டல் அவனை உசுப்பேற்ற, ''நான் ஒண்ணும் உன்னைப் பார்க்கலை... விழா நிகழ்ச்சிக்கு புதுசா என்ன பண்ணலாம்னு யோசிச்சிட்டு இருந்தேன்'' என்றான்.

''அப்படியா?'' என்று ரொம்பவும் வியந்து கேட்டவள், நமட்டுச் சிரிப்புடன், ''இவ்வளவு நேரம் யோசிச்சிட்டு இருந்தீங்களே... அப்படி என்ன ஐடியா வந்துச்சு?'' என்று கேட்க, அவன் விழித்துக் கொண்டு நின்றான்.



எதையாவது யோசித்து இருந்தால்தானே, ஐடியா வருவதற்கு. 'ராட்சசி... வேண்டும் என்றே கேட்கிறாள்' என்று மனதிற்குள் திட்டியவன், ''முதலில் உன்னோட ஐடியா பற்றிச் சொல்லு... அப்புறம் என்னோடதைச் சொல்லுகிறேன்'' என்று சமாளித்தான்.

'நீங்கள்' போய் 'நீ' வந்தது தெரியாமல், அவன் பேசிக் கொண்டிருக்க, அவளோ அதை மிகவும் ரசித்துக் கொண்டிருந்தாள். அதற்கு மேல் அவனைத் துருவாமல் அவள் வேலையில் இறங்கிவிட, அவனுக்கு 'அப்பாடி' என்று இருந்தது.

அடுத்த ஐந்து நாட்களும் இருவரும் சேர்ந்து விழாவுக்கான வேலையில் இறங்கி விட வேகமாய் சென்றது. அந்த வேலையிலும், அவள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், அவனைச் சீண்டிக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள் அதை எல்லாம் ரசித்தவன், வெளியில் அவளிடம் எரிந்து விழுந்தான். அவன் எரிச்சலை அவள் கண்டு கொள்ளவே இல்லை.

சில சமயம், இவன் வார்த்தைகளில் முகம் வாடுபவள், அடுத்த கணமே சிரிப்புடன் பேச ஆரம்பித்து விடுவாள். இவனது நிலைமைதான் திண்டாட்டமாக இருந்தது. மனதைக் கவர்ந்தவளோடு சேர்ந்து இருக்க வாய்ப்புக் கிடைத்ததும், அதை முழுதாக அனுபவிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

இன்னும் ஒரு நாளில் ஆண்டு விழா என்பதால், விழாவுக்கான, கடைசி ஏற்பாடுகளையும், பிள்ளைகளின் நிகழ்ச்சிக்கான ஒத்திகையையும் பார்க்க, ஞாயிறு என்பதால் ஆதி அன்னை இல்லத்துக்குக் காலையிலேயே வந்து விட்டான்.

அவன் வந்தவுடன், ''வாங்க... வாங்க... இவ்வளவு சீக்கிரமாகவே வந்துட்டிங்களே... காலையில் எதாவது சாப்பிட்டிங்களா?'' என்று அக்கறையான குரலில் கேட்ட வந்தனாவிடம், எப்போதும் போல எரிச்சலைக் காட்டாமல், ''ம்ம்... காலையில் ப்ரட் ஜாம் சாப்பிட்டுதான் வந்தேன்'' என்றான்.

மதியம் வரை நிகழ்ச்சிக்கான ஒத்திகை நடக்க, உணவு நேரத்தின் போது அவன் வெளியே போக நினைக்க, வந்தனா அவனையும் உணவு உண்ண அழைத்தாள். தன்னால் எதற்குச் சிரமம் என்று அவன் தயங்க, ''என்ன சார்? இங்கே சாப்பாடு எளிமையா இருக்கும்னு பார்க்கறிங்களா?'' என்றாள்.

''ப்ச்... என்ன பேச்சு இது? உணவு எளிமையா இருந்தாலும் ஆரோக்கியமானதா இருக்கும்னு எனக்குத் தெரியாதா? எனக்காக எதுக்குச் சிரமம்னு பார்த்தேன்'' என்று அவன் இழுக்க, ''இன்னைக்கு முழுக்க நீங்க இங்கேதான் இருப்பீங்கன்னு தெரியும். அதனால் உங்களுக்கும் சேர்த்துதான் சமைச்சிருக்கு... நீங்க ஒருத்தர் சாப்பிடறதால யாருக்கும் எதுவும் குறைஞ்சு போயிடாது'' என்று சொன்னவள்,

''குழந்தைகளோட உட்கார்ந்து சாப்பிடறீங்களா? இல்லை உங்களுக்கு தனியா எடுத்திட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''இல்லை... சேர்ந்தே சாப்பிடறேன்'' என்று அவனும் பிள்ளைகளோடு அமர்ந்தான். பரிமாறும் இரண்டு பெண்களோடு வந்தனாவும் சேர்ந்து பரிமாற, அவள் கையால் பரிமாறிச் சாப்பிடுவது அவனுக்குச் சுகமான அனுபவமாய் இருந்தது.



உணவு முடிந்ததும், விழா நடக்கும் இடத்தில் போடப்பட்டிருந்த மேடையில் செய்ய வேண்டிய மாறுதல்களை இருவரும், அங்கே வேலை செய்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, வந்தனா ''ஸ்ஸ்...'' என்று முனக, அவசரமாகத் திரும்பிப் பார்த்த ஆதி, ''என்ன வந்தனா... என்ன ஆச்சு?'' என்றான்.

பல்லைக் கடித்துக் கொண்டு ''ஒண்ணும் இல்லை...'' என்று அவள் காலைப் பார்த்தபடி சொல்ல, சட்டென்று குனிந்து அவளது பாதத்தைப் பார்த்தவன், ''ஏய்... இதென்ன இவ்வளவு ரத்தம்?'' என்று பதறினான்.

சட்டென்று கீழே அமர்ந்தவன், அவள் பாதத்தை எடுத்து மடியில் வைத்து ஆராய்ந்த போது, கீழே இருந்த கட்டையில் இருந்த ஒரு ஆணி அவளது பாதத்தில் கிழித்திருப்பதைப் பார்த்து, ''ஆணி கிழிச்சிருக்கு... இவ்வளவு ரத்தம் வருதே...'' என்று சொல்லிக்கொண்டே, அவனது பெரிய கைக்குட்டையை எடுத்து அவளது பாதத்தில் கட்டினான்.

அவனது பதட்டத்தைப் பார்த்த வந்தனா ''ஒண்ணும் இல்லை ஆதி... லைட்டா ஆணி கிழிச்சிருக்கு போல'' என்று சொல்ல, ''லூசுப் பொண்ணே... இவ்வளவு ரத்தம் வருது, லைட்டா கிழிச்சிருக்குன்னு சொல்றே? வா... ஹாஸ்பிடல் போயிட்டு வந்திடலாம்'' என்றான்.

''ஹய்யோ... ஹாஸ்பிடல் எல்லாம் போக வேண்டாம்... முதல் உதவிப் பெட்டில மருந்து இருக்கு. போட்டுக் கலாம்'' என்றாள்.

எரிச்சலுடன் அவளைப் பார்த்தவன், ''நர்சிங் படிச்சிட்டால் பெரிய டாக்டர்னு நினைப்பா? ஒழுங்கா ஹாஸ்பிடல் போகலாம் வா...'' என்று சொல்ல, அவள் அப்படியே நின்றாள்.

இதற்கு மேல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால், ஏதாவது உளறி விடுவோமோ என்று எண்ணிய ஆதி வேகமாக அங்கிருந்து நகன்றான்.

அங்கிருந்து கிளம்பி, ஹோட்டலுக்குச் சென்று பேருக்குச் சாப்பிட்டுவிட்டு, படுக்கையில் விழும் வரையிலும் அவளுடைய மலர்ந்த முகமே மனதில் நிறைந்து இருந்தது. அவளுடைய அந்தச் செல்லச் சிணுங்கல், அடிக்கடி மனதில் தோன்றி, முந்தைய நாளைப் போலவே தூக்கத்தைக் கெடுத்தது.

அவளது நினைவில் அவன் சஞ்சரித்துக் கொண்டிருந்த போது, அவனது போன் அழைக்க, எடுத்துப் பார்த்தவன், அவனது நண்பன் ரகுவின் அழைப்பு என்று தெரிந்ததும், வேகமாக எடுத்தான்.

''சொல்லு ரகு, எப்படி இருக்க? அம்மா, அப்பா எல்லாம் எப்படி இருக்காங்க?'' என்றான்.

''நான் நல்லா இருக்கேன் ஆதி... அம்மாதான் ரொம்பவும் உடைஞ்சு போய் இருக்காங்க... நீ சொன்னதுக்காக தினமும் அவங்களைப் போய்ப் பார்த்துப் பேசிட்டு இருக்கேன்... ஒவ்வொரு நாளும் அவங்க பலவீனமா ஆயிட்டே இருக்கிற மாதிரி இருக்கு... வார்த்தைக்கு வார்த்தை உன் பேச்சுதான்... நீ பேசாமல் இங்கே வந்துடேன் ஆதி... என்னால அவங்களை இந்த நிலைமையில் பார்க்கவே முடியலை... உங்கப்பா வேற என்னை வில்லனைப் பார்க்கிற மாதிரியே பார்க்கிறார்'' என்று தன் வழக்கத்துக்கு மாறாக, படபடவெனப் பேசிய நண்பனின் பேச்சைக் கேட்டதும், ஆதிக்கும் அம்மாவை உடனே பார்க்க வேண்டும் போலத் தோன்றியது.

''இன்னும் ரெண்டு மாசம் தானே ரகு, நானே வந்துடுவேன்'' என்றான் ஆதி.



''இங்கே உன் அப்பா, என் கிட்ட சொல்றார், 'அவன் விருப்பத்துக்கு மாறா எதுவும் நடக்காது... அவனை உடனே வரச் சொல்லுன்னு' எனக்கு அவன் எங்கே இருக்கான்னு தெரியாதுன்னு சொன்னால், அவர் நம்பற மாதிரி இல்லை. என் போன் பில்லை எடுத்து, நான் போன் பண்ண எல்லார் நம்பரையும் செக் பண்ணிட்டார் போல... நாம பேசறதுக்கு தனி நம்பர் வச்சிருக்கோம்னு அவருக்குத் தெரியாதில்லையா?''

''இப்போ அப்படித்தான் சொல்வார் ரகு... பட், அவர் நினைச்சதை எப்படியும் செய்யத்தான் பார்ப்பார்... சோ, இப்போதைக்கு நான் அங்கே வராமல் இருக்கிறதுதான் நல்லது... அம்மாவை நினைச்சாதான் கஷ்டமா இருக்கு.''

''ஒரே ஒரு தரம் போன்லயாவது பேசேன் ஆதி.''

''நீதானே இப்போ சொன்னே... அப்பா போன் பில் எல்லாம் செக் பண்றார்னு... நான் அம்மாகிட்ட பேசாமல் இருக்க மாட்டேன்னு வீட்டு போனையும் கண்டிப்பா பார்ப்பார்... அதோட அம்மா கிட்ட பேசினால், அங்க வரச் சொல்லுவாங்க... அவங்களோட என்னாலையும் தட்ட முடியாது...''

நண்பன் சொல்லுவது ரகுவுக்கும் புரிந்தது. ஒரு பெருமூச்சு, பேச்சை மாற்றினான். ''சரி நீ எப்படி இருக்க? எதாவது புது ப்ரெண்ட்ஸ் கிடைச்சாங்கள்ா? இந்த சன்டே நான் வரட்டுமா ஆதி?'' என்று ரகு விசாரிக்கவும், ஆதிக்கு வந்தனாவின் நினைவு வந்தது. எதையும் நண்பனுடன் பகிர்ந்து கொள்பவனுக்கு, வந்தனாவைப் பற்றிச் சொல்ல மனம் வரவில்லை.

''நீ எதுவும் கவலைப்படாதே... நான் இங்கே நல்லா இருக்கேன்... நீ இங்கே வரவேண்டாம்... அப்பா உன்னை

கண்காணிச்சிட்டே இருப்பார்'' என்று அவசரமாக மறுத்தான்.

''டேக் கேர்! ஆதி'' என்று சொல்லி ரகு போனை வைக்க, போன் வரும் வரை வந்தனாவின் நினைவில் சந்தோஷமாக இருந்த ஆதியின் மனதில், பெரிய பாரம் ஏறி அமர்ந்த மாதிரி இருந்தது.

அவள் மேல் தனக்குத் தோன்றியது காதல்தான் என்று நிச்சயமான நிலையில், 'இனிமேல் அவளைப் பார்த்துப் பழகுவது சரிதானா?' என்று மூளை கேள்வி கேட்க, மனமோ 'அவளைப் பார்க்காமல் பேசாமல் இருக்கவே முடியாது' என்று அழுத்தமாகப் பதில் சொன்னது. குழப்பத்தோடு தலையைப் பிடித்துக் கொண்டு கொஞ்ச நேரம் அமர்ந்தான்.

இந்த ஒரு மாதமாக தன் வாழ்வில் என்ன என்னமோ நடந்து விட, தான் அமைதியின்றி தவித்தது நினைவு வந்தது. ஆனால் வந்தனாவைப் பார்த்த இந்த இரண்டு நாட்களில், வேறு எதைப் பற்றிய எண்ணமும் அவனுக்கு வரவில்லை.

அவளைப் பற்றிய எண்ணங்களே மனதை நிறைக்க, அது அவனுக்கு எல்லை இல்லாத சந்தோஷத்தையும் கொடுத்தது. அதை கெடுத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை.

பாலைவனத்தில் தண்ணீர் இல்லாமல் தவித்தவனுக்கு, அமிர்தமே கிடைத்த மாதிரி, வந்தனாவின் அருகாமை இருப்பதாக உணர்ந்தான்.

காதல், கல்யாணம் என்று போனால் தானே பிரச்சனை, தானாக காதல் என்று சொல்லப் போவதில்லை. அதனால், இங்கே இருக்கும் வரையில், நட்பாக அவளிடம்



பழகும் சந்தர்ப்பத்தை கை விட்டு விடக் கூடாது என்று முடிவு செய்தான்.

முடிவு என்று ஒன்றை எடுத்த பின்னர், அவன் மனம் லேசாகி விட, திரும்பவும் அவளைப் பற்றிய நினைவில் ஆழ்ந்தான். தான் நேரமாகியும் வரவில்லை என்றதும், கவலையாக இருந்தது என்றாளே. ஒரு வேளை அவளுக்கும், தன்னுள் தோன்றிய மாதிரி பாதிப்பு இருக்குமோ என்ற நினைப்பு, ஒரே சமயத்தில் அவனுக்கு சந்தோஷத்தையும், வருத்தத்தையும் தந்தது.

அப்படி இருக்கும் பட்சத்தில், தான் அவளுடன் பழகுவது, அவளது மனதில் தேவை இல்லாமல் ஆசையை உண்டு பண்ணுவது போல இருக்காதா? கடவுளே! இப்போதுதான் ஒரு முடிவு எடுத்திருப்பதாக நினைத்தான். அதற்குள் குழப்பமா? எப்போதும் போல பாரத்தை கடவுளிடம் விட்டு விட்டு, தூங்க முயற்சி செய்தவனை, ரொம்ப நேரம் கழித்துத் தூக்கம் தழுவியது.

அடுத்த நாள் காலையில் கண் விழித்தவனுக்கு, முந்தைய நாளைப் போலவே, அவளது நினைவுதான் வந்தது. அலுவலகம் சென்றால், நேற்று மாதிரியே ஆகி விடுமோ என்று நினைத்தவன், லீவு போடலாமா என்று யோசித்தான். வீட்டில் சும்மா உட்கார்ந்திருந்தால், இன்னமும் அவளது நினைவுதான் வரும் என்று எண்ணி, அலுவலகத்துக்குக் கிளம்பினான்.

மாலை அன்னை இல்லத்தின் வாயிலில் தயக்கத்துடன் கால் வைத்தவனை, ''ஹாய் ஆதி... வாங்க, உங்களுக்காகத்தான் காத்திட்டு இருக்கேன்'' என்று வந்தனா வரவேற்றாள். தான் விலகிப் போக நினைத்தாலும், இவள் விட மாட்டாள் போல இருக்கிறதே என்று நினைத்தவன்,

பட்டும் படாமல் ''நீங்க ஏன் எனக்காகக் காத்திருக் கணும்?'' என்றான்.

ஒரு கணம், அவனது குரல் மாறுபாட்டில் அவனது முகத்தை உற்று நோக்கியவள், அவன் எந்தவித உணர்ச் சியும் காண்பிக்காமல் நிற்கவும், ''அதை மேடம் சொல்லு வாங்க. நீங்க வந்ததும் கூட்டிட்டு வரச் சொன்னாங்க'' என்று சொல்லி சாரதா அம்மாவின் அறையை நோக்கி நடந்தாள். அவள் பின்னே நடந்தவனுக்கு, சற்று முன் அவள் தன் முகத்தை உற்றுப் பார்த்தது நினைவு வந்தது. இவள் முன்னே, தன் உணர்ச்சிகளை மறைப்பது எவ்வளவு கடினம் என்பது புரிந்தது.

''வாங்க ஆதி... அடுத்த வாரம், நம்ம இல்லத்தோட இருபத்தி ஐந்தாவது ஆண்டு விழா. நிதி அமைச்சர் தலைமை விருந்தினரா வர ஒத்துக்கிட்டு இருக்காரு. எப்பவும் குழந்தைகளை வச்சு சில ப்ரோகிராம் பண்ணு வோம். இந்த தடவை அமைச்சர் வரார் என்பதால், கொஞ்சம் கிராண்டாகப் பண்ணலாம் என்று நினைக் கிறோம். அவர் மனசு வைத்தால், நமக்கு இன்னுமே நிதி உதவிகள் கிடைக்கலாம். அதுவும் இல்லாமல், நம்ம கிட்ட இருக்கிற நிறைய பிள்ளைகள் கிட்ட தனிப்பட்ட திறமைகள் நிறைய இருக்கு. அதை வெளிக்கொண்டு வரும் வகையில் எதாவது செய்யலாம் என்று வந்தனா சொன்னாங்க. நம்மால், அவங்களோட தனிப்பட்ட திறமைகளை ஊக்குவிக்கிற வகையில் எதுவும் தனியா இப்போதைக்கு செய்ய முடியலை. அதனால், வரும் விருந்தினர்களிடம் பிள்ளைகளோட தனிப்பட்ட திறமை களை இன்னும் சிறப்பா செய்யறதுக்கு நிதி உதவி கேட்கலாம்னு ஐடியா சொன்னாங்க. நீங்களும் வந்தனா



வுடன் சேர்ந்து, விழாவுக்கான ஏற்பாட்டையும், பிள்ளை களோட நிகழ்ச்சிகளையும் கவனித்துக் கொண்டால் எனக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும். உங்களால் முடியுமா ஆதி?'' என்று சாரதா அம்மா கேட்டபோது அவனால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.

அதுவும் இல்லாமல், நிதி உதவி கேட்பதற்காக வந் தனா சொன்ன ஐடியாவும் அவனுக்குப் பிடித்திருந்தது. இருக்கும் குழந்தைகளுக்கு நல்ல உணவு, கல்வி என்று கொடுப்பதே இல்லத்துக்குப் பெரிய செலவுதான்.

இதில் தனித்திறமைகளை வளர்க்க செலவு செய்வது கஷ்டம்தான். இல்லத்துக்கு தன்னால் ஆனதைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும், அவனை சாரதா அம்மா வின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க வைத்தது. அவனுக்குமே வந்தனாவுடன் சேர்ந்து வேலை செய்ய கிடைத்த வாய்ப்பைத் தவற விட மனமில்லை.

நிகழ்ச்சியில் பங்கேற்கப் போகும் பிள்ளைகள், அவர் கள் வெளிக்காட்டப் போகும் திறமைகள் பற்றிய விவரங் களை எடுக்கும்போதுதான், இந்த இரண்டு நாட்களாய் அவள் செய்து வைத்திருந்த வேலை அவனுக்குத் தெரிந்தது.

''மது, நீ வரைஞ்சு வச்சிருந்தியே அந்த பெயிண்டிங் அதை எடுத்து வா.''

''வசு, 'குறை ஒன்றும் இல்லை' பாட்டை உங்க ஆதி அண்ணனுக்கு பாடிக்காட்டு.''

''ரவி, உன்னோட டான்ஸ் மூவ்மெண்டை கொஞ்சம் காட்டேன்.''

இப்படி, ஒவ்வொருவரின் திறமையையும் அவள் சொல்லச் சொல்ல, அவனுக்கு அவள் மேல் மதிப்பு

கூடியது. அவனும்தான் இரண்டு வாரமாக இங்கே வருகிறான். பிள்ளைகளோடு பழகுகிறான். இவ்வளவு திறமைகள் இவர்களுக்குள் ஒளிந்திருப்பதை அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

அவள் வந்து இரண்டே நாட்களில், எப்படி இதை எல்லாம் செய்ய முடிந்தது என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பிள்ளைகளும், 'அக்கா... அக்கா' என்று அவளை ஒட்டிக் கொண்டு அலைந்தனர். இவளிடம் எதோ மாயசக்தி இருப்பதைப் போல அவன் உணர்ந் தான்.

இதை எல்லாம் உணராமல், அவள் ஒரு பெண்ணிடம், எதோ பேசிச் சிரிக்க, அவள் சிரிப்பு சத்தத்தில் தன் சிந் தனையில் இருந்து மீண்டவன், அவளது சிரித்த முகத் தையே பார்த்தபடி நின்றான்.

உள்ளுணர்வு உந்த அவனைத் திரும்பிப் பார்த்த வந்தனா, அவன் தன்னையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைக் கண்டு முகம் சிவந்தாள். அவனது பார்வை தன்னை விட்டு அகலவில்லை என்றதும், அவனது அருகில் வந்து மெல்லிய குரலில் ''பிள்ளைகள் முன் னாடி இதென்ன பார்வை?'' என்றாள்.

அவளது உரிமையான அதட்டல் அவனை உசுப் பேற்ற, ''நான் ஒண்ணும் உன்னைப் பார்க்கலை... விழா நிகழ்ச்சிக்கு புதுசா என்ன பண்ணலாம்னு யோசிச்சிட்டு இருந்தேன்'' என்றான்.

''அப்படியா?'' என்று ரொம்பவும் வியந்து கேட்டவள், நமட்டுச் சிரிப்புடன், ''இவ்வளவு நேரம் யோசிச்சிட்டு இருந்தீங்களே... அப்படி என்ன ஐடியா வந்துச்சு?'' என்று கேட்க, அவன் விழித்துக் கொண்டு நின்றான்.



எதையாவது யோசித்து இருந்தால்தானே, ஐடியா வருவதற்கு. 'ராட்சசி... வேண்டும் என்றே கேட்கிறாள்' என்று மனதிற்குள் திட்டியவன், ''முதலில் உன்னோட ஐடியா பற்றிச் சொல்லு... அப்புறம் என்னோடதைச் சொல்லுகிறேன்'' என்று சமாளித்தான்.

'நீங்கள்' போய் 'நீ' வந்தது தெரியாமல், அவன் பேசிக் கொண்டிருக்க, அவளோ அதை மிகவும் ரசித்துக் கொண் டிருந்தாள். அதற்கு மேல் அவனைத் துருவாமல் அவள் வேலையில் இறங்கிவிட, அவனுக்கு 'அப்பாடி' என்று இருந்தது.

அடுத்த ஐந்து நாட்களும் இருவரும் சேர்ந்து விழாவுக் கான வேலையில் இறங்கி விட வேகமாய் சென்றது. அந்த வேலையிலும், அவள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், அவனைச் சீண்டிக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள் அதை எல்லாம் ரசித்தவன், வெளியில் அவளிடம் எரிந்து விழுந்தான். அவன் எரிச்சலை அவள் கண்டு கொள்ளவே இல்லை.

சில சமயம், இவன் வார்த்தைகளில் முகம் வாடுபவள், அடுத்த கணமே சிரிப்புடன் பேச ஆரம்பித்து விடுவாள். இவனது நிலைமைதான் திண்டாட்டமாக இருந்தது. மனதைக் கவர்ந்தவளோடு சேர்ந்து இருக்க வாய்ப்புக் கிடைத்ததும், அதை முழுதாக அனுபவிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

இன்னும் ஒரு நாளில் ஆண்டு விழா என்பதால், விழா வுக்கான, கடைசி ஏற்பாடுகளையும், பிள்ளைகளின் நிகழ்ச்சிக்கான ஒத்திகையையும் பார்க்க, ஞாயிறு என்ப தால் ஆதி அன்னை இல்லத்துக்குக் காலையிலேயே வந்து விட்டான்.

அவன் வந்தவுடன், ''வாங்க... வாங்க... இவ்வளவு சீக்கிரமாகவே வந்துட்டீங்களே... காலையில் எதாவது சாப்பிட்டிங்களா?'' என்று அக்கறையான குரலில் கேட்ட வந்தனாவிடம், எப்போதும் போல எரிச்சலைக் காட்டாமல், ''ம்ம்... காலையில் ப்ரட் ஜாம் சாப்பிட்டுதான் வந்தேன்'' என்றான்.

மதியம் வரை நிகழ்ச்சிக்கான ஒத்திகை நடக்க, உணவு நேரத்தின் போது அவன் வெளியே போக நினைக்க, வந்தனா அவனையும் உணவு உண்ண அழைத்தாள். தன்னால் எதற்குச் சிரமம் என்று அவன் தயங்க, ''என்ன சார்? இங்கே சாப்பாடு எளிமையா இருக்கும்னு பார்க்கறிங்களா?'' என்றாள்.

''ப்ச்... என்ன பேச்சு இது? உணவு எளிமையா இருந்தாலும் ஆரோக்கியமானதா இருக்கும்னு எனக்குத் தெரியாதா? எனக்காக எதுக்குச் சிரமம்னு பார்த்தேன்'' என்று அவன் இழுக்க, ''இன்னைக்கு முழுக்க நீங்க இங்கேதான் இருப்பீங்கன்னு தெரியும். அதனால் உங்களுக்கும் சேர்த்துதான் சமைச்சிருக்கு... நீங்க ஒருத்தர் சாப்பிடறதால யாருக்கும் எதுவும் குறைஞ்சு போயிடாது'' என்று சொன்னவள்,

''குழந்தைகளோட உட்கார்ந்து சாப்பிடறீங்களா? இல்லை உங்களுக்கு தனியா எடுத்திட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''இல்லை... சேர்ந்தே சாப்பிடறேன்'' என்று அவனும் பிள்ளைகளோடு அமர்ந்தான். பரிமாறும் இரண்டு பெண்களோடு வந்தனாவும் சேர்ந்து பரிமாற, அவள் கையால் பரிமாறிச் சாப்பிடுவது அவனுக்குச் சுகமான அனுபவமாய் இருந்தது.



உணவு முடிந்ததும், விழா நடக்கும் இடத்தில் போடப்பட்டிருந்த மேடையில் செய்ய வேண்டிய மாறுதல்களை இருவரும், அங்கே வேலை செய்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, வந்தனா ''ஸ்ஸ்...'' என்று முனக, அவசரமாகத் திரும்பிப் பார்த்த ஆதி, ''என்ன வந்தனா... என்ன ஆச்சு?'' என்றான்.

பல்லைக் கடித்துக் கொண்டு ''ஒண்ணும் இல்லை...'' என்று அவள் காலைப் பார்த்தபடி சொல்ல, சட்டென்று குனிந்து அவளது பாதத்தைப் பார்த்தவன், ''ஏய்... இதென்ன இவ்வளவு ரத்தம்?'' என்று பதறினான்.

சட்டென்று கீழே அமர்ந்தவன், அவள் பாதத்தை எடுத்து மடியில் வைத்து ஆராய்ந்த போது, கீழே இருந்த கட்டையில் இருந்த ஒரு ஆணி அவளது பாதத்தில் கிழித்திருப்பதைப் பார்த்து, ''ஆணி கிழிச்சிருக்கு... இவ்வளவு ரத்தம் வருதே...'' என்று சொல்லிக்கொண்டே, அவனது பெரிய கைக்குட்டையை எடுத்து அவளது பாதத்தில் கட்டினான்.

அவனது பதட்டத்தைப் பார்த்த வந்தனா ''ஒண்ணும் இல்லை ஆதி... லைட்டா ஆணி கிழிச்சிருக்கு போல'' என்று சொல்ல, ''லூசுப் பொண்ணே... இவ்வளவு ரத்தம் வருது, லைட்டா கிழிச்சிருக்குன்னு சொல்றே? வா... ஹாஸ்பிடல் போயிட்டு வந்திடலாம்'' என்றான்.

''ஹய்யோ... ஹாஸ்பிடல் எல்லாம் போக வேண்டாம்... முதல் உதவிப் பெட்டில மருந்து இருக்கு. போட்டுக்கலாம்'' என்றாள்.

எரிச்சலுடன் அவளைப் பார்த்தவன், ''நர்சிங் படிச்சிட்டால் பெரிய டாக்டர்னு நினைப்பா? ஒழுங்கா ஹாஸ்பிடல் போகலாம் வா...'' என்று சொல்ல, அவள் அப்படியே நின்றாள்.

அவளது பாதத்தை மென்மையாக வருடிக் கொண் டிருந்தவன், ''என்ன ஆச்சு? கிளம்பு...'' என்று அதட்ட வும், ''நீங்க இன்னும் என் காலை விடவே இல்லை...'' என்று சிரிப்புடன் அவள் சொல்ல, தன் செய்கையை அப்போதுதான் உணர்ந்தவனாக, அவசரமாக அவளது பாதத்தைத் தன் மடியில் இருந்து எடுத்து விட்டு தானும் எழுந்து நின்றான்.

எழுந்து நின்றவன், அவள் இன்னும் அமைதியாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு ''நடக்க முடியுமா வது... இல்லன்னா தூக்கிட்டுப் போகட்டுமா?'' என்று கேட்டவுடன், திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''இல்லை... இல்லை... நானே வருவேன்'' என்று சொல்லி நடக்க முயல. நடப்பது அவளுக்குச் சிரமமாகவே இருந்தது. அதைப் பார்த்தவன், அவளது தோளைப் பற்றிக் கொண்டான். மனம் கவர்ந்தவனின் ஸ்பரிசம் விளை வித்த சுகத்தை அனுபவித்தவளுக்கு, வலி போன இடம் தெரியவில்லை.

எவ்வளவோ மறுத்தும், மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருந்து வாங்கிக் கொண்டு, ஒரு ஊசியும் போட்டு, இல்லத்துக்கு அழைத்து வந்தவன், ''நீ போய் ரெஸ்ட் எடு... மீதி வேலையை நான் பார்த்துக்கறேன்'' என்று சொல்லிவிட்டு வேலையைப் பார்க்கக் கிளம்பி னான்.

அவளுக்கென கொடுக்கப்பட்ட அறையில் வந்து படுத்தவள், அவளுக்கு அடி பட்டதும், அவன் பதறி யதை நினைத்துப் பெருமையாகச் சிரித்துக் கொண்டாள். நடக்க முடியவில்லை என்றால், தூக்கிட்டுப் போறேன் என்றானே... ரொம்ப தைரியம்தான்... 'இத்தனை பேர் இங்கே இருக்கும்போது தூக்கிட்டுப் போவியாடா நீ?' என்று மனதுக்குள் அவனைக் கேள்வி கேட்டவளுக்கு, கிச் சொன்னது நினைவுக்கு வந்தது. ''வது'' என்றானே... அவன் 'தூக்கிட்டுப் போகட்டுமா' என்றதும் தோன்றிய அதிர்ச்சியில், அவள் அதை அப்போது கவனிக்கவே இல்லையே. மனதில் ஆசை இல்லாமலா, செல்ல பெயர் வைத்து அழைத்தான். சந்தோஷத்தில் அவளது மனம் படபடத்தது.



அவளுக்குள் இருந்த பாதிப்பு, அவனுக்கும் இருக் கிறது என்பது அவளுக்குப் புரிந்தே இருந்தது. ஆனால் ஒரு நாள் நன்றாகப் பேசினால், அடுத்த நாள் முகத்தைத் திருப்பிக் கொள்வது அவனது வழக்கமாக இருந்ததால், அவளுக்கு ஒரு சின்ன சந்தேகம். அதுவும் இந்த ஐந்து நாட்களாக, எவ்வளவோ முறை அவளது நேசத்தைத் தன் கண்களாலும், வார்த்தைகளாலும் வெளிப்படுத்தினாலும், அவனிடம் இருந்து அதற்கான பதில் வரவில்லை.

இன்று அவளது ரத்தத்தைப் பார்த்ததும், அவனுக்குள் இருக்கும் அன்பு, அவனையும் அறியாமல் வெளி வந்துவிட்டது போல என்று எண்ணியவள், மாத்திரை போட்டதன் விளைவாக, கண் அயர்ந்தாள்.

வேலை எல்லாம் முடிந்து, கிளம்பப் போன ஆதிக்கு, வந்தனாவைப் பார்த்து விட்டுப் போக வேண்டும் போல இருந்தது. அவளுக்கு அடிபட்ட போது, தான் பதறியதை வைத்தே அவள், அவன் மனதை அறிந்திருப்பாள் என்பதே அவனைத் தடுத்தது.

அவள் அறைப் புறமாகப் போகத் துடித்த கால்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சாரதா அம்மாவிடம்

சென்றவன், சில விவரங்களைச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

ஆறு மணிக்கு மேல் உறக்கத்தில் இருந்து விழித்த வந்தனா, அவசரமாக எழுந்து வெளியே வர, ஆதி கிளம்பி விட்டது தெரிந்தது. 'ச்சே... கும்பகரணி மாதிரி தூங்கிக் கொண்டிருந்தேனே' என்று தன்னையே நொந்து கொண்டாள்.

அடுத்த நாள் மிக சந்தோஷமாக விடிந்தது. மாலை நான்கு மணிக்கு விழா என்பதாலும், ஆதியின் மனம் முழுமையாகத் தெரிந்த பின், அவனைப் பார்க்கப் போகும் நாள் என்பதாலும், வந்தனாவின் மனம் பரபரப்புடன் இருந்தது. இன்று விழாவுக்கு சேலை கட்டிக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, ஒரு அழகிய இளம் சிவப்பு நிற புடவையைக் கட்டிக் கொண்டவள், அவளது மனம் கவர்ந்தவனின் வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

## 3

விழா அன்று கொஞ்சம் சீக்கிரமே ஆதி வந்து விடுவான் என்று கடந்த ஒரு மணி நேரமாக, வாயிலையே பார்த்துக் கொண்டிருந்த வந்தனாவுக்கு, அவன் இன்னும் வராதது சஞ்சலத்தைக் கொடுத்தது. சிறப்பு விருந்தினரும் வந்து, விழா ஆரம்பித்து விட்ட பிறகும், ஆதி வரவில்லை என்றதும், அவளுக்கு அழுகையே வரும் போல இருந்தது.

வரவேற்பு உரை, சிறப்பு உரை எல்லாம் முடிந்து பிள்ளைகள் பங்கேற்கும்



விட, வந்தனாவுக்கு இருப்பு கொள்ளவில்லை. 'ஏன் இன்னும் வரவில்லை... என்ன ஆச்சு?' என்று யோசித்துக் கொண்டிருந்தவளின் முகத்தில் பதட்டம் தெரிய, அவளருகில் வந்த சாரதா அம்மா ''பிள்ளைகள் எல்லாம் நல்லாவே பெர்பார்ம் பண்ணுவாங்க... நீ டென்ஷன் ஆகாதே வந்தனா'' என்றார்.

''இல்லை மேடம்... அதெல்லாம் ஒண்ணுமில்லை!'' என்று அவள் சமாளிக்க, ''எல்லாரும் நல்லா பண்ணாங்கன்னா நாளைக்கு பரிசு தருவதாக, ஆதி கூட நேற்று சொல்லிட்டுப் போயிருக்கார்...'' என்று சொல்லவும் திடுக்கிட்டு நிமிர்ந்தவள், ''அப்போ இன்னைக்கு அவர் வர மாட்டாரா?'' என்று அதிர்ச்சியுடன் கேட்க,

ஆச்சரியமாகப் பார்த்த சாரதா அம்மா ''உன்கிட்ட சொல்லலையா? பெர்சனல் வேலையா வெளியே போக வேண்டி இருப்பதால் இன்னைக்கு வர முடியாதுன்னு நேற்றே சொல்லிட்டாரே... நான் கூட விழாவுக்காக இவ்வளவு செஞ்சிட்டு, விழா அன்னைக்கு வரலன்னா எப்படின்னு கேட்டப்போ, ரொம்ப முக்கியமான வேலைன்னு சொன்னார்... ஓ! நீ நேற்று ஹாஸ்பிடல் போயிட்டு வந்திட்டு தூங்கிட்ட இல்லையா? அதான் சொல்லலைப் போல'' என்று கேள்வியும் கேட்டுப் பதிலையும் சொல்லி விட்டுப் போனார்.

சாரதா அம்மா சொல்லிவிட்டுப் போன செய்தியில், காலையில் இருந்த உற்சாகம், 'இதோ இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவான்' என்று இருந்த எதிர்பார்ப்பு எல்லாம் வடிந்தது. நிகழ்ச்சிக்காக குழந்தைகளை மேடைக்கு அனுப்பும் வேலை இருந்ததால், மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் வேலையில் இறங்கினாள்.

தன்னுடைய வேலையை இயந்திரத்தனமாக செய்து முடித்தவளிடம், ''ரொம்ப நன்றி வந்தனா... விழாவுக்கு வந்த நிறைய பேர், குழந்தைகளுக்கான தனித் திறமைக்கு செய்யப் போற பயிற்சிக்கு நிதி கொடுக்க ஒத்துக்கிட்டு இருக்காங்க... வெறும் உணவு, கல்வி மட்டுமில்லாமல், இந்த மாதிரி திறமைகளையும் ஊக்குவிக்கறீங்களேன்னு அமைச்சரும் பாராட்டினாரு. இதுக்கெல்லாம் உனக்கும் ஆதிக்கும்தான் நான் நன்றி சொல்லணும்'' என்று சாரதா அம்மா சொன்னபோது,

''இதென்ன மேடம் ஒரு பெரிய உதவி, அவங்களுக்குள்ள இருந்த திறமையைதானே வெளிக்கொண்டு வந்தோம், தன்னலம் பார்க்காம நீங்க இந்தக் குழந்தைகளுக்குச் செய்யறதுல நாங்க செஞ்சது ஒரு துளி கூட இல்லை!'' என்று தன்னடக்கமாகப் பதில் சொன்னாள்.

தன்னால் இயன்ற ஒரு நல்ல விஷயத்தைச் செய்தோம் என்ற நிறைவு இருந்த போதும், ஆதி விழாவுக்கு வராதது அவளுக்கு மனதில் ஒரு வெறுமையைத் தந்தது. விசாரித்துப் பார்த்ததில், பிள்ளைகளுக்கும் அவன் விழாவுக்கு வரப்போவதில்லை என்று தெரிந்திருந்தது.

பிள்ளைகள் அவன் வர வேண்டும் என்று அடம் பிடிக்க, அடுத்த நாள் பரிசோடு வருவதாகச் சொல்லி இருக்கிறான். ஆக மொத்தம், அவளிடம் மட்டும்தான் சொல்லவில்லை போல. அவள் தூங்கி விட்டாள் என்பதெல்லாம் ஒரு சாக்கு. மற்றபடி, சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தால், காலையிலேயே சொல்லி இருக்கலாமே.

நேற்று அவனையும் அறியாமல் அவனது மனம் வெளிப்பட்டு இருக்கிறது. இன்று அவளைத் தவிர்க்க வேண்டும் என்றுதான் அவன் வரவில்லை என்று நினைத்தவள், நாளை அவனிடம் மனம் விட்டுப் பேசி விட வேண்டியதுதான் என்று முடிவு செய்தாள்.



ஆதியும் அவனது அறையில் வந்தனாவைப் பற்றி தான் நினைத்துக் கொண்டிருந்தான். இவ்வளவு நாள் விழாவுக்கான ஏற்பாடு எல்லாம் அவளோடு சேர்ந்து செய்து விட்டு, விழா அன்று இல்லத்துக்குச் செல்ல முடியாமல் போனது அவனுக்கும் வருத்தம்தான். அவன் விழாவுக்குப் போகாததற்குக் காரணங்கள் இருந்தது.

நிதி அமைச்சர் வருகிறார் என்று தெரிந்தபோதே, அவனுக்குத் தெரியும் அங்கே அவன் செல்ல முடியாது என்று. இந்த நிதி அமைச்சர் அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர். இவனுமே சிலமுறை அவரைப் பார்த்திருக்கிறான். விழாவுக்குச் செல்லும்போது, அவனை நிச்சயம் சாரதா அம்மா அவருக்கு அறிமுகம் செய்து வைப்பார். அப்பாவுக்கும் விஷயம் தெரிந்து விடும். அதனாலேயே அவன் போக வேண்டாமென்று முடிவெடுத்திருந்தான்.

இரண்டாவது காரணம், நேற்று அந்த அளவுக்கு தன் மனதை வெளிச்சம் போட்டுக் காட்டி விட்ட பிறகு, இனிமேல் வந்தனாவிடம் முகம் திருப்பிக் கொள்வதோ, இல்லை, சாதாரணமாகப் பழகுவதோ, இயலாத காரியம். இது நாள் வரை அவள் மனதில் ஆசையைத் தூண்டும் படி அவன் நடந்ததில்லை.

ஆனால், நேற்று அவளுக்குக் காயம் பட்டதும், அவனையும் அறியாமல், அவனது அன்பு வெளிப்பட்டு விட்டது. அவள் மனதிலும் ஆசை இருப்பது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. இதற்கு மேல் இதை வளர

விடக்கூடாது என்றுதான். அவளைச் சந்திக்கக் கூடாது என்று அவன் முடிவு எடுத்திருந்தான். நேற்று சாரதா அம்மா, வந்தனாவைப் பற்றிச் சொன்ன விஷயங்கள், அவன் முடிவை இன்னமும் உறுதியாக்கி இருந்தது.

நேற்று வேலைகளை முடித்துவிட்டு, அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தபோது, வந்தனாவைப் பற்றிப் பேச்சு வந்தது.

''இங்கே எந்த ஒரு வேலைக்கும், தெரிஞ்சவங்களோட நம்பிக்கையான சிபாரிசு இல்லாமல் ஆள் எடுப்பது கிடையாது ஆதி... வந்தனாவும் அப்படி வந்தவள்தான்... இங்கே இல்லத்தில் இருந்து சென்று நல்ல நிலைமையில் இருக்கும் ஒருவர்தான் அனுப்பி இருந்தார்... உங்களுக்குப் பிடிச்சிருந்தால் வேலைக்கு எடுத்துக் கோங்கன்னு சொன்னார்... அவளைப் பார்த்த உடனேயே எனக்கும் பிடிச்சிருச்சு... பார்க்க கலகலப்பா இருக்காளே தவிர, அவள் மனசில நிறைய காயங்கள் இருக்கு ஆதி... அப்பா ப்ளஸ் டூ படிக்கும்போதே இறந்து போயிட்டாராம்... அதனால் சின்ன வயசுல இருந்து மருத்துவம் படிக்கணும்னு இருந்த ஆசை நிறைவேறாமல், நல்ல மதிப்பெண் எடுத்திருந்தும், நர்சிங் படிச்சிருக்கா... பெரிய மருத்துவமனைல வேலையும் செஞ்சிருக்கா... இப்போ சமீபத்தில்தான், அம்மா தவறி இருக்காங்க... ரொம்ப உடைஞ்சுப் போயிட்டாளாம்... மன ஆறுதலுக்காக இங்கே வந்திருக்கா... எவ்வளவு மனக்கஷ்டம் இருந்தாலும், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் எவ்வளவு சுறுசுறுப்பா வேலை பார்க்கிறாள் தெரியுமா? தனக்குன்னு பெரிசா செலவு இல்லைன்னு, சம்பளத்தில் பாதியை இல்லத்துக்குக் கொடுத்துடப் போறேன்னு



சொல்லி இருக்கா... வந்த ஒரே வாரத்திலேயே, குழந்தைகளும் அவள் கிட்ட ரொம்ப நெருங்கிட்டாங்க... அவள் வந்து ஒரு வாரம் தான் ஆகுதுன்னு என்னால் நம்பவே முடியவில்லை.''

சாரதா அம்மா சொன்னதைக் கேட்டதும், ஆதிக்கு வந்தனாவின் மேல் இருந்த அன்பும், மதிப்பும் ரொம்பவே கூடிப் போனது. பெற்றோரை இழந்து மனதளவில் ஒடிந்து போய் இருக்கும் அவளது மனதுக்கு ஆறுதலாக இல்லாவிட்டாலும், இன்னும் வேதனையைத் தரக்கூடாது என்று எண்ணித்தான், அவளை இனிமேல் பார்க்கக் கூடாது, பேசக் கூடாது என்ற முடிவுக்கு வந்திருந்தான். எடுத்த முடிவு மனதுக்கு உவப்பாக இல்லை என்றாலும், இதுதான் சரியான முடிவு என்று மனதுக்கு அறிவுறுத்திக் கொண்டு படுக்கப் போனவனுக்குத் தூக்கம் வரவில்லை.

இன்று ரொம்பவும் அதிகப்படி வேலை செய்து கால் வலியை அதிகப்படுத்திக் கொண்டாளோ, என்னமோ என்று கவலையாக இருந்தது. டாக்டர் இரண்டு நாட்களில் சரியாகி விடும் என்றுதான் சொல்லி இருந்தார். இருந்தாலும், அவனுக்கு அவளது வலி எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும் போல் இருந்தது.

அவளுடைய போன் நம்பர் அவனிடம் இருக்கிறது. ஆனால், அவன் எடுத்திருந்த முடிவு அவளிடம் பேச விடாமல் தடுத்தது. இல்லத்துக்கு அழைக்கலாம் என்று போனை எடுத்தான்.

விழா முடிந்து சாரதா அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்த வந்தனா, கிளம்பும் வேளையில், அறையில் இருந்த தொலைபேசி சிணுங்கியது. ''நான் வரேன் மேடம்''

என்று கிளம்பிய வந்தனாவை, சாரதா அம்மாவின், ''சொல்லுங்கள் ஆதி...'' தடுத்து நிறுத்தியது.

''விழா ரொம்ப நல்லா நடந்தது... நாம எதிர்பார்த்ததை விடப் பெரிசாவே பலன் கிடைச்சிருக்கு... நீங்கள் வராததுதான் ஒரு குறை... ம்ம்... வந்தனாவுக்கு வலி இல்லைன்னுதான் சொன்னாள்... அவளுமே நீங்க வர மாட்டீர்கள் என்று தெரியாமல் காத்துக் கொண்டிருந்தாள் போல... இங்கேதான் இருக்கிறாள், தருகிறேன்'' என்று போனை வந்தனாவிடம் கொடுத்தார் சாரதா அம்மா.

'வந்தனாவுக்கு வலி எப்படி இருக்கிறது?' என்று அவன் கேட்டவுடன், 'இங்கேதான் இருக்கிறாள், தருகிறேன்' என்று சாரதா அம்மா போனை கொடுத்து விட, ஆதிக்கு தர்ம சங்கடமாயிற்று.

இப்போது அவளிடம் என்ன பேசுவது என்று அவனும், நேரிடையாகத் தன்னிடம் பேசாமல், ரொம்ப அக்கறை போல சாரதா அம்மாவிடம் விசாரிக்கிறானோ என்ற எரிச்சலில் வந்தனாவும், போனை வைத்துக் கொண்டு சில நொடிகள் சும்மாவே இருந்தனர்.

அவனே பேசட்டும் என்று அவள் அமைதியாகவே இருக்க, ''ஹலோ'' என்ற அவனது குரலில், அவளுக்குக் கண்ணீர் வரப் பார்த்தது. சாரதா அம்மா எதிரே இந்த மாதிரி மடத்தனம் ஏதாவது செய்து விடக் கூடாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''ம்'' என்றாள்.

அதற்குள் யாரோ அழைக்கவே சாரதா அம்மா எழுந்து வெளியே போனார். அவளது 'ம்' என்ற ஒற்றை வார்த்தையிலேயே அவளது கோபம் புரிந்துவிட, என்ன பேசுவது என்று குழம்பி, ''விழா எல்லாம் எப்படிப் போச்சு?'' என்றான். எரிச்சல் இன்னும் அதிகமாக, ''அதான் மேடம்



சொல்லிட்டாங்களே...'' என்று எரிச்சலை மறைக்காத குரலில் சொன்னாள்.

இதுவரை, எத்தனை முறை அவன் முகத்தைத் திருப்பியும், அவள் எரிச்சல் காட்டியதில்லை. இப்போது அவள் குரலில் இருந்த எரிச்சலே, அவனை அவள் எவ்வளவு எதிர்பார்த்திருந்தாள் என்று சொல்லிவிட, ''சாரிம்மா, ரொம்ப முக்கியமான வேலை... உன்கிட்ட சொல்லக் கூடாதுன்னு இல்லை... போகும்போது சொல்லிட்டுப் போலாம்னுதான் இருந்தேன்... நீ மருந்து சாப்பிட்டதில நல்லா தூங்கிட்டு இருந்தியா... அதான்'' என்று அவன் சமாதானம் சொல்லவும் அவளது எரிச்சல் கொஞ்சம் குறைந்தது.

''இப்போ வலி எப்படி இருக்கு? ஜாஸ்தி ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே சரியா?'' என்று அவன் அக்கறையான குரலில் சொல்ல, ''இதை என் நம்பருக்கு போன் பண்ணிக் கேட்கலாம் இல்லை? இப்பக்கூட...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள், சாரதா அம்மா வரும் அரவம் கேட்டு ''இப்போ வலி பரவாயில்லை... நாளைக்குப் பிள்ளைகளுக்குப் பரிசோடு வந்திடுங்க'' என்று சொல்லி விட்டு போனை சாரதா அம்மாவிடம் கொடுத்து விட்டு அவளது அறைக்குக் கிளம்பினாள்.

அறைக்கு வந்த வந்தனாவுக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன் வரை மனதில் இருந்த வெறுமை மறைந்து, சந்தோசம் பரவியது. விழாவைப் பற்றி தெரிந்து கொள்ளும் ஆவலோடு, அவளது வலியைப் பற்றியும் விசாரிக்கத் தான் போன் செய்திருக்கிறான்.

அவன் தனக்கு போன் பண்ணாதது அவளுக்குக் குறைதான் என்றாலும், இந்த மாதிரி போன் அழைப்புகள்

இருவருக்குள்ளும் பழக்கமில்லைதானே என்று சமாதானப்படுத்திக் கொண்டாள். நேற்று அவனது அன்பை வெளிப்படையாகக் காட்டிய பின்னர், அவளுக்கு உரிமை உணர்வு அதிகமானது போலத் தோன்றியது.

தன்னுடைய 'ம்' என்ற வார்த்தையிலேயே, கோபம் என்று புரிந்து கொண்டு அவன் சமாதானம் செய்தது அவளுக்குப் பெருமையாய் இருந்தது. நாளைக்குக் கண்டிப்பாக வெளிப்படையாகப் பேசி விட வேண்டியது தான். இங்கே இருந்தால் சரியாகப் பேச முடியாது. எங்கேயாவது வெளியில் போய்தான் பேச வேண்டும் என்று நினைத்தவள், நாளைய பற்றிய சந்தோஷத்தோடு தூங்கப் போனாள். ஆதியோ, 'இதுதான் நான் அவள் குரலைக் கேட்கும் கடைசி நாள்' என்று எண்ணம் தோற்றுவித்த பாரத்தோடு, கண்களை மூடினான்.

அடுத்த நாள் காலை விழிப்பு வந்ததும், இன்றையில் இருந்து வந்தனாவைப் பார்க்கப் போவதில்லை என்ற எண்ணம், சோர்வைத் தர, படுக்கையில் இருந்து எழுந்து கொள்ள மனமில்லாமல் படுத்திருந்தான். கொஞ்ச நேரம் கழித்து, அழைப்பு மணி ஒலிக்க எழுந்து போய் கதவைத் திறந்தான். சங்கரியும், ரம்யாவும் நின்று கொண்டிருந்தனர்.

இவனைப் பார்த்ததும் ரம்யா, ''ஹாய் அங்கிள், குட்மார்னிங்... எப்படி இருக்கீங்க? என்று உற்சாகமாக விசாரிக்க, தற்காலிகமாக தனது கவலையை ஒதுக்கி வைத்தவன், ''ஹாய் குட்டி! எப்படி இருக்கீங்க? ஒரு வாரம்னு சொல்லிட்டு, ரெண்டு நாள் கூட இருந்திட்டு வந்திருக்கீங்களே... அங்கிளைப் பார்க்கணும்னு உங்களுக்குத் தோணலையா?'' என்று சோகமாக விசாரிக்க, ரம்யாவுக்கு வாய் கொள்ளாத சிரிப்பு.



''அச்சச்சோ! நீங்க என்னை ரொம்ப மிஸ் பண்ணீங்களா அங்கிள்... ஆனால் அங்கே எனக்கு நிறைய பிரண்ட்ஸ் இருந்தாங்களா... ஜாலியா இருந்தது'' என்று சொன்ன ரம்யா, திடீரென்று ஞாபகம் வந்தவளாக, ''ஆமா அங்கிள்... நீங்க சொன்ன மாதிரி ரெண்டு நாள் கூட ஆயிடுச்சு இல்லை... அப்போ என்னுடைய இந்த வாரத்துக்கான சாக்லேட்டைக் கொடுங்க'' என்று சொல்லி கை நீட்டினாள்.

குழந்தையின் பேச்சில் அதுவரை இருந்த இறுக்கம் குறைய, ''ஹய்யோ! எங்க ரம்யா குட்டி பெரிய பெரிய கணக்கெல்லாம் போட ஆரம்பிச்சிட்டாங்க போலவே...'' என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே மேசை மேல் வைத்திருந்த சாக்லேட்டை எடுத்துக் கொடுத்தான்.

அதுவரை அவர்கள் இருவரும் பேசுவதைச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சங்கரி, ''இந்தாங்க தம்பி கல்யாண பலகாரம்... ஆபீசுக்கு கிளம்பிடுவீங்களோன்னு காலையிலேயே எடுத்து வந்தேன்... வா ரம்யா... அங்கிள் ஆபீசுக்குக் கிளம்பட்டும்'' என்று கூப்பிட,

''நான் கொஞ்ச நேரம் அங்கிள் கூட விளையாடிட்டுதான் வருவேன்'' என்று ரம்யா சொல்ல, மறுப்பாகப் பார்த்த சங்கரியிடம், ''இருக்கட்டும் அக்கா, எனக்கு இன்னும் டைம் ஆகலை'' என்று சொன்னவன், பல் தேய்த்து விட்டு வந்து குழந்தையோடு விளையாடினான்.

குழந்தையோடு விளையாடியது அவனுடைய நொந்த மனதுக்குக் கொஞ்சம் ஆறுதலைத் தந்தது. ரம்யாவோடு பேச்சுக் கொடுத்துக் கொண்டே, அலுவலகத்துக்குக் கிளம்பியவன், அவளை அவர்கள் வீட்டில் விட எண்ணிக் கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்த சங்கரியிடம், ''சார் எப்படி இருக்கார்... சீக்கிரமே ஆபீசுக்குக் கிளம்பிட்டாரா என்ன?'' என்று அவன் விசாரிக்க, ''இல்லை தம்பி... நேற்று ரொம்ப லேட்டாத்தான் வீட்டுக்கு வந்தோம், அப்பவே கொஞ்சம் ஜுரம் வர மாதிரி இருக்குன்னு சொல்லி, மாத்திரை போட்டு படுத்தார்... இப்போ வரைக்கும் எழுந்துக்கலை... சரி சமையலை முடிச்சிட்டு எழுப்பலாம்னு நானும் விட்டுட்டேன்'' என்றார் சங்கரி.

அப்போது, படுக்கை அறையில் இருந்து முனகல் சத்தம் வரவே, வேகமாக சங்கரி உள்ளே செல்ல இவனும் கூடவே போனான். அங்கே ராமநாதன், ஜுர வேகத்தில் முனகிக் கொண்டிருந்தார். அவசரமாக கை நீட்டி அவரது நெற்றியில் வைத்த ஆதி, சட்டென்று கையை எடுத்தான்.

''பயங்கரமா கொதிக்குது... உடனே ஹாஸ்பிடல் போகணும்... இருங்க நான் போய் ஆட்டோவைக் கூட்டிட்டு வரேன்... பக்கத்தில் இருக்கிற ஹாஸ்பிடலுக்குப் போகலாம்'' என்று சொல்லி வெளியே வந்தான்.

மருத்துவமனையில், ராமநாதனை பரிசோதனை செய்த டாக்டர், ''ஹெவி பீவரா இருக்கு... உடனே ட்ரிப்ஸ் ஏத்தணும்.. அட்மிட் செஞ்சுடுங்க'' என்று சொல்ல, செய்வது அறியாது நின்ற சங்கரிக்கு ஆறுதல் சொன்னவன், அவரை மருத்துவமனையில் சேர்த்தான்.

நன்றியோடு பார்த்த சங்கரியிடம், ''நான் ஆபீசுக்கு லீவு சொல்லிட்டு இங்கேயே இருக்கேன்... நீங்க பாதில இருக்கிற சமையலை முடிச்சிட்டு வாங்க'' என்று சொல்ல அவர் தயங்கி நின்றார்.

''பயப்படறதுக்கு ஒண்ணும் இருக்காதுன்னு டாக்டர் சொல்லிட்டாரே... நீங்க போங்க... எனக்கும் இத்தனை



நாள் உங்க சமையலைச் சாப்பிடாமல் போர் அடிச்சிருந்தது... இன்னைக்காவது சாப்பிடலாம்னு பார்க்கிறேன்'' என்று அவன் சொன்னதற்கு பலன் இருந்தது. மெல்ல சிரித்துக் காண்டே, சங்கரி ரம்யாவுடன் கிளம்பினார்.

கொஞ்ச நேரம் கழித்து வந்த மருத்துவர், ''அவருக்கு இன்னும் பீவர் குறையலை... சில டெஸ்ட் எடுக்க வேண்டியது இருக்கு'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

நல்லவேளை... சங்கரியை வீட்டுக்கு அனுப்பி விட்டோம், இல்லை என்றால் டெஸ்ட் என்றவுடனே பயந்து விட்டிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டான் ஆதி. சங்கரி கொஞ்சம் பயந்த சுபாவிதான்.

அதுவும் கணவன், குழந்தைக்கு சாதாணமாக ஏதாவது என்றாலே, பதறிப் போவார்கள். ராமநாதனுக்கு பெரிதாக எதுவும் இருக்கக் கூடாது என்று வேண்டிக் கொண்டு, அவர் அட்மிட் செய்யப்பட்டிருந்த அறைக்கு வெளியே அமர்ந்திருந்தான் ஆதி.

மாலை வரை, ராமநாதனுக்கு ஜுரம் வருவதும் போவதுமாக இருந்தது. சங்கரி வெளியே சொல்லவில்லை என்றாலும், ரொம்பவே பயந்து போய் இருப்பது தெரிய, ஆதியும் அவர்கள் கூடவே இருந்தான்.

இன்றைக்கு இல்லத்தில் நிகழ்ச்சியில் பங்கேற்ற பிள்ளைகளுக்கு பரிசு வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னது ஞாபகம் வந்தது. எப்படியும் இல்லத்துக்கு இன்றைக்குப் போகக் கூடாது என்று முடிவு செய்ததுதான் என்றாலும், அவன் சொன்ன பரிசுக்காக குழந்தைகள் காத்திருப்பார்களே என்று தோன்ற, அருகே இருந்த பரிசு பொருள் கடைக்குப் போன் செய்து, விவரம் சொல்லி ஆர்டர் கொடுத்தவன், இல்லத்துக்கு அவர்களையே டெலிவரி செய்யச் சொன்னான்.

இல்லத்துக்கு போன் செய்து சாரதா அம்மாவிடம், தான் ஹாஸ்பிடலில் இருக்கும் விவரத்தையும், பிள்ளைகளுக்கு பரிசு அனுப்பி இருப்பதைப் பற்றியும் சொன்னான்.

ஆதியின் வரவுக்காக, காலையில் இருந்தே காத்திருந்த வந்தனாவுக்கு ஆறு மணியாகியும் அவன் வராதது கவலையைத் தந்தது. 'என்ன ஆச்சு? ஏன் இன்னும் வரலை?' என்று கவலையோடு யோசித்துக் கொண்டிருந்தவள், பிள்ளைகளின் ஆரவார சத்தத்தில் தன் யோசனையில் இருந்து மீண்டாள். ''அக்கா... இங்கே பார்த்தீங்களா, ஆதி அண்ணனோட பரிசை... எவ்ளோ பெரிய கலரிங் பாக்ஸ்'' என்று ஆசையுடன் ஒரு பையன் வந்து சொல்ல,

'ஆதி வந்து விட்டானா... நான் இங்கே வாயிலையே பார்த்துக் கொண்டிருக்கும்போது எப்படி வந்தான்?' என்று ஆச்சரியம் மிக வேகமாகப் பிள்ளைகளின் அறைக்கு ஓடினாள். எல்லாப் பிள்ளைகளின் கையில் ஒரு பரிசு இருந்தது. ஆவலுடன் ஆதியைத் தேடிய கண்களுக்கு, அவன் சிக்கவில்லை.

களைத்துப் போய் திரும்பியவளின் முன்னே வந்த சாரதா அம்மா, ''பார்த்தாயா வந்தனா... ஆதி நிகழ்ச்சியில் பங்கு கொண்ட பிள்ளைகளுக்கு மட்டுமல்லாமல் எல்லாருக்கும் பரிசு அனுப்பி இருக்கிறார்'' என்றார்.

'பரிசு அனுப்பி இருக்கிறானா... அப்படியானால் அவன் வரவில்லையா?' அவளது மனம் சோர்ந்து போனது.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போன் பண்ணினார்... ஹாஸ்பிடலில் இருக்கிறாராம்... அப்படி இருக்கும்போது, பிள்ளைகள் எதிர்பார்ப்பார்கள் என்று...'' என்று சொல்லிக் கொண்டிருந்த சாரதா அம்மாவை, ''ஹாஸ்பிடலா... எந்த



ஹாஸ்பிடல்?'' என்ற வந்தனாவின் பதட்டமான குரல் தடுத்தது.

அவளை ஆச்சரியமுடன் பார்த்தவர், ''அவர் பிளாட் பக்கத்தில் இருக்கிற அகரம் ஹாஸ்பிடல்தான்... நீ ஏன் இவ்வளவு டென்ஷனாய் இருக்கிறாய் வந்தனா?'' என்று கேள்வி கேட்க,

''ஒண்ணுமில்லை மேடம்... எனக்கு வெளியே போயிட்டு வர ஒரு இரண்டு மணி நேரம் அனுமதி தரீங்களா?'' என்றாள். வந்த நாட்களாய், நாள் முழுதும் இங்கேயே வேலை செய்பவள், வெளியே போக அனுமதி கேட்கவும், ''தாராளமா போயிட்டு வாம்மா... ஜாக்கிரதை!'' என்று அக்கறையுடன் அனுமதி கொடுத்தார்.

'என்ன ஆச்சு? எதற்காக ஹாஸ்பிடலுக்குப் போய் இருக்கிறான்? ஒரு வேளை அவனுக்கு எதாவது...' என்று யோசிக்கும்போதே அவளுக்கு மயக்கம் வரும் போல இருந்தது. சாரதா அம்மாவிடம் கேட்டிருந்தால் சொல்லி இருப்பார்கள். ஆனால் நின்று எதையும் கேட்கும் நிதானத்தில் அவள் இல்லை. அனுமதி கிடைத்ததும் வெளியே வந்து கிடைத்த ஆட்டோவில் ஏறி அகரம் மருத்துவமனைக்கு வந்தாள்.

மருத்துவமனையில், டெஸ்ட் ரிசல்ட்டுடன் வந்த டாக்டர், ''மிஸ்டர். ராமநாதனுக்கு ஒன்றும் இல்லை... ஜுரமும் இப்போ கண்ட்ரோலுக்கு வந்துடுச்சு... எதற்கும் இன்னைக்கு ஒரு நாள் ஹாஸ்பிடலில் இருக்கட்டும்... நாளைக்குக் கூட்டிட்டுப் போயிடலாம்'' என்றார்.

நிம்மதிப் பெருமூச்சு விட்ட சங்கரி, ''நீங்க கிளம்புங்க தம்பி... காலையில் இருந்து இங்கேயே இருக்கீங்க...'' என்றவுடன், ''பரவாயில்லை அக்கா... நீங்க குழந்தை

யோடு வீட்டுக்குப் போங்க... நைட் நான் இங்கேயே சார் கூட இருக்கேன்'' என்றான்.

''இல்லை தம்பி... நானே இருக்கேன்... அப்பதான் எனக்கு நிம்மதியா இருக்கும்'' என்றார்.

அவரது மனம் புரிந்தவனாய், ''சரி ரம்யாவைக் கூட்டிட்டுப் போறேன்... நைட் நடுவில் எழுந்தால், எதாவது சாப்பிடக் கொடுக்கணுமா?'' என்றவனை நன்றியுடன் பார்த்தவர், ''இல்லை தம்பி... அவள் நடுவில் விழித்து எழுந்தால் என்னைத் தேடுவாள்'' என்று தாய்க்கே உரிய பெருமையுடன் சொல்ல,

'குழந்தை அம்மாவை விட்டு இருப்பாளோ என்னமோ, இந்த அம்மா குழந்தையை விட்டு இருக்க மாட்டாங்க' என்று மனதில் சிரிப்புடன் நினைத்தவன், ''சரிக்கா... சார்க்கு ஹாஸ்பிட்டலிலேயே சாப்பிடக் கொடுப்பாங்க... நான் உங்க ரெண்டு பேருக்கும் கேண்டீன்ல எதாவது வாங்கிக் கொடுத்திட்டுப் போறேன்'' என்று அவன் சொன்னவுடன் ''அங்கிள் எனக்கு ஏதாவது பிஸ்கட் வேணும்'' என்று ரம்யா சொல்ல, சங்கரியும் அவனுடன் அறைக்கு வெளியே வந்தார்.

மருத்துவமனை வாசலில் வந்து இறங்கிய வந்தனா, அவசரமாக வரவேற்பறையில் ஆதியின் பெயரைச் சொல்லி விசாரிக்க முற்படுகையில், உள்ளுணர்வு உறுத்த திரும்பிப் பார்த்தவளின் கண்களில் கையில் குழந்தையுடன் வந்த ஆதித்யன் பட்டான்.

வேகமாக, அவனை நோக்கி நடந்தவள், அவன் கேண்டீன் போகப் படியில் ஏறவும், ''ஆதி!'' என்று குரல் கொடுத்து நிறுத்தினாள்.



திடுக்கிட்டுத் திரும்பிய ஆதியை, தலை முதல் பாதம் வரை தன் கண்களால் அலசிய வந்தனா, அவனுக்கு எதுவுமில்லை என்றதும் நிம்மதியுடன் கண்களை மூடி நின்றாள்.

அவளை அங்கே எதிர்பார்த்திராத ஆதிக்கு, அதிர்ச்சியாக இருந்தது. அவளது, பதட்டமான முகம், கவலையை அளிக்க அவளது அருகில் வந்தவன், ''வது, என்ன ஆச்சும்மா? நீ இங்கே என்ன பண்றே?'' என்று அக்கறையுடன் விசாரித்தான்.

கண்களைத் திறந்தவள், ''நீங்க இங்கே என்ன பண்றீங்க?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

இரண்டு பேரின் பேச்சையும் கேட்டுக் கொண்டிருந்த சங்கரி, ''யார் தம்பி இவங்க?'' என்று விசாரித்தார்.

அவன் என்ன சொல்லி அறிமுகப்படுத்துவது என்று விழிக்க, அவன் என்ன சொல்லப் போகிறான் என்ற ஆவலில் வந்தனாவும் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளது ஆவல் நிறைந்த முகம் அவனுள் வேதனையைக் கிளப்பினாலும், கட்டுப்படுத்திக் கொண்டு ''நான் டெய்லி போவேனே அக்கா, அன்னை இல்லம், அங்கே நர்சா வேலை பார்க்கிறாங்க'' என்று சொல்ல, 'அவ்வளவுதானா?' என்று அவள் கண்கள் அவனைக் கேள்வி கேட்டது.

''சரிக்கா நீங்க இங்கேயே இருங்க, நான் போய் டிபன் வாங்கிட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு அவன் செல்ல, வந்தனா சங்கரியோடும் குழந்தையோடும் பேசலானாள்.

அவன் திரும்பி வரும்போது, வந்தனா ஏதோ சொல்ல, சங்கரி சிரித்துக் கொண்டிருக்க, ரம்யாவோ வந்தனாவின்

கழுத்தை கட்டிக் கொண்டு ''நீங்க ரொம்ப ஸ்வீட் ஆன்ட்டி!'' என்று சொல்லிக் கொண்டிருந்தது.

'எப்படித்தான் இவளால் மட்டும் எல்லாரையும் வசீகரிக்க முடிகிறதோ?' என்று எண்ணிக் கொண்டே வந்தவன், சங்கரியிடம் உணவு பார்சலைக் கொடுத்து விட்டு விடைபெற்றான்.

''ஒரு நாள் நம்ம வீட்டுக்குக் கண்டிப்பா வரணும், வந்தனா'' என்று வந்தனாவிடம் சங்கரி சொல்ல, வந்தனா ஆதியை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே, ''ம்... கூடிய சீக்கிரமே வரேன்'' என்றாள்.

மருத்துவமனைக்கு வெளியே வந்தவுடன், ''நான் இங்கே என்ன பண்ணிட்டு இருந்தேன்னு இந்நேரம் உனக்கு தெரிஞ்சிருக்கும், இந்த நேரத்துக்கு நீ இங்கே என்ன பண்றே?'' என்றவனின் கேள்விக்கு, ''உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்!'' என்ற பதில் ஆச்சரியம் தர ''எதுக்கு?'' என்றான்.

நேற்றும், இன்றும் அவனுக்காகக் காத்திருந்தது ஏமாந்தது, அவன் ஹாஸ்பிடலில் இருக்கிறான் என்றதும் தான் கலங்கியது எல்லாம் நினைவுக்கு வர, ''எதுக்குன்னா கேட்கறீங்க? இன்னைக்கும் நீங்க இல்லத்துக்கு வரலை... பிள்ளைகளுக்கு பரிசை யார் கிட்டயோ கொடுத்து அனுப்பி இருக்கீங்க... ஹாஸ்பிடல்ல இருக்கீங்கன்னு மேடம்க்கு போன் பண்ணிச் சொல்லி இருக்கீங்க... நான் என்னவோ ஏதோன்னு பதறி அடிச்சிட்டு வந்தால், எதுக்கு வந்தேன்னா கேட்கறீங்க?'' என்று கோபத்துடன் கேட்டவளிடம்,

''ஷ்... வந்தனா மெதுவா பேசு... எதுக்காக ஹாஸ்பிடல்ல இருக்கேன்னு மேடம் கிட்டச் சொன்னேனே...



நீ சரியா கேட்காமல் ஏதோ நினைச்சிட்டு வந்தால் நான் என்ன பண்றது?'' என்றவன்,

கொஞ்சம் இடைவெளி விட்டு, ''அப்படியே எனக்கு ஏதாவதுன்னாலும் நீ ஏன் பதறி அடிச்சிட்டு வரணும், உனக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்?'' என்று நிதானமாகக் கேட்க, அதிர்ந்து போய் நின்றாள் வந்தனா.

## 4

'உனக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்?' என்று ஆதித்யன் கேட்டதும் அதிர்ந்து போய் நின்ற வந்தனா உடனே சமாளித்துக் கொண்டாள். இவன் எப்போதுமே இப்படித்தானே... ஒரு நாள் நன்றாகப் பேசுவான். அடுத்த நாள் முகத்தைத் திருப்பிக் கொள்வான். 'என்ன சம்மந்தம் என்றா கேட்கிறாய்? இரு, சொல்கிறேன்' என்று மனதுக்குள் எண்ணியவள், ''நான் உங்களோடு கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

அதிர்ந்து போய் நின்ற அவளது தோற்றம், மனதை இளக்கினாலும், அவள் பேச வேண்டும் என்றதும், முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு ''பேசறதுக்கு நம்ம ரெண்டு பேருக்கும் நடுவில் எதுவும் இல்லை... அப்புடியே ஏதாவது இருந்தாலும்... இந்த நேரத்தில் வேண்டாம். நீ கிளம்பு!'' என்று அவளைக் கிளப்ப முயன்றான்.

அவன், அவளை அனுப்புவதில் குறியாய் இருந்ததைப் போலவே, வந்தனாவும் பேசுவதில் பிடிவாதமாய்

இருந்தாள். அவள் கிளம்பப் போவதில்லை என்று தெரிந்ததும், "சரி... நான் கிளம்பறேன்... நீ இங்கேயே நின்னுகிட்டு இரு!" என்று சொல்லி விட்டு ஒரு அடி எடுத்து வைத்தவனின் காதில், அவளது தீர்மானமான குரல் விழுந்தது.

"நீங்க சொன்னாலும், சொல்லாவிட்டாலும், நீங்க பேசறதுக்கு ஒத்துக்கற வரை, நான் இங்கேதான் இருக்கப் போறேன்."

நம்ப முடியாமல் திரும்பிப் பார்த்தவன், அவள் முகத்தில் தெரிந்த பிடிவாதத்தைப் பார்த்து, "ப்ச்... வந்தனா... கிளம்பு, ஏற்கனவே எட்டு மணி ஆயிடுச்சு.... நாளைக்கு வேணும்னா பேசிக்கலாம்" என்று இறங்கி வந்தான்.

பேசவே தேவையில்லை என்றவன், நாளைக்குப் பேசிக் கொள்ளலாம் என்று இறங்கி வந்ததும், வந்தனா தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

அவள் நின்ற நிலையிலேயே அவளது பிடிவாதம் புரிந்துவிட, 'சரி, எதுவானாலும் இன்றே பேசி முடித்து விடலாம்' என்று நினைத்தவனாக, "சரி வா... பக்கத்தில் ஒரு காபி ஷாப் இருக்கு, அங்கே போகலாம்" என்றான்.

"இல்லை... உங்க பிளாட்டுக்குப் போகலாம்!"

"ஏய்! அறிவில்லை? இந்த நேரத்தில், உன்னை என் பிளாட்டுக்குக் கூட்டிட்டுப் போனால் பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க?" சுள்ளென்று வந்து விழுந்தது அவன் வார்த்தைகள்.

"அதைப் பற்றிக் கவலைப்பட, இப்போ எனக்கு நேரமில்லை!" என்று அலட்டிக் கொள்ளாமல் அவள் சொன்னதும், அவனுக்கும் கோபம் அதிகமாகியது.



"உன் மனசில என்னதான் நினைச்சிட்டு இருக்க? பேசணும்னு சொன்னே... இப்போ பிளாட்டுக்குப் போய் பேசலாம்னு சொல்றே... நான் முடியாதுன்னு சொன்னால் என்ன பண்ணுவே?" என்று கோபத்துடன் கேட்டான் ஆதி.

"அதான் சொன்னேனே... இங்கேயேதான் இருக்கப் போறேன்!"

அவள் தீர்மானமாக அப்படிச் சொன்னதும், ஆதிக்கு ஒரு நிமிடம் என்ன செய்வது என்று புரியவில்லை. இங்கே நின்று இருவரும் வாதம் செய்து கொண்டிருந்தால், இன்னமுமே நேரம்தான் ஆகும் என்று நினைத்தவனாக, "சரி... வா" என்று அவளை அழைத்தான்.

'அப்படி வா வழிக்கு' என்று மனதுக்குள் நினைத்த வந்தனா, ஒன்றும் பேசாமல் அவனைத் தொடர்ந்தாள். ஐந்து நிமிட நடையில், தன் பிளாட்டுக்கு அவளை அழைத்துச் சென்றான்.

கதவைத் திறந்து, உள்ளே நுழைந்ததும், "வாவ்! ரொம்ப நீட்டா வச்சிருக்கீங்க ஆதி... பேச்சிலர் வீடு மாதிரியே இல்லை!" என்று அவள் ஆச்சரியப்பட, 'கொஞ்ச நேரம் முன்பு அந்த பாடுபடுத்தி விட்டு, இப்போ ஒண்ணும் தெரியாத குழந்தை மாதிரி என்னைப் புகழ்வதைப் பார்!' என்று மனதில் நினைத்தவன், "ஏதோ பேசணும் என்று சொன்னியே... சீக்கிரம் சொல்லிட்டுக் கிளம்பு, நேரம் ஆகுது" என்றான்.

"என்ன ஆதி இது? முதல் தடவையா உங்க வீட்டுக்கு வந்திருக்கேன்... சாப்பிட எதுவும் கொடுக்க மாட்டீங்களா?"

என்னமோ அவன்தான் அவளை வெற்றிலைப் பாக்கு வைத்து அழைத்து வந்த மாதிரி அவள் பேசவும்,

அவனுக்குத் தன்னையும் மீறிச் சிரிப்பு வந்தது. இவளிடம், அதைக் காட்டினால், இன்னமும் தலையில் ஏறி உட்கார்ந்து கொள்வாள் என்று நினைத்து, வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

அதற்குள், அவளே சமையலறைக்குள் சென்று ஏதாவது இருக்கிறதா என்று நோண்டத் துவங்க, அவனுக்குக் கோபம் வந்தது.

''வந்தனா... மத்தவங்க வீட்டுக்கு வந்து, அவங்க அனுமதி இல்லாமல் சமையலறை வரைக்கும் போறது நாகரிகம் இல்லைன்னு உனக்குத் தெரியாதா?'' என்று அலட்சியத்துடன் கேட்டான்.

அவனது அலட்சியத்தைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல், ''அது மத்தவங்க வீட்டில்தானே ஆதி?'' என்று எதிர்க் கேள்வி கேட்டாள்.

அவளது குரலில் இருந்த உரிமை உணர்வு மனதை அசைத்துப் பார்த்தது. அவளது அருகாமையில் தன் மனம், தன் பேச்சைக் கேட்காது என்பதை உணர்ந்தவன் என்பதால், அவளைச் சீக்கிரமே அங்கிருந்து கிளப்ப வேண்டும் என்று எண்ணினான்.

அவள் பேசப் போவது அவனுக்கு ஒன்றும் தெரியாததில்லை. இருந்தாலும், அவள் வாயால் வரட்டும் என்று நினைத்தவன், ''ப்ளீஸ் வந்தனா... பேச வேண்டியதைப் பேசி விட்டுச் சீக்கிரம் கிளம்பு'' என்றான் எரிச்சல் குரலில்.

அவளுக்குமே விஷயத்தைச் சீக்கிரம் சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தது. ஆனால், எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல், நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தாள்.



இனிமேல் அவன் பொறுமையைச் சோதிக்கக் கூடாது என்று எண்ணியவளாக, அவனது முகத்தைக் கூர்ந்து நோக்கி ''என்னைப் பத்தி என்ன நினைக்கிறீங்க ஆதி?'' என்றாள்.

'உன்னைப் பற்றி நினைப்பதை வெளியில் சொல்ல முடியாமல்தானே இப்படித் தவித்துக் கொண்டிருக்கிறேன்' என்று நினைத்தவன், ரொம்பவும் சாதாரணமான குரலில், ''உன்னைப் பத்தி நினைக்கிறதுக்கு என்ன இருக்கு?'' என்றான்.

இதை ஓரளவுக்கு எதிர்பார்த்தவளாக, ''சரி... நான் உங்களைப் பத்தி என்னை நினைக்கிறேன்னு சொல்லட்டுமா?'' என்றாள்.

இதயம் படபடக்க, அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக நின்றான் ஆதி.

''உங்களைப் பார்த்த நாளில் இருந்து உங்க மேல பைத்தியமா இருக்கேன்... இன்னும் சொல்லப் போனா... உங்களோட மானசீகமா வாழ்ந்துட்டு இருக்கேன் ஆதி!'' என்று அவள் நிதானமாகச் சொல்ல,

அவள் சொன்னது, அவனுக்குத் தெரிந்ததே என்றாலும், அவள் அதைச் சொன்ன விதத்தில், சந்தோஷமும் வேதனையும் ஒரே சமயத்தில் அவன் மனதைத் தாக்கியது.

எங்கே தன்னுடைய வேதனை தன் கண்களில் வெளிப்பட்டு விடுமோ என்று கண்களை மூடிக் கொண்டு அமைதியாக இருந்தான்.

அவனுடைய அமைதி அவளை ரொம்பவே பாதித்தது. அருகில் வந்து அவன் கையைப் பற்றியவள், ''ஆதி...'' என்று மெல்ல அழைத்தாள்.

அவள் கை பட்டதும், அவசரமாகக் கண்களைத் திறந்தவன், "சாரி வந்தனா... உன் மனசுல இப்படி ஒரு எண்ணம் வர மாதிரி நான் நடந்திருந்தால், என்னை மன்னிச்சிடு" என்றான்.

கொஞ்சம் தயங்கி, "ஆனால், என் மனசுல அந்த மாதிரி எந்த எண்ணமும் இல்லை" என்று உறுதியான குரலில் சொன்னான்.

"பொய்..."

அமைதியாகவே இந்தப் பேச்சு வார்த்தையை முடித்து விடலாம் என்று நினைத்த ஆதிக்கு, அவள் அவன் பொய் சொல்கிறான் என்று சொன்னதும் கோபம் வந்தது.

"என் மனசில இருக்கிறதை நான் சொன்னேன், அதை நம்பறதும், நம்பாததும் உன் இஷ்டம்" என்று அலட்சியத்துடன் ஆதி சொல்ல, "திரும்பத் திரும்பச் சொன்னால், பொய் உண்மையாகிடாது!" என்று அவனுக்குத் திருப்பிக் கொடுத்தாள் வந்தனா.

"சரி... நீ சொல்ல வேண்டியதைச் சொல்லியாச்சு... நானும் சொல்லிட்டேன்... இப்போ நீ கிளம்பு" என்று அவன் அவளைக் கிளப்ப முயல,

"அவ்வளவு சீக்கிரம் உங்களை விட்டுட முடியாது மிஸ்டர் ஆதி... என்கிட்டே இன்னமும் கேள்விகள் இருக்கு" என்றாள் அவள்.

"முதல் விஷயமே தெளிவாகி விட்ட பிறகு, மற்ற கேள்விகள் அனாவசியம்" என்று பேச்சை கத்தரிப்பது போலச் சொன்னான்.

'இதற்கெல்லாம் நான் அசந்து விட மாட்டேன்' என்ற மாதிரி நின்ற வந்தனா, "அதை நான் முடிவு செஞ்சுக்கறேன்" என்று சொல்லிவிட்டு, "என்னை ஏன் 'வது'ன்னு



கூப்பிடறீங்க ஆதி?" என்று ஒன்றும் தெரியாதவளைப் போலக் கேட்டாள்.

'அவள் கவனிக்கவில்லை என்று நினைத்தேனே... இதற்கு என்ன பதில் சொல்வது?' என்று யோசித்தவன், 'அப்படிக் கூப்பிடவே இல்லை' என்று சொல்லி விடலாமா என்று நினைக்கும்போதே,

"எப்போ அப்படிக் கூப்பிட்டேன்னு யோசிக்கிறீங்களா ஆதி? ம்ம்... எனக்கு அடிபட்ட போது ஒரு முறை, அப்புறம் இன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல என்னைப் பார்த்த போது ஒரு முறை...." என்று விரல் விட்டு எண்ணி விளக்கம் கொடுக்க அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

'ராட்சசி... எல்லாத்தையும் புட்டுப் புட்டு வைக்கிறா பாரு' என்று மனதுக்குள் திட்டியவன், "அது ஏதோ வாய் தவறி வந்திருக்கும்..." என்று 'இதெல்லாம் ஒரு விஷயமா?' என்ற குரலில் சொல்ல, "இருக்கும்... இருக்கும்" என்று அவளும் பலமாகத் தலையை ஆட்டி ஒத்துக் கொண்டாள்.

'அதெப்படி வாய் தவறி செல்லமா பெயர் வச்சுக் கூப்பிடுவீங்க?' என்று எதிர்க் கேள்வி கேட்பாள் என்று அவன் எதிர்பார்த்திருக்க, அவள் அவனது பதிலை அமைதியாக ஒத்துக் கொண்டு விடவே, 'அடுத்த குண்டை வீசப் போறாளோ?' என்று பயத்துடன் பார்த்தான்.

"அன்னைக்கு எனக்கு அடிபட்டபோது ஏன் அவ்வளவு பதறிப் போயிட்டீங்க?" என்று அடுத்தக் கேள்வியை அவள் வீச,

"ப்ச்... இதென்ன கேள்வி... நம்ம கண் எதிர்க்க, ஒருத்தருக்கு அடிபட்டு ரத்தம் வந்தால், பதற மாட்டோமா?

ஏன் நீ அப்படிப் பதற மாட்டாயா?'' என்று அவளையே திருப்பிக் கேட்டான்.

''கண்டிப்பா!'' என்று உடனடியாக பதில் சொன்னவள், ''அதோட விடாமல், முதல் உதவி கூடச் செய்வேன்!'' என்றும் சொல்ல, அவன் அவசரமாக நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

''ஆனால்...'' என்று அவள் மேலும் இழுக்க, 'இப்போ என்ன?' என்று அவன் பார்க்க, அவன் கண்களையே கூர்ந்து நோக்கியவள் சின்னச் சிரிப்புடன்,

''அதுக்கும் மேல, அவங்க காலை எடுத்து மடியில வச்சு, வருடிக் கொடுக்க எல்லாம் மாட்டேன்'' என்று அவள் நிதானமாகச் சொன்னவுடன், ஆதி திகைத்து நின்றான்.

'இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்?' என்று அவள் கணகள் கேள்வி கேட்டது.

அவனால் என்ன பதில் சொல்ல முடியும்? அதற்கு மேல் நிற்பதே, பெரிய விஷயமாகிவிட, அமைதியாக வந்து சோபாவில் அமர்ந்தவன், கண்களை மூடிக் கொண்டான்.

அவன் கூடவே வந்து அருகில் அமர்ந்தவள், ''மனசில ஆசையை வச்சிட்டு, எதுக்காக இந்த வேஷம் ஆதி?'' என்று மென்மையான குரலில் கேட்டாள்.

அவள் கேள்வியில் கண்களைத் திறந்தவன், ''ஆசை தான்... உன்னை மாதிரியே, பார்த்த நொடியில் இருந்து காதல்தான்... ஆனால் இது எல்லாம் சரிப்பட்டு வராது வந்தனா... ஏன்னு கேட்காதே... என்னால் பதில் சொல்ல முடியாது... இந்த நிலை வரக்கூடாதுன்னுதான் உன் கிட்டே இருந்து விலகியே இருக்கணும்னு நினைச்சேன்...



ஆனால் முடியலை... அதுல என்னோட சுயநலமும் இருக்கு... உன்னோட அருகாமையை நானும் ரசிச்சிட்டு இருந்தேன்... அது தப்புதான்... என்னை மன்னிச்சிடு வந்தனா... இந்த உறவை அடுத்தக் கட்டத்துக்குக் கொண்டு போக என்னால் முடியாது... நீ ஏன் மேல வச்சிருக்கிற அன்பு உண்மைன்னா, இதுக்கு மேல என்னை எதுவும் கேட்காதே... ப்ளீஸ்'' என்று குரலில் நிராசையுடன், அவன் சொன்னதும், அவள் ஒன்றும் பேசாமல் அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

''தேங்க்யூ ஆதி! நான் எதுவும் கேட்கப் போறதில்லை... நீங்க என்னை விரும்பறீங்கன்னு எனக்குத் தெரிஞ்சாலும்... அந்த வார்த்தையை உங்க வாயால் கேட்கும் போதுதான் எனக்கு நிம்மதியா இருக்கு... தேங்க்யூ சோ மச்!'' என்று உணர்ச்சி நிறைந்த குரலில் சொன்னாள் வந்தனா.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் கைகளை விடுவித்தவள், ''சரி... நான் கிளம்பறேன்... லேட் ஆயிடுச்சு... மேடம் ரொம்பக் கவலைப்படுவாங்க'' என்று சோபாவில் இருந்து எழுந்தாள்.

அவள் சாதாரணமாகக் கிளம்புகிறேன் என்று சொன்னதும், ஆதிக்கு, அவளுக்கு தான் சொன்னது புரிந்ததா, இல்லையா என்று குழப்பமாக இருந்தது.

''வது...' என்று சொல்லத் தொடங்கியவன் சமாளித்துக் கொண்டு, ''வந்தனா... நான் சொன்னது புரிஞ்சிதில்ல... நீ இதெல்லாம் ஒரு கனவா நினைச்சு...'' என்று தொடங்க, வந்தனாவின் குரல் அவனை நிறுத்தியது.

''ப்ளீஸ் ஆதி... இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்... வேற எதுவும் பேச வேண்டாமே... ப்ளீஸ்...''

என்று அவள் தலை சரித்துச் சொல்ல, அதற்கு மேல் அவனால் எதுவும் பேச முடியவில்லை.

''சமையல் எதுவும் நீங்க செய்யறதில்லை போல... நைட் சாப்பிடாமல் படுக்காதீங்க... வெளியில போய் எதாவது கண்டிப்பா சாப்பிடுங்க'' என்று அவள் அக்கறையும், அதட்டலுமாய் சொன்னது, அவனுக்கு அம்மாவை ஞாபகப்படுத்த அமைதியாய் இருந்தவன், அவள் வாசலை நோக்கி நடக்கவும்,

''ஹேய்... இரு நான் வந்து இல்லத்தில் விட்டுட்டு வரேன்... ரொம்ப லேட் ஆயிடுச்சு'' என்றான்.

''இல்லை ஆதி... இதுக்கு மேல் என்னை விட்டுட்டு வந்து சாப்பிட லேட் ஆயிடும்... நான் ஆட்டோல போய்க்கிறேன்... ஒண்ணும் பிரச்சனை இல்லை.''

''சரி இரு... தெரிஞ்ச ஆட்டோக்காரர் இருப்பாரு... அதுல ஏத்தி விடறேன்... நானும் சாப்பிட எப்படியும் வெளியில போகணும் இல்ல?'' என்று சொல்லிவிட்டு வாயிலுக்கு வந்து கதவைப் பூட்டினான்.

''எதிர்த்த ப்ளாட்லதான் ரம்யா இருக்காளா? ரொம்ப க்யூட் இல்ல அந்த பொண்ணு?'' என்று சிரிப்புடன் அவள் சொல்ல, அவனுக்குமே ரம்யாவின் நினைப்பில் புன்னகை மலர்ந்தது.

எப்போதும் போல், அவனது புன்னகையைக் கண்டு மயங்கியவள், சட்டென்று அவன் கையைப் பிடித்து, புறங்கையில் தன் இதழ்களை அழுந்தப் பதித்து விட்டு, அதே வேகத்தில் அவனைத் திரும்பியும் பாராமல், விடுவிடுவென்று நடந்தாள்.

அவளது அந்த திடீர் இதழ் ஸ்பரிசத்தில் ஒரு கணம் திகைத்து நின்ற ஆதி, அவள் வேகமாக நடந்து செல்லவும், அவள் பின்னேயே வேகமாக வந்தான்.



அவன் கூட வருவது தெரிந்தும், அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை. தெரு விளக்கின் வெளிச்சத்தில், அவளைப் பார்க்க முயன்ற ஆதியின் கண்களுக்கு, அவளது கன்னச் சிவப்பு தப்பவில்லை.

தெரிந்த ஆட்டோக்காரரிடம் பத்திரமாக அவளை அன்னை இல்லத்தில் விடும்படி சொல்லிவிட்டு, அவன் அவள் பக்கம் திரும்ப, அப்போதும் அவள் அவனைப் பார்க்கவில்லை. அவனும் எதுவும் சொல்லவில்லை. அவளை அனுப்பி விட்டு, அவன் அங்கேயே நின்றிருக்க, அவள் ஆட்டோவில் இருந்து திரும்பிப் பார்ப்பது தெரிந்தது. அவனையும் அறியாமல், அவளை நோக்கி கை அசைத்தான்.

ஆதிக்கு, சாப்பிடும் எண்ணமே இல்லை. வந்தனா சொல்லிவிட்டுச் சென்றாள் என்ற காரணத்துக்காக, அருகில் இருந்த ஹோட்டலுக்குச் சென்றவன், பெயருக்கு எதையோ கொறித்து விட்டு வந்தான்.

படுக்கையில் அமர்ந்தவனின் ஒரு கை தானாக, அவள் முத்தமிட்டுச் சென்ற புறங்கையை வருடியது. அவளது இதழ்களையே வருடுவது போன்ற உணர்வு தோன்ற, அவனது தேகத்தில் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

'என்ன மாதிரி பெண்! எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே' என்று கழிவிரக்கம் தோன்ற, அவள் முத்தமிட்ட கையில் முகத்தை புதைத்துக் கொண்டவன் கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது.

கொஞ்ச நேரம் கழித்து நிமிர்ந்தவன், இப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தால் பயன் இல்லை என்று உணர்ந்து, அடுத்து செய்ய வேண்டியதைப் பற்றி யோசித்தான்.

ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாக அவனுக்குப் புரிந்தது. இனிமேல் அவன் இங்கே இருக்கக் கூடாது!

எதோ பிரச்சனையால் தன்னைத் தவிர்க்கிறான், அப்புறம் சரியாகி விடும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் வந்தனா, இன்னொரு முறை வந்து அவனிடம் பேசினால், அவளை மறுக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. அதற்கு இடம் கொடுக்காமல், தான் இங்கே இருந்து செல்வதுதான் நல்லது என்று நினைத்தவன், தன் நண்பன் ரகுவுக்குப் போன் செய்தான்.

போனை எடுத்த ரகு, ''ஆதி? என்ன ஆதி இந்த நேரத்துல... எதாவது பிரச்சனையா?... ஆர் யூ ஓகே?'' என்று பதட்டத்துடன் கேட்டதும்தான், ஆதி நேரத்தைப் பார்த்தான். பன்னிரண்டு மணி ஆகி இருந்தது.

''ஒண்ணும் இல்லை ரகு... நீ பதட்டப்படாதே... ஒரு விஷயம் சொல்லணும்னுதான் போன் பண்ணேன்'' என்றவனுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை.

''என்ன ஆதி... எதாவது பிரச்சனையா?'' ரகுவின் குரலில் இன்னும் பதட்டம் போகவில்லை.

''ஹான்... ஆமாம் ரகு, இங்கே அன்னை இல்லத்தில் ஒரு விழா நடந்தது... அதுக்கு நிதி அமைச்சர் வந்திருந்தார்... உனக்குத்தான் தெரியுமே... அவர் அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர்... அவர் கண்ணில பட்டாமதான் இருந்தேன்... ஆனாலும் கிளம்பும்போது அவர் என்னைப் பார்த்த மாதிரி இருந்தது... அப்பாகிட்ட சொல்லிடுவாரோன்னு தோணுச்சு... அதான்... இங்கே இருந்து வேற எங்கேயாவது போலாம்னு நினைக்கிறேன்'' என்றான்.

ஒரு நிமிடம் அமைதியாக இருந்த ரகு, ''ஓகே ஆதி... நான் வேற இடம் சொல்றேன்... அதுவரைக்கும் அங்கேயே இரேன்'' என்று சொல்ல,



''நோ ரகு... நான் நாளைக்குக் காலையிலேயே இங்கே இருந்து கிளம்பணும்னு நினைக்கிறேன்'' என்று ஆதி உறுதியான குரலில் சொன்னான்.

''சரிப்பா... நாளைக்கு ஒரு ஒன்பது மணி வரை பொறுத்துக் கொள்ள முடியும்தானே? நான் சரியா ஒன்பது மணிக்குப் போன் செய்யறேன், சரியா?'' என்றவன் அவசரமாக, ''ஆனால் அதுக்கு முன்னாடி, என்கிட்டே கூடச் சொல்லாமல் கிளம்பிடாதே'' என்று சொல்லிவிட்டு ஆதியின் ஒப்புதலை வாங்கிக் கொண்டு போனை வைத்தான்.

ரகுவிடம் பேசிவிட்டு உறங்க நினைத்த ஆதிக்கு, பொட்டுத் தூக்கம் கூட வரவில்லை. வாய் 'சாரி வது... என்னை மன்னிச்சிடு' என்று புலம்பிக் கொண்டிருந்தது.

ஆதியிடம் பேசி விட்டு வந்த வந்தனா, தனக்காக வைத்திருந்த உணவு வீணாகக் கூடாது என்ற எண்ணத்தில், உணவை உண்டு விட்டு தன் அறைக்கு வந்தாள். அவள் மனம் நிறைந்து இருந்தது. என்னதான், ஆதியும் தன்னை விரும்புகிறான் என்று தெரிந்து இருந்தாலும், அவன் வாயால் சொல்லி கேட்டது, மிகுந்த சந்தோஷத்தை அளித்தது.

ஆதி எதோ பேச வந்தபோது கூட அப்போதிருக்கும் சந்தோஷ மனநிலையைக் கெடுத்துக் கொள்ள விரும்பாமல் தான் அவனைத் தடுத்தாள். அவர்களது இன்றைய பேச்சு முழுமையானது இல்லை என்று அவளுக்கும் புரிந்துதான் இருந்தது. எதுவாக இருந்தாலும் நாளை பேசிக் கொள்ளலாம் என்று முடிவெடுத்துதான், அவன் வீட்டில் இருந்து கிளம்பினாள்.

காலை சீக்கிரமாகவே, அவன் வீட்டுக்குச் சென்று பேசிவிட வேண்டியதுதான் என்று நினைத்தவள், அமைதியாகத் தூங்க ஆரம்பித்தாள்.

இரவு தூங்க வெகு நேரம் ஆனாலும், காலையில் சீக்கிரமாகவே விழிப்பு வந்து விட்டது ஆதிக்கு. தன்னுடைய பொருட்களை எடுத்து ஒரு பையில் எடுத்து வைத்தவன், தான் இங்கே இருந்து செல்வதை ரம்யா வீட்டுக்குச் சொல்ல வேண்டும் என்று நினைத்து சங்கரிக்கு போன் செய்தான்.

''என்ன தம்பி?'' என்ற சங்கரியிடம், ''அக்கா, நான் அவசர வேலையா வெளியூருக்குப் போக வேண்டி இருக்கு... வர ஒரு மாசம் கூட ஆகலாம்... சாரை இன்னைக்கு பன்னிரண்டு மணிக்கு மேலே டிஸ்சார்ஜ் பண்றாங்க இல்லை? நான் பத்து மணிக்கெல்லாம் இங்கே இருந்து கிளம்பிடுவேன்... நீங்களே மேனேஜ் பண்ணிக்க முடியுமா?'' என்றான்.

சங்கரி ராமநாதனிடம் விஷயத்தைச் சொல்ல, சங்கரியிடம் இருந்து போனை வாங்கி இருந்த ராமநாதன், ''நீங்க நேற்று செய்த உதவியே ரொம்ப பெருசு தம்பி... பக்கத்தில்தானே வீடு... நாங்களே ஆட்டோ பிடிச்சு வந்துடுவோம்... நீங்க பார்த்து போய் வாங்க'' என்றார்.

ரம்யாவிடமும் விடை பெற்றுக்கொண்டு, ''அப்போ என்னோட வீக்லி சாக்லேட்'' என்று கேட்ட குழந்தையிடம், நான்கு வாரத்துக்கும் சேர்த்து சாக்லேட்டை செக்யூரிட்டியிடம் கொடுத்து விட்டு செல்வதாக உறுதி அளித்தான்.

கொஞ்ச நாள் பழக்கம் என்றாலும், பலன் எதிர்பார்க்காமல் தன்னிடம் அன்பு செலுத்தும் அந்தக் குடும்பத்தை



விட்டுப் பிரிவது அவனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. இதற்கே இப்படி என்றால், இனிமேல் தான் வந்தனாவைப் பார்க்கவே போவதில்லை என்ற உண்மை அவனைப் பலமாகத் தாக்கியது. இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று அவன் நினைக்கும் போதே, ரகுவிடம் இருந்து அழைப்பு வந்தது.

''சொல்லு ரகு, ஏற்பாடு பண்ணிட்டாயா?'' என்று அவன் வேகமாக கேட்டதிலேயே, அவன் ரொம்ப நேரம் ரகுவின் அழைப்புக்காகக் காத்திருக்கிறான் என்பதை உணர்த்த, ''ம்... செஞ்சுட்டேன்... பத்து மணிக்கு எல்லாம் வண்டி வந்திடும்... ஆனால், அங்கே இருந்து கிளம்பறதுல உறுதியா இருக்கியா ஆதி?'' என்று கேட்டவன், ஆதியிடம் இருந்து ''ஆமாம்'' என்ற உறுதியான பதிலைக் கேட்டதும், மீதி விவரங்களையும் சொல்லிவிட்டுப் போனை வைத்தான்.

இன்னும் அரை மணி நேரம்தான். அதன் பின்னர் தனக்கும் வந்தனாவுக்கும் இடையே இருக்கும் தொடர்பு முடிந்து விடும் என்று வருத்தத்துடன் எண்ணி ஆதி, வண்டிக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.

காலையில் எழுந்த வந்தனா, சில முக்கியமான வேலைகளைச் செய்துவிட்டு, சாரதா அம்மாவிடம் அனுமதி வாங்கிக் கொண்டு ஆதியின் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

ஆட்டோ பிடிப்பதற்காக வந்தவளின் கண்ணில், அந்த சாலையோர விநாயகர் பட, ''கடவுளே! என்னையும் ஆதியையும் நல்லபடியாகச் சேர்த்து வைப்பா!'' என்று மனம் உருக வேண்டிக் கொண்டாள்.

பக்தர்களின் வினை எல்லாம் தீர்க்கும் அந்த விநாயகர், வந்தனாவின் வேண்டுதலை நிறைவேற்றுவாரா?

## 5

ஆட்டோவில் வந்து இறங்கிய வந்தனா, ஆதியின் வீட்டுக் கதவைத் தட்டினாள். 'இந்த நேரத்தில் யார் கதவைத் தட்டுகிறார்கள். ஒரு வேலை ரம்யா வீட்டினர் சீக்கிரமே வந்து விட்டார்களா என்ன?' என்று எண்ணிக் கொண்டே கதவைத் திறந்த ஆதி, அங்கே வந்தனா நின்றதைப் பார்த்ததும் திகைத்து நின்றான்.

அவன் திகைப்பைக் கண்டு கொள்ளாமல், உற்சாகத் துடன் ''குட் மார்னிங், ஆதி!'' என்றாள் வந்தனா.

'வண்டி வரும் நேரம் பார்த்து இவள் இங்கே வந்திருக் கிறாளே... இவளை எப்படி இங்கே இருந்து கிளப்புவது?' என்று யோசித்த ஆதி, ''நீ எங்கே இந்த நேரத்தில்? எதாவது பேசணும்னா சாயந்திரம் வாயேன் வந்தனா, நான் இப்போ அவசரமா ஆபிஸ் கிளம்பிட்டு இருக்கேன்'' என்று முடிந்தவரை இயல்பான குரலில் சொன்னான்.

''அப்படியா? இன்னைக்கு ஒரு நாள் ஆபீசுக்கு லீவு சொல்லிடுங்களேன்... ப்ளீஸ்'' என்று வந்தனா கேட்க, என்ன சொல்லி சமாளிப்பது என்று ஆதி யோசித்துக் கொண்டிருக்கும்போதே, செக்யூரிட்டி வந்தார்.

''நீங்க சொன்ன வண்டி வந்திடுச்சு சார்... பையை எடுத்துட்டுப் போய் வண்டில வச்சிடட்டுமா?'' என்று அவர் கேட்க, வந்தனா அப்போதுதான் ஆதி பேக் செய்து வைத்திருந்த இரண்டு பைகளையும் பார்த்தாள்.

குற்றம் சாட்டும் பாவனையில் ஆதியைப் பார்த்தவள், செக்யூரிடியிடம் திரும்பி, ''அவரை கொஞ்ச நேரம்



காத்திருக்கச் சொல்லுங்க செக்யூரிட்டி'' என்று சொல்ல அவரும் தலையாட்டி விட்டுப் போனார்.

''சொல்லாமல் கொள்ளாமல் எங்கே போறீங்க மிஸ்டர் ஆதி?'' அடக்கப்பட்ட கோபத்துடன் வந்தனா கேட்க,

''வேலை விஷயமாக வெளியூர் போறேன்.''

''இப்போதான் ஆபீஸ் கிளம்பிட்டு இருக்கேன் என்று சொன்னீங்க... இப்போ வெளியூர் போறேன்னு சொல் றீங்க?''

''ப்ளீஸ் வந்தனா... எனக்கு லேட் ஆயிட்டு இருக்கு... நான் கிளம்பணும்.''

''எங்கேன்னு சொல்லிட்டுப் போங்க!''

ஆதி தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

''ப்ளீஸ் ஆதி... நீங்க நேத்து சொன்ன மாதிரி உங்களை நான் எதுவும் கேட்கப் போறதில்லை... ஆனால் நான் சொல்றதை மட்டும் தயவு செஞ்சு கேளுங்க... அப்புறம் உங்க முடிவைச் சொல்லுங்க'' என்றவளை தடுத்து,

''நான் நேத்தே என் முடிவைச் சொல்லிட்டேன்... உன் னுடைய எந்தப் பேச்சும் அந்த முடிவை மாத்த முடி யாது!'' என்று அவசரமாகச் சொன்னான்.

ஒன்றும் சொல்லாமல் வந்தனா, கதவைச் சாத்தி விட்டு வந்தாள். அதைப் பார்த்தவன் கோபமாக, ''வந்தனா! என்ன பண்றே?'' என்றான்.

''நான் ஒரு கேள்வி கேட்கிறேன் ஆதி... அதுக்கு பதில் சொல்லுங்க'' என்றவள், ''உங்களுக்கு ரொம்ப வேண்டிய வங்க ஒருத்தர் சாகப் போற நேரத்தில, உங்ககிட்ட வந்து ஏதாவது செய்யச் சொல்லிக் கேட்டால், என்ன செய் வீங்க?'' என்றாள்.

'இதென்ன கேள்வி?' என்பது போல அவன் பார்க்க, ''ப்ளீஸ்... சொல்லுங்களேன்'' என்றாள் அவள்.

''என்னால் முடிகிற விஷயமென்றால் நிச்சயம் செய் வேன்!'' என்றான்.

கொஞ்ச நேரம் அவன் கண்களையே பார்த்துக் கொண் டிருந்தவள், ''இப்போ நான் அந்த நிலைமையில்தான் இருக்கேன் ஆதி... எனக்கான நாளை கடவுள் குறிச்சிட் டார்... அதுவரைக்கும் உங்க மனைவி என்ற ஸ்தானத்தை எனக்குத் தருவீங்களா? ப்ளீஸ்...'' என்று யாசகம் கேட்பது போலக் கேட்க, மூச்சு விட மறந்து நின்றான் ஆதி.

'என்ன சொல்கிறாள் இவள்? என் காதில் சரியாகத் தான் விழுந்ததா?' என்று தன்னையே கேட்டுக் கொண்டு, அவளைப் பார்த்தவனுக்கு, கண்களில் எதிர்பார்ப்புடன் வந்தனா நிற்பது பட்டது.

'இல்லை... இவள் பொய் சொல்கிறாள்' என்று தோன்றி விட, ''நினைச்சது நடக்கணும்னா என்ன வேணா சொல்லுவியா? முட்டாள்! உயிரோட மதிப்புத் தெரியாம எதாவது தத்துப் பித்துன்னு பேசாதே!'' என்று எரிந்து விழுந்தான்.

''இல்லை ஆதி... நான் பொய் சொல்லலை... நான் இங்கே இல்லத்துக்கு ஏன் வந்தேன் என்று தெரியுமா?'' என்று அமைதியாகக் கேட்டாள்.

சாரதா அம்மா, மன ஆறுதலுக்காக இங்கே வந்திருக் கிறாள் என்று சொன்னது நினைவுக்கு வர அவன் அமைதி யாக இருந்தான். ரொம்பவும் மனக்காயம் இருக்கிறது என்று சொன்னார்களே... 'ஒருவேளை, வந்தனா சொல் வது உண்மையாக இருக்குமோ?' என்று எண்ணியவ



னுக்கு, அந்த நினைப்பே பயத்தைத் தர, 'கடவுளே! அப்படி எதுவும் இருக்கக் கூடாது' என்று அவசரமாக அவன் மனம் பிரார்த்தனை செய்தது.

அவன் யோசனையில் இருக்க, வந்தனா தன் கேள் விக்கு அவனிடம் இருந்து பதிலை எதிர்பாராமல் தன் பேச்சைத் தொடர்ந்தாள். ''அப்பா நான் ப்ளஸ் டூ படிக் கும்போதே இறந்து போய்ட்டார். அம்மா, இப்போ சமீபத் தில்தான்...'' என்று சொன்னவளுக்கு தொண்டை அடைத் தது. அவள் கலங்குவது பொறுக்காமல், அவளருகில் வந்து கைகளைப் பற்றியவன், ''சாரதா மேடம் சொல்லி இருக்காங்க... நீ எதுவும் சொல்ல வேண்டாம்'' என்றான்.

அவன் தன் கையைப் பிடித்திருந்தது ஆறுதலைத் தர அவள் தொடர்ந்தாள். ''அதுக்கப்புறம்தான்... எனக்கு இதயத்தில் பிரச்சனை இருப்பது தெரிந்தது... நான் வேலை செய்த ஹாஸ்பிடலிலேயே ட்ரீட்மென்ட் பார்த் தேன்... என்னோட டாக்டர் பெரிய பெரிய டாக்டர்களிடம் எல்லாம் கன்சல்ட் பண்ணிட்டாங்க... அவங்களும் ஒண் ணுமே முடியாதுன்னு சொல்லிட்டாங்க... இன்னும் ஆறு மாசமோ இல்லை ஒரு வருஷமோ...'' என்று அவள் சொல்லிக் கொண்டே போக, ''வது! ப்ளீஸ் அப்படிச் சொல் லாதடா!'' என்று வேகமாகச் சொன்னவன், அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.

தன்னைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்க இப்படி எல்லாம் சொல்கிறாள் என்று நினைத்திருந்த ஆதிக்கு, அவள் குரலில் இருந்த எல்லை இல்லாத வேதனை, அவள் சொல்வது உண்மைதான் என்பதை உணர்த்தியது.

அவள் பொய் சொல்கிறாள் என்றபோதே, ஆதிக்குத் தாங்கவில்லை. இப்போது அவள் சொல்வது உண்மை

தான் என்றவுடன், அவனது மனம் மட்டுமல்லாமல், மூளையும் வேலை நிறுத்தம் செய்தது.

சிறிது நேர அமைதிக்கு பின், ''வது... இப்போ எல்லாம் இதயக் கோளாறுக்கு எத்தனையோ நல்ல சிகிச்சை இருக்கு... நீ சரியான இடத்தில்தான் பார்த்தாயா? வெளிநாடு போய் சிகிச்சைப் பார்க்கணும் என்றாலும் பார்க்கலாம்மா'' என்றான்.

அவனது வேதனையும், அக்கறையும் தன் மேல் அவன் கொண்ட அன்பால் விளைந்தது என்பதை உணர்ந்த வந்தனா, ''இல்லை ஆதி... எல்லார்கிட்டயும் பார்த்தாச்சு... எல்லாரும் ஒரே மாதிரிதான் சொல்றாங்க'' என்றாள்.

''என்னோட மிச்ச காலத்தை, மத்தவங்களுக்கு உதவி செஞ்சுக் கழிச்சிடலாம்னுதான் ஆதி இங்கே வந்தேன்... ஆனால் இங்கே வந்து உங்களைப் பார்த்த பிறகு, எனக்குன்னு கொஞ்ச நாளாவது வாழணும்னு ஆசை வந்திடுச்சு... இது அப்பட்டமான சுயநலம்தான்... இல்லைன்னு சொல்லலை... ஆனாலும் என்னோட ஆசையைக் கட்டுப்படுத்த முடியலை... ப்ளீஸ் ஆதி... என்னோட ஆசையை நிறைவேத்துவீங்களா?'' என்று அவள் ஏக்கத்துடன் கேட்கும்போது அவனால் எதுவுமே சொல்ல முடியவில்லை.

அவன் பதில் பேசாமல் இருக்கவும் அவனிடம் இருந்து விலகியவள், தான் எடுத்து வந்திருந்த பையை அவனிடம் கொடுத்து, ''நீங்க இன்னும் என்னை நம்பலைன்னு நினைக்கிறேன்... இதுல என்னோட ரிப்போர்ட்ஸ், ஸ்கேன் எல்லாம் இருக்கு'' என்று சொல்லிக் கொடுத்தாள். அவள் கொடுத்த பையை வாங்கியவனுக்கு, அந்தக் கனத்தைக் கூடத் தாங்க முடியாது போல கைகள் நடுங்கியது.



அவன் இப்போதிருக்கும் நிலைமைக்கு, கல்யாணம் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆனால், அவளது நிலைமை? 'கடவுளே... என்னை எவ்வளவு தான் சோதிப்பாய்?' என்று கடவுளிடம் முறையிட்டவன், எதோ அரவம் கேட்க தன் சிந்தனையில் இருந்து மீண்டான். வந்தனாதான் கதவைத் திறந்து கொண்டிருந்தாள்.

''நான் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிட்டேன் ஆதி... முடிவு இப்போ உங்க கையில்! நீங்க என்ன முடிவு எடுத்தாலும் எனக்குச் சம்மதம்தான்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

வந்தனா போன பிறகும், பிரமை பிடித்த மாதிரி நின்றிருந்த ஆதியை, ''சார்... நீங்க கிளம்ப எவ்வளவு நேரம் ஆகும்னு டிரைவர் கேட்கிறார்'' என்ற செக்யூரிட்டியின் குரல் கலைத்தது.

ஆதி முடிவு செய்து விட்டான். இனிமேல் இங்கேதான் இருக்கப் போகிறான். ஆனால், வந்தனாவைத் திருமணம் செய்வதற்கு முன் அவன் சில விஷயங்களைச் செய்தாக வேண்டும். இப்போதைக்கு, அந்த வண்டியை அனுப்பி விடலாம் என்று வெளியே வந்தவன் டிரைவரிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு வீட்டுக்குள் வந்தான்.

அதுவரை, 'அவன் கிளம்பி விடுவானோ?' என்று பயத்துடன் மறைந்து இருந்து பார்த்துக் கொண்டிருந்த வந்தனாவுக்கு, ஆதி வந்து வண்டியைத் திருப்பி அனுப்பியதைப் பார்த்ததும், கண்களில் நீர் துளிர்த்தது. மன நிம்மதியுடன், ஆட்டோவில் ஏறி இல்லத்துக்குப் புறப்பட்டாள்.

வீட்டுக்குள் வந்த ஆதி ரகுவை அழைத்தான். போனை எடுத்தும், ''என்ன ஆதி கிளம்பிட்டியா?'' என்ற

ரகுவின் கேள்விக்கு பதிலாக, ''இல்லை ரகு... இன்னைக்குப் போகலை'' என்றான்.

''என்னப்பா நேத்து அவளோ அவசரப்படுத்தினே... இன்னைக்குக் காலையில் கூட ரெடியா இருக்கேன்னு சொன்னியே?''

இப்போதும்கூட வந்தனாவைப் பற்றிச் சொல்லாமல், ''ஒரு முக்கியமான விஷயம் ரகு... நான் சில மெடிக்கல் ரிப்போர்ட்ஸ் அனுப்பி வைக்கிறேன்... அதை பெஸ்ட் டாக்டர் கிட்ட காண்பிச்சு, ட்ரீட்மென்ட் இருக்கான்னு விசாரிக்கணும்... பணத்தைப் பற்றி கவலையே இல்லை... வெளிநாடு போக வேண்டும் என்றாலும் சரி... விஷயம் ரொம்ப அவசரம் ரகு'' என்றான்.

''யாருப்பா என்ன விஷயம்?'' என்று ரகு விசாரிக்க, ''ப்ளீஸ் ரகு... இப்போதைக்கு எதுவும் கேட்காதே... இந்த டீடைல்ஸ் முதலில் சொல்லு... அதற்கப்புறம் நான் எல்லாத்தையும் விவரமாகச் சொல்றேன்... நாளைக்கு உன் கையில் ரிப்போர்ட்ஸ் கிடைக்கும்... எனக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் தகவல் வரணும்'' என்று சொல்லி விட்டு ரகு மேலும் கேள்வி கேட்குமுன் அழைப்பைத் துண்டித்தான்.

வந்தனா கொடுத்த பையை எடுத்தவன் கையில் இருந்து ஒரு ஸ்கேன் ரிப்போர்ட் கீழே விழ, கைகள் நடுங்க அதை எடுத்து, அதைப் பார்க்கும் துணிவில்லாமல், மீண்டும் பையிலேயே வைத்தான்.

ரகுவுக்கு ரிப்போர்டை அவசர கொரியரில் அனுப்பி விட்டு, கண்மூடிப் படுக்கையில் சாய்ந்த ஆதியின் மனம் எல்லை இல்லை இல்லாத வேதனையில் ஆழ்ந்தது.



மனத்திரையில், வந்தனாவை முதலில் பார்த்ததில் இருந்து எல்லாமே காட்சிகளாகத் தோன்றியது.

'அழகு, அறிவு, குறும்பு, மற்றவருக்கு உதவும் குணம் இது எல்லாமே ஒரு பெண்ணிடம் இருக்க முடியுமா? வந்தனாவிடம் இருக்கிறதே. எவ்வளவு துடிப்பான பெண்? இருந்திருந்து அவளுக்கா இந்த நிலைமை வர வேண்டும். இந்தக் கடவுளுக்கு கண்ணே இல்லையோ?' என்று கடவுளின் மேல் கோபம் கொண்டவன், அடுத்த கணமே, 'கடவுளே... அவளுக்கு சிகிச்சை செய்வதற்கான வாய்ப்பு கண்டிப்பாக இருக்க வேண்டும்' என்றும் வேண்டிக் கொண்டான்.

நேற்று முழுவதும் தூக்கமில்லை, காலையில் ஏற்பட்ட பேரதிர்ச்சி, காலையில் இருந்தே எதுவும் சாப்பிடாதது எல்லாம் சேர்ந்து சோர்வை தர, கண்களை மூடிய ஆதி அப்படியே உறங்கி விட்டான்.

காலிங் பெல் சத்தம் கேட்டு எழுந்தவன், மணி பார்த்தான். மணி இரண்டு ஆகி இருந்தது. அவசரமாக வந்து கதவைத் திறந்தவனை சங்கரியின் அக்கறையான குரல் எதிர்கொண்டது. ''சாரி தம்பி... தொந்தரவு பண்ணக் கூடாதுன்னுதான் நினைச்சேன்... காலையில் இருந்து நீங்க சாப்பிடக் கூட வெளியில் போகலைன்னு செக்யூரிட்டி சொன்னாரு... நேரம் ஆயிடுச்சே... சாப்பிடச் சொல்லலாம்னுதான் எழுப்பினேன்'' என்றவர், தான் எடுத்து வந்த பாத்திரங்களை அவனிடம் நீட்டினார்.

''உங்களுக்கு எதுக்குக்கா சிரமம்? நீங்களே இப்போதான் ஹாஸ்பிட்டல்ல இருந்து வந்திருப்பீங்க'' என்று அவன் தயக்கத்துடன் இழுக்க,

''நாங்க பன்னிரண்டு மணிக்கே வந்திட்டோம்... வந்தவுடனேயே இந்த குட்டி செக்யூரிட்டிகிட்ட

சாக்லேட்டை கேட்டுச்சு... அப்போதான் அவர் நீங்க ஊருக்குப் போகலைன்னு சொன்னார்... உடனே இங்கே வரணும்னு அடம் பிடிச்சது... நான்தான் சமையலை முடிச்சிட்டு எழுப்பலாம்னு சொல்லிட்டேன்... ஒரு வேலை சாப்பாடு கொடுக்கிறது சிரமமா தம்பி, நேத்து நீங்க செய்த உதவிக்கு இது ஒண்ணுமே இல்லை'' என்றார்.

''தேங்க்ஸ்கா. நான் செஞ்சதும் ஒரு சாதாரண உதவி தான்... அதையே பெரிசா சொல்லிட்டு இருக்காதிங்க... சார் இப்போ எப்படி இருக்கார்? குட்டி மேடம் என்ன பண்றாங்க?'' என்று விசாரித்தான்.

''அவர் இப்போ நல்ல இருக்கார்... கொஞ்சம் டயர்டா இருக்கு அவ்வளவுதான்... குட்டி சாப்பிட்டுட்டுத் தூங்கிட்டாள்'' என்று சொல்லிவிட்டு சங்கரி சென்று விட, நல்ல பசியில் இருந்த அவனும், சாப்பிட்டு விட்டு உட்கார்ந்தான்.

என்ன செய்வது என்று புரியவில்லை. நல்ல வேளையாக, அவன் அலுவலகத்தில் வேலையை விடுவது பற்றி எதுவும் இன்னும் சொல்லவில்லை. இன்றும் விடுப்பு சொல்லி விடலாம் என்று போனை எடுத்தவனுக்கு, அருளிடம் இருந்து மூன்று மிஸ்ட் கால் வந்திருப்பது தெரிந்தது. அருளுக்குப் போன் செய்தவனை, ''என்ன ஆதி? என்ன ஆதி நேற்றுதான் லீவ் சொன்னாய்... இன்னைக்கும் வரலை... தகவல் கூடச் சொல்லலை... போன் பண்ணினால், போனை எடுக்கவும் இல்லை, என்ன ஆச்சு?'' என்று விசாரித்தான்.

''ஒண்ணும் இல்லை அருள்... லைட்டா பீவர் இருந்தது அதான்... நாளைக்கு வந்திடறேன்னு ஆபீஸ்ல சொல்லிடு'' என்று சொல்லிவிட்டு வைத்தான்.



நாளைக்கு ரகுவுக்கு தான் அனுப்பிய ரிப்போர்ட் கிடைத்து விடும். அவன் விசாரித்து விபரம் சொல்ல எப்படியும் இரண்டு நாள் ஆகி விடும். அதற்கப்புறம் என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும் என்று நினைத்தவனுக்கு, மனம் பாரமாக இருக்கவே, ரம்யாவை கூட்டிக் கொண்டு வந்து விளையாடினான்.

ரம்யாவுடன் விளையாடியது, மனதை அரித்துக் கொண்டிருந்த வேதனையைக் குறைக்கவில்லை என்றாலும், கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. ரம்யாவை அவர்கள் வீட்டில் விட்டு விட்டு, ராமநாதனிடம் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, அங்கேயே சாப்பிடச் சொன்ன சங்கரியிடம், வெளியே வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டு, ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வந்தான். சங்கரிக்கு எதற்குச் சிரமம் கொடுக்க வேண்டும் என்றதோடு, காலையில் இருந்து வீட்டிலேயே அடைபட்டிருந்தவனுக்கு, வெளிக்காற்றைச் சுவாசிக்க வேண்டும் போல இருந்தது.

வெளியில் போய் விட்டு வந்த ஆதிக்கு மனம் கொஞ்சம் தெளிவாக இருந்த மாதிரி இருந்தது. வந்தனாவின் இதய சிகிச்சைக்கு வாய்ப்பு இருக்கிற பட்சத்தில், அவளுக்கு ரகுவிடம் சொல்லி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒருவேளை... எதிர்மறையாக நினைக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் யோசித்துதானே ஆகவேண்டும். சிகிச்சைக்கு வாய்ப்பு இல்லாத பட்சத்தில் அவளை திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தான். முடிவு என்று ஒன்றை எடுத்த பின், மனம் கொஞ்சம் லேசானது போலத் தோன்றியது. உடனே, வந்தனாவிடம் பேச வேண்டும் போலத் தோன்றியது.

இல்லத்தில் தனது அறையில் படுத்திருந்த வந்தனாவுக்கு, ஆதி என்ன பதிலைச் சொல்லப் போகிறானோ என்று யோசனையாக இருந்தது. அவன் சொல்லும் பதிலை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லிவிட்டு வந்தாலும், அவனது முடிவு நல்லதாக இருக்க வேண்டும் என்பதே அவளது பிரார்த்தனையாக இருந்தது.

'கடவுளே! எவ்வளவோ சோதனைகளைத் தந்திருக்கிறாய்! நானும் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆதி விஷயத்திலாவது எனக்குக் கொஞ்சம் கருணை காட்டு!' என்று மனம் உருக வேண்டிக் கொண்டவளுக்கு ஆதியிடம் பேச வேண்டும் போல இருந்தது.

இருவரும் அடுத்தவர் எண்ணை முயன்று கொண்டிருக்க, இருவருக்குமே, அடுத்தவர் பிசியாக இருக்கிறார் என்ற தகவலே வந்து கொண்டிருந்தது. சலிப்புடன், இருவரும் கொஞ்ச நேரம் முயற்சி செய்யாமல் இருந்தனர்.

இப்போது ட்ரை பண்ணலாம் என்று வந்தனா, அவனது எண்ணுக்கு முயல, முதல் ரிங்கிலேயே ஆதி போனை எடுத்தான். எடுத்ததும்தான் 'அவள் திருமணத்தைப் பற்றி கேட்டால் என்ன சொல்வது? ரகுவிடம் இருந்து தகவல் வரும் வரை எதுவும் சொல்ல முடியாதே' என்று தயக்கம் எழ, எதுவும் பேசாமல் இருந்தான்.

போனை எடுத்தவன் எதுவும் பேசாமல் இருக்கவே, ''ஹலோ? ஆதி! லைன்ல இருக்கீங்களா?'' என்று மெல்லிய குரலில் வந்தனா கேட்க, அவனிடம் இருந்து ''ம்... இருக்கேன்'' என்று சுருக்கமாக பதில் வந்தது.

''சாப்பிட்டீங்களா?''



''ம்... சாப்பிட்டேன்... நீ?''

''நானும் சாப்பிட்டாச்சு... ரம்யா அப்பா வீட்டுக்கு வந்தாச்சா? எப்படி இருக்காரு?''

''வந்திட்டாங்க... இப்போ நல்ல இருக்காரு.'' என்று தயக்கமாக ஆரம்பித்த அவர்களது பேச்சு, இருவருக்குமே அடுத்தவர் குரலை கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற உந்துதலால், அரை மணி நேரம் நீண்டது. அவனது முடிவைப் பற்றி அவளும் கேட்கவில்லை. அவனும் சொல்லவில்லை.

அரை மணி நேரத்துக்குப் பிறகு, ''சரி... ரொம்ப லேட் ஆயிடுச்சு... போனை வச்சிட்டுத் தூங்க போ'' என்று அவன் சொல்ல,

''நீங்க வைங்க'' என்று அவளும்,

''நீதானே போன் செஞ்சே... நீ வை'' என்று அவனும், போனை வைக்க மனமில்லாமல் வாதாடிக் கொண்டிருக்க, கொஞ்ச நேரத்தில் இருவருக்குமே சிரிப்பு வந்தது.

அந்தச் சிரிப்புடனே, ''சரி... நானே வைக்கிறேன்... குட் நைட்'' என்று ஆதி சொல்ல,

''நான்தானே போன் செஞ்சேன்... நான்தான் வைப்பேன்'' என்று அவள் சொல்ல,

''ஹேய்... மறுபடியும் முதல்ல இருந்தா? வேண்டாம்மா'' என்று ஆதி சிரிக்கவும், அவனது சிரிப்பை மனதுக்குள் ரசித்தவள்,

''நாளைக்கு இல்லத்துக்கு வருவீங்கதானே?'' என்று ஆர்வத்துடன் கேட்க, ''கண்டிப்பா வருவேன்!'' என்ற அவன் பதிலில் சந்தோஷமடைந்தவளாக, ''குட் நைட்!'' என்று சொல்லி விட்டுப் போனை வைத்தாள். நீண்ட

நாளைக்குப் பிறகு மன நிறைவுடன் இருவரும் தூங்கப் போனார்கள்.

## 6

காலையில் கண் விழித்த ஆதிக்கு, மனம் ரொம்பவும் தெளிவாக இருப்பது போலத் தோன்றியது. ரகு வந்தனா வின் சிகிச்சைப் பற்றி என்ன சொல்வானோ என்ற படபடப்பு கூடக் கொஞ்சம் குறைந்து, 'எது நடந்தாலும் நன்மைக்கே!' என்ற எண்ணமே மனதில் ஓடிக் கொண் டிருந்தது. அமைதியாகவே அவனது வேலைகளைப் பார்த்தான்.

அலுவலகம் முடிந்து அன்னை இல்லத்துக்குப் போய் வந்தனாவைப் பார்த்தபோதும், அவளிடம் இயல்பாகவே பேசினான். வந்தனாவும் அவ்வப்போது அவனிடம் ஒரு எதிர்பார்ப்பு மிகுந்த பார்வையை வீசினாலும், எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. அடுத்த நாளும் இதுவே தொடர்ந்தது.

இரண்டாவது நாள், அன்னை இல்லத்துக்குப் போய் விட்டு வீட்டுக்கு வந்து கதவைத் திறந்ததும், கைப்பேசி யில், ரகுவின் அழைப்பு வந்தது. ரகுவின் அழைப்பு என்று தெரிந்ததும், படபடத்த நெஞ்சைக் கட்டுக்குள் கொண்டு வந்து போனை எடுத்தான்.

''ஆதி... நீ அனுப்பின ரிப்போர்ட்சை எல்லாம் சென்னைல இருக்கிற பெஸ்ட் டாக்டர் ரெண்டு பேர் கிட்ட காண்பிச்சேன்... ரெண்டு பேரும் ஒரே மாதிரிதான் சொல்றாங்க... இது ரொம்பவும் க்ரிடிக்கலான பிரச்சனை,



சர்ஜரி செஞ்சாலுமே வேஸ்ட் என்றுதான் சொல்றாங்க... பேஷண்ட் குறைந்த பட்சம் ஆறு மாசம் வரைதான்...'' என்று சொல்லிக் கொண்டு வந்த ரகுவை,

ஆதியின் வேதனை நிறைந்த, ''போதும்!'' என்ற குரல் நிறுத்தியது. என்னதான் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைத்திருந்தாலும், ரகு சொன்ன விபரம், ஆதிக்கு மிகுந்த மன வேதனையைத் தந்தது.

ரொம்ப நேரமாக ஆதி பேசாமல் இருக்கவே, ''ஆதி... ஆர் யூ தேர்?'' என்று ரகு கவலையுடன் விசாரிக்க, ''யெஸ் ரகு, லைன்லதான் இருக்கேன்...'' என்றான்.

''இப்போ சொல்லு ஆதி... யாரோட ரிப்போர்ட் அது?''

ஒரு கணம் தயங்கிய ஆதி, ''நான் கல்யாணம் பண் ணிக்கப் போற பொண்ணோடது!'' என்றான்.

''வாட்!?'' ரகுவின் குரலில் இருந்த அதிர்ச்சி, ஆதிக் கும் புரிந்தது. அதனால், தான் சொன்ன விஷயத்தை ரகு கிரகித்துக் கொள்ள சிறிது நேரம் கொடுத்தவன், ஆரம் பத்தில் இருந்து தனக்கும், வந்தனாவுக்கும் இடையில் நடந்ததை எல்லாம் விரிவாகச் சொன்னான்.

''எல்லா விஷயத்தையும் யோசிச்சுதான் முடிவு எடுத் திருக்கியா ஆதி?''

ரகுவின் கேள்வியின் அர்த்தம் புரிந்து, ''நல்லா யோசிச்சு எடுத்த முடிவுதான் ரகு'' என்று ஆதி உறுதியாகச் சொன்னவுடன், கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த ரகு, ''எனக்கு நீ கல்யாணம் பண்ணிக்கப் போறது ரொம்பவே சந்தோஷமா இருக்கு ஆதி... இருந்தாலும் அம்மா அப்பாவுக்கு, தெரியாமல் செய்யறது சரியான்னு தெரியலை'' என்றான்.

"உனக்கே தெரியும் ரகு... அப்பா கண்டிப்பா ஒத்துக்க மாட்டார்... அம்மா கண்டிப்பா சந்தோஷப்படுவாங்க... ஆனால் அப்பாகிட்டே சொல்லாமல் அம்மாகிட்ட மட்டும் சொல்ல முடியாது. அதுவும் இல்லாமல், எந்தக் காரணத்துக்காகவும், வந்தனாவை இனிமேல் கஷ்டப்பட விடக் கூடாது என்பதில் நான் உறுதியா இருக்கேன்... நீ புரிஞ்சிப்பேன்னு நினைக்கிறேன்."

"புரியுது ஆதி... எப்போ கல்யாணம்... நான் வரலாமா?"

"நீ வந்தால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்... ஆனால், நீ இங்கே வருவது அப்பாவுக்கு தெரிய சான்ஸ் இருக்கே ரகு."

"ஓகே ஆதி... எனக்குப் புரியுது... நான் வந்தாலும் வராட்டாலும் என்னுடைய விஷஸ் உனக்கு எப்பவுமே இருக்கும் ஆதி!" என்று ரகு குரல் தழுதழுக்கச் சொன்ன போது, ஆதிக்கு தன் நண்பனை நினைத்துப் பெருமையாக இருந்தது.

"எனக்குத் தெரியும் ரகு... என்னுடைய எல்லா சுக துக்கங்களையும் நீ எப்பவுமே என் கூட இருந்திருக்கே... உன்னை மாதிரி ஒரு நண்பன் கிடைக்க நான் ரொம்பப் புண்ணியம் பண்ணி இருக்கணும் ரகு" என்று உணர்ச்சி மிகுதியுடன் சொல்ல, கேட்டிருந்த ரகுவுக்கும் கண்கள் கலங்கத்தான் செய்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "நோ பார்மாலிடீஸ் மேன்... சீக்கிரமே தங்கச்சிகிட்ட போன் பண்ணி சம்மதத்தைச் சொல்லு" என்றான்.

"தங்கச்சியா? ஓ! நீ வந்தனாவைச் சொல்றயா? அதுக்குள்ளே சொந்தம் கொண்டாட ஆரம்பிச்சாச்சா?"

"பின்னே! உன் மனைவி, எனக்குத் தங்கைதானே? கேட்கிறதுக்கு யாரும் இல்லைன்னு நெனச்சுக்காதே!



என் தங்கச்சியை நீ ஏதாவது சொன்னால், நான் இருக்கேன் அவளுக்கு சப்போர்ட்டுக்கு!"

"அடேங்கப்பா! பார்க்காமலே இவ்வளவு சப்போர்ட்டா? நான் கூட அடிக்கடி நினைச்சுப்பேன், வந்தனா கிட்டே எல்லாரையும் ஈர்க்கிற மாய சக்தி இருக்கோன்னு! பாரேன்... இன்னும் நீ அவளை நேரில் கூடப் பார்க்கலை... அதுக்குள்ளே, அவளுக்கு சப்போர்ட்டுக்குக் கிளம்பிட்டே!" என்று ஆதி அங்கலாய்க்க, ரகு வாய்விட்டுச் சிரித்தான்.

"சரிடா மச்சான்... தங்கச்சிகிட்ட பேசிட்டு, நாளைக்கு எனக்கு விஷயத்தைச் சொல்லு" என்று சொல்லிவிட்டு ரகு போனை வைத்தான்.

நீண்ட நாளைக்குப் பிறகு, ரகு ஆதியை 'மச்சான்' என்று அழைக்கிறான். அவன் ரொம்ப சந்தோஷத்தில் இருக்கும்போதுதான் அப்படிக் கூப்பிடுவான். தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவது, ரகுவுக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை ஆதியால் உணர முடிந்தது.

வந்தனாவின் சிகிச்சைக்கு வாய்ப்பே இல்லை என்று ரகு சொன்னபோது, ஆதிக்கு மிகுந்த வருத்தம்தான். ஆனால், யோசித்துப் பார்க்கும்போது, கடவுள் ஏதோ கணக்குடனே, எல்லாவற்றையும் செய்வது போல அவனுக்குத் தோன்றியது.

உடனே வந்தனாவுடன் பேச வேண்டும் போல இருந்தது. ஆனால் தான் திருமணத்துக்கு சம்மதம் என்று சொல்லும்போது, அவள் முகம் மலர்வதை நேரில் காண ஆசையாக இருந்தது. அவளிடம் நேரிலேயே விஷயத்தைச் சொல்லலாம் என்று நினைத்தாலும், இப்போதைக்கு

அவளுடன் பேசவாவது செய்யலாம் என்று நினைத்து அவளது எண்ணுக்கு அழைத்தான்.

வந்தனா முதல் மணியிலேயே போனை எடுத்தாள்.

''ஹேய்! இவ்வளவு நேரம் ஆச்சு... இன்னும் தூங்கலையா? முதல் மணியிலேயே போனை எடுத்திட்ட?'' என்றான் ஆதி.

''இன்னும் இல்லை... உங்களுக்கு போன் செய்யலாமான்னு யோசிச்சிட்டு போனை கைல வச்சிருந்தேனா... அதான் உடனே எடுத்திட்டேன்.''

தான் நினைத்தது போலவே அவளும் நினைத்திருக்கிறாள் என்பது அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. ஒத்த மனம் என்பது இதுதானோ?

''என்ன ஆதி... போன் பண்ணிட்டுப் பேசாம இருக்கீங்க?''

''வது! நாளைக்கு நம்ம பிளாட்டுக்கு வரியா?'' என்றான். 'வது', 'நம்ம பிளாட்' என்று அவன் சொன்னதைக் குறித்துக் கொண்டவள், 'ஏன், எதற்கு' என்று கேட்காமல், ''எப்போ வரணும்?'' என்றாள்.

''நாளைக்குக் காலையிலேயே வாயேன்.''

''சரி, ஒன்பது மணிக்கு மேல வரட்டுமா?''

''சரிம்மா... இப்போ நீ தூங்கு, நாளைக்கு மீட் பண்ணலாம்'' என்று சொல்லிவிட்டு வைத்தான்.

அவளிடம் இன்னும் கொஞ்ச நேரம் பேசும் ஆவல் இருந்தாலும், எங்கே ஏதாவது சொல்லி விடுமோ என்று எண்ணித்தான் அழைப்பைத் துண்டித்தான்.

ஆதி, 'பிளாட்டுக்கு வருகிறாயா?' என்று சொன்னதும், வந்தனாவுக்கு ஒரு இனிய ஊக்கம் எழுந்து, நெஞ்சு



படபடத்தது. இவ்வளவு நாள் பொறுத்தோம். இன்னும் ஒரு இரவுதானே என்று எண்ணிக்கொண்டே உறங்கப் போனாள்.

அடுத்த நாள், தன் பிளாட்டுக்கு வந்து ''குட்மார்னிங்!'' என்று புன்னகையுடன் காலை வாழ்த்துச் சொன்ன வந்தனாவைப் பார்த்த ஆதி இமைக்கவும் மறந்தான். எப்போதுமே, அவளை சுடிதாரில்தான் பார்த்திருக்கிறான்.

இன்று அழகான காட்டன் சேலையில், தலையைத் தளரப் பின்னி, பக்கவாட்டில் ஒரு சிவப்பு ரோஜாவும் வைத்துக் கொண்டு வந்தவளைப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவனுக்கு.

கதவைத் திறந்தவன், உள்ளே செல்ல வழிகூட விடாமல், தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட வந்தனாவுக்கு வெட்கமாக இருந்தது. அவன், முதல் நாள் அவளை இப்படிப் பார்த்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வர, அன்று கேட்டதைப் போலவே ''ஹலோ! என்ன ஆச்சு? நின்னுகிட்டே தூங்கறிங்களா என்ன?'' என்றாள்.

அதற்குள், ஆதியும் சுதாரித்து விட்டான். அவனும், அவளது கேள்விக்கு பதிலாக, ''பார்க்கிறவன் கவனத்தைச் சிதற அடிச்சிட்டு, கேட்கிற கேள்வியைப் பார்!'' என்று முணுமுணுத்து விட்டு, அவளை உள்ளே அழைத்தான்.

அவன் சொல்ல வந்தது புரிந்துவிட, அமைதியாக உள்ளே வந்தாள்.

''ஏதாவது சாப்பிட்டிங்களா?''

''ம்... இன்னைக்கு ரம்யாவோட அம்மா அப்பாவுக்குக் கல்யாண நாள்... ஸ்வீட்டும் டிபனும் கொடுத்தாங்க... கோயிலுக்குப் போய் இருக்காங்க... சங்கரி அக்கா

செய்யற எல்லாமே நல்லா இருக்கும்... உனக்குக் கூட ஸ்வீட் எடுத்து வச்சிருக்கேன்... சாப்பிடு'' என்று சொல்லிக் கொடுத்தான்.

''பரவாயில்லை... மூன்றாவது தரம் வரும்போதாவது ஏதாவது சாப்பிடக் கொடுத்தீங்களே!'' என்று சொல்லிக் கொண்டே இனிப்பை வாயில் போட்டவள், ''வாவ்! உண்மையிலே ரொம்ப நல்லா இருக்கு ஆதி... அவங்க கிட்டயே சமைக்கக் கத்துக்கலாம் போலிருக்கே!'' என்றாள்.

''அய்யயோ! அப்போ உனக்கு சமைக்கத் தெரியாதா?'' என்று அவன் அலற,

''அப்படி ஒரே அடியா சொல்லிட முடியாது! சுடு தண்ணி வைப்பேன்... பால் காச்சுவேன்... நூடுல்ஸ் செய்வேன்...'' என்று வந்தனா அவளது சமையல் பிரதாபங்களை அடுக்க,

''பிரமாதம்! இவ்வளவு தெரியுமா உனக்கு?'' என்று அவனும் கிண்டலாக வியக்க, இருவருக்குமே சிரிப்பு வந்தது.

சிரித்து முடித்தவுடன், ''நான் ஏன் உன்னை வரச் சொன்னேன்னு உனக்குத் தெரிந்திருக்கும் வது... அதுக்கு முன்னாடி உன்கிட்ட நான் சில விஷயங்கள் சொல்லணும்'' என்று சொல்லிவிட்டு அவளைப் பார்த்தான்.

ஆதி நேரடியாக திருமணத்துக்குச் சம்மதம் என்று சொல்லாவிட்டாலும், 'உனக்குத் தெரிந்திருக்கும்' என்று அவன் சொன்னதிலேயே அவன் சம்மதம் புரிந்துவிட, அவளது முகம் தாமரையாய் மலர்ந்தது.

அவளது மலர்ந்த முகத்தைப் பார்த்தவனுக்கு, தான் சொல்ல வந்த விஷயம் மறந்து விட்டது. 'தான்



குறிப்பாகச் சொன்னதற்கே, இவ்வளவு மகிழ்ந்து போகிறாளே! இவளிடம் நேரிடையாக தன் சம்மதத்தை சொன்னால்தான் என்ன?' என்று தோன்ற, அவளது அருகில் வந்தன்,

அவளது கன்னங்களைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, ''நாம ரெண்டு பேரும் கல்யாணம் செஞ்சுக்கலாமா வது?'' என்று காதலுடன் கேட்க, அவள் ஒரு சந்தோஷப் பெருமூச்சுடன் அவனது மார்பில் சாய்ந்து கொண்டாள். அவனும் அவளை அணைத்துக் கொண்டான்.

இவ்வளவு நாளும், இருவருமே அடுத்தவரது அருகாமையை ரசித்தாலும், மனதுக்குள் ஒரு போராட்டம் இருந்து கொண்டேதான் இருந்தது. இன்று அந்தப் போராட்டம், முடிவுக்கு வந்தது போலத் தோன்றி விட, இந்த அணைப்பு அவர்களுக்கு ரொம்பவே இனிமையாக இருந்தது.

அந்த அணைப்பில் இருந்து விலக இருவருக்குமே மனமில்லை. இருந்தாலும், பேச வேண்டிய விஷயங்கள் நினைவு வந்து விட, அவளை மெதுவாக விடுவித்த ஆதி, அவளது கைப்பற்றி அழைத்து வந்து, சோபாவில் அமர வைத்து, தானும் அவளருகில் அமர்ந்தான்.

''எனக்கு உன்னைப் பற்றித் தெரிந்த அளவுக்கு, உனக்குத் தெரியாதில்லையா வது. நான், என் அம்மா அப்பாவுக்கு ஒரே பிள்ளை!'' என்று அவன் பெற்றோரின் விவரங்களைச் சொன்னவன்,

''ஒரு காரணத்தினால் இப்போதைக்கு அவங்க கிட்ட இருந்து விலகி இருக்கேன்... நம்ம கல்யாணம்கூட அவங்களுக்குத் தெரியாமதான் நடக்கப் போகுது... காரணத்தை உன்கிட்ட சொல்லக்கூடாது என்று இல்லை... ஆனால்,

எதையும் விவரமா சொல்ல முடியாத சூழ்நிலையில் நான் இருக்கேன் வது... இதனால், நீ என்னைத் தப்பா நினைக்கக் கூடாது'' என்று தயக்கத்துடன் சொல்லி விட்டு அவளைப் பார்க்க,

''நீங்களா சொல்ற வரை, நான் எதுவும் கேட்க மாட்டேன்... அதுவுமில்லாமல், உங்களை எப்பவுமே நான் தப்பா நினைக்க மாட்டேன் ஆதி!'' என்று வாக்குக் கொடுத்தாள்.

அவளது பதில் அவனைச் சந்தோஷத்தில் ஆழ்த்த, ''கல்யாணம் எப்படி நடக்கணும்னு உனக்கு ஏதாவது ஆசை இருக்கா?'' என்று அவன் கேட்க,

''பெரிசா எதுவும் இல்லை ஆதி... உண்மையைச் சொன்னால், இங்கே கடவுள் படம் வச்சிருக்கீங்களே, அதுக்கு முன்னாடி என் கழுத்தில் நீங்க தாலி கட்டினா கூட எனக்குப் போதும்!'' என்று உண்மையான குரலில் சொல்ல, 'என்ன மாதிரியான அன்பு இது?' என்று மனம் நெகிழ்ந்த ஆதி, அவளை அணைத்து நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்.

மனம் கவர்ந்தவனின் முதல் முத்தத்தில் மனம் நெகிழ, வந்தனாவின் கண்கள் தானாக மூடியது. நெற்றியில் முத்தமிட்டு நிமிர்ந்த ஆதியை, அவளது படபடக்கும் இமைகள் ஆசையாய் அழைக்க, புன்னகையுடன் குனிந்து கண்களில் முத்தமிட்டவனின் இதழ்கள், கன்னங்களிலும் தன் சேவையை இனிதே தொடர்ந்தது. ஆசையுடன், அவளது இதழ்களை நெருங்க நினைத்தவனை, அழைப்பு மணியின் சத்தம் அழைத்தது.

அதுவரை, இனிய கனவில் இருந்த வந்தனாவும், திடுக்கிட்டு, கண்களைத் திறந்தாள். அவளது பதட்டத்தைப்



போக்க எண்ணியவனாக, ஆதி அவளை ஒரு முறை இறுக அணைத்து விடுவித்து விட்டு, கதவை நோக்கி நடந்தான்.

கதவைத் திறந்தால், ரம்யா, ''இந்தாங்க அங்கிள்... கோயில் பிரசாதம்!'' என்று கையை நீட்டினாள். ''தேங்க்யூ பேபி!'' என்று சொல்லி அவன் பிரசாதத்தை எடுத்துக் கொள்ள, அப்போதுதான், வந்தனா உள்ளே இருப்பதைப் பார்த்த ரம்யா, ''ஹாய்! அன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல பார்த்த ஸ்வீட் ஆன்ட்டி!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தது.

அதற்குள் சமாளித்துக் கொண்ட வந்தனாவும், ''ஹாய் ஸ்வீட் பேபி! எப்படி இருக்கீங்க?'' என்று வரவேற்றாள்.

''நல்லா இருக்கேன் ஆன்ட்டி... நீங்க எப்படி இருக்கீங்க?'' என்று பெரிய மனித தோரணையில் கேட்டு விட்டு, ''அம்மா உங்களை வீட்டுக்கு வரச் சொல்லி அன்னைக்கு சொன்னாங்க இல்லே? இன்னைக்கு வரீங்களா? என்னோட டிராயிங் எல்லாம் காமிக்கிறேன்'' என்று ஆசையாகக் கூப்பிட, மறுக்கத் தோன்றவில்லை வந்தனாவுக்கு.

அவள், ஆதியைப் பார்க்க, ''வா வது... எப்படியும் அவங்க கிட்ட விஷயத்தைச் சொல்லணும் இல்லையா?'' என்று சொல்ல, இருவரும் ரம்யா வீட்டுக்குப் போனார்கள்.

வந்தனாவைப் பார்த்ததும் சங்கரி, ''வாம்மா!'' என்று ஆசையுடன் அழைத்து, தன் கணவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

கொஞ்ச நேரம் பொதுவாகப் பேசிவிட்டு, ஆதி தங்கள் கல்யாண விஷயத்தைச் சொல்ல, ராமநாதனும், சங்கரியும் சந்தோசம் அடைந்தனர்.

சங்கரி, "உங்க ரெண்டு பேர் பார்வையை வெச்சு, நான் அன்னைக்கே இப்படித்தான் இருக்கும்னு நினைச்சேன்" என்று சந்தோஷமாகச் சொல்லி விட்டு, "நல்ல செய்தி சொல்லி இருக்கீங்க! இருங்க, ஸ்வீட் எடுத்திட்டு வரேன்" என்று உள்ளே போக,

"நீங்க காலையில் கொடுத்ததை நானும் சாப்பிட்டேன் அக்கா. அதனால் இப்போ வேண்டாம்" என்று வந்தனா தடுத்தாள்.

"ஸ்வீட் இருக்கட்டும் அக்கா. இவளுக்கு நீங்கதான் சமைக்கக் கத்துக்கொடுக்கணுமாம்... அதுக்காக, அவளுக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு நினைக்காதிங்க... சுடு தண்ணி வைப்பா..." என்று சொல்லிக்கொண்டு வந்தவனின் முதுகில் வந்தனா சின்னதாய் ஒரு அடி வைக்க,

"பாருங்க சார்... உண்மையைச் சொன்னால் எல்லார் எதிரயும் அடிக்கிறா" என்று ராமநாதனிடம் ஆதி முறையிட, "இது எல்லார் வீட்டிலையும் நடக்கிறதுதானே தம்பி!" என்று அவர் சொல்ல, அந்த இடமே கலகலப்பானது.

ரம்யா வீட்டில் விடைபெற்றுக் கொண்டு, தங்கள் வீட்டில் வந்து நுழைந்ததும், வந்தனா, "நான் இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கேன் ஆதி!" என்று குதூகலக் குரலில் சொல்ல, ஆதி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அருகில் வந்தவள், 'என்ன?' என்பது போலப் பார்க்க, "சந்தோஷமா இருக்கே... ஆனால் எனக்கு எதுவும் பரிசு தரமாட்டேங்கிறாயே?" என்று கேட்டான்.

என்ன வேண்டும் என்று கேட்க நினைத்து அவன் முகத்தைப் பார்த்தவளுக்கு, அவனது கண்கள் தன் இதழ் மேல் இருப்பதைப் பார்த்ததும், பேச்சு வர மறுத்தது.



"அன்னைக்கு 'நோ' சொன்னபோதே, கையில பரிசு கிடைச்சது... இன்னைக்கு 'எஸ்' சொல்லி இருக்கேன்... பெரிசா ஏதாவது கிடைக்கும்னு பார்த்தால்..." என்று அவன் இழுக்க, தன் சிவந்த முகத்தை அவனுக்குக் காட்டாமல் "நான் கிளம்பறேன்" என்று சொல்லித் திரும்பினாள் வந்தனா.

அவளது கைப்பற்றி நிறுத்தியவன், "அதுக்குள்ளே என்ன அவசரம்?" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தைத் தன் கைகளை ஏந்திக்கொண்டு, "ரம்யா வந்தபோது விட்டதை. இப்போ தொடரலாமா வது?" என்று தாபத்துடன் கேட்க, அவளுக்கும் ஆசையாய் இருந்தாலும், வெட்கம் தடுத்தது.

"ப்ளீஸ் ஆதி! டைம் ஆயிடுச்சு... மேடம் கிட்ட வேற நம்ம விஷயத்தைச் சொல்லணும் இல்லை? கிளம்பலாமா?" என்றாள்.

ஒரு சின்ன பெருமூச்சுடன், "ஓகே... உன் இஷ்டம்" என்றவன், "நாம வெளியில சாப்பிட்டு விட்டு போலாமா?" என்றான்.

ஹோட்டலுக்குப் போய் சாப்பிடும்போதே, இருவரும் திருமணத்தைப் பற்றித் திட்டமிட்டனர். பக்கத்தில் உள்ள பெருமாள் கோயிலில் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்றும், ராம் தம்பதியினர் மற்றும் சாரதா அம்மாவை மட்டும் அழைக்கலாம் என்றும், அன்னை இல்ல குழந்தைளுக்கு அந்த நாள் முழுவதும் தங்கள் செலவில் சாப்பாடு என்றும் முடிவு செய்தனர்.

"என்னைக்குக் கல்யாணம் வச்சுக்கலாம்?" என்று ஆதி கேட்க,

''நாளைக்கே வச்சுக்கலாம்!'' என்று உடனடியாக வந்தனாவிடம் இருந்து பதில் வந்தது.

''ஏன்? இன்னைக்கே வச்சுக்கக் கூடாதா?'' என்று ஆதி கேட்க, 'இவ்வளவு நாள் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லி விட்டு, இப்போ கேட்பதைப் பார்' என்று செல்லமாக மனதுக்குள் நினைத்த வந்தனா ''ஹய்யோ... பார்த்து... ரொம்ப வழியுது'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

உணவுக்குப் பின், சாரதா அம்மாவிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் குழந்தைகளிடம் சந்தோஷத்துடன் விஷயத்தைப் பகிர்ந்து கொள்ள, குழந்தைகளும், சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்ய, அன்றைய நாள், அவர்களுக்கு மிகவும் இனிமையான நாளாக அமைந்தது.

## 7

குழந்தைகளின் சந்தோஷத்தில் மனம் நெகிழ்ந்திருந்த வந்தனாவை, திருமணத்துக்குச் சில பொருட்கள் வாங்க வேண்டும் என்று சாரதா அம்மாவிடம் சொல்லி, அழைத்துக் கொண்டு கிளம்பினான் ஆதி.

ஆடம்பரமான புடவை எல்லாம் வேண்டாம் என்று வந்தனா சொல்லி விட, மெல்லிய சரிகையுடன் கூடிய, அரக்கு நிற பட்டுப் புடவையை ஆதி தேர்வு செய்ய, அதுவே வந்தனாவுக்கு ரொம்பப் பிடித்துப் போனது.

அவளும், அவனுக்காக வேஷ்டி சட்டை எடுக்கலாம் என்று நினைத்து ''வேஷ்டி கட்டத் தெரியுமா உங்களுக்கு? எனக்குக் கல்யாணத்தில் வேஷ்டி கட்டறது ரொம்பப் பிடிக்கும்'' என்று அவள் தயக்கத்துடன் சொல்ல,



''உனக்குப் பிடிக்கும்னு சொன்ன பின்னாடி, நோ அப்பீல்... பெல்ட் போட்டாவது கட்டிக்கிறேன்'' என்று சிரிப்புடன் சொன்னான்.

அடுத்து, மாங்கல்யம் வாங்க நகைக் கடைக்குப் போனவனை, வந்தனா தடுத்தாள்.

''என் கிட்ட என் அம்மாவோட தாலிக்கொடி இருக்கு... அதையே வச்சுக்கலாமா ஆதி?'' என்று தயக்கத்துடன் கேட்க, ''இதுக்குப் போய் எதுக்குடா தயங்கறே? உன் இஷ்டம்தான் என் இஷ்டமும்'' என்று ஆதி சொல்ல, வந்தனா சந்தோஷத்துடன் புன்னகைத்தாள்.

அன்னை இல்ல குழந்தைகளுக்கும் ஆடைகள் வாங்கலாம் என்று இருவரும் முடிவு செய்தனர். ''நான் ஒரு ஐடியா சொல்லட்டுமா வது? எப்பவுமே மத்தவங்க வாங்கிக் கொடுக்கிறதைதானே குழந்தைங்க போட்டுக்கறாங்க? இந்த ஒரு தரம், அவங்க இஷ்டப்படி வாங்கிக்கிற மாதிரி செய்தால் எப்படி இருக்கும்? ரொம்ப சந்தோஷப்படுவாங்க இல்ல?'' என்று ஆசையுடன் ஆதி கேட்க, வந்தனா அமைதியாக இருந்தாள்.

''என்னடா? எதுவும் சொல்ல மாட்டேங்கிறே?''

''இல்லை ஆதி... நீங்க சொல்ற மாதிரி செய்தால் அவங்களுக்கு நிச்சயம் சந்தோஷமாதான் இருக்கும்... ஆனால், அதுக்கப்புறம் அவங்க மனசில ஏக்கம் வர வாய்ப்பு இருக்கு ஆதி... இப்போ நாம வாங்கிக் கொடுக்கும்போது, புதுத் துணி கிடைச்சிருக்கு என்ற சந்தோசம் இருக்கும்... நீங்க சொல்ற மாதிரி செய்தால், அடுத்த தரம், ஏதாவது புதுத் துணி கிடைக்கும்போது, நம்மால் தேர்வு செய்து

வாங்க முடியலையேன்னு தோணலாம் இல்லையா?'' என்றவள், அவனது ஆசையை மறுக்கப் பிடிக்காமல், ''எதுக்கும் மேடம் கிட்டே கேட்டுக்கலாமா?'' என்று கேட்டாள்.

ஆதிக்கும் வந்தனா சொன்னது சரியாகப் பட்டது. 'அதிக சந்தோஷத்தைத் தருகிறேன் என்று சொல்லி விட்டு ஏக்கத்தைக் கிளறி விடக்கூடாது' என்று முடிவு செய்தவன், ''நீ சொன்ன மாதிரி, நாமே வாங்கிடலாம் வது'' என்று சொல்லிவிட்டு, ரம்யா வீட்டினருக்கும் ஆடைகள் வாங்கினான்.

வாங்க வேண்டியதை எல்லாம் வாங்கிவிட்டு, இரவு உணவை ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு, ஐஸ்க்ரீமை சுவைத்துக் கொண்டிருக்கும்போது, குழந்தைகளுக்கு ஆடை வாங்குவது பற்றி அவள் சொன்னதை மனதில் வைத்து, ''எப்படி வது, உன்னால் மட்டும் ஒரு விஷயத்தை எல்லாக் கோணத்தில் இருந்தும் பார்க்க முடியுது?'' என்றான் ஆதி.

''பெரிசா ஒண்ணும் இல்லை ஆதி... இந்த மண்டைல மசாலா, மசாலான்னு ஒண்ணு இருந்தா போதும்... கடவுள் எனக்கு அதைக் கொஞ்சம் ஜாஸ்தியாவே வச்சுட்டாருன்னு நினைக்கிறேன்'' என்று அவள் குறும்புடன் சொல்ல,

''அது என்னவோ உண்மைதான்... என்கிட்டே அதுக்கான ஆதாரம் கூட இருக்கு'' என்று அவன் சொல்ல,

''ஆதாரமா?'' என்று அவள் வியந்தாள்.

''ஆமாம், மறுக்கவே முடியாத ஆதாரம்!'' என்று அவன் சொல்ல, கேலியாக ஏதோ சொல்லப் போகிறான் என்று ஆவலுடன் பார்த்தாள்.



''உயர்திரு. ஆதித்யனை, கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று நீ எடுத்த அந்த நல்ல முடிவுதான், அந்த ஆதாரம்'' என்றவனைப் பார்த்து, ''தோடா! அதானே பார்த்தேன்...'' என்று சொன்னவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

''ஏய்... என்ன சிரிக்கிறே? அய்யாவுக்கு எவ்வளவு பேர் அப்ளிகேஷன் போட்டிருக்காங்க தெரியுமா? காலேஜில் என் பின்னாடி சுத்தாத பெண்ணே கிடையாது... அவ்வளவு ஏன்... இங்கே வந்த ரெண்டு வாரத்திலேயே, என் ஆபீசில ஒரு பொண்ணு, என்கிட்டே ப்ரொபோஸ் பண்ண முயற்சி பண்ணா தெரியுமா?'' என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு சொன்னான்.

கல்லூரியில் பெண்கள் அவன் பின்னால் சுற்றியதைப் பற்றிச் சொல்லும்போது சிரித்துக் கொண்டே கேட்டிருந்த வந்தனா, அலுவலகத்தில் ஒரு பெண் என்று சொன்னதும் முகத்தைச் சுருக்கி, ''அது யாரு என் புருஷனை சைட் அடிச்சது... எவ்வளவு தைரியம் அவளுக்கு?'' என்று கேட்க, 'என் புருஷனை' என்று அவள் சொன்னதில் மனம் குளிர்ந்தாலும், அவளைச் சீண்டும் ஆசையில், ''அவளை ஒண்ணும் சொல்லாதே... ரொம்ப நல்ல பொண்ணு!'' என்றான்.

''ரொம்ப நல்ல பொண்ணா? அப்போ ஏன் அவளை மிஸ் பண்ணீங்க?'' என்று கொஞ்சம் எரிச்சலுடன் கேட்க, ''என்ன பண்றது... உன்கிட்டதான் மாட்டணும்னு கடவுள் எழுதி வச்சிட்டாரே'' என்று அவன் போலியாகச் சலித்துக் கொள்ள, அவன் முதுகில் ஒன்று போட்டாள் வந்தனா.

''ஸ்ஸ்ஸ்... இப்படி அடிக்கிறே... பொது இடம் அப்படின்னு கூட கிடையாதா?'' என்று சொல்லி விட்டு

அவள் கையைப் பற்றிக கொண்டு, ''ஒரு நாள் அவள் கிட்ட கறாரா சொல்லிட்டேன்... எனக்கு கேர்ள் பிரண்டு இருக்கா... அவளைப் பார்க்கத்தான் சாயந்திரம் போறேன்... அப்படின்னு'' என்றவன், அவள் கையை தன் இதழருகில் கொண்டு வந்து மெதுவாக முத்தமிட்டு விட்டு, ''அப்படிச் சொல்லிட்டு வந்த அன்னைக்குத்தான் உன்னை முதன் முதலா பார்த்தேன்.'' என்றான்.

அந்த இதழ் ஒற்றுதலும், வார்த்தைகளும் மனதை மயக்கினாலும், ''இப்போ மட்டும் பொது இடம் இல்லையாக்கும்?'' என்று சொன்ன வந்தனா, மெதுவாகக் கையை உருவிக் கொண்டாள்.

இல்லத்தில், எதிர்பாராமல் கிடைத்த புதுத் துணியைப் பார்த்ததும், குழந்தைகள் சந்தோஷக் கூச்சல் போட்டதைப் பார்த்தபோது, வந்தனா சொன்னது முற்றிலும் உண்மை என்று ஆதிக்குத் தோன்றியது.

''நாளைக்குக் காலையில வந்து உன்னையும், மேடமையும் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போறேன்'' என்று சொல்லிவிட்டு ஆதி கிளம்பினான்.

வீட்டுக்கு வந்தவனுக்கு ரகுவுக்கு விஷயத்தைச் சொல்லவே இல்லை என்பது நினைவுக்கு வர, உடனே ரகுவை அழைத்தான்.

''சாரி ரகு... காலையில இருந்து கொஞ்சம் வேலையாய் இருந்தேன்... அதான் போன் பண்ண முடியலை... நாளைக்கே கல்யாணம் பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணி இருக்கோம்'' என்று ஆதி சொல்ல,

''நமக்குள்ளே என்னடா சாரி எல்லாம்... கல்யாணத்துக்கு எல்லாம் வாங்கியாச்சா?'' என்று ரகு விசாரித்தான்.



''எல்லாம் வாங்கியாச்சு ரகு... சந்தோஷமா இருந்தாலும், அம்மா அப்பாவுக்குத் தெரியாமல் செய்யறோம்னு சங்கடமாதான் இருக்கு... அதுவும் அம்மாவுக்கு என் கல்யாணத்தை எப்படி எல்லாமோ நடத்தணும்னு ரொம்ப ஆசை... எப்பவுமே அம்மா ஞாபகம் இருக்கும்... ஆனால் இன்னைக்கு என்னமோ ரொம்ப ஜாஸ்தியா இருக்குடா ரகு... அம்மாகிட்ட பேசணும்னு மனசு தவிக்குது'' என்று வருத்தத்துடன் ஆதி சொல்ல,

''கவலைப்படாதே ஆதி... அம்மாவோட ஆசி எப்பவுமே உனக்கு இருக்கும்... எப்படியும் இன்னும் ஒன்றரை மாசத்தில இங்கே வந்துதானே ஆகணும்... அப்போ பேசி சமாதானம் செஞ்சுக்கலாம்'' என்று ரகு சொல்ல, ஆதி அமைதியானான்.

''என்ன ஆதி? என்ன ஆச்சு? திடீர்னு சைலன்ட் ஆயிட்டே?'' என்று கேட்ட ரகுவிடம், ''ஒண்ணுமில்லை ரகு'' என்று சொல்லிவிட்டு போனை வைத்த ஆதிக்கு ரகு 'சென்னைக்கு வந்துதானே ஆக வேண்டும்' என்று சொன்ன விஷயம் சஞ்சலத்தை உண்டு பண்ணியது.

அங்கே போகக் கூடாது என்பது அவன் ஏற்கனவே எடுத்திருந்த முடிவுதான். வந்தனாவோடு திருமணம் என்பது அந்த முடிவை மேலும் உறுதியாக்கி இருந்தது.

'அந்த நேரம் வரும்போது எப்படிச் சமாளிக்கப் போகிறோம்?' என்று யோசித்தவனின் பார்வையில், கல்யாணத்துக்காக வாங்கி வைத்திருந்த வேஷ்டி கண்ணில் பட்டது. அருகில் வந்து ஒரு புன்னகையுடன் வேஷ்டியை எடுத்தவனது மனக்கண்ணில் 'உங்களுக்கு வேஷ்டி கட்டத் தெரியுமா?' என்று ஆர்வத்துடன் கேட்ட வந்தனாவின் முகம் தோன்ற, மனதில் இருந்த சஞ்சலம் விலகியது.

அவள் இருக்கிற வரையில், அவளை சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதானே கல்யாணத் துக்கு ஒப்புக் கொண்டான். அப்படி இருக்கையில், இப் போதைக்கு வேறு எந்த எண்ணமும் மனதில் வரக்கூடாது என்று எண்ணியவன், நாளை தன் மனம் கவர்ந்தவ ளோடு திருமணம் என்று நினைப்பை மட்டும் மனதில் நிறுத்தி, புன்னகையோடு உறங்கப் போனான்.

அடுத்த நாள் காலை, ஆதி ஒரு வண்டியை ஏற்பாடு செய்து, ரம்யா வீட்டினரோடு அன்னை இல்லத்துக்குப் போய், வந்தனாவையும் சாரதா அம்மாவையும் கோயி லுக்குக் கூட்டி வரச் சென்றான்.

அந்த மெல்லிய சரிகை பட்டிலேயே வந்தனா தேவதை யாய் ஜொலிக்க, கட்டி இருந்த வேஷ்டி, சட்டை ஆதித்ய னுடைய கம்பீரத்தை இன்னுமே அதிகமாக்கி காட்ட, மணமக்கள் இருவரும் மற்றவர்களை மறந்து, ஒருவரை ஒருவர் காதலுடன் பார்த்தபடி நின்றனர். ரம்யாவின் ''ஹை! ஆன்ட்டி ரொம்ப அழகா இருக்காங்க!'' என்ற குரலில், உணர்வுக்கு வந்த இருவரும், மற்றவர்களுடன் கோயிலுக்குப் போனார்கள்.

ஆண்டவன் சன்னதியில், ஆதித்யன் வந்தனாவின் கழுத்தில் மாங்கல்யத்தை சூட்டியபோது, வந்தனாவின் கண்களில் கண்ணீர் அரும்பி விட்டது. அதை கவனித்த ஆதி, ஒன்றும் பேசாமல் ஆதரவுடன் அவளது கைகளைப் பற்றிக் கொள்ள, வந்தனாவும் அவனது கையோடு தன் கையை ஆசையுடன் பிணைத்துக் கொண்டாள்.

திருமணம் முடிந்ததும், சாரதா அம்மா இல்லத்துக்குச் சென்றுவிட, வந்தனா ஆதியின் வீட்டுக்கு வந்து, சுவாமிக்கு விளக்கேற்ற, சங்கரி இருவருக்கும் பாலும்,



பழமும் கொடுத்தார். அவர்களது வீட்டிலேயே, காலை உணவைச் சாப்பிட்டு விட்டு, ரம்யாவுடன் கொஞ்ச நேரம் விளையாடி விட்டு, இல்லத்துக்குச் சென்றார்கள்.

இருவரையும் மணமக்களாகப் பார்த்த குழந்தைகள் ஆரவாரம் செய்து, வாழ்த்துப் பாட, இருவருக்குமே மனம் நெகிழ்ந்து போனது. மதிய உணவை, குழந்தைகளுடன் சாப்பிட்டவர்கள், குழந்தைகளின் வேண்டுகோளின்படி மாலை வரை அங்கேயே இருந்தனர்.

குழந்தைகள், தங்கள் பரிசு என்று அவர்கள் வரைந்த ஓவியங்களைக் கொடுத்தபோது, அவர்களது அந்த உண்மையான அன்புப் பரிசு, விலை மதிப்பற்றது என் பதை இருவரும் உணர்ந்தனர்.

மாலை, வந்தனா தன் பொருட்களை எடுத்துக் கொண்டு கிளம்பும்போது, நாளை வேலைக்கு வருவதாகச் சொல்ல, ''இல்லம்மா, நீங்க ரெண்டு பேருமே இன்னும் ஒரு வாரம் கழிச்சு வந்தால் போதும்'' என்று சாரதா சொல்ல, இரு வரும் தங்கள் வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

வீட்டுக்குள் வந்தவுடன், ''ஹப்பா! முழு நாளும் வேஷ்டி கட்டிட்டு இருக்கறது ரொம்பக் கஷ்டமா இருக்கு... உனக்கும் பட்டுப் புடவை கட்டிட்டு அப்படித்தானே இருக் கும் வது? பெட்ரூமில் ஒரு பாத்ரூம் இருக்கு... அங்கேயே குளிச்சிட்டு, நீயும் உடை மாத்திக்கோ'' என்று சொல்லி விட்டு ஆதி இன்னொரு குளியலறைக்குப் போனான்.

இருவரும் குளித்து விட்டு உடை மாற்றிக் கொண்டு வந்ததும், அழைப்பு மணி ஒலித்தது. வந்தனா சென்று கதவைத் திறக்க, சங்கரி நின்றிருந்தார்.

''நைட்டுக்குக் ரெண்டு பேருக்கும் டிபன் எடுத்திட்டு வந்திருக்கேன்... தம்பி சொன்ன மாதிரி சமையலுக்கு

தேவையான பொருள் எல்லாம் வாங்கி வச்சிருக்கேன்... நீ சமையல் கத்துக்கிற வரை எங்க வீட்டிலேயே சாப்பிடலாம்... கூச்சப்படத் தேவையில்லை'' என்று அக்கறையுடன் சங்கரி சொல்ல,

''ஹய்யோ அக்கா... எனக்கு பிரமாதமா சமைக்கத் தெரியலைன்னாலும், சாதம், ஒரு குழம்பு, காய் என்று சமைக்கத் தெரியும், அன்னைக்கு அவர்கிட்ட சும்மா அப்படிச் சொன்னேன்... நீங்க இவ்ளோ பண்றதே பெருசு... நாளைல இருந்து நானே சமைச்சுப்பேன்'' என்றாள்.

''காலைல நீங்க வரும்போதே, பிளாட்ஸல இருக்கிற எல்லார் கண்ணும் உங்க மேலதான் இருந்தது... நீங்க ரெண்டு பேரும் இப்படி வாங்க... சுத்திப் போடறேன்'' என்று சொல்லிவிட்டு சங்கரி திருஷ்டி சுற்றிப் போட, அந்த உண்மையான அன்பில் இருவரின் மனமும் நெகிழ்ந்தது.

சங்கரி சென்ற பின், அவர் எடுத்து வந்த உணவைச் சாப்பிட்டு முடித்துவிட்டு, பாத்திரங்களை இருவரும் சேர்ந்து சுத்தம் செய்து விட்டு வந்தனர்.

''வது... ரெண்டு நாளா ஆபீசுக்குப் போகலை... நாளைக்கு லீவு போட்டிருக்கேன்... அதனால கொஞ்சம் வேலை இருக்கு... நீ போய்ப் படு... நான் கொஞ்ச நேரத்தில் வரேன்'' என்று சொல்லிவிட்டு தன்னுடைய லேப்டாப்பில் மூழ்கிவிட, ஒரு ஆர்வமான பரபரப்போடு முதல் இரவை எதிர்நோக்கி இருந்த வந்தனாவுக்கு ஏமாற்றமாக இருந்தாலும், முகத்தில் அதைக் காட்டாமல், ''சரி!'' என்று சொன்ன வந்தனா படுக்கைக்கு வந்தாள்.

நெடு நேரம் கழித்து, படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்த ஆதி, வந்தனா தூங்கி விட்டாள் என்று



உறுதியாகத் தெரிந்ததும், உள்ளே வந்து, ஒரு மெல்லிய பெருமூச்சுடன் அவளருகில் படுத்தான்.

## 8

காலையில் கண் விழித்த வந்தனா, படுக்கையில் இருந்து எழ முயற்சிக்க, அது முடியாமல் போகவே, என்னவென்று பார்த்தவளுக்கு, கணவனின் கரம் தன் இடுப்பைச் சுற்றி இருந்தது கண்ணில் பட்டது.

'இவன் எப்பொழுது வந்து படுத்தான்? ரொம்ப நேரம் காத்திருந்து விட்டு, தூங்கி விட்டோமோ? முதல் இரவன்று கும்பகர்ணி மாதிரி தூங்கி இருக்கிறேனே... அவன் எழுந்ததும் கிண்டல் பண்ணுவானோ?' என்று எண்ணியவள், அவன் கையை மெதுவாக எடுத்துவிட்டு, எழுந்தாள்.

காலைக் கடன்களை முடித்து, அவள் குளித்துவிட்டு வந்த பிறகும், அவன் எழாமல் இருக்கவே, படுக்கை வந்து ''ஆதி... எழுந்திருங்க'' என்று சொல்லி அவனை எழுப்பினாள்.

அவனிடம் எந்த அசைவும் இல்லாமல் போகவே, அருகில் வந்து அமர்ந்து, அவனை எழுப்ப முயற்சிக்க, மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தவன், ''ம்ம்... கொஞ்ச நேரம்... ப்ளீஸ் வது!'' என்று சொல்லிவிட்டு மீண்டும் தூங்க துவங்க, ''இப்பவே மணி எட்டு... எழுந்திருங்க ஆதி'' என்று சொல்லவும், ''எட்டு மணியா?'' என்று எழுந்து அமர்ந்தவன்,

''முன்னாடியே எழுப்பி இருக்கக் கூடாதா வது?'' என்று சொல்ல, ''ஹூம்... அரை மணி நேரமா எழுப்பிட்டுதான் இருக்கேன்... என்ன ஆச்சு? நைட் ரொம்ப நேரம் லேப்டாப்ல வேலை பார்த்துட்டு இருந்தீங்களா?'' என்று அக்கறையுடன் விசாரித்தாள்.

''ரொம்ப நேரமா? இல்லையே! அரை மணி நேரத்திலேயே வந்து பார்த்தால், நீ நல்லா தூங்கிட்டு இருந்தே... எழுப்பினாலும் மேடம் அசஞ்சால்தானே? சரியான கும்பகர்ணி!'' என்று சொன்னவனை யோசனையாகப் பார்த்தாள் வந்தனா.

''என்னடா? அப்படிப் பார்க்கிறே?'' என்றவனிடம், ''ஒண்ணுமில்லை... சீக்கிரம் பிரஷ் பண்ணிட்டு வாங்க... நான் போய் காபி கலக்கறேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்து போனவளை, விசித்திரமாகப் பார்த்துவிட்டு, படுக்கையை விட்டு எழுந்தான்.

காபி குடித்ததும், ''வது! காபி ரொம்ப நல்லா இருக்கு! நீ அன்னைக்கு உன் சமையல் திறமையைப் பற்றிச் சொன்னதை நினைச்சு பயந்துகிட்டேதான் குடிச்சேன்... பட் இட் இஸ் சோ குட்!'' என்று சொல்ல, ''தேங்க்ஸ்! ஆனால் காபியை வச்சு சமையலை ரொம்பப் பார்க்காதீங்க'' என்று சிரிப்புடன் சொன்னாள்.

ஆதியோ, ''நீ எப்படி சமைச்சாலும் அது எனக்குப் பிடிக்கும் வது'' என்றான். ''அடேங்கப்பா! பார்க்கலாம்'' என்றவள், ''சரி போய் குளிச்சிட்டு வாங்க... சாப்பிடலாம்'' என்று சொல்லி விட்டு சமையலை கவனித்தாள்.

ஆதி குளித்துவிட்டு வர, இருவரும் சாப்பிட அமர்ந்தனர். ''வாவ்! வது. கிச்சடி சூப்பரா இருக்கு... ஒண்ணுமே தெரியாதுன்னு சொல்லிட்டு இப்படிப் போட்டு



தாக்கறியே!'' என்று பாராட்டியபடி, ஆதி அவள் சமைத்ததை ரசித்துச் சாப்பிட, வந்தனாவுக்கு சந்தோஷமாக இருந்தது.

''அம்மா இருந்தவரைக்கும் என்னை வேலையே செய்ய விட மாட்டாங்க ஆதி... பட் அவசியம்னா செய்யத் தெரியாமல் இருக்கக் கூடாதுன்னு, எல்லாத்தையும் கத்துக் கொடுப்பாங்க... எனக்கு சமையலில் விருப்பம் ஜாஸ்தி... ஒரு நாளாவது நான் சமைக்கிறேன் என்று சொல்லி சன்டேல நான்தான் சமைப்பேன்'' என்று சொல்லிக் கொண்டே வந்த வந்தனாவுக்கு அவள் அம்மாவின் நினைவு வந்து குரல் கரகரத்தது.

அருகில் அமர்ந்திருந்தவளை தோளோடு அணைத்துக் கொண்ட ஆதி, ''வது... நாம இன்னைக்கு எங்கேயாவது வெளியிலே போலாமா?'' என்று பேச்சை மாற்றும்போது, அவனது கைப்பேசி அழைத்தது.

பேசிவிட்டு வந்தவன், ''சாரி வது! இன்னைக்கும் ஆபீசுக்கு லீவுதான் சொல்லி இருந்தேன்... பட் ஏதோ அவசர வேலையாம்... வரச் சொல்றாங்க... போயிட்டு சீக்கிரமே வரப் பார்க்கிறேன்... சாரிடா!'' என்று சொல்ல, அவளுக்கும் ஏமாற்றமாக இருந்தாலும், ''இட்ஸ் ஓகே ஆதி... நீங்க போயிட்டு வாங்க'' என்றாள். அவளை அணைத்து நெற்றியில் முத்தமிட்டவன், அலுவலகத்துக்குக் கிளம்பினான்.

ஆதி அலுவலகத்துக்குக் கிளம்பியதும், சமையலறையை ஒழுங்கு படுத்திவிட்டு, சங்கரியுடன் பேசிக் கொண்டிருந்தாள் வந்தனா. மதியம், எவ்வளவோ மறுத்தும், சங்கரி தங்கள் வீட்டில் அவளுக்கு சாப்பாடு என்று சொல்லி விட, மறுக்க முடியாமல் சாப்பிட்டவள், கொஞ்ச நேரம்

ஓய்வெடுக்கப் போவதாகச் சொல்லி தங்களது வீட்டுக்கு வந்தாள்.

தனியாக வந்து அமர்ந்தவளுக்குக் காலையில் ஆதி, அரை மணி நேரத்தில் நேற்று இரவு படுக்க வந்ததாகச் சொன்னது நினைவுக்கு வந்து, யோசனையில் புருவம் சுருங்கியது. அவள், நேற்று கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அவனுக்காகக் காத்திருந்து விட்டு, ஹாலில் வந்து எட்டிப் பார்த்தாள். ஆதி முழு கவனமாக வேலையில் ஈடுபட்டிருக்கவே, அவனைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று எண்ணித்தான் திரும்பவும் போய்ப் படுத்தாள்.

அதற்கப்புறம்தான் அவள், உறங்கி இருக்க வேண்டும். ஆனால் ஆதி ஏன் அப்படிச் சொன்னான்? என்ற கேள்வி எழுந்தது. ஒருவேளை அவளைக் கிண்டல் செய்வதற்காக அப்படிச் சொல்லி இருப்பானோ? என்று எண்ணிக் கொண்டே இருந்தவள் தன்னையும் அறியாமல் உறங்கிப் போனாள்.

ஐந்து மணிக்கு உறக்கம் களைந்து எழுந்த வந்தனா, 'ஆதி இன்னமும் வரவில்லையே? போன் செய்யலாமா? தொந்தரவாக இருக்குமோ?' என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, அழைப்பு மணி ஒலித்தது.

ஆதி வந்து விட்டான் போல என்று உற்சாகத்துடன் எழுந்து சென்று கதவைத் திறக்க, அவள் எதிர்பார்ப்பைப் பொய் ஆக்காமல், ஆதிதான் நின்று கொண்டிருந்தான்.

''வாவ்! என்னதான் இருந்தாலும், வேலை விட்டு வரும்போது, இப்படி சிரித்த முகத்துடன் பொண்டாட்டி வரவேற்பது நல்ல விஷயம்தான் இல்லையா வது?'' என்று சொல்லிக்கொண்டு உள்ளே வந்தவன்,



''என்னடா? ரொம்ப போர் அடிச்சதா?'' என்று அக்கறையுடன் விசாரித்தான்.

''இல்லை... கொஞ்ச நேரம் சங்கரி அக்கா கிட்ட பேசிட்டு இருந்தேன்... அவங்க வீட்டிலேயே சாப்பிடச் சொல்லி வற்புறுத்தவே அங்கே சாப்பிட்டுட்டு வந்தேனா... என்னனு தெரியலை... வந்து அப்படியே தூங்கிட்டேன்'' என்று வந்தனா சொல்ல,

''நீதான் சரியான கும்பகர்ணி ஆச்சேடி!'' என்று ஆதி கிண்டல் செய்ய,

''என்னது டியா?'' என்று அவள் அதட்ட,

''ஆமாண்டி... என் பொண்டாட்டி!'' என்று அவன் மேலும் வம்பிழுக்க,

''வேண்டாம்... அப்புறம் நானும் 'டா' போடுவேன்'' என்று வந்தனா ஒரு விரல் காட்டி மிரட்ட,

''தாராளமா 'டா' போட்டுக்கோ... நீ எப்படிக் கூப்பிட்டாலும் எனக்கு ஓகேதான்'' என்று அவன் சொல்ல,

''எப்படிக் கூப்பிட்டாலுமா? வாடா மடையா... உட்கார்டா சோம்பேறி... போடா டேய், இப்படி கூடச் சொல்லலாமா?'' என்று அவள் அப்பாவியாய் விழி விரித்துக் கேட்க,

''மௌன ராகம் ரேவதி'ன்னு மேடம்க்கு நினைப்பு'' என்ற கிண்டல் செய்தவன்,

''உண்மையாதான் வது... எல்லாரையும் போல ஆதின்னு சொல்றதை விட, நீ இப்படி வித விதமா என்னைச் சொல்றதும் நல்லாத்தான் இருக்கும்'' என்றான்.

''ஹய்யோ என் மக்கு புருஷா! எல்லாரையும் போல ஆதின்னு கூப்பிட வேண்டாம்னா, உங்க பேர்லயே

ஏதாவது செல்ல பெயர் கண்டுபிடிச்சா போச்சு!'' என்றவள், ''உங்களுக்கு ஏதாவது தோணுதா?'' என்றாள்.

''ம்ஹூம்!'' என்று உதட்டைப் பிதுக்கியவன், ''உனக்குத்தான் மண்டைல மசாலா ஜாஸ்தியாச்சே! நீயே கண்டுபிடி!'' என்றான்.

அவனுக்காக காபி எடுத்து வந்தவள், ''அத்தையும், மாமாவும் உங்களை எப்படிக் கூப்பிடுவாங்க?'' என்று விசாரித்தாள்.

நேரில் பார்க்கா விட்டாலும், தன் மனைவி தன் பெற்றோரை முறை வைத்துப் பேசிய ஆதிக்கு சந்தோஷத்தை அளித்தது. அதே சந்தோஷத்துடன், தன் பெற்றோர் தன்னைக் கூப்பிடும் விதத்தைப் பற்றிச் சொன்னான்.

''அம்மாவுக்கு, நான் எப்பவுமே கண்ணன்தான்... கண்ணான்னுதான் கூப்பிடுவாங்க'' என்று சொன்னவனின் மனம், அன்னையின் 'கண்ணா' என்ற அழைப்புக்காக ஏங்கியது. அவனது மனம் அவளுக்கும் புரிந்தது.

அதனால் கேலியாக, ''கண்ணனா? கோபிகையர்களின் கண்ணனை போலவா?'' என்று குறும்புடன் கேட்க, அவள் மூக்கைப் பற்றி லேசாக ஆட்டியவன், ''வாயாடி... நான் யசோதையின் கண்ணன் மாதிரி மட்டும்தான்... குணமெல்லாம் ராமர் போலவாக்கும்'' என்று பெருமை பீற்றிக் கொண்டான்.

''அப்படியா?'' என்று போலியாக வியந்தவளிடம், ''உண்மைதான் வது! அந்த ராமருக்கு சீதா மாதிரி, இந்த ஆதித்யனுக்கு இந்த வந்தனா மட்டும்தான்!'' என்று அவன் சொல்ல, ''அது இருக்கட்டும்... மாமா எப்படிக் கூப்பிடுவாங்கன்னு சொல்லவே இல்லையே...'' என்று



கேட்டவளிடம், ''எங்க சொல்ல விடறே?'' என்று போலியாகச் சலித்துக் கொண்டவன்,

''என் தாத்தாவுடைய பேர் ஆதி நாராயணன். அதனால் அவர் பேர் வரணும்னு எனக்கு ஆதித்யன்னு பேர் வச்சாங்க... அப்பா, தாத்தாவின் பேரைச் சொல்லக்கூடாதுன்னு, ஆனால் அவர் பேரை விடவும் கூடாதுன்னு ஆதின்னு சுருக்காம, ஆதித்யான்னு கூப்பிடுவார்'' என்று சொல்லி முடித்து விட்டு, ''இப்போ நீ சொல்லு... உன்னை எப்படிக் கூப்பிடுவாங்க?'' என்று விசாரித்தான்.

''அம்மா, அப்பா ரெண்டு பேருமே எப்பவுமே என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதில்ல... அப்பாவுக்கு நான் எப்பவுமே ராஜாத்திதான்... அம்மா, 'தங்கம், கண்ணு'ன்னுதான் கூப்பிடுவாங்க... நான் எதாவது தப்பு செய்தால் மட்டும்தான், 'வந்தனா' அப்படின்னு கொஞ்சம் அழுத்தமா என் பேரைச் சொல்லிக் கூப்பிடுவாங்க... அப்படி அவங்க கூப்பிடும்போதே, அந்த தப்பை இன்னொரு தரம் செய்யக் கூடாதுன்னு தோணிடும்'' என்றவள், ''அம்மாக்கு அதிர்ந்து கூடப் பேசத் தெரியாது ஆதி... அவங்களுக்குப் போய்...'' என்று எதோ சொல்ல வந்தவள், அதற்கு மேல் முடியாமல், கண்ணீருடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

வந்தனாவை மென்மையாக அணைத்துக் கொண்ட ஆதித்யன், மெதுவாக அவள் முதுகை வருடிக் கொடுத்தான். சிறிது நேரம் கழித்து, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த வந்தனா, ''சாரி!'' என்று சொல்ல,

''எதுக்கு? ஓ! இன்னும் என் பேர்ல இருந்தே செல்லப் பெயரைக் கண்டு பிடிக்க முடியலையா? பரவாயில்ல விடு... ஒருவேளை உன் மண்டைல மசாலா கம்மி

ஆயிடுச்சோ என்னமோ?'' என்று அவள் காலை வாரினான்.

அவன் தன் மனதை மாற்ற முயற்சி செய்வதைப் புரிந்து கொண்ட வந்தனாவும், ''கண்டிப்பா கம்மி ஆக வாய்ப்பு இருக்கு... உங்களைக் கல்யாணம் செஞ்சுகிட்டேன் இல்ல?'' என்று அவனைத் திரும்ப வாரி விட்டு, ''கொஞ்ச நேரம் என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க ஆதி... நான் கண்டு பிடிக்கிறேன்'' என்றாள்.

கொஞ்ச நேரம், மனதுக்குள்ளேயே, 'ஆதித்யன்... ஆதித்யா... தியா... தயா' என்று சொல்லிப் பார்த்து விட்டு... ''ஹேய் ஆதி! தயா ரொம்ப அழகா இருக்கில்ல?'' என்றாள்.

''வாவ்! இப்படிக் கூடக் கூப்பிடலாம்னு எனக்குத் தோணினதே இல்லை வது... உனக்கு உண்மையிலே மசாலா ஜாஸ்திதான்!'' என்று அவன் சொல்லவும், ''கிண்டல் பண்ணாதீங்க... உண்மையைச் சொல்லுங்க... உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று ஆர்வத்துடன் கேட்க, அவளைத் தன் அருகே இழுத்தவன்,

''நான்தான் சொன்னேனே... நீ எப்படிக் கூப்பிட்டாலும் எனக்குப் பிடிக்கும்... அதுவும் இது ரொம்ப அழகா இருக்கு... என்னுடைய வதுவைப் போலவே!'' என்று சொல்லி விட்டு, அவள் இதழ்களை வருட, கூச்சத்துடன் நெளிந்தவள், ''விடுங்க தயா!'' என்று வெட்கத்துடன் சிணுங்கியபோது, ஆதியின் கைப்பேசியும் சிணுங்கியது.

ரகுதான் அழைத்திருந்தான். ''என்ன மேன்? நேற்றிலிருந்து தொந்தரவு பண்ண வேண்டாம்... நீயா கூப்பிடுவேன்னு காத்திட்டு இருக்கேன்... போனே பண்ணலை?'' என்று விசாரித்தான்.



''சாரி ரகு... நேத்து முழுக்க இல்லத்திலேதான் இருந்தோம்... இன்னைக்கு போன் பண்ணலாம்னு பார்த்தால், அவசர வேலையா ஆபீசுக்குப் போக வேண்டியதாப் போச்சு...'' என்று ஆதி சொல்லும்போதே, ''என்ன? இன்னைக்கு ஆபீசுக்குப் போனியா? ஏன்டா... நேத்து கல்யாணம் பண்ணிட்டு இன்னைக்கு ஆபீசா? எல்லாம் என் தங்கச்சி கொடுக்கற இடம்... அவ கிட்ட போனைக் கொடு... உன்னை இப்படி எல்லாம் விடக்கூடாதுன்னு நான் சொல்லி வைக்கிறேன்'' என்று அதட்ட,

சிரித்துக் கொண்டே ''நேற்று சொன்னேனே... என்னுடைய ஆருயிர் தோழன்... உன்னுடைய உடன் பிறவா சகோதரன்... உன்கிட்ட பேசணுமாம்'' என்று சொல்லி விட்டு போனை வந்தனாவிடம் நீட்டினான்.

''ஹலோ அண்ணா... எப்படி இருக்கீங்க?'' என்ற வந்தனாவின் குரலில், 'அண்ணா' என்ற அழைப்பில் ரகுவின் மனம் நெகிழ்ந்தது.

''நான் நல்லா இருக்கேம்மா... நீ எப்படி இருக்க? அதென்ன இன்னைக்கே அவன் ஆபீசுக்குக் கிளம்பிட்டானாமே? அவனை முதல்ல இருந்தே உன் கட்டுப்பாட்டுக்குள்ள வச்சுக்கோ!'' என்று அண்ணனாய் ரகு அறிவுரை சொல்ல, ''இல்லைண்ணா... இன்னைக்கு லீவுதான் சொல்லி இருந்தாரு... அவசர வேலைன்னு சொன்னதால தான் போனாரு'' என்று வந்தனா விட்டுக் கொடுக்காமல் பேச, 'ஆதிக்கு ஏற்ற மனைவிதானே' என்று மனதுக்குள் மெச்சிக் கொண்டே, இருவரிடமும் பேசி விட்டு வைத்தான் ரகு.

''சங்கரி அக்கா தோசை மாவு கொடுத்திருக்காங்க... நைட்டுக்கு தோசை ஊத்திடவா தயா? உங்களுக்கு

என்ன சட்னி பிடிக்கும்... தேங்காய் சட்னியா? இல்லை தக்காளி சட்னியா?'' என்று அவள் விசாரிக்கவும்,

''எனக்கு எதுவா இருந்தாலும் ஓகேதான் வது... உனக்கு போர் அடிக்குமேன்னு நான் வேலை முடியறதுக் குள்ள கிளம்பிட்டேன்... கொஞ்சம் வேலை பார்க்கணும்... அதனால் நீயே இன்னைக்குச் சமைச்சிடு... நாளையில இருந்து நாம் ரெண்டு பேரும் சேர்ந்து சமைக்கலாம்... என்ன?'' என்று ஆதி சொல்ல,

''ரெண்டு பேருக்கு சமைக்கிறது ஒண்ணும் பெரிய வேலை இல்லப்பா... நானே பார்த்துப்பேன்'' என்றவ ளிடம்,

''இல்லை வது... கணவன் மனைவி ரெண்டு பேரும் சமையலறைல வேலையைப் பகிர்ந்துகிட்டா, அவங்களுக் குள்ள இன்டிமசி கூடுமாம்... நான் ஒரு புக்ல படிச்சிருக் கேன்... நாம வேணா முயற்சி பண்ணிப் பார்க்கலாமா?'' என்று சொல்லிவிட்டு அவன் எழுந்து வர,

''சரி சரி... நாளைல இருந்து பார்த்துக்கலாம், இப்போ உங்க வேலையைப் பாருங்க'' என்று அவள் அவசரமாக நகர, அவன் சிரிப்புடன் வேலையைப் பார்க்கத் தொடங் கினான்.

கொஞ்ச நேரத்தில் உணவு தயார் ஆகிவிட, இருவரும், சிரித்துப் பேசியபடி சாப்பிட்டு முடித்ததும், அழைப்பு மணிச் சத்தம் கேட்டு வந்தனா கதவைத் திறந்தாள்.

சங்கரி முகத்தில் சங்கடத்துடன் நின்று கொண்டிருந் தார். பக்கத்தில் முகத்தைத் தூக்கி வைத்தபடி ரம்யா நிற்க, அவர்களை உள்ளே அழைத்த வந்தனா, ''என்ன ஆச்சுக்கா?'' என்று விசாரித்தாள்.



''இவளுக்கு தினமும் ஆதி தம்பியோட விளையாடி பழக்கம், நேற்று எப்படியோ சமாளிச்சிட்டேன்... இன் னைக்கு ஆதி அங்கிளோட விளையாடியே ஆகணும்னு ஒரே அடம்... ஒரு அடி கூட வச்சிட்டேன்... ஆனாலும் கேட்கலை'' என்று தர்ம சங்கடத்தோடு சங்கரி சொல்ல,

''என்ன ஸ்வீட் பேபியை அடிச்சீங்களா? எவ்வளவு தைரியம் உங்களுக்கு?'' என்று போலியாக சங்கரியை மிரட்டிய வந்தனா, குனிந்து ரம்யாவைத் தூக்கிக் கொண்டு, ''அம்மா அடிச்சதுக்கா ரம்யா குட்டி கோபமா இருக்காங்க? ஆதி அங்கிள் என்னமோ ரம்யா குட்டிக்குக் கோபமே வராதுன்னு சொன்னாரே?'' என்று செல்லம் கொஞ்சியபடி கேட்க,

''அதுக்குக் கோபமா இல்ல... இங்கே வந்து நான் உங் களைத் தொந்தரவு பண்ணுவேன்னு அம்மா சொல் றாங்க... ரம்யா சமத்துப் பொண்ணுதானே... அம்மா எப்படி அப்படிச் சொல்லலாம்?'' என்று ரம்யா சொன்னதும் எல் லாருக்குமே சிரிப்பு வந்துவிட்டது.

வந்தனாவின் அருகில் வந்து ரம்யாவைத் தூக்கிக் கொண்ட ஆதி, ''ஆமாம்... ரம்யா குட்டி எப்பவுமே சமத்துதான்!'' என்று சொல்லிவிட்டு,

''ரம்யா வருவது எங்களுக்கு தொந்தரவு இல்லைக்கா... நானே அவளைக் கூப்பிடணும்னு நினைச்சிட்டு இருந் தேன்... நீங்க போங்க... அவள் கொஞ்ச நேரம் விளை யாடிட்டு வருவாள்'' என்று சொல்ல, அப்போதும் தயக் கத்துடன் நின்ற சங்கரியிடம்,

''நானே கூட்டிட்டு வந்துவிடறேன்... அவளோட விளையாடறது எங்களுக்கே சந்தோஷம்தான்'' என்று

வந்தனாவும் சொல்ல, கொஞ்சம் முகம் தெளிந்த சங்கரி, அங்கிருந்து கிளம்பினார்.

ரம்யாவை தாஜா செய்து அவளது கோபத்தைத் தணித்த இருவரும், கொஞ்ச நேரம் அவளோடு விளையாடிக் கொண்டிருந்தனர். ரம்யாவுக்கு தூக்கம் வருவது போல இருக்கவே, வந்தனா அவளைத் தூக்கிக் கொண்டு போய் அவளது வீட்டில் விட்டு விட்டு வரும்போது, ஆதி, லேப்டாப்போடு வேலையில் ஈடுபட்டிருந்தான்.

அருகில் வந்த வந்தனா, ''இன்னும் வேலை முடியலையா தயா?'' என்று கேட்டதும், ''இன்னும் கொஞ்சம் இருக்குடா... இன்னைக்கு முடிச்சு மெயில் அனுப்பிட்டால், நாளைக்கு லீவு எடுத்துக்கலாம்... கொஞ்ச நேரத்தில வந்திடறேன்... நீ போய் படு'' லேப்டாப்பில் இருந்து முகத்தை நிமிர்த்தாமலேயே ஆதி சொல்ல,

நேற்று போல 'சரி' சொல்லி விட்டுப் போகாமல், ''இல்லை... நான் மத்தியானம் நல்லா தூங்கிட்டேன்... இப்போ தூக்கம் வரலை... நீங்க வேலை செய்யற வரை நானும் சும்மா பக்கத்தில உட்கார்ந்திட்டு இருக்கேன்'' என்று சொல்லிவிட்டு அவன் பக்கத்தில் அமரப் போனவளை, ''இல்லை... இல்லை... நீ இப்படி பக்கத்தில உட்கார்ந்தா என்னால வேலை பார்க்க முடியாது'' என்ற ஆதியின் அவசரமான குரல் தடுத்தது.

வந்தனா அவனை விசித்திரமாகப் பார்க்க, ''இல்லடா... நீ இப்படி பக்கத்தில உட்கார்ந்தால், என்னால வேலைல கவனம் செலுத்த முடியாதுன்னு சொல்ல வந்தேன்'' என்று அவன் மெதுவாகச் சொல்ல, அதற்கு மேல் எதுவும் பேசாமல், வந்தனா படுக்கை அறைக்குள் சென்று புகுந்தாள்.



தலையை அழுந்த கோதிக்கொண்டே ஆதி, ஒரு பெருமூச்சுடன் வேலையைத் தொடர்ந்தான்.

நேற்று போலவே, ரொம்ப நேரம் கழித்து எழுந்தவன், படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்து, வந்தனா தூங்கிவிட்டாள் என்று தெரிந்ததும், விளக்கை அணைத்து விட்டு வந்து வந்தனாவின் அருகில் வந்து படுத்து, விடிவிளக்கின் வெளிச்சத்தில் மனைவியின் முகத்தை கொஞ்ச நேரம் ரசித்தவன், திரும்பிப் படுத்தான்.

அவன் திரும்பிப் படுத்த மறு வினாடியே, வந்தனாவின் கரம் அவன் மேல் விழ, திகைத்துப் போய் திரும்பினான் ஆதி.

## 9

வந்தனாவின் கை தன் மேல் விழவும், திகைத்துத் திரும்பிய ஆதி, சமாளித்துக் கொண்டு ''என்ன வது? இன்னும் தூங்கலையா?'' என்றான்.

ஒன்றும் சொல்லாமல், அமைதியாக எழுந்து போய் விளக்கைப் போட்டவள், திரும்பி வந்து கைகளைக் கட்டிக் கொண்டு அவனையே பார்த்தாள். அதற்குள் எழுந்து அமர்ந்திருந்தவன், ''என்ன வது? அப்படிப் பார்க்கிறே?'' என்றான்.

''நீங்க என்னைப் பிடிச்சுதானே கல்யாணம் செஞ்சுகிட்டிங்க?'' வந்தனா இப்படிக் கேட்டதும் ஆதிக்கு ஒன்றும் புரியவில்லை. குழப்பத்துடன் ''என்னடா... திடீனு இப்படி ஒரு கேள்வி?'' என்றான்.

''பின்னே! கல்யாணம் ஆகி ரெண்டு நாளாகியும் நீங்க இப்படியே இருந்தா... இப்படித்தான் கேள்வி வரும்!' வந்தனாவின் குரலில் எரிச்சல் இருந்தாலும், கண்களில் ஏக்கமே இருந்தது.

ஆதிக்கு சட்டென்று எல்லாம் புரிந்து போயிற்று. அவனுக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? இந்த இரண்டு நாட்களாக அவளிடம் இருந்து விலகி இருக்க அவன் பட்ட பாடு, அவனுக்குத்தான் தெரியும்.

மனைவியின் கண்களில் தெரிந்த ஏக்கம் நெஞ்சைத் தொட, சட்டென்று எழுந்து வந்தவன், அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

ஆதிக்கு அவளிடம் காரணத்தைச் சொல்லத் தயக்கமாக இருந்தது. ''நீ நினைக்கிற மாதிரி ஒண்ணும் இல்லைடா குட்டி... முதல்ல டாக்டர் கிட்ட போய்...'' என்று சொல்லத் தொடங்கியவன்,

'உன் உடல் நிலைக்கு தாம்பத்திய உறவு வைத்துக் கொண்டால், பிரச்சனை இல்லையா? என்று டாக்டரிடம் கேட்க வேண்டும்' என்பதைச் சொல்ல முடியாமல் நிறுத்தினான். தன்னுடைய எந்த வார்த்தையும், அவளைக் காயப்படுத்தி விடக்கூடாதே என்ற கவலை அவனுக்கு.

''எதுக்கு டாக்டர் கிட்ட போகணும்?'' என்று கேட்டவளுக்கு, அவன் சொல்ல வந்தது புரிந்து போனது.

''கடவுளே...! அவளால் இயல்பான திருமண வாழ்க்கை வாழ முடியுமா என்று சந்தேகம் இருந்தும், அவளைத் திருமணம் செய்திருக்கிறான் என்றால், இவனுடைய அன்பு எவ்வளவு ஆழமானதாக இருக்க வேண்டும்?' என்ற எண்ணம் மனதை நெகிழ்த்தி, கண்களில் நீர் துளிர்க்கச் செய்தது.





அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஆதிக்கு, அவளது கண்ணீர் வருத்தத்தை வரவழைக்க, ''குட்டிம்மா, என்னடா இது?'' என்று சொல்லி கண்ணீரைத் துடைக்க வந்தவனின் கைகளைப் பற்றி ''வாங்க... இதை பேசி தீர்த்திடலாம்'' என்று கட்டிலுக்கு அழைத்து வந்தவள், அவனை அமர வைத்து, தானும் அவன் அருகில் அமர்ந்து கொண்டாள்.

''இதோ பாருங்க தயா... நம்ம கல்யாணம் பண்ணிக்கணும்னு முடிவு பண்ண உடனே, நான் டாக்டர் கிட்ட எல்லாம் கேட்டுட்டேன்... கல்யாண வாழ்க்கையில் எந்தப் பிரச்னையும் இல்லைன்னு அவங்களும் சொல்லிட்டாங்க... இருக்கப் போற இந்த கொஞ்ச நாள் நான் சந்தோஷமா இருக்கணும்னு நினைக்கிறேன்... அதே போல உங்களுக்கும் என்னால் முடிஞ்ச எல்லா சந்தோஷத்தையும் தரணும்னு ஆசைப்படறேன்... அதனால்தான் வெட்கத்தை விட்டு உங்க கிட்ட பேசறேன்... இனிமேல் எக்காரணம் கொண்டும் நீங்க என் நோயைப் பற்றிப் பேசக்கூடாது... புதுசா கல்யாணம் ஆனவங்க மாதிரி நாம எப்பவும் சிரிச்சு சந்தோஷமா இருக்கணும்... என்ன புரியுதா?'' என்று அதட்டியவளைப் பார்க்க அவனுக்குச் சிரிப்பு வந்தாலும்,

இரு கையையும் கட்டிக் கொண்டு போலி பவ்யத்துடன் ''ரொம்ப நல்லா புரியுதுங்க மேடம்!'' என்றான்.

அவனது பாவனை சிரிப்பை வரவழைத்தாலும், அடக்கிக் கொண்டு ''என்ன புரிஞ்சது?'' என்று அதிகாரமான பாவனையில் கேட்க நினைத்தவளின் குரல் குழைந்துதான் வந்தது.

''பதிலை வார்த்தையால்தான் சொல்லணுமா? இல்லை... செயலில் காட்டட்டுமா?'' என்று பதிலுக்குக் குழைந்

தவன், ஏற்கனவே தன் பதிலைச் செய்கையில் காட்ட ஆரம்பித்திருந்தான். கேள்வியைக் கேட்டவளும், அவன் சொல்ல ஆரம்பித்த பதிலில் மயங்கிப் போயிருந்தாள்.

இரண்டு நாட்கள் அமைதியாய் இருந்த ஆதி, அதற்கும் சேர்த்து வேகத்தைக் காட்டியபோது, முதலில் திகைத்த வந்தனாவும், அவனது வேகத்துக்கு ஈடு கொடுக்க ஆரம்பித்தாள்.

கணவனின் கை அணைப்பிலேயே காலையில் கண் விழித்த வந்தனாவுக்கு, மனசெல்லாம் நிறைந்து இருந்தது.

முகத்தை நிமிர்த்தி கணவனின் முகத்தைப் பார்த்தவளுக்கு, அவன் முகத்தில் உறைந்திருந்த புன்னகை சந்தோஷத்தைத் தர, கொஞ்சம் நகர்ந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

மனைவியின் இதழ் ஸ்பரிசத்தில் லேசாக உறக்கம் கலைந்த ஆதி, அவளை இறுக்கிக் கொண்டு தூக்கத்தைத் தொடர்ந்தான். அவளுக்குமே அவன் அணைப்பில் அப்படியே இருந்து விடத்தான் ஆசையாய் இருந்தது.

மெல்ல திரும்பி, மணியைப் பார்த்தவள், மணி பத்தாகி இருக்கவும், பதறி எழப் போனாள். ''இருடா... என்ன அவசரம்?'' என்றவன் இன்னமுமே அவளை இறுக்கிக் கொண்டான்.

''தயா... பத்து மணி ஆகுது... நீங்க எழுந்திருக்கலன்னா பரவாயில்லை... என்னையாவது விடுங்க'' என்று கெஞ்சியும், கணவன் அவன் அணைப்பில் இருந்து விடுவிக்க இல்லை.

இப்படியே இருந்தால், மதிய உணவு நேரமே வந்து விடும் போல் தோன்ற, வந்தனா அவனைக் காதில் குறுகுறுப்பு செய்து எழுப்ப முயன்றாள். அவன் அசையவே



இல்லை. என்ன செய்தும் அவன் எழவில்லை என்றவுடன், அவன் கன்னத்தை விரல்களால் வருடிக் கொண்டிருந்தவள் சட்டென்று கடித்து விடவே, ''ஹே... ராட்சசி!'' என்று சொல்லிக் கொண்டே ஆதித்யன் எழுந்து அமர்ந்தான்.

''ஒரே நாள்ல நான் ராட்சசியே ஆயிட்டேனா... ரெண்டு நாள் ஒண்ணும் தெரியாதவர் மாதிரி இருந்துட்டு நீங்க தான் நேத்து ராட்சச வேகம் காட்டினிங்க...'' என்று ஏதோ ஒரு வேகத்தோடு சொல்லிக்கொண்டு வந்தவள், சொன்னதின் அர்த்தம் உறைக்க, முகம் சிவக்க அவன் மார்பிலேயே தன் முகத்தை மறைத்துக் கொண்டாள்.

அவளின் சிவந்த முகத்தைப் பார்க்காத ஆதி, ''ரொம்ப முரட்டுத்தனமா நடந்துகிட்டேனா என்ன?'' என்று கவலையுடன் கேட்க, வேகமாக 'இல்லை' என்பதாய் அவன் மார்பில் புதைந்திருந்த அவள் தலை அசைந்தது.

''நிம்மதியுடன், ''உனக்குப் பிடிச்சிருந்ததா?'' என்று கிசுகிசுப்பான குரலில் அவன் கேட்க, இப்பொழுது 'ஆமாம்' என்பதாய் அவள் தலை அசைந்தது.

''என்னடா, வாயால் எதையும் சொல்ல மாட்டியா?'' என்று கேட்டபடியே அவள் தலையை நிமிர்த்த முயன்றவன், அது முடியாமல் போகவே குனிந்து பார்த்தான். அவள் கன்னங்கள் அந்தி வானமாய் சிவந்திருப்பதைப் பார்த்தவன்,

''ஹே! நேற்று என்னை அவ்வளவு மிரட்டிட்டு இப்போ வெட்கத்தைப் பாரேன்!'' என்று சொல்லி ஆசையுடன் அவள் கன்னங்களில் முத்தமிட்டான்.

அவ்வளவு நேரம் அவனை எழுப்ப முயன்று கொண்டிருந்தவள், அவன் அணைப்பில் இருந்து விலகாமல் அமர்ந்திருந்தாள்.

''வது... நாம எங்கயாவது ஹனிமூன் போகலாமாடா?''

''இல்லை தயா... நாம இங்கேயே இருக்கலாம்.''

''ஏன்?''

''ஹனிமூன்றது எதுக்கு... யார் தலையீடும் இல்லாமல் புதுசா கல்யாணம் ஆனவுங்க ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கத்தானே? இங்கே யார் இருக்காங்க... இதுவே நமக்கு ஹனிமூன்தானே தயா?''

''ஓ! எனக்குப் புரிஞ்சிடுச்சு... எதுக்கு ஹனிமூனெல்லாம் போய், இடத்தை எல்லாம் சுத்திப் பார்த்து நேரத்தை வேஸ்ட் பண்ணணும்னு சொல்ற... அதுவும் சரிதான், என்னதான் இருந்தாலும் உன்னோட அறிவே வேறதான் வது'' என்று மெச்சியபடி அணைப்பை இறுக்கியவனிடம் இருந்து விலக முயன்றவாறே,

''இப்போ கொஞ்சம் என்னை விடுங்களேன், குளிச்சிட்டு ஏதாவது சாப்பிட பண்ணலாம்'' என்ற போதுதான் அவனுக்குமே அவனுடைய வயிற்றுப் பசி தெரிந்தது.

''பத்து மணிக்கு மேல ஆயிடுச்சா? வது... ஒண்ணு பண்ணலாமா, ரொம்ப நேரமாயிடுச்சு... நம்ம ரெண்டு பேரும் தன்னந்தனியா குளிச்சு இன்னும் நேரத்தை வேஸ்ட் பண்ணாம...'' என்று சொல்லிக்கொண்டு வந்தவன், அவளது முறைப்பில் சொல்ல வந்ததை நிறுத்த விட்டு,

''ஏய் அப்படிப் பார்க்காதடி... நீதானே நேற்று சொன்னாய், நம்ம ரெண்டு பேரும் எப்பவும் சந்தோஷமா இருக்கணும்னு!'' என்று விஷமமாகச் சிரிக்க ''உங்களை...'' என்று சொல்லிக் கொண்டே முதுகில் ஒன்று போட்டவள், அவன் மேலே எதுவும் பேசுமுன் குளியலறைக்குள் சென்று மறைந்தாள்.



அதன் பிறகு அவள் செய்து வைத்த உணவை உண்டு விட்டு, இருவரும் ஷாப்பிங் போனார்கள். அவளுக்கு உடை, மேலும் வீட்டுக்கு சில பொருட்கள் வாங்கிக் கொண்டு, இரவு உணவுக்கும் வெளியில் இருந்தே வாங்கி வந்தனர்.

வீட்டுக்கு வந்து வெளியில் அலைந்த அலுப்பு தீரக் குளித்து விட்டு, வாங்கி வந்ததைச் சாப்பிட்டு விட்டு அவன் அறைக்குள் சென்றுவிட, அவள் இருவருக்குமா பால் எடுத்து வந்தாள்.

பால் தம்ளரோடு உள்ளே வந்தவளைப் பார்த்த ஆதிக்கு, 'இவள்... கடவுள் தனக்காக அனுப்பி வைத்த தேவதையோ!' என்று தோன்றியது.

கண்கள் மின்ன கணவன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது, ஆவலைத் தூண்ட, பாலை ஸ்டூலில் வைத்துவிட்டு ''என்ன தயா?'' என்று ஆவலுடன் விசாரித்தாள்.

''எதுவுமில்லை!'' என்று தலை அசைத்தவன், அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டு, அவள் செவியில் முத்தமிட்டபடியே, கிறக்கமான குரலில் ''இத்தனை நாளாய் எங்கேடி இருந்த, கொஞ்சம் முன்னாடியே வந்திருக்கக் கூடாதா?'' என்றான்.

கணவனின் அணைப்பும், முத்தமும், வார்த்தைகளும் நெஞ்சை இனிமையாய்த் தீண்டினாலும், ''போதுமே! வந்தவுடனே அப்படியே அய்யா பெரிய வரவேற்பு கொடுத்திட்ட மாதிரிதான்... நான்தான் உங்க பின்னாலேயே வந்தேன்... அப்படியே வந்தாலும் என்னை கடிச்சிட்டேதானே இருந்திங்க'' என்று அவள் குறையுடன் கூற,

''ஹையோ! அப்படி இல்லை புஜ்ஜிம்மா... உன்னைப் பார்த்த முதல் நாளே அய்யா அவுட்... அப்படி என்ன இருக்கு இந்த பொண்ணுகிட்ட? என்னை இந்த அள வுக்குப் பாதிக்கிறாளேன்னு எனக்குள்ள ஒரு ஈகோன்னு வச்சிக்கோயேன்... அதான் அந்த வேஷம்'' என்றான்.

கணவனின் வார்த்தைகளில் மனம் குழைய, வந்தனா தன் கைகளால் அவன் கழுத்தை வளைத்தாள்.

அவள் செய்கை மனதைக் குளிர்வித்தாலும், அவளை வம்பிழுக்கும் நோக்கத்துடன், ''என்னடா புஜ்ஜி... பேச்சைக் குறை! வேலையைப் பார்னு சொல்றியா?'' என்றவனை அவள் முறைத்துப் பார்த்தாள்.

''ஏன்டா முறைக்கிறே? நீதானே நேற்று சொன்னே, நாம எப்பவும் சந்தோஷமா...'' என்று சொல்ல ஆரம்பித் தவனை ''கடவுளே!'' என்று அவள் குரல் தடுத்தது.

''என்னம்மா, இந்த நேரத்தில திடீர்னு எதுக்கு அவரைக் கூப்பிடற?'' என்று கர்ம சிரத்தையாய் கேட்டவனைப் பார்த்து ''நான் ஒரு வார்த்தை சொன்னால், அதையே சொல்லிச் சொல்லிக் காட்டுவீங்களா?'' என்றாள்.

''நான் எதுவும் தப்பா சொல்லலையே வது... நாம எப்பவும் சந்தோஷமா இருக்கணும்னு நீ சொன்னதைத் தானே...'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவள் தன் இதழ்களால் அவன் பேச்சை நிறுத்தியிருந் தாள்.

அடுத்த நாளில் இருந்து இருவரும் வேலைக்குப் போக ஆரம்பித்தனர். காலையில் அவன் அலுவலகத் துக்கும், அவள் இல்லத்துக்கும் கிளம்பிச் சென்றால், மாலை அவன் வந்து இல்லத்தில் கொஞ்ச நேரம் இருந்து விட்டு, அவளைக் கூட்டிக் கொண்டு வந்து விடுவான்.



ஒரு நாள், அவர்கள் அப்படி வீட்டுக்கு வந்ததும், எதிர்த்த வீட்டில் ரம்யாவின் அழுகை சத்தம் கேட்கவே, கதவைத் தட்டி உள்ளே சென்றார்கள். அங்கே, ராமநாதன், சங்கரி இருவர் முகமுமே பார்க்க சகிக்கவில்லை.

''என்ன விஷயம்?'' என்று கேட்கப் போன ஆதியைத் தடுத்த வந்தனா, ''அக்கா... ரம்யா சாப்பிட்டாளா?' என்று கேட்டுவிட்டு, அவர் ''சாப்பிட்டு விட்டாள்'' என்று சொன் னதும், ரம்யாவைத் தூக்கிக் கொண்டு தங்கள் வீட்டுக்கு வந்தாள்.

ரம்யாவின் அழுகைக்குக் காரணம் கேட்காமல், வந்தனா அவளிடம் கெஞ்சி கொஞ்சி விளையாடிக் கொண் டிருக்க, கொஞ்ச நேரத்தில் அழுகை நின்று குழந்தையும் விளையாட ஆரம்பித்தாள்.

அதை சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த ஆதி, எழுந்து போய், இத்தனை நாள் வந்தனாவோடு சமையல் செய்ததில் இருந்து கற்றுக் கொண்ட சட்னியை அரைத்து விட்டு, தோசை ஊற்றிக் கொண்டிருந்தான்.

தூங்கி விட்டிருந்த ரம்யாவைத் தோளில் தூக்கியபடி வந்த வந்தனா, ''என்னப்பா இது... நான் வந்து செஞ் சிருக்க மாட்டேனா?'' என்று கேட்க,

''தினமும் உன் கொடுமையைத்தானே அனுபவிக்கி றோம்... இன்னைக்கு ஒரு நாள் நல்லா சாப்பிடலா மேன்னுதான்'' என்று சொல்ல,

''இருங்க... வந்து உங்களை வச்சுக்கறேன்!'' என்று மிரட்டியபடி, ரம்யாவை விடப் போனாள்.

சாப்பிடும்போது, ''நாம ரெண்டு பேரும் சாப்பிட்டுட்டு அக்கா கிட்ட என்ன விஷயம்னு கேட்கலாமா தயா? அவங்க ரெண்டு பேர் முகத்தையும் பார்க்கவே

முடியலை... இங்கே வந்ததில் இருந்து நான் அவங்களை அப்படிப் பார்த்ததே இல்லை'' என்றாள்.

''சரிடா... கேட்கலாம்... நம்மால ஏதாவது உதவி செய்ய முடியுமான்னு பார்க்கலாம்.''

இருவரும் சாப்பிட்டு விட்டு, ரம்யா வீட்டுக்குப் போகும் போது, சங்கரியும் முகம் ரொம்ப நேரம் அழுததைப் போல வீங்கி இருந்தது.

''என்ன அக்கா விஷயம்? எங்ககிட்ட சொல்ல முடியும்னா சொல்லுங்க... எந்தப் பிரச்சனைக்குமே தீர்வுன்னு ஒண்ணு கண்டிப்பா இருக்கும்'' என்ற வந்தனாவின் அக்கறையான குரலில் சங்கரி நடந்த விஷயத்தைச் சொன்னார்.

ரம்யாவின் பள்ளியில் இன்று பெற்றோர் தினம். அதற்கு இருவரும் போய் இருக்கிறார்கள். அங்கே, ரம்யாவின் வயதையொத்த குழந்தைகளின் பெற்றோர் இளமையாக இருக்க, இவர்கள் மட்டும் தனித்துத் தெரிந்திருக்கிறார்கள்.

எல்லாரும், ''இது உங்க தாத்தா பாட்டியா? அம்மா அப்பா வரலையா?'' என்று கேட்க, குழந்தைக்கு ஒன்றும் புரியவில்லை.

அதிலேயும் ஒரு வாண்டு, ''தாத்தாவுக்குதான் தலை இப்படி நரைச்சிருக்கும்... இது உங்கப்பாவா இருக்காது!'' என்று சொல்லி இருக்கிறான்.

வீட்டுக்கு வந்த ரம்யாவும், ''நீங்க என் தாத்தா... பாட்டியா? அப்படின்னா என் அம்மா அப்பா எங்கே?'' கேட்டிருக்கிறாள். அதைக் கேட்டதும் இருவருக்குமே என்ன சொல்வது என்று ஒன்றும் புரியவில்லை.

குழந்தை குழம்பி இருக்கிறது என்று எண்ணி சாப்பாடு கொடுத்து, தூங்க வைத்தனர். அப்புறம் சரியாகி



விடும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, தூங்கி எழுந்த பிறகும் அதையே கேட்டவுடன், சங்கரிக்கு மனம் தாங்கவில்லை. பொறுமையாகச் சொல்லிப் பார்த்தவர், கடைசியில் குழந்தையை அடித்து விட்டார்.

சங்கரி சொன்னதைக் கேட்ட ஆதிக்கும், வந்தனாவுக்கும் வருத்தமாக இருந்தது. ஆதிக்கே, தான் அவர்களைப் பார்த்த முதல் நாளில் அப்படி கேட்டது நினைவுக்கு வர, அமைதியாக இருந்தான்.

''உங்களுக்கு என்ன வயசு ஆகுதுக்கா?'' என்று வந்தனா கேட்க, ''முப்பத்தெட்டு!'' என்றார் சங்கரி.

''சாருக்கு?'' என்றவுடன், ''நாற்பத்தி மூணு!'' என்று பதில் தந்தான் ஆதி.

''நான் ஒண்ணு சொன்னால் நீங்க ரெண்டு பேரும் தப்பா எடுத்துக்கக் கூடாது'' என்று சொன்ன வந்தனா, கொஞ்சம் தயங்கி, ''நீங்க ரெண்டு பேரும் உங்க வயசை விட பத்து வயசு ஜாஸ்தியா தெரியறீங்க!'' என்றாள்.

''வது! என்ன பேச்சு இது?'' என்று ஆதி இடையிட, ''நான் சொல்லி முடிச்சிடறேன் தயா... ப்ளீஸ்...'' என்று சொல்லி அவனை அடக்கியவள், தொடர்ந்தாள்.

''வயசு ஜாஸ்தியா தெரியறதுக்குக் காரணம் என்ன தெரியுமா?'' என்றவள், சங்கரியைப் பார்த்து, ''நானே உங்ககிட்ட சொல்லணும்னு நினைச்சிட்டு இருந்தேன்... இந்த வயசிலேயே நீங்க எதுக்கு, பாட்டிங்க மாதிரி சுங்குடி புடவை கட்டுறீங்க? அப்புறம், எல்லாரும் பார்த்துப் பொறாமைப் படற அளவுக்கு நீளமான முடியை வச்சிக்கிட்டு அதைக் கொண்டையா போட்டு அதோட அழகையே மறைச்சிடறீங்க... இனிமேல் நீங்க சுடிதார் போடுங்க!'' என்று சொல்ல,

சங்கரியின் பார்வையே சுடிதாருக்கு மறுப்பு சொன்னது. ''சரிக்கா... பூனம் கட்டுங்க... மாடர்னா எத்தனையோ காட்டன் சேலை இருக்கு... அதைக் கட்டுங்க... உங்க கொண்டையை ஏறக்கட்டிட்டு பின்னல் போடுங்க!'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்தவள், வந்தனாவையே ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்த ராமநாதனிடம் திரும்பினாள்.

''லைப் பிகின்ஸ் அட் பார்ட்டி-ன்னு சொல்லிட்டு இருக்காங்க... நீங்க என்னடான்னா இப்பவே சிக்ஸ்டி மாதிரி ட்ரஸ் பண்ணிட்டு இருக்கீங்க... நரை கூட அழகு தான்... இல்லைன்னு சொல்லலை... அதுக்கு இன்னும் எவ்வளவோ நாள் இருக்கே... நீங்க கலரிங் பண்ணிக் கலாம் சார்'' என்றவளை அவர் அதிர்ச்சியுடன் பார்க்க, வந்த சிரிப்பை அடக்கிக் கொண்ட வந்தனா, ''அட்லீஸ்ட் டையாவது அடிச்சிருக்கலாமே... உங்க ரெண்டு பேர் வயசையும் குறைச்சுக்க இதெல்லாம் நான் செய்யச் சொல் லலை... ஜாஸ்தியா காமிக்காம இருக்கத்தான் சொல்றேன்'' என்றாள்.

''தோற்றத்தை மட்டும் வச்சு மனுஷங்களை எடை போடறது தப்புதான்... அதுக்காக தோற்றத்தை நல்லா வச்சுக்கிறது தப்பு கிடையாதே... நாம தோற்றத்தை நல்லா வச்சிருந்தால், நமக்கே நம்ம மேல் ஒரு நம்பிக்கை வரும்... அந்த நம்பிக்கை, மத்தவங்ககிட்ட இருந்து மதிப்பைத் தேடி தரும்.

''உங்க ரெண்டு பேர் பற்றியும் என்கிட்டே ஆதி நிறைய சொல்லி இருக்கார்.'' என்றவள் ராமநாதனைப் பார்த்து, ''நீங்க உங்களைப் பற்றி கொஞ்சம் கூட யோசிக் காம, உங்க மூணு தங்கைகளுக்கும் கல்யாணம் செஞ்சு



வச்சிருக்கீங்க... இந்தக் காலத்துல, ரெண்டாம் கல் யாணம் பண்ணிக்கிற வயசானவங்க கூட, இளவயசுப் பொண்ணா பார்க்கிறாங்க... ஆனா நீங்க? உங்க வயசுக்கு ஏற்ற பெண்ணா இருக்கணும்னு, அக்காவைக் கல்யாணம் பண்ணி இருக்கீங்க.

''அக்காவும் உங்களுக்குக் குறைஞ்சவங்க இல்லை... அவங்களும், தன்னை நம்பி இருந்த மாற்றுத்திறனாளி யான தங்கைக்குக் கல்யாணம் செஞ்சிட்டுதான் தனக்குக் கல்யாணம்னு உறுதியா இருந்திருக்காங்க.

''உங்களோட இந்த குணத்தை எல்லாம் புரிஞ்சிக்கிற வயசில, ரம்யாவே உங்களை 'இவங்க என்னோட அம்மா அப்பா'ன்னு பெருமையா கொண்டாடுவா... இப்போ உங்களைப் புரிஞ்சிக்கிற வயசுல அவள் இல்லை... அத னால் அவளை நீங்க புரிஞ்சிக்க முயற்சி பண்ணுங்க.

''குழந்தைங்க மனசைக் கவரணும்னா, அவங்களுக்குப் பிடிச்சதை வாங்கிக் கொடுத்தால் மட்டும் போதாது... நாமளும் அவங்களோட குழந்தையா மாறி விளையாட ணும்.

''ஆதி கிட்ட விளையாடலைன்னா ரம்யாவுக்குத் தூக்கமே வராதுன்னு சொல்லுவீங்க இல்ல அக்கா... அதுக்குக் காரணம் என்ன தெரியுமா? அவர் அவள்கிட்ட விளையாடும்போது தானும் ஒரு குழந்தையா மாறிடுவார்.

''நீங்க ரெண்டு பேரும், 'நமக்கு வயசு ஆயிடுச்சே... இப்படி இருக்கலாமா? அப்படி இருக்கலாமா? மத்தவங்க என்ன சொல்வாங்களோ?' அப்படின்னு நினைக்கிறதை விட்டுட்டு, உங்களுக்கான வாழ்க்கையை வாழப் பாருங்க.''

நீளமாகப் பேசி முடித்த வந்தனா அவர்கள் இருவரும் யோசிப்பதை பார்த்துவிட்டு, ஆதியை கூட்டிக் கொண்டு கிளம்பினாள்.

வீட்டுக்குள் நுழைந்த ஆதி, ''எப்படி வது? நான் கூட ரொம்ப நாளா இந்த விஷயத்தைப் பற்றி யோசிச்சிருக்கேன்... ஆனால் அவங்க கிட்ட பேசறதுக்குத் தயக்கமா இருக்கும்... நீ பேசப் பேச நான் அப்படியே பிரமிச்சுப் போயிட்டேன்!'' என்று பாராட்ட,

''தயா... எனக்குச் சரின்னு பட்டதை சொன்னேன்... இதை ஜாடை மாடையா நான் ஏற்கனவே சொல்லி இருக்கேன்... ஆனால் அவங்களுக்கு ஒரு தயக்கம்... இந்த வயசில, இவ்வளவு சின்ன குழந்தையான்னு எல்லாரும் கேட்கிறாங்கன்னு, பக்கத்தில இருக்கிற பார்க்குக்குப் போகக் கூடத் தயங்குவாங்க...''

''ராம் சார் வயசானவரா தெரியறார் என்று இந்த அக்காவும், அவருக்கேத்த மாதிரி டிரஸ் செஞ்சுக்கிறாங்க... இதெல்லாத்தையும் மாத்தணும்னு நினைப்பேன்... பட் அவங்க மனசு கஷ்டப்படாம பேசணுமேன்னு யோசிச்சிட்டு இருந்தேன்... இப்போ குழந்தை அப்படி ஒரு கேள்வி கேட்டவுடனே ஆடிப் போய்ட்டாங்க... பாவம்! அதான், நாமளும் அதிரடியா பேசிப் புரிய வைக்கலாம்னு அப்படிப் பேசினேனே தவிர, அவங்க மனச காயப்படுத்த இல்லை தயா'' என்றாள்.

''என் புஜ்ஜிம்மாவைப் பற்றி எனக்குத் தெரியாதா?'' என்று கொஞ்சிய ஆதி, ''உன்னை மாதிரி ஒரு பொண்ணு, மனைவியா கிடைக்க நான் ரொம்ப புண்ணியம் பண்ணி இருக்கேன்னு தோணுது வது'' என்றான்.

''ம்ஹூம்... உங்களை மாதிரி ஒரு கணவன் கிடைக்க, நான்தான் புண்ணியம் பண்ணி இருக்கேன்'' என்றாள் வந்தனா.

''இல்லை... நான்தான்'' என்று அவனும்,



''இல்லை... நான்தான்'' என்று அவளும், மாற்றி மாற்றிச் சொல்ல, இருவருக்குமே, கொஞ்ச நேரத்தில் சிரிப்பு வந்துவிட, வாய் விட்டுச் சிரித்தனர்.

எப்போதும் போல அவளது புன்னகையில் மயங்கியபடி, அருகில் வந்து அவளது முகத்தை தன் கைகளில் தாங்கிய ஆதி, ''என் கண்ணுக்கு, நீ ஒவ்வொரு நாளும் புதுசு புதுசா தெரியற வது!'' என்று காதலுடன் சொல்ல,

''அச்சச்சோ! என்ன சொல்றீங்க தயா? நாளைக்கே நாம ஒரு நல்ல கண் டாக்டர் கிட்ட போயிட்டு வந்திடலாமா?'' என்றாள்.

முதலில் ஒன்றும் புரியாமல், அவளைப் பார்த்தவனுக்கு, அவளது குறும்புப் பார்வை பதிலைச் சொல்லிவிட, ''உன் வாய் இருக்கே! அதுக்கு சரியான தண்டனை தாண்டி...'' என்றவன், அவன் விரும்பிய, அவளுக்குமே பிடித்த வகையில் தண்டனையைத் தர ஆரம்பித்தான்.

## 10

அன்று, ஆதியும் வந்தனாவும் வீட்டுக்கு வரும்போது, பிளாட் நுழைவாயிலின் அருகே ராமநாதனைப் பார்த்தனர். நேற்று, வந்தனா சொல்லியபடி டை அடித்திருந்தவர், அவர்கள் இருவரையும் கொஞ்சம் கூச்சத்துடன் பார்த்தார்.

''வாவ்! புது ஜீன்ஸ்... புது டி ஷர்ட்... கலக்கறீங்க ராம் சார்... பயங்கர ஸ்மார்ட்டா இருக்கீங்க'' என்று ஆதி சொல்ல, அவர் இன்னும் கூச்சத்துடன் நெளிந்தார்.

''தயா கரெக்ட்டா தான் சொல்றார் அண்ணா...'' என்று வந்தனாவும் புன்னகையுடன் சொல்ல, அவளது 'அண்ணா' என்ற அழைப்பில் மனம் நெகிழ்ந்த ராமநாதன், ''எல்லாம் உன்னால்தாம்மா!'' என்றார்.

பேசிக்கொண்டே வந்தவர்கள், கதவைத் திறந்த சங்கரியைப் பார்த்ததும் திகைத்து நின்றார்கள்.

தங்கள் கல்யாணத்தின்போது வந்தனா, சங்கரிக்கு வாங்கிக் கொடுத்த, அழகான பூக்கள் நிறைந்த சிந்தடிக் புடவையை அணிந்து, தன் நீளக் கூந்தலைத் தளர பின்னி பூ வைத்திருந்த சங்கரியைப் பார்த்ததும், ''அக்கா! சூப்பர்க்கா.... என் கண்ணே பட்டுடும்போல இருக்கு'' என்று வந்தனா குதூகலிக்க,

''சரி வா... வது'' என்று ஆதி அவளது கைப்பற்றி அழைத்துக் கொண்டு வந்தான்.

''என்ன தயா? எதுக்காக அவளோ அவசரமா கூட்டிட்டு வந்தீங்க? இன்னும் ஒரு வார்த்தை பாராட்டச் சொல்லி இருந்தா, அவங்களுக்குச் சந்தோஷமா இருந்திருக்கும் இல்லை?'' என்று வந்தனா குறைபட,

''லூசு பொண்ணே... இப்போதான் ராம் சாரும் அவங் களைப் பார்க்கிறார்னு நினைக்கிறேன்... அவர் பார் வையே வேற மாதிரி இருந்தது... பாராட்டை நாம சொல் றத விட, சொல்ல வேண்டியவர் சொன்னா அவங்களுக்கு இன்னும் சந்தோஷமா இருக்கும்னுதான், உன்னைக் கூட்டிட்டு வந்தேன்'' என்றான்.

''ஹேய்... நீங்க கூட இதெல்லாம் கவனிக்க ஆரம்பிச் சிட்டீங்களா?'' என்று வந்தனா புருவம் உயர்த்தி ஆச் சரியப்பட,

அவள் கேலி செய்வது தெரிந்தாலும், ''ம்... பூவோட சேர்ந்து நாறும் மணக்கிறதில்லையா... அது மாதிரிதான்'' என்றவன், ''அதெப்படி வது எப்பவுமே மத்தவங்க மனசைப் புரிஞ்சு உன்னாலே நடந்துக்க முடியுது?'' என்று ஆச் சரியப்பட்டான்.



''அதெல்லாம், என்னோட வேலையோட ஒரு பகுதிதான்பா... சில பேஷண்ட்ஸ் சின்ன வலின்னா கூட உயிரே போற மாதிரி அலட்டிப்பாங்க... சில பேர் இது செஞ்சால் பிரச்சனைன்னு சொல்லியும் அலட்டிக்காம செய்யக்கூடாதுன்னு சொல்றதை எல்லாம் செஞ்சுட்டு இருப்பாங்க... ரெண்டு பேரையுமே ஒண்ணும் சொல்ல முடியாது... அவங்க அவங்களுக்கு ஏற்ற மாதிரி பேசித் தான் வழிக்குக் கொண்டு வரணும்... ஒரு சின்ன சைக் காலஜி... அவ்வளோதான்'' என்று புன்னகையோடு சொன்ன வளுக்கு, எப்போதும் போல் தனது பரிசைக் கொடுத்தான் கணவன்.

அங்கே, ரம்யா வீட்டில் ஆதி சொன்னபடிதான் நடந்து கொண்டிருந்தது.

''ரம்யா தூங்கிட்டாளா சங்கரி?'' என்று ராமநாதன் கேட்க, ''ஆமாங்க... இன்னைக்கு முழுக்க என்னோட புடவை தலைப்பைப் பிடிச்சிட்டே சுத்திட்டு இருந்தது... 'இவளோ பெரிய முடியா உனக்கு?'ன்னு தொட்டுத் தொட்டுப் பார்த்திட்டு இருந்தது... மதியம் கூடத் தூங் கலை... அதான் சாப்பிட்டுட்டு சீக்கிரமே தூங்கிடுச்சு'' என்று பெருமையுடன் சொல்ல, ராமநாதன் சங்கரியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

கணவர் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த சங்கரி, ''என்னங்க புதுசா பார்க்கறீங்க?'' என்று வெட்கத்துடன் கேட்க,

''புதுசாதான் இருக்கு... இந்தப் புடவையும், இந்த ஹேர் ஸ்டைலும் உனக்கு எவ்வளவோ அழகா இருக்கு தெரியுமா சங்கரி?'' என்று அவர் என்றும் இல்லாத காதலுடன் சொல்ல, ''உங்களுக்கும்தான் இந்த டி ஷர்ட் நல்லா இருக்கு... கடைல இருந்தே போட்டுட்டு வந்திட்டிங்களா?'' என்றார்.

''ம்... உனக்கு சர்ப்ரைஸ் கொடுக்கலாம்னுதான் கடைல இருந்தே போட்டுட்டு வந்தேன்... பார்த்தா, நீ என்னைவிடப் பெரிய சர்ப்ரைஸ் தந்துட்டே...'' என்றவர், சங்கரிக்கென்று வாங்கி வந்த உடைகளை எடுத்துக் கொடுக்க, அதில் இரண்டு சுடிதார்களை கண்ட சங்கரி, ராமநாதனை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

''போட்டுக்கோ சங்கரி... உன்னோட உயரத்துக்கு ரொம்ப அழகா இருக்கும்!'' என்றபோது சங்கரிக்குக் கண்களில் கண்ணீரே அரும்பி விட்டது.

ராமநாதனும், சங்கரியும் கல்யாண வாழ்க்கையில் இணைந்தபோது, ஒருவருக்கு ஒருவர் துணை வேண்டும் என்ற எண்ணம்தான் அவர்கள் இருவர் மனதிலுமே இருந்தது. கல்யாணத்துக்குப் பின், கணவன் மனைவிக்குள்ளே இருக்கும் அன்பு இருக்கத்தான் செய்தது.

ரம்யா பிறந்த பின், அவர்களது வாழ்க்கையே குழந்தையைச் சுற்றித்தான் இருந்தது. அந்த வாழ்க்கையில், இன்று புதிதாய் காதல் மலர்ந்த மாதிரி எண்ணம் தோன்ற, இருவருமே, மனதார ஆதியும், வந்தனாவும் பல்லாண்டு சந்தோஷமாக வாழ வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

அடுத்த நாள் ஞாயிறு சந்தோஷமாக விடிந்தது. காலையில் எழுந்து குளித்துவிட்டு, வந்தனா சமையலில் ஈடுபட்டிருந்தாள். அவளைப் பின்னால் இருந்து அணைத்த



ஆதி, ''என்னடி... என் பொண்டாட்டி... என்னைக் கூப்பிடாமலே சமையல்ல இறங்கிட்ட?'' என்றான்.

''இன்னைக்கு ஒரு நாளாவது, உங்க தொல்லை இல்லாமல் சமைக்கலாம்னுதான்'' என்று சமையலுக்கு உதவுகிறேன் என்று தினமும் ஆதி செய்யும் சில்மிஷங்களை நினைத்து அவள் சிரித்தபடி சொல்ல, ''அடிப்பாவி... நான் உனக்குத் தொல்லையா?'' என்றான்.

அவள் பதில் சொல்லாமல், சிரித்தபடி வேலை தொடரவும், ''எப்பவுமே உன்கூடவே இருக்கணும் போலவே இருக்கு... வீட்டில் இருக்கிற நேரமாவது அப்படி இருக்கலாம்னு நினைச்சால், தொல்லைன்னா சொல்றே? மனுஷனை பைத்தியம் பிடிக்க வச்சிட்டு... சொல்லுவடி சொல்லுவ!'' என்று பொறுமியவனின் அன்பில் வந்தனாவின் மனம் நெகிழ்ந்தது.

கணவன், தன் மேல் அன்பாய் இருக்கிறான் என்பதே, ஒரு மனைவிக்குப் பெருமைதான். அதை வாய்விட்டுச் சொல்கிறான் என்றால், கேட்கவா வேண்டும்?

பெருமிதத்தில் மனம் விம்ம, கணவனின் கை அணைப்பிலேயே அவன் பக்கம் திரும்பி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''நீங்க மட்டும்தான் பைத்தியமா இருக்கீங்களாக்கும்... நாங்க மட்டும் என்னவாம்?'' என்று குழைந்தவள், தன் இதழ்களை அவன் மார்பில் ஒற்றி எடுத்தாள்.

''ஏய்... காலையிலேயே மூடை கிளப்பாதே!'' என்று அவள் செவியைத் தன் உதட்டால் உரசியபடி சொன்னவனுக்கு, ''இன்னைக்கு லீவு நாள்தானே தயா...'' என்று வந்தனாவிடம் இருந்து கிசுகிசுப்பாய் பதில் வந்தது.

''ஹுர்ரே!'' என்று கத்தியபடி, அவளைத் தூக்கப் போனவனிடம் ''ஹய்யோ விடுங்க... இன்னைக்கு

ரம்யாவை எக்சிபிஷனுக்குக் கூட்டிட்டுப் போறேன்னு சொன்னது மறந்து போச்சா?'' என்று வந்தனா சொல்ல, அவனது உற்சாகம் வடிந்தது.

''இதுதான்... ஆசை காட்டி மோசம் செய்யறது போல!'' என்று சொல்லிவிட்டு ஆதி முகத்தைத் தூக்கிக் கொண்டு போக, வந்தனா சிரிப்புடன் சமையலைத் தொடர்ந்தாள்.

காலை உணவைச் சாப்பிட்டு விட்டு, இருவரும் ரம்யா வீட்டுக்குப் போகும்போது, ரம்யா ராமநாதன் மேல் யானை சவாரி செய்து கொண்டிருந்தாள்.

''கொஞ்சம் வேகமா போங்கப்பா!'' என்று தந்தையிடம் உத்தரவிட்டபடி அவர் மேல் உட்கார்ந்திருந்த ரம்யாவின் முகத்தில் இருந்த மலர்ச்சி, வந்தனாவுக்கு ஆதிக்கும் தொற்றிக் கொண்டது.

''ரம்யா குட்டி யானை சவாரி போறாங்களா? இன்னைக்கு எக்சிபிஷனுக்குப் போலாம்னு சொன்னோமே?'' என்று வந்தனா ஆசை காட்டியபோதும், தந்தையின் மேல் இருந்து இறங்க ரம்யாவுக்கு மனம் வரவில்லை.

''இன்னைக்கு வேண்டாம் ஆன்ட்டி... நாம அடுத்த சன்டே போலாமா?'' என்றாள். அவர்களது சந்தோஷத்தில் குறுக்கிடாமல், இருவரும் திரும்பியபோது, வந்தனாவின் கைகளைப் பற்றிக் கொண்ட சங்கரி, ''ரொம்ப நன்றி வந்தனா!'' என்று மனதார சொல்ல,

''என்னக்கா இது?'' என்று அவர் கையை அழுத்தி விட்டுக் கிளம்பினாள்.

''இரு வந்தனா'' என்றவர், ''எக்சிபிஷனுக்குப் போனால், சாப்பிட என்று எல்லாரும் சேர்த்துதான் வெஜிடபுள்



புலாவ் பண்ணேன்... எடுத்திட்டுப் போ'' என்று சொல்லிக் கொடுத்தார்.

வீட்டுக்குள்ளே நுழைந்ததும், ''வது! வெளியே போறது கட்... லஞ்சும் செய்யத் தேவை இல்லை... காலைல விட்டதை ஆரம்பிக்கலாமா?'' என்று ஆதி கேட்க,

''எப்ப பாரு அதே நினைப்புதானா? ரொம்ப நாள் ஆச்சு படம் பார்த்து... டீவில எதாவது பார்க்கலாம்'' என்றபடி சோபாவில் அமர்ந்தாள்.

பக்கத்தில் வந்து அமர்ந்தவன், ''வது! உன் மடில படுத்துக்கணும் போல இருக்கு... படுத்துக்கவா?'' என்று ஆசையுடன் கேட்க, பதில் சொல்லாமல் அவன் தலையை இழுத்து, தன் மடியில் போட்டுக் கொண்டாள் வந்தனா.

''ஹே! நீ தான் என்னை மடியில இழுத்து விட்ட, அப்புறம் எழுந்துக்கோன்னு சொல்லக் கூடாது'' என்று எச்சரிக்கை செய்தவனிடம், ''நான் ஏன்பா சொல்லப் போறேன்?'' என்று சொல்லிவிட்டு டி.வி.யில் ஆழ்ந்தவளுக்கு, கொஞ்ச நேரத்திலேயே அவன் சொன்னதின் அர்த்தம் புரிந்தது.

''என்ன இருந்தாலும், புடவைதான் எல்லாத்துக்கும் வசதி, இல்லை வது?'' என்று கேட்டவனின் விரல்கள் அவள் இடையில் கோலமிட, கூச்சத்துடன் நெளிந்த வந்தனா, அவன் விரல்களைக் கட்டுப்படுத்த முயன்றும் முடியாமல் போகவே, ''இப்போ நீங்க ஒழுங்கா இல்லை... நான் ரம்யா வீட்டுக்குப் போயிடுவேன்'' என்று மிரட்டவும், அமைதியாகப் படுத்துக் கொண்டான்.

இருவருக்குமே பிடித்த ஹீரோயின் படம் ஒளிபரப்பாக, இருவருமே டி.வி.யில் ஆழ்ந்தனர். முதல் பாதி மோதல், காதல் என்று சுவாரசியமாகப் போக, இடைவெளிக்குப் பிறகு, கதாநாயகிக்கு இதய நோய் என்பது தெரிய வர, சோக முடிவுடன் இருந்தது படம்.

படம் பார்த்து முடிந்ததும், வந்தனாவின் கண்கள் கண்ணீரால் நிரம்பி இருந்தது. துடைக்க, துடைக்க வழிந்த கண்ணீரை அடக்கியவளுக்கு, ஆதியிடம் இருந்து எந்தச் சத்தமும் வராமல் போகவே, குனிந்து தன் மடியில் இருந்தவனைப் பார்த்தாள்.

அப்போதுதான், தன் வயிற்றுப் பகுதியில் இருந்த ஈரம் அவளுக்கு உறைத்தது. அவசரமாக, தன் வயிற்றில் முகம் புதைத்திருந்த கணவனைத் திருப்பியவள், அவனது கண்களில் கண்ணீரைக் காணவும் பதறிப்போய், ''என்ன தயா இது?'' என்று, அவனை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

கொஞ்ச நேரம் கழித்து, அவளிடம் இருந்து விலகியவன், ''சாரி!'' என்று சொல்லிவிட்டு குளியலறைக்குச் சென்று மறைந்தான்.

அவன் முகம் கழுவிவிட்டு வந்தபோது, வந்தனா சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். எதுவும் பேசாமல் இருவரும் அமைதியாகச் சாப்பிட்டனர்.

கொஞ்ச நேரத்தில் ரம்யா வந்துவிட, அவளோடு சேர்ந்து விளையாடினார்கள். ரம்யாவோடு விளையாடுவது இருவருக்குமே பிடித்தமான ஒன்று. அவளோடு விளையாடி முடித்ததும், மனம் லேசானது போல இருக்கும் என்று இருவரும் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் இன்று... இருவருக்குமே மனம் கனத்துப் போயிற்று.



ஏதோ ஒரு ஏக்கம் மனதை அரிக்க, இருவரும் அவரவர் யோசனையில் மூழ்கியபடி அமைதியாகவே இருந்தனர்.

இரவு உணவை முடித்துவிட்டு, படுத்தவர்கள், எப்போதையும் விட அதிகமாய், ஒரு வேகத்துடன் ஒருவரை ஒருவர் நாடினார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் மற்றவருக்குள் தேடிய அந்த தேடல் வெகு நேரம் நீண்டது.

அன்றைய இரவு, இரு உடல்களின் சங்கமம் என்பதற்கும் மேலாக இரு ஆன்மாக்களின் சங்கமமாக, ஒரு உன்னதமான இரவாக இருவருக்கும் அமைந்தது.

காலையில் எழுந்த போது, இருவருமே ஒருவரை ஒருவர் வெட்கத்துடன் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். நேற்றைய இரவின் இனிமை தொடர, இருவரும் அதிகம் பேசாமல் அமைதியாகவே வேலைக்குக் கிளம்பினார்கள். அந்த அமைதிகூட ஒரு வித சந்தோஷத்தைத் தருவதாக இருந்தது.

இரண்டு நாள் கழித்து, காலையில் எழுந்ததில் இருந்தே ஒரு யோசனையுடன் இருந்தான் ஆதி. அவனே சொல்லுவான் என்று எதிர்பார்த்த வந்தனா, கொஞ்ச நேரம் கழித்து, ''என்ன ஆச்சு தயா? ஏன் ஒரு மாதிரியாவே இருக்கீங்க?'' என்றாள்.

''இன்னைக்கு அம்மாவுக்குப் பிறந்த நாள்... அம்மா அதை பெரிசா கொண்டாட மாட்டாங்க... நான்தான் ஏதாவது சர்ப்ரைஸ் கிப்ட் கொடுத்து எழுப்புவேன்... இன்னைக்கு விஷ் கூட பண்ண முடியலைன்னு வருத்தமா இருக்கு வது.'' என்றான்.

அவன் முக வாட்டத்தைப் பார்க்க அவளுக்குப் பொறுக்கவில்லை. அங்கே, அவன் அம்மாவும் இப்படித்தானே இருப்பார்கள் என்று தோன்றிவிட, ''அத்தை கண்டிப்பா

உங்க போனுக்காக எதிர்பார்ப்பாங்க... இன்னைக்கு போய் அவங்களை ஏமாற்றணுமா? போன் பண்ணுங்களேன்... ப்ளீஸ்'' என்றாள் வந்தனா.

''எனக்கும் ஆசையாத்தாண்டா இருக்கு... ஆனால் அம்மா அங்கே கிளம்பி வாடா கண்ணான்னு சொன்னாங்கன்னா, என்ன செய்யறது?'' என்று குழம்பியவனிடம்,

''எனக்குத் தெரிஞ்சு, இன்னைக்கு உங்க கிட்ட பேசினாலே போதும்னு தான் அவங்க நினைப்பாங்க... உங்களைச் சங்கடப்படுத்தற மாதிரி எதுவும் பேச மாட்டாங்க... நீங்க வேணும்னா பாருங்களேன்'' என்று சொன்னவள் அவன் யோசிப்பதைப் பார்த்துவிட்டு, ''நம்பர் சொல்லுங்க... என் போன்லயே போடறேன்'' என்று அவன் சொல்லச் சொல்ல எண்களை அழுத்தி, மணி அடிக்க ஆரம்பித்ததும் அவனிடம் கொடுத்தாள்.

போனை எடுத்ததும், ''கண்ணா!?'' என்று ஆர்வத்துடன் கூடிய அன்னையின் குரலை ரொம்ப நாள் கழித்துக் கேட்டதும், ஆதிக்குக் கண்ணீரே வந்து விட்டது.

''அம்மா!'' என்றவன், ''நான்தான்னு எப்படிம்மா தெரியும்? கரெக்டா கண்ணான்னு சொல்றீங்க?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

''ஒவ்வொரு முறை போன் வரும்போதும், நீதான் போன் பண்றேன்னு நினைச்சிட்டே இருந்தேன் கண்ணா!'' என்றவுடன், 'உங்க போனை எதிர்பார்ப்பாங்க' என்று வந்தனா சொன்னது நினைவு வந்து, அவளைப் பார்க்க, 'நீங்க பேசுங்க' என்று சைகையில் சொன்னவள், அம்மா பிள்ளை இருவரும் பேசட்டும் என்று விலகிப் போனாள்.



பேசிவிட்டு வந்தவன், அவளை இறுக அணைத்துக் கொண்டான். ''தேங்க்ஸ் வது... தேங்க்யூ சோ மச்... நீ வற்புறுத்தலன்னா நான் பேசி இருக்கவே மாட்டேன்... நானும் கஷ்டப்பட்டு அவங்களையும் வருத்தி இருப்பேன்... நீ சொன்ன மாதிரி அம்மா எதுவுமே கேட்கலை... நல்லா சாப்பிடு... உடம்பைப் பார்த்துக்கோன்னு அதையே தான் சொல்லிட்டு இருந்தாங்க'' என்று சந்தோஷத்துடன் சொன்னவன், ''ஐ லவ் யூ சோ மச் வது!'' என்று சொல்லி அவளது கன்னத்தில் முத்தமிட்டான்.

அவன் ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டிருப்பதைப் பார்த்தவள், ''ஹப்பாடி... கல்யாணம் ஆகி ரெண்டு வாரம் ஆன பின்னாடியாவது ஐ லவ் யூன்னு சொன்னீங்களே'' என்று கேலியில் இறங்கினாள்.

''ஓ... நீங்க எத்தனை முறை சொல்லி இருக்கீங்களாம்?'' என்று அவளை வாரியவன், ''சொன்னால்தான் தெரியுமாடா?'' என்று கொஞ்சி விட்டு, காதருகில் வந்து, ''அதான் செயல்லையே காமிக்கிறோம்ல... இரண்டு நாளைக்கு முன்னாடி கூட...'' என்று சொல்லிவிட்டு சிரித்தபோது, அன்றைய இரவின் நினைவில் சிவந்த தன் முகத்தை, அவன் மார்பிலேயே புதைத்துக் கொண்டாள் மனைவி.

ஒரு மாதம் அவர்களது வாழ்வில் சிரிப்பும் சந்தோஷமுமாகக் கழிந்தது. அன்று அலுவலகத்தில் இருந்து கிளம்பும் போது, ஆதிக்கு ரகு போன் செய்திருந்தான்.

எப்போதுமே இரவு அழைப்பவன், இந்த நேரத்தில் அழைக்கவும், போனை எடுத்த ஆதி, ''என்ன ஆச்சு ரகு, எதாவது முக்கியமான விஷயமா? அம்மா அப்பா எல்லாம் நல்லா இருக்காங்க இல்லை?'' என்று படபடப்புடன்

கேட்க, ''ரிலாக்ஸ் ஆதி... நைட்ல போன் பண்ணா தங்கச்சி இருப்பான்னுதான் இப்போ போன் பண்ணேன்'' என்றான்.

''அப்படி என்ன விஷயம்?''

''ஆதி அடுத்த வாரம் நீ சென்னைக்கு வரணும்... ஞாபகம் இருக்கில்லை?'' என்று ரகு கேட்டதும், ஆதி அமைதியாய் இருந்தான்.

''என்ன ஆதி? எதுவும் சொல்ல மாட்டேங்கிற?''

''ரகு... இப்போ வந்தனாவை விட்டுட்டு எப்படி நான்...?'' என்று பதில் சொல்லத் தடுமாறினான் ஆதி.

''ஆதி! அவளை விட்டுட்டு ஏன் வரணும்... கூட்டிட்டு வா.''

''புரியாமல் பேசாதே ரகு... அப்பாவைப் பத்தி உனக்குத் தெரியாதா? அவளை அவர் ஏதாவது சொன்னால் என்னால் தாங்க முடியாது!''

''இப்போ நீ என்னதான் சொல்ல வர ஆதி?''

''வந்தனாவை விட்டுட்டு நான் எங்கேயும் வரதாயில்லை'' என்று உறுதியான குரலில் ஆதி சொல்ல, அதிர்ச்சியடைந்த ரகு,

''நீ என்ன சொல்றேன்னு புரிஞ்சுதான் சொல்றியா? அம்மாவைப் பத்தி கூட நீ நினைக்கலையா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

''நான் சொன்னது என்னனு தெரிஞ்சுதான் சொன்னேன்... முதலிலேயே என் முடிவு இதுவாத்தான் இருந்தது... அப்போ சொன்னால் நீ ஏத்துக்க மாட்டேன்னுதான் சொல்லலை... அந்த முடிவு இப்போ ரொம்பவே உறுதியா ஆயிடுச்சு.''



''உன்னுடைய முட்டாள்தனமான இந்த முடிவை இப்போ மட்டும் நான் ஒத்துப்பேன்னு எப்படி நினைக்கிறே? நான் பேச வேண்டியவங்க கிட்ட பேசிக்கிறேன்'' என்று ரகு ஆத்திரத்துடன் சொல்ல,

''ரகு... நீ வந்தனாகிட்ட இந்த விஷயத்தைப் பற்றிப் பேசக்கூடாது... இது என் மேல ஆணை'' என்று ஆதி சொன்னதும், ஸ்தம்பித்து நின்றான் ரகு.

ரகுவின் அதிர்ச்சியை ஆதியால் புரிந்து கொள்ள முடிந்தது. இருந்தாலும் பேசித்தான் ஆகவேண்டும் என்று எண்ணி, ''ரகு... நீ வந்தனாகிட்ட ஏதாவது பேசினால், நான் உன்னிடம் கூடச் சொல்லாமல், இங்கே இருந்து போக வேண்டி இருக்கும்'' என்று சொல்லி விட்டுப் போனை அணைத்தான்.

இல்லத்துக்குச் செல்ல ஆதிக்கு மனமில்லை. வந்தனா காத்திருப்பாளே என்று எண்ணி அவளுக்கு போன் செய்து, அலுவலகத்தில் வேலை இருப்பதால், வர லேட்டாகும் என்று சொல்லிவிட்டுப் பக்கத்தில் இருந்த பூங்காவில் போய் அமர்ந்தான்.

இந்த மூன்று மாதங்களாக தன் வாழ்வில் நடந்த விஷயங்களை அசை போட்டவனுக்கு, ரகுவிடம் தான் சொன்னது சரியான முடிவுதான் என்று தோன்றிவிட, குழப்பம் அகன்றவனாக வீட்டுக்குக் கிளம்பினான்.

ஆதி, தான் வர லேட்டாகும் என்று சொல்லும்போது, அவன் குரல் சரியாக இல்லையென்று வந்தனாவுக்குத் தோன்றியது. அதை அவள் கேட்டதும், ''ஒண்ணுமில்லைடா... கொஞ்சம் வேலை அதிகமாயிருக்கு'' என்று சொல்லி விட்டான்.

வீட்டுக்கு வந்த வந்தனாவை, சங்கரிதான் எதிர் கொண்டார். ''வந்தனா... வர வெள்ளிக்கிழமை ரம்யாவுக்குப் பிறந்த நாள்... பெருமாள் கோயில்ல, சிறப்பு பூஜைக்குச் சொல்லி இருக்கு... அன்னைக்குக் கோயில்லையும் எதோ விசேஷமாம்... அதனால, பூஜைல உட்கார்றவங்க எத்தனை பேரோ, அதை முன்னாடியே சொல்லிடுங்கன்னு சாமி சொன்னார்... நீயும், தம்பியும் வருவீங்க இல்லை... உனக்கு எதுவும் கோயிலுக்கு வர முடியாத நாள் இல்லையே அன்னைக்கு?'' என்று விசாரித்தார் சங்கரி.

''வெள்ளிக்கிழமைன்னா என்ன தேதி வருதுக்கா? இருபதாம் தேதிதானே? கோயிலுக்கு வர எந்தப் பிரச்னையும் கிடையாது'' என்று சொன்னவளுக்கு, இன்று தேதி பதினாறு என்பது நினைவுக்கு வந்தது. அவசரமாக சங்கரியிடம் விடைபெற்றுக் கொண்டு வந்தவளுக்கு, நெஞ்சு படபடத்தது.

'ஏழாம் தேதியே மாதவிலக்கு வந்திருக்க வேண்டுமே?' என்று யோசித்தவளுக்கு சட்டென்று எல்லாம் புரிந்து போனது. எப்படி மறந்து போனாள்? நடுங்கிய கைகளை, வயிற்றில் வைத்துப் பார்த்தவளுக்குள் ஒரு பரவசம் ஓடியது. 'கடவுளே! என் தயாவின் உயிர் எனக்குள்ளா?' ஆனந்தம் தாங்காமல் கண்களில் கண்ணீர் நிரம்பி விட, அதற்கு மேல் நிற்க முடியாமல், சோபாவில் சாய்ந்து அமர்ந்தவள் கண்களை மூடிக்கொண்டாள்.

## 11

தங்கள் காதலின் அடையாளமாக தனக்குள் ஒரு உயிர் வளர்கிறது என்பதை அறிந்து பரவச நிலையில்



ஆழ்ந்திருந்த வந்தனாவுக்கு, உடனே ஆதியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவன் மார்பில் சாய்ந்து இந்த சுகத்தை அனுபவிக்க வேண்டும் போலிருந்தது.

ஆதி இந்த விஷயத்தை இதை எப்படி எதிர்கொள்வான் என்று யோசித்தவளின் முகம் மாறியது. இது நிச்சயம் அவனுக்கு அதிர்ச்சியாகத்தான் இருக்கும் என்று நினைத்தவளுக்கு, அதுவரை இருந்த உற்சாகம் வடிந்தது.

'இதை எப்படி அவனிடம் சொல்லப் போகிறேன்?' என்று யோசித்தபடி அமர்ந்தவள், அழைப்பு மணி ஒலித்ததும் எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

ஆதியின் வாடிய முகத்தைப் பார்த்த வந்தனாவுக்கு, அதுவரை இருந்த யோசனை எல்லாம் மறந்தது. ''என்ன ஆச்சு தயா? ஏன் இப்படி முகம் எல்லாம் வாடி இருக்கு?'' என்று கவலையுடன் கேட்டாள்.

உடனே வந்தால், முகத்தைப் பார்த்தே எதோ இருக்கிறது என்று கண்டு பிடித்து விடுவாள் என்று எண்ணி, தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்டு வந்தால், இப்போதும் கேட்கிறாளே?

'இவளிடம் இருந்து எதையும் மறைக்க முடியாதே' என்று எண்ணியவன், ''ஒண்ணுமில்லம்மா... வேலை அதிகமா இருந்தது... அதோட கொஞ்சம் தலைவலி வேற'' என்றான்.

''தலைவலியா? எப்போ இருந்து? ரொம்ப வலிக்குதா? என்று பதட்டப்பட்டவளை ஆச்சரியத்துடன் பார்த்தவன், ஒண்ணுமில்லை புஜ்ஜிம்மா... லேசாதான்... அதுவும் இப்போ இல்லை'' என்றான்.

''இப்போ உண்மையிலேயே வலி இல்லைதானே?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டளை, மென்மையாக

அணைத்துக் கொண்டவன், "எனக்கு ஒண்ணுமில்லை... உன் முகம்தான் ஏதோ சோர்வா இருக்கிற மாதிரி இருக்கு? ஆட்டோலதானே வரச் சொன்னேன்... நடந்தே வந்தியா என்ன?" என்று விசாரித்தான்.

இல்லத்தில் இருந்து வீட்டுக்கு நடந்து வந்தால் இருபது நிமிஷம்தான் ஆகும். இருவரும் கதை பேசிக் கொண்டு நடந்து வருவதுதான் வழக்கம்.

"இல்லை தயா... தனியா நடந்து வர போர் அடிச்சது... ஆட்டோலதான் வந்தேன்" என்றவள்,

"நீங்க வந்தவுடனே சூடா சமைக்கலாம்னு காத்திருந்தேன்... என்ன செய்யலாம் இன்னைக்கு?" என்றாள்.

"பார்த்தியா? நாம ரெண்டு பேரும் சேர்ந்து சமையல் செய்யணும்னுதானே வெயிட் பண்ணிட்டிருந்தே... என்னமோ பெரிசா தொல்லைன்னு அலுத்துப்பாயே?" என்று அவன் கிண்டல் செய்ய,

"சரி சாமி... நீங்க சொல்றது கரெக்டுதான்... இப்போ என்ன செய்யலாம்னு சொல்லுங்க" என்று போலியாக சலித்துக் கொண்டவளிடம்,

"இன்னைக்கு எதுவும் சமைக்க வேண்டாம்... உனக்குப் பிடிக்குமேன்னு ருமாலி ரொட்டியும், குருமாவும் வாங்கி வந்திருக்கேன்" என்றான்.

வந்தனா ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள். "என்னடா?" என்றவனிடம், "இல்லை தயா... எனக்குமே இன்னைக்கு இதைத்தான் சாப்பிடணும்னு ஆசையா இருந்தது!" என்றாள் அவள்.

"நானும் வர வர உன்னை மாதிரியே, மனசில இருக்கறதை எல்லாம் கண்டுபிடிக்க ஆரம்பிச்சிட்டேன்!" என்று அவன் காலரை உயர்த்திக் கொண்டு



சொன்னபோது, அவளுக்குதான் சொல்ல வேண்டிய விஷயம் நினைவுக்கு வந்தது.

இருவரின் மனதிலுமே ஒவ்வொரு விதமான யோசனை ஓடிக் கொண்டிருக்க, அமைதியாக சாப்பிட்டனர். பாதி சாப்பாட்டில் குமட்டிக் கொண்டு வர, வந்தனா அவசரமாக எழுந்து போய் வாஷ் பேசினில் வாந்தி எடுத்தாள்.

தள்ளாடி நின்றவளை, அருகில் வந்து பற்றிக் கொண்ட ஆதி, "என்னடா? எப்பவும் சாப்பிடுகிற இடத்தில்தானே வாங்கினேன்... என்னம்மா ஆச்சு?" என்று பரிவோடு கேட்க, அவனையே கண்கொட்டாமல் பார்த்தபடி நின்றாள் வந்தனா.

"என்னடா? அப்படிப் பார்க்கிறே? என்ன செய்யுது உடம்புக்கு? காலையில கூட எழுந்துக்க முடியாமல் லேட்டாதான் எழுந்தே... வா டாக்டர் கிட்ட போயிட்டு வந்திடலாம்" என்றவனிடம்,

"இல்லை வேண்டாம்... உடம்புக்கு ஒண்ணுமில்லை" என்றாள்.

"ப்ச்... எப்பவுமே நீ இப்படித்தான்... உடம்புக்கு ஏதாவதுன்னா டாக்டர் கிட்ட போக வேண்டாம்னு சொல்லுவ, நர்சிங் படிச்சதாலேயே பெரிய டாக்டர்னு நினைப்பு" என்று பொரிந்தவனிடம்,

"நான் பெரிய டாக்டரில்லைதான்... ஆனால்... இப்போ டாக்டர்கிட்ட போனால் என்ன சொல்லுவாங்கன்னு எனக்குத் தெரியும்!" என்றாள்.

"போச்சுடா... ஜோசியம் வேற பார்க்க ஆரம்பிச்சிட்டியா?" என்று கேலி செய்தவனிடம்,

"இல்லை தயா... உண்மையாத்தான் சொல்றேன்" என்றாள்.

''எங்கே சொல்லு பார்க்கலாம்?'' என்று அவன் கேலியாகக் கேட்க, எப்படி ஆரம்பிப்பது என்று யோசித்தபடி நின்றவளிடம்,

''என்ன ஆச்சு, ஜோசியம் வொர்க் ஆகலையா? சரி வா... நாம டாக்டர்கிட்டே கேட்டுட்டு வந்திடலாம்'' என்றான் ஆதி.

''ப்ளீஸ் தயா... சொன்னால் கேளுங்களேன், எனக்கு எதுவுமில்லை'' என்று அவளும், ''அதை டாக்டர் சொல்லட்டும்...'' என்று அவனும் வாதாடிக் கொண்டிருக்க, அழைப்பு மணி ஒலித்தது.

ராமநாதனும், சங்கரியும் வந்திருந்தனர். ஆதியும், வந்தனாவும் தற்காலிகமாக தங்கள் சண்டையை ஒதுக்கி விட்டு, அவர்களுடன் பேச ஆரம்பித்தார்கள்.

''இருபதாம் தேதி நம்ம ரம்யாவுக்கு, ஐந்தாவது பிறந்த நாள். சங்கரி ஏற்கனவே, வந்தனாகிட்ட சொல்லியாச்சு... உங்களுக்கும் சொல்லிடலாம்னு நான் வந்தேன்... நம்ம கோயில்ல சிறப்பு பூஜைக்கு ஏற்பாடு பண்ணி இருக்கோம்... நீங்க ரெண்டு பேரும் கண்டிப்பா வரணும்'' என்ற ராமநாதன்,

''அன்னைக்கு நைட்டு பக்கத்தில் இருக்கிற ஹோட்டலில் பார்ட்டியும் ஏற்பாடு பண்ணி இருக்கோம்... நீங்க ரெண்டு பேரும் அவசியம் வரணும்... நான் மூணு நாளைக்கு வேலை விஷயமா ஊருக்குப் போறேன்... பிறந்த நாள் அன்னைக்குத்தான் வரேன்... அதான் இப்பவே சொல்லிடலாம்னு வந்தேன்'' என்று அழைப்பு விடுத்தார்.

''ரம்யாவோட பிறந்த நாளுக்கு, நீங்க அழைப்பு கொடுக்கணுமா என்ன?'' என்று இருவரும் ஒரே குரலில்



சொல்ல, கொஞ்ச நேரம் பேசி விட்டு அவர்கள் எழுந்து சென்றார்கள்.

போகும்போது, சங்கரி வந்தனாவின் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்ல, வந்தனாவின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

மனைவியின் சிவந்த முகத்தைப் பார்த்த ஆதிக்கு, ராமநாதனும் சங்கரியும் வருவதற்கு முன், தங்களுக்குள் நடந்த வாக்குவாதம் மறந்துவிட, வந்தனாவின் அருகில் வந்து, ''சங்கரி அக்கா என்ன சொன்னாங்க வது?'' என்று ஆர்வத்துடன் கேட்டான்.

ஆர்வத்துடன் கேட்டவனுக்கு பதில் சொல்லாமல் முடியாமல், ''அது... நாங்க பெண்கள் என்னவோ பேசிட்டுப் போறோம்... எல்லாத்தையும் சொல்லிடணுமா?'' என்று போலியாகச் சலித்துக் கொண்டு, ''வாங்க தயா... பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்தாச்சு... எனக்கும் பசிக்குது... சாப்பிடலாம்'' என்றாள்.

அவளுக்குப் பசி என்று தெரிந்ததும், கேள்வியை நிறுத்தி விட்டு, ''இந்த புட் உனக்கு ஒத்துக்கலை போல இருக்கேடா... வீட்டில மாவு இருக்கா? தோசை ஊத்தித் தரேன்'' என்றவனின் அக்கறை மனதை நெகிழ்த்த,

''இல்லை தயா... இதையே சாப்பிடலாம்... எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்று சொல்ல, அவனும் சாப்பிட அமர்ந்தான்.

இரண்டு வாய் சாப்பிட்டதும், முன் போலவே குமட்டிக் கொண்டு வர, ஆதி சாப்பிட்டு முடிக்கும் வரை பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொண்ட வந்தனா, அவன் சாப்பிட்டு முடித்ததும் திரும்பவும் போய் வாந்தி எடுத்தாள்.

''ப்ச்... அப்பவே சொன்னேன் இல்லை... டாக்டர் கிட்ட போலாம்னு... இப்போ எதுவும் சொல்லாமல், கிளம்புவது'' என்று கண்டிப்புடன் ஆதி சொல்ல,

அவனை தீர்க்கமாகப் பார்த்து, ''எனக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லை'' என்றவள், அவன் மறுப்பாக எதோ சொல்லத் தொடங்கு முன், அவன் கையை எடுத்துத் தன் வயிற்றின் மேல் வைத்து, ''இங்கே உங்க குழந்தை உட்கார்ந்துகிட்டு என்னைச் சாப்பிட முடியாம படுத்தது! அதுதான் விஷயம்!'' என்றாள்.

''வது????!!!'' அந்த ஒற்றை வார்த்தையிலேயே, அவனது மொத்த அதிர்ச்சியையும் வெளியிட்ட ஆதி, அதிர்ந்து போய் நின்றான். அதிர்ச்சியையும் மீறி, உடலில் ஒருவித சிலிர்ப்பு ஓடியதை அவனால் உணர முடிந்தது.

'என்னுடைய உயிர், நான் உயிராய் நினைக்கும் என் மனைவியின் வயிற்றில்... இந்த எண்ணம் எவ்வளவு சந்தோஷத்தைத் தர வேண்டும்? ஆனால்... அந்த சந்தோஷத்தை அனுபவிக்கும் கொடுப்பினையைக் கடவுள் கொடுக்கவில்லையே...' என்று நினைத்தவனின் வேதனையை அவன் முகம் காட்டியது.

அவனது அதிர்ச்சி எதிர்பார்த்ததுதான் என்றாலும், அவன் அதிர்ந்து நின்ற நிலையும், முகத்தில் இருந்த வேதனையும், தாங்க முடியாமல் போய்விட, ஆதித்யனின் கையைப் பற்றிய வந்தனா, மென்மையாக, ''தயா'' என்று அழைத்தாள்.

அவளது தொடுகையை உணர்ந்து, தன் அதிர்ச்சியில் இருந்து கொஞ்சம் வெளியே வந்து, ''வது! இது... நம்ம குழந்தை... நீ... உன்னோட உடல் நிலை'' என்று



தொடர்பில்லாமல் வார்த்தைகளை உதிர்த்தவன், தலையைக் குலுக்கிக் கொண்டு, ''நீ உண்மையாதான் சொல்றியா வது?'' என்று விசாரித்தான்.

அவள், 'ஆமாம்' என்று தலை அசைக்க, ஆதி குரலில் வேதனையுடன், ''இந்த குழந்தை வேண்டாம் வது!'' என்றான். இப்போது அதிர்ந்து போய் நிற்பது அவள் முறையாயிற்று.

அவளது அதிர்ந்த தோற்றம் மனதை வருத்த, அவளை அழைத்துப் போய் சோபாவில் அமர்த்தி, தானும் அருகில் அமர்ந்தான்.

''உன்னோட உடல்நிலை பற்றிப் பேசவே கூடாதுன்னு நீ சொல்லி இருந்தாய்... ஆனால் இப்போ பேசாமல் இருக்க முடியாது'' என்றவன், கொஞ்சம் தயங்கி,

''குழந்தையைத் தாங்குகிற அளவுக்கு உனக்கு சக்தி இருக்குமா? அதுவுமில்லாமல், பத்து மாசம்...'' என்றவன், 'அதுவரை நீ உயிரோடு இருப்பாயா?' என்று கேட்க முடியாமல் கலங்கி நிற்க,

அவன் கையைப் பற்றிய வந்தனா, ''இந்த குழந்தை பிறக்கிற வரை எனக்கு எதுவும் ஆகாதுன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு தயா!'' என்றாள்.

அவள் ஆர்வத்தைப் பார்த்தவனுக்கு, மேலே பேசத் தோன்றவில்லை. ஆனால் பேசித்தானே ஆக வேண்டும் என்று நினைத்தவன், ''சரிம்மா... உனக்கு இருக்கும் உடல் பாதிப்பால, குழந்தைக்கும் ஏதாவது...'' பேச வேண்டிய விஷயமே என்றாலும், அவனுக்குக் குரல் தடுமாறியது.

''என்ன தயா இது... உயிர்க்கொல்லி நோய் இருக்கிறவங்களோட குழந்தைக்கே பாதிப்பு வராமல் தவிர்க்க எத்

தனையோ வழிமுறை இருக்கும்போது...'' 'இது முடியாதா?' என்பது போல அவள் நிறுத்த,

அவனுக்கு அவளிடம் சொல்ல முடியாத விஷயங்கள் இன்னும் இருப்பதால், மேற்கொண்டு எப்படிப் பேசுவது என்று தெரியாமல் சிறிது நேரம் அமைதியாக இருந்தான்.

கொஞ்ச நேரம் கழித்து மனதைத் திடப்படுத்திக் கொண்டு, ''குழந்தை பிறந்ததுக்கு அப்புறம்? அந்தக் குழந்தை தாயில்லாமல் வளரணுமா?'' என்றான்.

''அம்மா இல்லன்னா என்ன? நீங்க அப்பா இருக்கீங்களே... அம்மா மாதிரி பார்த்துக்க மாட்டீங்களா?'' என்ற அவள் கேள்வியில் அவன் முகம் கசங்கியது.

''ப்ளீஸ் வது... சொன்னால் கேளேன்... இது வேண்டாமே'' என்றான்.

''எனக்குக் காரணம் சொல்லுங்க'' என்று அவள் சொன்னவுடன், எழுந்து போய் ஜன்னல் அருகே நின்று, வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து, வந்தனா, ''தயா?'' என்று அழைக்கவும், ''என்னதான் மற்ற உறவுகள் இருந்தாலும், தாய் இல்லாமல் ஒரு குழந்தை வளருவது பாவம் வது... எத்தனை குழந்தைகளை நாம இல்லத்திலேயே பார்க்கிறோம்... தெரிஞ்சே அந்தத் தப்பை பண்ணணுமா?'' என்ற ஆதியை இடைமறித்த வந்தனா,

நீங்க தாய்க்குத் தாயா இருப்பீங்களே தயா... என்ன ஆனாலும் சரி... இந்தக் குழந்தை கண்டிப்பா எனக்கு வேண்டும்!'' என்று அவள் பிடிவாதம் பிடிக்க,

அவனும் பிடிவாதமாக, ''இல்லை... வேண்டாம்!'' என்றான்.



''காரணம் சொல்லுங்க... ஒத்துக்கற மாதிரி இருந்தால், நானும் உங்க பேச்சைக் கேட்கிறேன்!'' என்று அவளும், பிடிவாதத்தை விட்டுக் கொடுக்காமல் பேச,

''காரணத்தைச் சொன்னால், உன்னால் தாங்க முடியாது!'' என்று அவன் எச்சரித்தான்.

''நீங்க இப்படி எதுவும் சொல்லாமல், என்னைத் தவிக்க விடறதுதான் எனக்குத் தாங்க முடியலை!'' என்று அவள் முறையிட,

''ப்ளீஸ் வது... சொன்னால் கேளேன்'' இப்போது அவன் குரல் கெஞ்சியது.

''நீங்க இன்னும் சொல்லவே இல்லையே தயா... திரும்பத் திரும்ப அம்மா இருக்காதுன்னு அதையே சொல்லிட்டு இருக்கீங்களே... குழந்தைக்கு தாத்தா, பாட்டி இருப்பாங்க... நீங்க இருப்பீங்க...'' என்று அவள் சொல்லும்போதே, வேகமாக அவள் பக்கம் திரும்பியவன்,

''நானும் இருக்க மாட்டேண்டி! எனக்கும் நாளை குறிச்சிட்டார் அந்தக் கடவுள்... நீ இருக்கிற வரை நானும் இருக்கணுமேன்னுதான் நான் தவிச்சிட்டு இருக்கேன்... ஒருவேளை எனக்கு இருக்கிற அந்த நோயால், அந்த சின்னச் சிசுவுக்கும் ஏதாவது பாதிப்பு வந்திடுமோன்னு தான் வேண்டாம்னு சொல்றேன்... சொல்ல வேண்டாம்னு நினைச்சால் சொல்ல வைக்கிறாயே?'' என்றான்.

அந்தக் குரலில் இருந்த வேதனையும், ஆதங்கமும் மனதைக் கசக்கிப் பிழிய, வந்தனா செய்வது அறியாமல் திகைத்து நின்றாள்.

''தயா!!!''

''நம்ப முடியலையா? நல்லா கேட்டுக்கோ... உனக்கு சிகிச்சையே கிடையாது... எனக்கு சிகிச்சை இருக்கு...

ஆனால் பலனில்லாத சிகிச்சை... வெறும் வலியும் வேதனையும் தர சிகிச்சை... அதெல்லாம் வேண்டாம்னு தான் இங்கே ஓடி வந்திட்டேன்!'' என்று சொல்லி விட்டு அவன் முகத்தை மூடிக் கொண்டான்.

குளமாகி நின்ற தன் கண்களைத் துடைத்துக் கொண்டு, மெல்ல அவன் முகத்தில் இருந்து கைகளை விலக்கி விட்டவள், ''எல்லாத்தையும் சொல்லிடுங்க... இத்தனை நாளாய் தனியா மனசுக்குள்ளே வச்சு புழுங்கிகிட்டு இருந்ததை எல்லாம் வெளியே சொல்லிடுங்க... ப்ளீஸ் தயா, என்கிட்டே எல்லாத்தையும் ஷேர் பண்ணிக் கோங்க'' என்று குரல் நடுங்க கேட்டவளை அணைத்துக் கொண்டு ''சாரி வது... என்னை மன்னிச்சிடு'' என்று சொன்னவன், தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் சொல்ல ஆரம்பித்தான்.

## 12

ஆதித்யன், விஸ்வநாதன் - மீனாட்சி தம்பதியரின் ஒரே மகன். விஸ்வநாதன் சென்னையில் புகழ் பெற்ற ஆதி கெமிக்கல்சின் சேர்மன். எவ்வளவு பணம் இருந் தாலும், இன்னும் இன்னும் என்று பணத்தை விரட்டி விரட்டி சம்பாதிப்பவர். அது பணத்தின் மேல் உள்ள ஆசை யால் அல்ல! பணம் இருந்தால் மட்டுமே சமூகத்தில் மதிப்பு கிடைக்கும் என்ற அவருடைய உறுதியான நம் பிக்கையால்! என்ன பிரச்சனை வந்தாலும், பணத்தால் சரி செய்து விட முடியும் என்பது அவரது அசைக்க முடி யாத நம்பிக்கை!



மீனாட்சி, அவருடைய தர்மபத்தினி. அன்பே உரு வானவர். கோபம் என்றால் என்னவென்றே தெரியாதோ என்று நினைக்கும் அளவுக்கு, எந்த விஷயத்துக்கும் கோபப்படாத ஒரு புண்ணிய ஆத்மா. தந்தைக்கும் மகனுக்கும், கருத்து வேறுபாடு வரும்போது, இருவருக்கு மிடையில் மாட்டிக் கொண்டு விழிப்பது மீனாட்சிதான்.

திருமணம் ஆகி மூன்று வருடங்கள் கழித்து பிறந்த ஆதிக்கு பிறகு, மீனாட்சிக்கு இன்னொரு குழந்தை பிறக்கும் வாய்ப்பு இல்லை என்று மருத்துவர்கள் சொல்லி விட, ஆதியின் மேல் விஸ்வநாதனுக்கும் மீனாட்சிக்கும் அளவு கடந்த அன்பு இருந்ததில் ஆச்சரியமில்லை. விஸ்வநாதன், ஆதிக்கு எந்த விஷயத்திலும் சிறப்பான தையே தேர்ந்தெடுத்தார்.

படிக்கும் பள்ளியில் இருந்து எல்லாமே அவருடைய அந்தஸ்துக்கேற்ற வகையில் இருந்ததால், அவனுடைய நண்பர்கள் பற்றி அவர் அதிகம் கவலைப்பட்டதில்லை. ஒரு நாள், அம்மா அப்பா இல்லாத ஏழையான ரகுவை தன் நண்பன் என்று ஆதி, வீட்டுக்குக் கூட்டி வந்தபோது, விஸ்வநாதன் மகனைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

தன் மகன் படிக்கும் பள்ளியில், இப்படிப்பட்ட பையன் இருக்க வாய்ப்பில்லையே என்று விசாரித்தபோதுதான், பக்கத்தில் ஒரு யோகா குரு இலவசமாகச் சொல்லிக் கொடுக்கும் வகுப்பில், அவர்கள் நண்பர்கள் ஆனதை ஆதி சொன்னான்.

விஸ்வநாதனுக்கு சரியான கோபம். பணத்துக்காக இந்தப் பையன் உன்னிடம், நட்பாக இருக்கிறான் என்று சொல்லி, அன்றில் இருந்து பாக்கெட் மணி தருவதைக் கூட நிறுத்தி விட்டார்.

இரண்டு நாள் போனால், தானாக வருவான் என்று அவர் எண்ணி இருக்க, ஒரு மாதம் ஆன பின்னும், ஆதி பணத்துக்காகத் தன்னிடம் வரவில்லை என்றதும், மீனாட்சியிடம், அவர் ஏதாவது பணம் ஆதிக்குக் கொடுக்கிறாரா என்று விசாரித்தார். அவரும் இல்லை என்று விடவே, ஆதியைக் கூப்பிட்டு விசாரித்தார்.

''என்ன ஆதித்யா... பாக்கெட் மணி தருவதை நிறுத்திய உடனே, உன்னோட பிரண்ட் உன்னை விட்டுப் போய் இருப்பானே?'' அவர் ரகுவை மனதில் வைத்துக் கொண்டு கேட்க,

''ஒருத்தன் மட்டும் இல்லைப்பா... நிறைய பேர் போய்ட்டாங்க... ஆனால், நீங்க யாரை மனசில வச்சிட்டுக் கேட்டீங்களோ, அவன் மட்டும் இன்னமும் நண்பனா இருக்கான்... எப்பவும் இருப்பான்!'' என்று சொன்ன ஆதியை ஆச்சரியமாகப் பார்த்தவர்,

''இந்த மாதிரி நட்பெல்லாம், நம் அந்தஸ்துக்கு ஒத்து வராது'' என்று சொன்னபோது, ''நட்பு அந்தஸ்தைப் பார்த்து வரக்கூடாதுப்பா!'' என்று சொன்ன ஆதிக்கு இன்று வரை உயிர் நண்பன் என்றால் அது ரகுதான்.

ரகு விஷயத்தில் எப்போதுமே அப்பாவுக்கும் பிள்ளைக்கும் பனிப்போர்தான். ஆனால், வளர்ந்த பிள்ளையை ஓரளவுக்கு மேல் கண்டிக்க முடியாமல், அவன் அந்த வீட்டுப் பக்கம் வரக்கூடாது என்பதோடு விஸ்வநாதன் அந்த விஷயத்தை முடித்து விட்டார்.

அடுத்த பிரச்சனை, பிளஸ் டூ முடித்ததும், ஆதி விஷுவல் கம்யூனிகேஷன் மற்றும் அனிமேஷன் பற்றிய படிப்பு படிக்கப் போகிறேன் என்றபோது ஆரம்பம் ஆனது.



தான் கஷ்டப்பட்டு வளர்த்த கெமிக்கல்ஸ் கம்பெனியை தனக்குப் பிறகு பார்த்துக் கொள்ளப் போகும் மகன், அது சம்பந்தமாக படிக்காமல், வேறு ஒரு துறையை தேர்ந்தெடுக்கிறான் என்றபோது, அவருக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லை.

அவர் அவனது விருப்பத்துக்கு, கடுமையாக மறுப்பு தெரிவித்தபோது, ஆதியும் பிடிவாதமாக இருந்தான்.

''என்னடா உன் பிரச்சனை? எனக்குப் பிறகு நம்ம கம்பெனியைப் பார்த்துக்கப் போறவன் நீ... அதுக்கேற்ற மாதிரி படிக்காமல், இதென்ன பிடிவாதம் ஆதித்யா?''

''அப்பா ப்ளீஸ்... சின்ன வயசில இருந்தே எனக்கு க்ரியடிவா எதையாவது செய்யணும்னு ஆசை... விஷுவல் கம்யூனிகேஷன் படிச்சிட்டு விளம்பர கம்பெனி ஆரம்பிக்கணும் என்பதுதான் என்னோட கனவு... எல்லாத்திலும் உன் விருப்பம்தான் என்று சொல்லிட்டு, இப்போ முக்கியமான விஷயத்தில எனக்குத் தடை போடறீங்களே?''

''படிக்கறது எதுக்கு ஆதித்யா? நல்லா சம்பாதிக்கத்தானே? ஏற்கனவே நல்லா வருமானம் வர நம்ம கம்பெனிக்கு ஏற்ற படிப்பு படிக்காமல், வேற படிக்கப் போறேன்னு சொன்னால் எனக்குக் கோபம் வருமா? வராதா?'' என்று விஸ்வநாதன் கேட்டபோது,

படிப்பதே சம்பாதிக்கத்தான் என்று நினைப்பவரிடம், தன்னுடைய ஆசையைச் சொல்லிப் புரிய வைக்க முடியாது என்று எண்ணி, அவரைப் போலவே அவனும் அவனுடைய முடிவில் உறுதியாக இருந்தான்.

எப்போதும் போல, இருவருக்குமிடையில் மாட்டிக் கொண்டது, மீனாட்சிதான். ''உன் பிள்ளைக்குக்

கொஞ்சம் புரிய வை!'' என்று விஸ்வநாதன் சொல்லி விட, மீனாட்சி தன் மகனிடம் வந்தார்.

''கண்ணா!'' என்று அவர் ஆரம்பிக்கும்போதே, ''அம்மா ப்ளீஸ்! நீங்களும் அப்பா சொன்னதையே சொல்லாதீங்க! இவ்வளவு பணம் இருந்தும், எனக்கு விருப்பமான படிப்பைப் படிக்க முடியலன்னா, இந்தப் பணத்தால எனக்கு என்னம்மா சந்தோசம் இருக்கும்?'' என்று மகன் கேள்வி கேட்டபோது, மீனாட்சிக்கு அவனுடைய ஆதங்கம் புரிந்தது.

''பணம் வாழ்க்கைக்கு அவசியம்தான்... ஆனால் பணம் மட்டுமே வாழ்க்கை ஆயிடாதில்லையா? இவ்வளவு பணம் இருந்தும், ஏன்மா அப்பாவுக்கு இன்னமுமே பணம் சம்பாதிக்கிற வெறி... எப்பவுமே இப்படித்தானா அம்மா?'' என்று மகன் தன் நீண்ட நாள் சந்தேகத்தைக் கேட்டபோது, மீனாட்சிக்கு தன் மகன், தந்தையைப் பற்றி வைத்திருக்கும் அபிப்ராயம் வருத்தத்தைத் தந்தது.

''முன்னாடி எல்லாம் இப்படி இல்லை கண்ணா... வாழ்க்கையில அவருக்கு ஏற்பட்ட சில கசப்பான சம்பவங்கள் அவர் மனசில, பணம்தான் வாழ்வின் ஆதாரம்னு நினைக்க வச்சிடுச்சு'' என்ற மீனாட்சி, அந்த சம்பவங்களைப் பற்றி சொன்னார்.

விஸ்வநாதன், ஆதியைப் போலவே அவர் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவர்கள் வம்சத்தில், அதற்கு முன்னரும், எல்லாருக்கும் ஒரே பிள்ளைதான். ஆதி நாராயணன், விஸ்வநாதனின் அப்பா, பரம்பரை பணக்காரர். புதிதாக தொழில் தொடங்க எண்ணி ஆதி நாராயணன், தங்கள் ஊரான திருச்சியில் இருந்து சென்னைக்கு வந்து வியாபாரம் செய்தார்.



தரமான ரசாயனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்த அவரின் வியாபாரம், விரைவிலேயே சூடு பிடிக்க, தங்கள் கிராமத்தில் இருந்த விவசாய நிலங்களை, குத்தகைக்கு விட்டுவிட்டு, சென்னைக்குக் குடும்பத்தோடு இடம் பெயர்ந்தார்.

விஸ்வநாதனுக்கும், தங்கள் கிராமத்தைவிட, சென்னையில் இருந்த பொழுதுபோக்கு அம்சங்கள் கவர்ந்து விட்டது. பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் செலவழித்த அவருக்கு, நண்பர்கள் கூட்டமும் சேர்ந்துவிட, தான் ஒரு ஹீரோவாகி விட்டதைப் போன்ற உணர்வில், அவர் சந்தோஷமாக இருந்தார்.

மகன், நிறைய நேரம் நண்பர்களோடு கழித்ததைப் பார்த்த, அப்பா, எங்கே பையன் வழி தவறிப் போய்விடப் போகிறானோ என்று, விஸ்வநாதன் படிப்பை முடித்த உடனேயே, தன் தங்கையின் பெண்ணான மீனாட்சியுடன் திருமண நிச்சயம் செய்து வைத்தார்.

நண்பர்களோடு சுற்றினாலுமே, விஸ்வநாதன் எந்த விஷயத்திலும் எல்லை மீறி நடந்ததில்லை. அதனால், சின்ன வயதில் இருந்து பார்த்து வளர்ந்த மீனாட்சியைத் திருமணம் செய்யப் போவது அவருக்கு சந்தோஷத்தைத் தான் அளித்தது.

மீனாட்சிக்கு பதினெட்டு வயது ஆக ஒரு வருடம் இருந்ததால், ஒரு வருடம் கழித்துத் திருமணம் என்று நிச்சயமாயிற்று.

திருமணத்துக்குப் பிறகு நண்பர்களுடன், ஊர் சுற்ற முடியாது என்று விஸ்வநாதன் தந்தையின் தொழிலைக் கற்றுக் கொள்ளாமல், இருந்த நேரம் அது. பிள்ளை,

தவறான எந்த வழியிலும் போகவில்லை என்றதும், ஆதி நாராயணனுமே ஒன்றும் சொல்லாமல் இருந்தார்.

எப்படியும் திருமணத்துக்குப் பிறகு, பொறுப்பாகத் தொழிலைப் பார்க்க வருவான் என்பது அவரது நம்பிக்கை. தந்தையின் நம்பிக்கை சரியே என்பது போல, விஸ்வநாதனும் அதே எண்ணத்தில்தான் இருந்தார்.

திடீரென்று ஒரு நாள், ஆதி நாராயணனுக்குக் கடுமையான மாரடைப்பு வந்துவிட, இனி எந்த வேலையும் செய்யக் கூடாது என்று மருத்துவர் சொல்லி விட்டார். பயந்து போன, விஸ்வநாதனும், தன் விளையாட்டுத் தனத்தை எல்லாம் விட்டு விட்டுத் தொழிலைப் பார்க்கப் போக, அவருக்கு அங்கே ஒன்றுமே புரியவில்லை.

தந்தையின் நண்பரும், பொது மேலாளருமான சுந்தரத்தின் மேல் இருந்த நம்பிக்கையில், அவர் காட்டிய இடத்தில் எல்லாம், விஸ்வநாதன் கையெழுத்துப் போட, அதன் விளைவு என்னவென்று அடுத்த இரு மாதங்களில் தெரிந்தது.

ஆதி கெமிக்கல்சுக்கென்று ஒரு மரியாதை இருந்தது. அங்கே வாங்கும் பொருள் தரமானதாக இருக்கும் என்ற நம்பிக்கை வாடிக்கையாளர்களிடம் இருந்தது. தரம் குறைந்த பொருளை, குறைந்த விலைக்கு புதுப் புது வாடிக்கையாளர்களுக்கு விற்று லாபம் பார்த்த சுந்தரம், பேராசையில், பழைய வாடிக்கையாளர்களுக்கும் அதே பொருளை விற்றபோது, உண்மை வெளிவந்தது.

எல்லா வாடிக்கையாளர்களும், பொருளைத் திருப்பி அனுப்பிவிட்டுப் பணத்தைக் கேட்க, ஏற்கனவே இதய நோயாளியாக இருந்த ஆதி நாராயணனின் உயிர், தான்



நண்பன் என்று எண்ணி இருந்தவரின் துரோகத்தைத் தாங்க மாட்டாமல் பிரிந்தது. பின்னர்தான், பண விஷயத்திலும் சுந்தரம் விளையாடி இருப்பது தெரிந்தது. அவரை சட்டப் பூர்வமாக, தண்டிக்க முடியாமல், எல்லா விஷயத்திலும், விஸ்வநாதனின் கையெழுத்து இருந்தது.

படித்தும் முட்டாளாயிருந்த தன் நிலைமையை எண்ணி வெட்கப்பட்டார் விஸ்வநாதன். பணம் உடனே வேண்டும் என்று சொன்ன வாடிக்கையாளர்களுக்கு, எப்படி பணத்தைக் கொடுப்பது என்று திகைத்துப் போய் நின்றார்.

வாடிக்கையாளர்களிடம் இருந்து வந்த பொருளை குப்பையில்தான் போட வேண்டும். ஆனால், அதற்கான பணத்தையும் அவர்களுக்குச் செலுத்த வேண்டும். அவசரத்துக்கு, ஊரில் இருந்த நிலங்களையும் விற்க முடியவில்லை. நிலைமையைச் சமாளிக்க முடியாமல், பரம்பரை நகைகளை விற்றுக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்தார் விஸ்வநாதன். அந்த நகைகளில், அவர்களிடம் பரம்பரையாய் இருந்த வைர ஒட்டியாணமும் ஒன்று.

விஸ்வநாதனின் மாமாவான, மீனாட்சியின் தந்தைக்கு அந்த வைர ஒட்டியாணத்தின் மேல் எப்பவுமே ஒரு ஆசை. அவர்கள் ஊரில், வைர ஒட்டியாணக்காரங்க வீடு என்றே ஆதி நாராயணனின் தந்தை வீட்டுக்குப் பெயர்.

அந்த வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்தால், அந்தப் பெயர் தன் வீட்டுக்கு வந்து விடும் என்று, என்ன என்னவோ செய்து, ஆதி நாராயணனின் தங்கையைத் திருமணம் முடிக்க, அவர் மனைவியோடு அந்த வைர ஒட்டியாணம் வரவில்லை. என்னவென்று விசாரித்தபோது

தான், அது வீட்டுக்கு வந்த மருமகளுக்குத்தான் என்று சொன்னார்கள். அவருக்கு மனமே ஆறவில்லை.

அவர் மனக்குமுறலை, அவரது மனைவி பிறந்த வீட்டில் சொல்ல, புதிதாக ஒன்று செய்து போட்டார்களே தவிர, பரம்பரையாய் வந்ததைத் தரவில்லை. அதில் எப்போதுமே அவருக்கு வருத்தம்.

தன் மகளுக்கும், விஸ்வநாதனுக்கும் திருமணம் நிச்சயித்தபோது, தன் வீட்டுக்கு வராத அந்த ஒட்டியாணம், தன் மகளுக்காவது கிடைக்கப் போகிறதே என்ற சந்தோஷத்தில் இருந்தார் அவர்.

இப்போது பரம்பரை நகைகளை விற்றபோது, அதையும் விற்று விற்றார்கள் என்று கேள்விப்பட்டவர், சென்னை வந்து தன் வருங்கால மாப்பிள்ளையிடம் சண்டை போட்டார்.

அப்போதுதான், தொழிலும் இல்லை, நகைகளையும் விற்றாகி விட்டது, மிஞ்சி இருப்பது ஊரில் இருந்த நிலங்கள்தான் என்பதை அறிந்தவர், அவர்களை விடவும் தன்னிடம் இப்போது பணம் அதிகம் இருப்பதாகச் சொல்லிவிட்டு, திருமணம் நிச்சயம் முறித்து விட்டது என்பதையும் சொல்லிவிட்டுப் போனார்.

திருமணம் நிச்சயமாகி இருந்த அந்த ஒரு வருடத்தில், அடிக்கடி பார்த்துப் பேசவில்லை என்றாலும், கோயில் திருவிழா, உறவினர் திருமணம் என்று பார்த்தபோது, விஸ்வநாதனுக்கும், மீனாட்சிக்கும் ஒரு வித அன்பு மலர்ந்து இருந்தது. ஏற்கனவே நொந்து போய் இருந்த விஸ்வநாதனுக்கு, தன் மாமா திருமண நிச்சயத்தை முறித்துவிட்டு போனது மிகுந்த வேதனையைத் தந்தது.



வேதனைக்கு ஆறுதலாக நண்பர்கள் இருப்பார்கள் என்று போனால், பணம் இல்லை என்றவுடன், அவருடைய நண்பர்களும் காணாமல் போய் இருந்தார்கள். அப்போதுதான் விஸ்வநாதனுக்கு எப்போதையும் விட பணத்தின் அருமை புரிந்தது. அள்ள அள்ளக் குறையாதபடி பணத்தைச் சேர்க்க வேண்டும் என்ற வெறி பிறந்தது.

ஊருக்குச் சென்று நிலங்களை விற்றவர், புது உத்வேகத்தோடு தொழிலைத் தொடங்கினார். பழைய வாடிக்கையாளர்களிடம், நடந்ததைக் கூறி, உதவி கேட்டார். ஆதிநாராயணனின் பேரில் இருந்த மரியாதையில், அவர்கள் சில நிபந்தனைகளோடு ஆர்டரைத் தர, இரவு பகல் பாராமல் உழைக்க ஆரம்பித்தார்.

அவ்வப்போது, மீனாட்சியைப் பற்றி நினைத்தாலும், தன்னை அவமதித்துச் சென்றவரின் பெண் வேண்டாமென, உறுதியாக இருந்தார். மூன்று வருடத்தில், அவரது தந்தை வளர்த்த தொழிலை, பழையபடி உயர்த்திய பின்னும், விஸ்வநாதனின் வெறி அடங்கவில்லை.

'பணம் ஒன்றே முக்கியம். நண்பன் என்று யாரையும் நம்பக் கூடாது' இதுதான் அவரது தாரக மந்திரமாயிற்று.

அன்னையின், வேண்டுகோள் படி தங்கள் ஊர் கோயில் திருவிழாவுக்குப் போய் இருந்தபோது, மீனாட்சிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்ற தகவல் அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

தந்தை என்ன சொன்னாலும், மீனாட்சி விஸ்வநாதனுக்காகவே காத்திருக்கிறாள் என்று அத்தை சொன்னபோது அலட்சியப்படுத்தியவருக்கு, கோயில் திருவிழாவில்,

ஏக்கத்தோடு தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சியைப் பார்த்ததும் மனம் தாங்கவில்லை.

ஆதி நாராயணனுக்குத் தெரிந்தவரிடம் விற்று இருந்த அதே வைர ஒட்டியாணத்தை, அதிக விலை கொடுத்து வாங்கி அத்தையின் வீட்டுக்குச் சென்று, மாமாவின் முகத்தில் அடிக்காத குறையாக அதை தந்தவர், மீனாட்சியை மணம் முடித்து சென்னைக்கு அழைத்து வந்தார்.

அம்மா, தன்னுடைய தந்தையைப் பற்றி சொல்லி முடித்ததும், ஆதிக்கு இத்தனை நாளாக அப்பாவின் மேல் இருந்த அபிப்ராயம் மாறியது. அவருடைய பணம் பற்றிய நம்பிக்கையை, இப்போதும் அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றாலும், முன்போல அதைப் புறக்கணிக்கவும் முடியவில்லை.

தன்னுடைய முகத்தையே ஆவலாகப் பார்த்துக் கொண் டிருந்த மீனாட்சியைப் பார்த்ததும், ஆதிக்கு அவரைக் கேலி செய்யத் தோன்றியது.

''நீங்க பெரிய ஆள்தாம்மா... எங்கப்பா மாதிரி ஒரு கறார் பேர்வழியையே, மனம் இளக வச்சிட்டீங்களே'' என்று கேலி செய்ய, மீனாட்சிக்கு வெட்கமாக இருந்தது...'' போடா கண்ணா... நாம பேசிட்டு இருக்கிற விஷயத்தை விட்டுட்டு கேலி பண்றீயே'' என்று ஆசையுடன் சலித்துக் கொண்டவர்,

''இதெல்லாம் சொன்னது, நீ உன் முடிவை மாற்றிக் கோன்னு சொல்றதுக்கு இல்லை... உங்கப்பாவைப் பற்றி நீ தெரிஞ்சிக்கணும் என்றுதான் சொன்னேன்... உன் ஆசை எனக்குப் புரியுது கண்ணா... ஆனால் உங்கப்பா வோட நிலையிலே இருந்து யோசிச்சா, அதுவும்



சரிதான்னு தோணுது... நான் என்ன செய்ய?'' என்று வருத்தத்துடன் சொன்ன அம்மாவின் கைகளைப் பற்றிக் கொண்ட ஆதி, ''உங்க மனசு அப்படிம்மா... உங்களுக்கு யார் மனசுமே நோகக்கூடாது... ஆனால் சில விஷயங் கள்ல அப்படி இருக்க முடியாதே'' என்றவன், ''நான் கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வரேன்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினான்.

அம்மாவின் வாய் மொழியாக அப்பா தொழில் வளர்த்த விதம் பற்றி அறிந்த ஆதிக்குக் குழப்பமாக இருந்தது. அவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்தத் தொழிலை பார்த்துக் கொள்ளப் போகும் மகன், அது சார்ந்த படிப்பை எடுக்க வேண்டும் என்ற அவரது விருப்பம், நியாயமானதாகவே தோன்றியது.

ஆனால்... சின்ன வயதில் இருந்தே தன் மனதில் இருந்த ஆர்வத்தையும், கனவையும் விட முடியாமல், அவன் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. ரகுவைப் பார்த்துப் பேசினால், மனம் தெளிவடையும் என்று எண்ணி ரகுவைப் பார்க்கப் போனான்.

ஆதியின் முகத்தைப் பார்த்த உடனேயே, ''என்ன விஷயம் ஆதி... ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்று ரகு கேட்டதும், எப்போதும் போல, தன் நண்பனை நினைத்து ஆதிக்குப் பெருமையாய் இருந்தது.

வீட்டில் விஷயத்தை தன் நண்பனிடம் பகிர்ந்து கொண்டவனிடம், ''அப்பா நினைக்கிறதிலே தப்பு இல்லையே ஆதி...'' என்று ரகு தொடங்கவும்,

''நீயும் இதையே சொல்றீயா... நானும் அவரை தப்பு சொல்லலையே ரகு... அந்தக் கம்பெனியைப் பார்த்துக் கொள்ளப் போகும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும்

இல்லை... அவரது ஓய்வு காலத்தின் போது பார்த்துக் கொள்ளத்தான் போறேன்... நடுவிலே அவருக்கு உதவி தேவைப்பட்டால் செய்யத்தான் போறேன்... ஆனால் எனக்குன்னும் சில ஆசைகள் இருக்கு இல்லையா?'' என்று படபடவென பொரிந்த ஆதியை புன்னகையுடன் பார்த்த ரகு,

''நான் சொல்ல ஆரம்பிக்கறதுக்குள்ளே என்னடா அவசரம்?'' என்று சொல்லி விட்டு, தான் நினைத்ததைச் சொல்ல ஆரம்பித்தான்.

''எப்படியும் ஒரு காலத்துல நீ அப்பாவோட கம்பெனியைப் பார்த்துக்கப் போறே... அதனால அவர் சொன்ன மாதிரி அது சம்மந்தமான படிப்பிலேயே சேர்'' என்று ரகு சொல்லும்போது இடையிட வந்த ஆதியை, கை காட்டி நிறுத்தியவன், ''நான் சொல்லி முடிச்சிடறேன்'' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தான்.

''உன்னோட விருப்பப் படிப்பைப் படிக்க காலேஜில் சேர வேண்டிய அவசியம் இல்லையே ஆதி... தனியாவே படிக்கலாமே... படிப்பு ஒண்ணும் உனக்குக் கஷ்டமான விஷயம் இல்லை... சோ... ரெண்டுத்தையும் ஒரே சமயத்தில் படிக்கலாம்... படிச்சு முடிச்சதும் உன் விருப்பம் போலவே தொழிலைத் தொடங்கு, அப்பாவுக்கு உன் உதவி தேவைப்படும்போது, நீ உங்க கம்பெனியையும் பார்த்துக்கலாம்'' என்று ஆலோசனை சொன்னான் ரகு.

ரகு சொல்லி முடித்ததும் அவனை அணைத்துக் கொண்ட ஆதி, ''தேங்க்ஸ் ரகு... பிரச்சனையை ஒரே கோணத்துல பார்த்துட்டு இருந்ததில, எனக்கு இந்த ஐடியா தோணாமல் போயிடுச்சு... அப்பாவையும் திருப்திப் படுத்தின மாதிரி ஆச்சு... என்னுடைய



ஆசையையும் நிறைவேத்தின மாதிரி ஆச்சு... ரொம்ப தேங்க்ஸ்டா...'' என்று நெகிழ்ந்து போய் சொல்ல, ''என்னடா நமக்குள்ளே தேங்க்ஸ் எல்லாம்'' என்ற ரகு, தனக்கும் மெரிட்டில் கம்ப்யூட்டர் எஞ்ஜினியரிங்கில் இடம் கிடைத்திருப்பதாகச் சொன்னான்.

''ரொம்ப சந்தோசம் ரகு... எப்படியும் நான் கம்பெனி ஆரம்பிக்கும்போது நீதான் என் பார்ட்னர்'' என்று ஆதி சொல்ல, ''அதெல்லாம் வேண்டாம் சார்... ஏதோ நீங்க மனசு வச்சு ஒரு வேலை கொடுத்தால் போதும்'' என்று ரகு போலி பவ்யத்துடன் சொல்ல, நண்பர்கள் இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

ரகுவுடன் பேசிவிட்டு வந்த ஆதிக்கு மனம் தெளிவாக இருந்தது. விஸ்வநாதன் அலுவலகத்தில் இருந்து வந்திருந்தார். சாப்பிடும்போது, எந்த விவாதமும் இருக்கக் கூடாது என்பது மீனாட்சியின் அன்புக் கட்டளை. அதனால், அமைதியாகச் சாப்பிட்டு எழுந்தவரிடம் ஆதி வந்தான்.

''அப்பா... நீங்க சொன்ன மாதிரியே நான் கெமிக்கல்சிலியே சேருகிறேன்... ஆனால் என்னோட விருப்பமான படிப்பையும் சேர்த்துப் படிக்கப் போறேன்'' என்று ஆதி சொன்னவுடனே, ''ரொம்ப சந்தோசம்... எப்படி திடீர்னு இந்த ஞானோதயம்?'' என்றார்.

ரகுவைப் பற்றி தன் தந்தையின் எண்ணத்தை மாற்றி விட வேண்டும் என்று எண்ணிய ஆதி, ''ரகுதான்பா சொன்னான்...'' என்று அவன் சொன்னதை எல்லாம் சொல்ல, விஸ்வநாதனுக்கு ஆதி படிப்பில் எடுத்த முடிவு சந்தோஷமாக இருந்தாலும், ரகுவுக்கு தன் மகனிடம் இருந்த ஆதிக்கம் மன வருத்தத்தையே கொடுத்தது.

அதுவுமில்லாமல், தங்கள் தொழிலுக்குச் சம்மந்தம் இல்லாத தொழிலைத் தொடங்கப் போகிறேன் என்று மகன் சொன்னதிலும், அவருக்கு உடன்பாடு இல்லை. இன்னும் ஐந்தாறு வருடங்கள் கழித்து மகனுக்கே அந்த எண்ணம் மாறி விடும் என்று நினைத்தவர், அதைப் பற்றி எதுவும் சொலலாமல் அமைதியாகவே இருந்தார்.

படிப்பை முடித்ததும், ஆதி தனியாக விளம்பர நிறுவனம் ஆரம்பிக்கப் போகிறேன் என்று சொன்ன போதும் விஸ்வநாதன் மறுப்பு தெரிவித்தார். ஆதியும், தன் முடிவில் உறுதியாக இருக்கவே, அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

வங்கிக் கடனுக்காக மகன் அலைவதைக் கேள்விப்பட்டவருக்கு, விஸ்வநாதனுடைய பிள்ளை வெளியே பணத்துக்கு அலைவதா? என்று மான பிரச்சனையாகி விட, ஆதியைக் கூப்பிட்டு விசாரித்தார்.

''நான்தான் பணம் தருவதாகச் சொல்லி விட்டேனே ஆதித்யா... அப்புறம் ஏன் வங்கிக் கடனுக்கு முயற்சி செய்கிறாய்? நம்முடைய கவுரவத்துக்கு இது நல்லாவே இல்லை'' என்று விஸ்வநாதன் கோபத்துடன் கேட்டபோது, தொழில் தொடங்க வங்கிக் கடன் வாங்குவதில் எப்படி கவுரவம் குறைந்து விடும் என்று ஆதிக்குப் புரியவே இல்லை.

''நீங்க எப்படி உங்க முயற்சியால் தொழிலைத் தொடங்கினீங்களோ, அப்படித்தான் நானும் செய்ய ஆசைப்பட்டேன்... இதிலென்ன தப்பு இருக்கு?'' என்று அவன் எதிர் கேள்வி கேட்டபோது, விஸ்வநாதனுக்கு தன் மகனை



நினைத்துப் பெருமையாய் இருந்தாலும், பணத்துக்காக அவன் வெளியே போவதில் விருப்பமே இல்லை.

''வங்கிக் கடன் மாதிரி என்கிட்டே வாங்கிக்கோ ஆதித்யா... வட்டியோடு திருப்பிக் கொடுத்திடு'' என்று அவர் சொன்னது, ஆதிக்குமே பிடித்து விட, ரகுவோடு சேர்ந்து தொழிலைத் தொடங்கினான்.

ஆதி எவ்வளவோ வற்புறுத்தியும், ரகு பங்குதாரராகச் சேர மறுத்து விட்டான். ''உன் கூட நான் எப்பவுமே இருப்பேன் ஆதி... அதுக்காக பார்ட்னராக இருக்கணும் என்று அவசியம் இல்லை... ப்ளீஸ் என்னை இதுக்கு மேலே வற்புறுத்தாதே'' என்று ரகு சொல்லிவிட்ட பிறகு, ஆதிக்கும் வேறு வழி தெரியவில்லை.

நண்பன், தன்னுடன் சேர்ந்து வேலையாவது செய்யட்டும், பார்ட்னர்ஷிப்பை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டான்.

ரகுவுடன் சேர்ந்து ஆதி வேலை செய்வது விஸ்வநாதனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும், ரகு பங்குதாரராக இல்லை என்ற விஷயம் அவருக்கு ஆறுதலாகவே இருந்தது.

மூன்று வருட அயராத உழைப்பில், ஆதியின் நிறுவனம் ஒரு நல்ல நிலைமையை அடைந்துவிட, தந்தையிடம் வாங்கி இருந்த கடனையும், வட்டியோடு திரும்பச் செலுத்தி இருந்தான்.

இந்த மூன்று வருடத்தில், தன் தந்தையின் நிறுவனத்துக்கும் சென்று தொழிலைக் கற்றுக் கொள்ளவும் ஆதி மறக்கவில்லை. அவன் தொழிலையும் பார்த்துக் கொண்டு, தங்கள் தொழிலையும் கற்றுக் கொள்ளும் மகனைப் பார்த்து விஸ்வநாதன் ரொம்பவே பெருமைப் பட்டார்

என்றாலும் சில விஷயங்களில் இருவருக்கும் கருத்து மோதல் ஏற்படத்தான் செய்தது.

விஸ்வநாதன் தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளர்களிடம், ஒரு எல்லையுடன் தான் பழகுவார். தான் முதலாளி, அவர்கள் தனக்குக் கீழே வேலை செய்பவர்கள் என்ற எண்ணம் எப்போதும் அவரிடம் இருக்கும். தொழிலாளர்களின் குடும்பத்தில் ஏதாவது நல்லது கேட்டது என்றால், தன் சார்பில் மேனேஜரை அனுப்பி வைப்பாரே தவிர, அவர் எங்கும் போக மாட்டார்.

ஒரு முறை, நீண்ட காலமாக வேலை செய்து வரும் ஒரு தொழிலாளி தன் மகளுக்குத் திருமணம் என்று பத்திரிகை வைத்து, ''அய்யா வந்தால் சந்தோஷமா இருக்குமுங்க!'' என்று வேண்டுகோள் வைத்தபோது, விஸ்வநாதன் எதுவும் பேசாமல் இருக்க, ஆதி தான் கண்டிப்பாக வருவதாக வாக்குக் கொடுத்தான்.

''என்ன ஆதித்யா இது? நம்ம கவுரவத்துக்கு இவங்க வீட்டுக் கல்யாணத்துக்கு எல்லாம் போகலாமா? அதான் திருமணப் பரிசா பணத்தை மேனேஜரிடம் கொடுத்து அனுப்புவோமே?'' என்று ஆதியிடம் கோபித்துக் கொண்டார் விஸ்வநாதன்.

''என்னப்பா இது... எல்லா விஷயத்திலும் பணம் மட்டும்தான் பிரதானம்னு எப்படி நினைக்கறீங்க... நீங்க எதுவும் கொண்டு போய் கொடுக்காமல், வெறுமனே வாழ்த்திட்டு வந்தால்கூட அவங்க மனசு குளிர்ந்து போகும் தெரியுமா? அது அவங்களுக்கு நீங்க கொடுக்கிற மரியாதையா அவங்க நினைப்பாங்கப்பா'' என்று ஆதி சொன்னபோதுகூட விஸ்வநாதன் அதை ஏற்றுக் கொள்ள வில்லை.



ஆதியும் அதை பொருட்படுத்தாமல், அந்தக் கல்யாணத் துக்குச் சென்றான்.

இப்படிச் சின்னச் சின்ன கருத்து வேறுபாடுகள் அவர்கள் இருவருக்குள்ளும் வழக்கமாகிப் போனது.

அடுத்த பிரச்சனை, ஆதிக்கு விஸ்வநாதன் பெண் பார்க்கும்போது ஆரம்பித்தது.

## 13

ஆதிக்குத் திருமணப் பேச்சு நடந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெண்ணின் போட்டோவைக் கொடுத்து, பெண் பார்க்கப் போகலாமா என்று விஸ்வநாதன் கேட்க, ஆதியோ எதோ ஒரு காரணத்தைச் சொல்லி ஒவ்வொன் றாய் மறுத்து வந்தான்.

அன்று அம்மா, மகன் இருவரையும் அழைத்த விஸ்வ நாதன், ''அதென்ன ஆதித்யா பெண்ணைப் பார்க்கா மலே வேண்டாம்னு சொல்றே? எவ்வளவு பெரிய இடத்தில் இருந்தெல்லாம் பெண்ணைப் பார்த்திருக்கேன்... எல்லாத்துக்கும் மறுப்பு சொன்னால் எப்படி? பெண் ணைப் பார்த்தால்தானே, பிடிக்குதா, இல்லையான்னு தெரியும்?'' என்று கேட்க, அவர் சொல்லுவதில் இருந்த நியாயம் ஆதியின் வாயைக் கட்டிப் போட்டது.

அதற்காக, பெண் பார்க்கக் கிளம்பிச் செல்லவும் அவனுக்கு மனமில்லை. கொஞ்ச நேரம் அவன் ஏதாவது சொல்லுவான் என்று காத்திருந்த விஸ்வநாதனுக்குப் பொறுமை பறந்தது.

ஒரு போட்டோவை எடுத்து மேஜையில் வைத்தவர், ''இந்தப் பொண்ணு டாக்டர்... அவங்க அம்மா அப்பா ரெண்டு பேருமே டாக்டர்ஸ்... சென்னையில அவங்களுக்குன்னு பெரிய ஹாஸ்பிடல் இருக்கு... இது தவிர நிறைய ப்ராபர்டீஸ் இருக்கு... இன்னைக்கு மாலை கண்டிப்பா நாம அவங்க வீட்டுக்கு போறோம்'' என்று உறுதியாகச் சொல்ல, ஆதி இடைமறித்தான்.

''அப்பா ப்ளீஸ்! அங்கே போய் பார்த்துட்டு வந்து பெண்ணைப் பிடிக்கலைன்னு சொல்றதுக்கு எனக்குப் பிடிக்கலைப்பா'' என்றான்.

''பின்னே... பார்த்தால்தானே தெரியும் ஆதி?'' என்றவருக்கு வேறு சந்தேகம் எழுந்தது.

''சரி! இன்னைக்கு வேண்டாம்... உனக்கு இன்னும் ஒரு வாரம் டைம் தரேன்... அதுக்குள்ளே நான் பார்த்து வைச்சிருக்கிற நாலு பொண்ணுல ஒருத்தரை நாம முடிவு பண்ணியாகணும்'' என்றபடி எழுந்து சென்று விட்டார்.

இப்போதைக்கு தப்பித்தோம் என்று பெருமூச்சு வெளியிட்டபடி ஆதியும் எழுந்து சென்றான்.

எந்தப் பெண்ணையும் பார்க்கக் கூட இல்லாமல் ஆதி மறுக்கவே, விஸ்வநாதனுக்கு எங்கே மகன் காதல் கீதல் என்று அந்தஸ்து பார்க்காமல், ஏதாவது பெண்ணைக் கொண்டு வந்து விடுவானோ என்று பயம் வந்து விட்டது. ஏற்கனவே, தொழில் விஷயத்தில் அவன் காட்டிய உறுதி நினைவு வந்துவிட, எப்போதும் போல மீனாட்சியிடம் மகனை விசாரிக்குமாறு சொன்னார்.

ஆதியிடம் பேசுவதற்கு முன், ரகுவுக்கு போன் செய்த மீனாட்சி அவனை வீட்டுக்கு வரும்படி சொன்னார். ஒரு



வருடமாகவே, ரகு வீட்டுக்கு அடிக்கடி வந்து போவது வழக்கமாகி இருந்தது.

சின்ன வயதில் அவன் வீட்டுக்கு வருவதற்கு விஸ்வநாதன் தடை விதித்தபோது, அமைதியாக இருந்த ஆதி, தொழில் தொடங்கி நல்ல நிலைமைக்கு வந்ததும், அதற்கு உறுதுணையாய் இருந்த நண்பனை வீட்டுக்கு வரவழைத்தான்.

ரகு ஆதியின் தந்தையை நினைத்து ரொம்பவும் தயங்கவே, ''எப்பவோ தாத்தாவோட நண்பர் துரோகம் பண்ணிட்டாருன்னு, அப்பா அதையே பிடிச்சிட்டு இருக்கலாமா ரகு நண்பர்கள் சேர்ந்து சாதிக்கவும் முடியும்னு நாமதான் ப்ரூவ் பண்ணிட்டோம் இல்லை... அம்மா கூட உன்னோட போன்ல பேசறதோட சரி... எப்பவாவது வெளியில பார்த்தாதான் உண்டு... அப்பா சொன்னாருன்னு வர மாட்டேங்கிறே... அம்மாதான் இப்போ வரச் சொல்லி இருக்காங்க... அவங்க பேச்சை மதிக்க மாட்டாயா?'' என்று என்ன என்னவோ சொல்லி வீட்டுக்கு வர ரகுவைச் சம்மதிக்க வைத்தான்.

மீனாட்சியும் ரகுவிடம் தாயின் அன்பைக் காண்பிக்கவே, ரகுவுக்குமே ஆதியின் வீட்டுக்கு வருவது மகிழ்ச்சியைத்தான் தந்தது. விஸ்வநாதனுக்கும், ஆதியின் தொழிலில் ரகுவின் பங்களிப்பு தெரியும். அவனைப் பற்றிய அவருடைய அபிப்ராயம் கூட கொஞ்சம் மாறித்தான் இருந்தது. ஆனாலும் வெளிப்படையாக ஒத்துக் கொள்ள, கவுரவம் விட்டுக் கொடுக்காததால், ரகு வீட்டுக்கு வந்து போவதை கண்டும் காணாமல் இருந்தார்.

வந்தவுடனேயே, ''என்னம்மா விஷயம்? அவசரமா வரச் சொன்னீங்களே?'' என்று அக்கறையாய் விசாரித்த

ரகுவிடம், மீனாட்சி விஷயத்தைச் சொல்ல, ''ஏன் ஆதி அப்பா பார்க்கிற எந்தப் பெண்ணையும் வேணாம்னு சொல்றே?'' என்று ரகு ஆதியிடம் விசாரித்தான்.

''ப்ச்... அப்பா பார்த்த பெண்களுக்கெல்லாம் க்வாலி பிகேஷனா அப்பா சொல்றது என்ன தெரியுமா ரகு? பணம் வெறும் பணம்!'' என்று ஆதி சலிப்புடன் சொல்ல,

''ஏன் ஆதி, பணம் இருக்கிற பொண்ணுங்ககிட்ட குணம் இருக்காதா என்ன?'' என்று ரகு வினவ,

''நான் அப்படிச் சொல்லலை ரகு... அம்மாவை தினமும் பார்த்திட்டு அந்த மாதிரி சொல்லத்தான் முடியுமா?'' என்று ஆதி விளக்கம் கொடுத்தான்.

''பார்க்காமலே ஏன்டா வேண்டாம்னு சொல்றே? இப்ப பாரு அப்பாவுக்கு நீ எங்கே காதல் கீதல்னு போயிடுவியோன்னு பயம் வந்திடுச்சாம்!'' என்று சொல்லிவிட்டு ரகு சிரித்தான்.

''ஏன்பா சிரிக்கிறே... உண்மையிலேயே அப்படி ஏதாவது இருக்கா?'' என்று ஆர்வம் கலந்த பயத்துடன் மீனாட்சி கேட்டார்.

''அட நீங்க வேறம்மா... சாருக்கு காலேஜில நிறைய விசிறிகள்தான்! ஆனால் இவர் யாரையும் பார்க்க மாட்டாரு... கேட்டால், எல்லாம் தொழில்ல சாதிச்ச பின்னாடி தான் அப்படின்னுவான்'' என்று ரகு சொல்ல,

''இப்போ எதுக்குடா என்னைக் கிண்டல் பண்றே? பொண்ணுங்க பின்னாடி வராங்களேன்னு லவ் பண்ண முடியுமா? மனசுக்குப் பிடிக்க வேண்டாமா?'' என்றான் ஆதி.



''சரிடா... உன் மனசுக்குப் பிடிக்கிற பொண்ணு எப்படி இருக்கணும்னு நீதான் சொல்லேன்!'' என்று ரகு கேட்க,

''திடீர்னு கேட்டால் எப்படிடா?'' என்று தயங்கினான்.

''அப்பா பார்க்கிற பொண்ணும் வேண்டாம்னு சொல்றே... அப்போ எப்படிப்பட்ட பொண்ணு வேணும்னு நீ சொன்னா தானே, அதுக்கேற்ற மாதிரி பார்க்க முடியும்?'' என்று மீனாட்சியும் கேட்க, ஆதி தன் மனைவியாக வரப் போகிற பெண் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லத் தொடங்கினான்.

''துறுதுறுன்னு இருக்கணும்! தேவையான நேரத்தில பக்குவமாகவும் யோசிக்கணும்! மத்தவங்களுக்கு உதவி செய்யற மனப்பான்மை வேணும்... பணம் நிறைய புழங்கப் போற வீட்டில் இருக்கப் போகிறதால, பணத்தை மதிக்கறவளா இருக்கணும். ஆனால் பணத்துக்காக ஆசைப்படறவளா இருக்கக் கூடாது... எங்கம்மா எப்படியும் வரப் போற மருமகளைத் தன்னுடைய பெண்ணா தான் நடத்துவாங்க... அதே மாதிரி அவளும் எங்க அம்மாவை தன் அம்மாவா நினைக்கணும்'' என்று ஆதி சொல்லி முடிக்க,

''ஹே... பொண்ணோட அழகு, படிப்பு, பணம் இதைப் பற்றி எல்லாம் சொல்லவே இல்லை'' என்று ரகு ஆச்சரியத்துடன் கேட்டான்.

''இந்த குணநலன் எல்லாம் இருக்கிற பொண்ணு அழகா தான் தெரிவா! படிப்பு, சுயமா யோசிக்கிற அளவுக்கு இருந்தால் போதும் ரகு... பணம், அது நம்ம கிட்டே நிறைய இருக்கு'' என்று ஆதி முடிக்க, மீனாட்சிதான் வாயடைத்துப் போய் இருந்தார்.

''ஆதிதான் சொல்லிட்டானே அம்மா... அதுக்கேத்த மாதிரி பெண்ணைப் பார்க்க ஆரம்பிங்க!'' என்று மீனாட்சியிடம் சொன்னான் ரகு.

அங்கே அவன் அப்பா, பெண்ணின் பணப் பின்னணியை விசாரித்துக் கொண்டிருக்க, மகனோ பணமே இல்லை என்றாலும் பரவாயில்லை என்கிறான். தன் மகனுக்கு மனைவி தேடும் பொறுப்பு ரொம்பவே பெரிது தான் என்று அவர் மனம் எண்ணத் தொடங்கி இருந்தது.

''பீச்சுக்குப் போகலாமா ரகு?'' என்று ரகுவிடம் கேட்ட ஆதி, ''ஹே... பைக் எடுத்திட்டு வந்திருக்கேதானே... ரொம்ப நாள் ஆச்சுப்பா பைக் ஓட்டி... நான் ஓட்டறேன் இன்னைக்கு'' என்று சொல்ல, இருவரும் கிளம்பினார்கள்.

''கேட்கறேன்னு தப்பா நினைக்காதே... நீ உனக்கு மனசுக்குப் பிடிச்ச பொண்ணு எப்படி இருக்கணும்னு சொல்றதப் பார்த்தா, யாரையோ பார்த்திட்டுச் சொல்ற மாதிரியே இருக்கே, எனக்குத் தெரியாமல் ஏதாவது இருக்காடா?'' என்று ரகு ஆர்வத்துடன் கேட்க,

''ஹே... உனக்குத் தெரியாமல் எப்படிடா? அப்படி ஏதாவது இருந்தால், உன்கிட்ட சொல்லாமல் இருப்பேனாடா? உங்ககிட்ட சொல்லும்போதுதான் எனக்கே என்னோட விருப்பம் என்னன்னு புரிஞ்சுது ரகு... எல்லாம் சொன்ன நான் ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேன்'' என்றான் ஆதி.

''என்னடா?'' ஆர்வத்துடன் கேட்டான் ரகு.

''அந்தப் பெண்ணைப் பார்க்கும்போது, முதல் பார்வையிலேயே பிடிக்கணும்டா!''

''ஏய்... என்னடா இது? அது எப்படிடா முதல் பார்வையிலேயே பிடிக்கும்? அப்ப நீயும் பொண்ணு அழகா இருக்கணும்னு ஆசைப்படறதானே?''



''அழகு இருந்தால் மட்டும்தான் பிடிக்கணுமா என்ன? அதுவுமில்லாமல் அழகுன்றது ஒருத்தர் நடந்துக்கிற விதத்திலேயும், நாம அவங்களைப் பார்க்கிற விதத்திலேயும்தானே இருக்கு?'' எனறு ரகுவை எதிர்கேள்வி கேட்டவன், ரகு முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னான்.

''ஒருத்தரைப் பார்க்கும்போது, அவங்க சொல்ற ஏதோ வார்த்தை, ஏதோ ஒரு அசைவு, இல்லை ஏதோ ஒரு செயல், நமக்குப் பிடிச்சிடும் இல்லையா? அதைத்தான் நான் சொன்னேன்'' என்று ரசனையுடன் ஆதி சொல்ல,

''என்னவோ போ! எனக்கு ஒண்ணும் புரியலை... உனக்குப் பிடிச்ச மாதிரி ஒரு பொண்ணு கிடைக்கணும்னு வேண்டிக்க மட்டும்தான் என்னால செய்ய முடியும்'' என்றான் ரகு.

கதை பேசிக்கொண்டே இருவரும் பைக்கில் பயணம் செய்தபோது, திடீரென்று குறுக்கே வந்த நாயின் மேல் ஏறிய வண்டி நிலை தடுமாறி, தாறுமாறாக ஓட, ஒரு கட்டத்தில் ஆதியும், ரகுவும் ஆளுக்கொரு பக்கமாய் விழுந்தனர்.

காலில் சிராய்ப்புடன், முனகியபடி எழுந்த ரகு, ஆதியின் அருகில் செல்ல ஒரு கல்லின் மேல் தலை மோதி இருக்க, ரத்த வெள்ளத்தில் மயக்கமாகி இருந்தான் ஆதி.

பதறிப்போன ரகு, ஆம்புலன்சை வரவழைத்து ஆதியின் குடும்ப டாக்டரின் மருத்துவமனைக்கு விரைந்தான்.

அவன் போன் செய்து சொன்ன உடனே, விஸ்வநாதனும், மீனாட்சியும் மருத்துவமனைக்கு அடித்துப் பிடித்து வந்தனர்.

ரத்தம் ரொம்பவே சேதமாகி இருப்பதைப் பார்த்த மருத்துவர்கள், உடனே ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு, ஆதியை அறுவை சிகிச்சை அறைக்கு எடுத்துச் சென்றனர்.

மகனை முகமெல்லாம் ரத்தத்துடன் பார்த்த மீனாட்சி மயங்கி விழ, எதற்கும் கலங்காத விஸ்வநாதனும் கலங்கிப் போய் நிற்க, ரகுதான் இருவருக்கும் உறுதுணையாய் நின்றான்.

மூன்று மணி நேரம் கழித்து, அறுவை சிகிச்சை முடிந்து, மயக்கமாக வந்த ஆதியைப் பார்த்த மூவருக்கும் கண்ணீரை அடக்க முடியவில்லை. மேலும் இரண்டு மணி நேரம் அவர்களைத் தவிக்க விட்டு விட்டு, கண் திறந்தான் ஆதி.

ஆதி மருத்துவமனையில் இருந்த அந்த ஒரு வாரமும், இரவு பகல் பாராமல் ரகு அவன் அருகிலேயே இருந்தான். பெரும்பாலும் ஆதி மயக்கத்திலே இருக்க, அதைக் கண்டு பயந்த மீனாட்சிக்கும், அவன்தான் ஆறுதலாய் இருந்தான்.

தலைக்காயம் ஆறி இருக்க, அன்று டிஸ்சார்ஜ் என்று சொல்லி இருந்தார்கள். விஸ்வநாதன், மீனாட்சி, ரகு மூவரும் ஆதியின் அறையில் இருந்தார்கள். இன்னமும் கண்ணீரோடு இருந்த மீனாட்சியைப் பார்த்த ஆதி, ''என்னம்மா இது? சின்னக் குழந்தை மாதிரி... அதான் எல்லாம் சரி ஆயிடுச்சே... பாருங்க, இப்படி அழுதிட்டே இருந்தால், நான் வீட்டுக்கே வர மாட்டேன், சொல்லிட்டேன்'' என்று செல்லமாக மிரட்ட, மீனாட்சி அவசரமாக தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''வெரி குட்! ஆனால், நீங்க உண்மையிலேயே சின்னக் குழந்தைதாம்மா... மிரட்டினாதான் வழிக்கு



வரீங்க பாருங்க'' என்று ஆதி மீனாட்சியை கேலி செய்ய, ஒரு வாரம் கழித்து, மூவரின் முகத்திலும் சிரிப்பு வந்தது.

அப்போது அங்கே வந்த மருத்துவர், ''எப்படி இருக்கே ஆதி?'' என்று விசாரிக்க, ''நவ், ஐ அம் பீலிங் குட் அங்கிள்'' என்றான்.

''இன்னைக்கு டிஸ்சார்ஜ் செய்திடலாம்... இன்னும் ஒரு வாரத்துக்கு நீ ஆபீசுக்குப் போக வேண்டாம் ஆதி... ரெஸ்ட் எடுத்துக்கோ'' என்று சொன்னவர், ''விசு, என் ரூமுக்குக் கொஞ்சம் வாயேன்'' என்று அழைக்க, விஸ்வநாதன் எழுந்து போனார்.

''என்ன விஷயம், எதுக்கு அப்பாவைக் கூப்பிடறார் டாக்டர்?'' என்று கவலைப்பட்ட மீனாட்சியிடம், ''ஹய்யோ அம்மா... எல்லாத்துக்கும் பயப்படாதீங்க... அங்கிள் கொஞ்சம் ஃப்ரீயா இருக்காரு போல, அதான் அப்பா கூட பேசலாம் என்று கூப்பிட்டு இருப்பாரு'' என்று சொன்ன ஆதித்யன் மனதிலும் யோசனை எழுந்தது. ரகுவைப் பார்த்து அவன் கண் அசைக்க, அவனும் டாக்டரின் பின்னால் சென்றான்.

விஸ்வநாதன் டாக்டரின் அறைக்குள் நுழைய, தயக்கத்துடன் ரகு நின்றான். அவனை இந்த ஒரு வாரமாய் பார்த்திருந்த டாக்டர், ''நீங்களும் வாங்க மிஸ்டர். ரகு'' என்று அழைக்க, அவனும் உள்ளே சென்று அமர்ந்தான்.

அங்கு ஏற்கனவே இன்னொரு மருத்துவரும் அமர்ந்திருந்தார். ''விசு, இவர் டாக்டர். நீலகண்டன், நியூரோ சர்ஜன்'' என்று அறிமுகப்படுத்திய ரங்கநாதன், ''உன்கிட்ட ரொம்ப முக்கியமான விஷயத்தை சொல்லத்தான் இவரைக் கூப்பிட்டிருக்கேன்'' என்று சொல்ல, விஸ்வநாதனின் நெஞ்சுக்குள் பயப்பந்து உருண்டது.

''ரங்கா! ஆதித்யாவுக்கு ஒண்ணுமில்லைதானே?'' என்று அவர் பயத்துடன் விசாரிக்க,

''இதை அவரே சொல்லுவார்'' என்று நீலகண்டனைப் பார்த்து கை காட்ட, நீலகண்டன் சொல்ல ஆரம்பித்தார்.

''உங்கள் மகன் ஆதிக்கு தலையில் காயம்பட்டதற்கு, சிகிச்சை கொடுத்த பின்னாடி, அடிக்கடி மயக்கம் வந்திட்டே இருந்தது... அது கொஞ்சம் அப்னார்மலாய் இருக்கவே, நாங்கள் சில ஸ்கேனும், டெஸ்டும் செய்தோம்... அப்போதான் சில விஷயங்கள் தெரிய வந்தது'' என்ற நீலகண்டன் தொடர்ந்து சொன்ன விஷயத்தைக் கேட்ட விஸ்வநாதனுக்கும், ரகுவுக்கும் மயக்கம் வராத குறைதான்.

நடுங்கிக் கொண்டிருந்த விஸ்வநாதனின் கைகளைப் பற்றிக் கொண்ட ரகுவின் கைகளிலும் நடுக்கம் இருந்தது.

''நீயே இப்படி மனசைத் தளர விட்டால், ஆதிக்கும், உன் மனைவிக்கும் எப்படி தைரியம் சொல்றது விசு'' என்று ரங்கநாதன் சொன்னாலும், அவர் முகமுமே வேதனையைத்தான் காட்டியது.

இருவரும் மீண்டும் அறைக்கு வந்தபோது, அவர்கள் முகத்தை வைத்தே எதோ சரியில்லை என்று ஆதிக்குத் தோன்றியது. அம்மா எதிரில் எதுவும் கேட்க வேண்டாம் என்று நினைத்து, அமைதியாக இருந்தான்.

வீட்டுக்குப் போனதும், அப்பா அவர் அறைக்குள் முடங்கி விட, ஆதி ரகுவைப் பார்த்தான். அதை கவனிக்காமல், ரகு ஆதியின் படுக்கையை சரி செய்து கொண்டிருக்க, ''டாக்டர் என்ன சொன்னார் ரகு?'' என்று ஆதி கேட்டவுடன், திடுக்கிட்டு நிமிர்ந்த ரகு, ''ஒண்ணுமில்லையே... நீ நல்லா ரெஸ்ட் எடுக்கணும் என்று சொன்னார்'' என்று சொல்ல,



அவன் குரலில் இருந்த தடுமாற்றத்திலேயே, அவன் பொய் சொல்கிறான் என்று புரிந்துவிட, ''உண்மையைச் சொல்லு ரகு... எதுவானாலும் எனக்குத் தெரிஞ்சுதானே ஆகணும்'' என்றான்.

ரகுவுக்கும், ஆதிக்கு வஷயத்தைச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று தெரிந்துதான் இருந்தது. அவனே இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளாதபோது, எப்படி பக்குவமாக ஆதியிடம் சொல்ல முடியும் என்றுதான் அமைதியாக இருந்தான்.

''ப்ளீஸ் ஆதி... நீ ரொம்ப டயர்டா இருப்பே... கொஞ்சம் ரெஸ்ட் எடு... ரெண்டு பேருமே ஒரு வாரமா ஆபீசுக்குப் போகலை... இன்னைக்காவது நான் போய் பார்த்திட்டு வரேன்'' என்று அவசரமாகக் கிளம்பி விட்டான்.

ரகு இவ்வளவு தயங்கும் அளவுக்கு என்ன இருக்கும் என்று யோசித்த ஆதிக்கு தலை வலிப்பது போலத் தோன்ற, தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தான்.

அவனுக்குக் குடிப்பதற்கு எதோ எடுத்து வந்த மீனாட்சி, மகன் உட்கார்ந்திருந்த நிலைமையைப் பார்த்து, ''என்ன கண்ணா? என்ன செய்யுது?'' என்று பதறினார்.

''ஒண்ணுமில்லைம்மா... கொஞ்சம் டயர்டா இருக்கு. அவ்ளோதான்'' என்றவன், அதற்கு மேல் ஒன்று பேசாமல், அம்மா கொடுத்ததைக் குடித்துவிட்டு படுக்க, கொஞ்சம் நேரம் முன்பு போட்டிருந்த மாத்திரையின் விளைவாக உறுங்கியும் விட்டான்.

அடுத்த நாள், காலையிலேயே விஸ்வநாதன் அலுவலகத்துக்குக் கிளம்பிவிட, ரகுவும் போன் செய்து தான்

அலுவலகத்துக்குச் செல்வதால், வீட்டுக்கு வரவில்லை என்று போன் செய்து ஆதியிடம் சொல்லி விட்டான்.

இருவரும், தன்னிடம் இருந்து தப்பிப்பதை கவனித்த ஆதிக்கு, விஷயம் ரொம்பவே பெரிது என்று தோன்றியது. உடனே அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் போலத் தோன்ற, அம்மாவிடம் அலுவலகத்துக்குப் போவதாகச் சொல்லி கிளம்பினான். 'இன்னும் ஒரு வாரம் ரெஸ்ட் எடு' என்று சொன்ன அன்னையிடம், சீக்கிரமே வந்து விடுவதாகச் சொல்லி விட்டு வந்தவன், மருத்துவ மனையை அடைந்தான்.

டாக்டர் ரங்கநாதனிடம் அவன் விஷயத்தைக் கேட்க, அவர் அவனை டாக்டர் நீலகண்டனிடம் அனுப்பி வைத்தார்.

அவனைப் பார்த்ததுமே, முகத்தில் ஒரு பரிவுடன் டாக்டர். நீலகண்டன் வரவேற்றதைப் பார்த்ததும் ஆதிக்கு, நெஞ்சு படபடத்தது. உள்ளூரத் தோன்றிய படபடப்பை அடக்கிக் கொண்டு அவன், வந்த விஷயத்தைச் சொல்ல,

''வெல்! மிஸ்டர் ஆதி... உங்களுக்கு உங்களைப் பற்றிய எல்லா விஷயமும் தெரிவதுதான் நல்லது!'' என்றவர் அடுத்துச் சொன்ன விவரம் ஆதியை அதிர வைத்தது.

''மிஸ்டர் ஆதி, உங்களுக்கு 'ப்ரெயின் ட்யூமர்' என்று டாக்டர். நீலகண்டன் சொன்னதும்,

''டாக்டர்!!!??? என்ற வார்த்தைக்கு மேல் ஆதியிடம் இருந்து பேச்சு வரவில்லை.

அவனுடைய அதிர்ச்சி புரிந்து டாக்டரும் அமைதியாக இருக்க, கொஞ்சம் சமாளித்துக் கொண்ட ஆதி, ''எனக்கு இதுவரைக்கும் ஒரு சின்னத் தலைவலி கூட



வந்ததில்லையே டாக்டர்... இந்த விபத்துக்குப் பின்னாடி தான் அப்பப்போ தலைவலியும், மயக்கமும் வருது'' என்று சந்தேகத்துடன் வினவ,

''நீங்கள் அதிக ரத்த சேதத்தோடு ஆபத்தான நிலையில் வந்தபோது, நாங்களும் எமர்ஜென்சி ஸ்கேன் எடுத்துப் பார்த்தோம்... அதில் இந்த விஷயம் தெரிய வரவில்லை... சிகிச்சைக்குப் பிறகு நீங்கள் அடிக்கடி மயக்க நிலைமைக்குப் போனதால்தான், ட்யூமரை தெளிவாகக் காட்டும் பிரத்யேக ஸ்கேன் மற்றும் சில டெஸ்ட்களைச் செய்தோம்... அப்போதுதான் உங்களுக்கு ட்யூமர் இருக்கிற விஷயம் தெளிவாச்சு.''

''தேர் ஆர் மோர் தன் ஒன் ட்வென்டி டைப்ஸ் ஆப் ப்ரெயின் ட்யூமர்ஸ்... அதே மாதிரி... சிம்ப்டம்ஸ் ஆல்சோ டிபர் ஃப்ரம் பேஷண்ட் டு பேஷண்ட். சில பேருக்கு மயக்கம், தலைவலி, வாந்தி இருக்கும்... சில பேருக்குப் பார்வை குறைபாடு... சில பேருக்கு ஸ்ட்ரோக் வருவதும் உண்டு... சில பேருக்கு இது எதுவுமே இல்லாமல், ரொம்ப முற்றிப் போன ஸ்டேஜில்தான் அறிகுறிகளே தெரிய வரும்... விபத்துக்கு பிறகு ஏற்பட்ட மயக்கம், தலைவலி இப்போ உங்களுக்கு தலைக்காயத்துக்கு செய்த சிகிச்சையின் விளைவால் மூளைக்கு ஏற்பட்ட அதிர்வால் வந்திருக்கலாம்... இன்னும் அதிகமாகலாம்... இல்லை முன்னைப் போலவே இல்லாமலும் போகலாம்'' என்றவர், கொஞ்சம் இடைவெளி விட, அவன் இன்னமும் நம்ப முடியாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு பெருமூச்சுடன் டாக்டர் தொடர்ந்தார். ''மெயின் டைப்ல உங்களுக்கு இருக்கிறது பினைன் (benign)

ட்யூமர்... பட் உங்களோட ரிப்போர்ட்சை வச்சுப் பார்க்கும்போது, அது மெலிக்நன்ட் (malignant) ட்யூமரா மாறுவதற்கான சாத்தியக் கூறுகள் தெரியுது'' என்று சொன்னவுடன், ஆதிக்கு தலைவலிப்பது போல இருந்தது.

தலையை அழுந்தக் கோதிக் கொண்டவன், ''ப்ளீஸ் டாக்டர்... இந்த மெடிக்கல் டெர்ம்ஸ் எல்லாம் வேண்டாம்... எனக்கு ஒண்ணும் புரியலை... நேரிடையா எனக்கு என்னன்னு சொல்லிடுங்க'' என்று அயர்ச்சியுடன் சொல்ல, அவனது மனதை உணர்ந்தவர் போல, நீலகண்டன் அவன் கையைப் பற்றி அழுத்திவிட்டுவிட்டு, தொடர்ந்தார்.

''மிஸ்டர் ஆதி... உங்களுக்கு வந்திருக்கிறது கான்சர் இல்லாத ட்யூமர்... அறுவை சிகிச்சை மூலம் நீக்கி விட முடியும்... ஆனால் இப்போதான் உங்களுக்கு தலைக் காயத்துக்காக சிகிச்சை நடந்திருக்கு... அதனால உடனே மூளையில் அறுவை சிகிச்சை என்பது சாத்தியமில்லை... குறைந்த பட்சம் மூன்று மாசம் கழித்துதான் ஆபரேஷன் செய்ய முடியும்.''

''மூன்று மாசம் கழிச்சு ஆரேஷன் செய்தால் கட்டியை நீக்கி விடலாம் இல்லையா டாக்டர்?'' பயம் கலந்த ஆர்வத்துடன் ஆதி கேட்க,

''நீக்கி விட முடியும்... ஆனால்...'' என்று அவர் நிறுத்த, ஆதியின் இதயம் படபடத்தது.

அவனது படபடப்பை உணர்ந்த நீலகண்டன், ''உங்களுக்கு எல்லா விஷயமும் தெரிய வேண்டும் என்றுதான் நான் சொல்றேன் ஆதி... நீங்க பயப்படத் தேவை இல்லை... உங்களுடைய மன உறுதிதான், உங்களை



இந்த நோயில் இருந்து முழுசா வெளியில கொண்டு வரும்'' என்றார்.

அவர் குரலில் இருந்து எதோ ஒன்று அவனை உலுக்க, நிமிர்ந்து அமர்ந்த ஆதி, ''நீங்கள் சொல்லுங்கள் டாக்டர்!'' என்றபோது, அவனது குரலில் பயமில்லை.

''மூளையின் ரொம்ப டெலிகேட்டான இடத்தில் அந்த கட்டி இருக்கு ஆதி... அறுவை சிகிச்சை செய்யும் போது உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை கூட வரலாம்... அதற்கான வாய்ப்பு குறைவுதான்'' என்றவர் கொஞ்சம் தயங்கி, ''ஆனால் மூளை செயல் இழந்து போவதற்கான வாய்ப்பு நிறைய இருக்கிறது'' என்று சொன்னதும், கொஞ்ச நேரம் முன்பு இருந்த தைரியம் மறைந்து, ஆதியின் கணகளில் பயம் வெளிப்படையாகத் தெரிந்தது.

''இதை எல்லாம் விட முக்கியமான விஷயம், ஆபரேஷன் செய்வதற்குள் உங்களுடைய கட்டி, கான்சர் கட்டியாக மாறுவதற்கான சாத்தியம் இருக்கு... அப்படி மாறி விட்டால், அறுவை சிகிச்சையோடு இல்லாமல், அதற்கப்புறமும் தொடர்ந்து நீங்கள் சிகிச்சை மேற்கொள்ள வேண்டி இருக்கும்... குறைந்த பட்சம் ஆறு மாதத்துக்கு... இல்லை என்றால், அந்த கான்சர் மூளையின் மற்ற பகுதிகளுக்கு மட்டுமல்லாமல் முதுகு தண்டு வரைக்கும் பரவ வாய்ப்பு இருக்கிறது.''

டாக்டர் சொல்லி முடித்ததும், மேஜையின் மேல் தலையைக் கவிழ்த்து ஆதி அமைதியாக இருந்தான். என்னதென்று தெரியாத ஒரு உணர்வு அவன் மனதை ஆட்டிப் படைத்தது. எதோ ஒரு இருட்டறையில் இருந்து கொண்டு, எதைத் தேடுகிறோம் என்றே தெரியாமல் துழாவுவது போல இருந்தது.

அவனது மன உணர்வு புரிந்தது போல, சிறிது நேரம் அமைதியாக இருந்த டாக்டர், மெதுவாக எழுந்து வந்து அவனை எழுப்பினார்.

''ஒருவேளை ஆபரேஷன் செய்யாமல் விட்டு விட்டால் என்னாகும் டாக்டர்?''

ஆதியிடம் இருந்து வந்த கேள்வியை எதிர்பாராத டாக்டர், ''நோ... மிஸ்டர் ஆதி. இன்னும் மூன்று மாதம் கழித்துக் கண்டிப்பாக ஆபரேஷன் செய்துதான் ஆகவேண்டும்... அதற்கு மேல் தாமதித்தால், அறுவை சிகிச்சை மூலம் கட்டியை நீக்க முடியாத நிலை ஏற்படலாம்...'' என்று கொஞ்சம் கண்டிப்புடன் சொல்லியவர்,

''உங்களுடைய மன வேதனை எனக்குப் புரிகிறது ஆதி... இப்போ உங்களுக்கு தேவை மன உறுதிதான்... அதுதான் உங்களை நல்லபடியாகக் காப்பாற்றும்'' என்று சொல்ல,

'உள்ளுக்குள் இருந்த உறுதியை எல்லாம் வேரோடு பிடுங்கி எடுக்கும் விஷயத்தைச் சொல்லி விட்ட பிறகு, மன உறுதி எங்கே இருந்து வரும்?' என்று நினைத்த ஆதி, விரக்தியோடு புன்னகைத்தான்.

மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த பிறகு, எங்கே போவதென்று ஆதிக்குப் புரியவில்லை. வீட்டுக்குப் போனால், அவன் முகமே அம்மாவைப் பதற வைத்து விடும் என்று எண்ணியவன், தன்னுடைய அலுவலகத்துக்குச் சென்றான்.

அலுவலகத்தில் எல்லாரும் அவனை அக்கறையாக விசாரிக்க, அவர்களிடம் முகம் மாறாமல் பதில் சொன்னவன், அவனுடைய அறைக்குள் நுழைய, பின்னாலேயே வந்த ராகுவுக்கு ஆதியின் முகத்தில் தெரிந்த



வித்தியாசம் அச்சத்தை தர, ''ஆதி?'' என்று மெதுவாக அழைத்தான்.

ரகுவுக்கு முதுகு காட்டி நின்றிருந்த ஆதி திரும்ப, அவள் முகத்தில் இருந்த எல்லை இல்லாத வேதனை, அவனுக்கு விஷயம் தெரிந்து விட்டது என்பதை பறை சாற்ற, ''ஆதி!'' என்று ஓடி வந்த ரகு ஆதியை அணைத்துக் கொண்டான். இந்த அணைப்புக்காகவே காத்திருந்த மாதிரி நண்பனின் தோளில் சாய்ந்த ஆதி, வாய் விட்டு அழ ஆரம்பித்தான்.

## 14

தன் தோளில் சாய்ந்து அழுத ஆதியின் துயரம் கண்டு ரகுவின் கண்களும் கலங்கியது. இந்த சூழ்நிலை வரும். அப்போது ஆதிக்கு தான் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தது நினைவு வர, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''ஆதி! கண்ட்ரோல் யுவர்செல்ப் ஆதி!'' என்று சொல்லி அவனைத் தேற்றியவன், கையோடு அழைத்துச் சென்று அவனை இருக்கையில் அமர்த்தி, தண்ணீர் அருந்த வைத்தான்.

''ஆதி... உனக்கு ஒண்ணும் ஆகாது ஆதி... 'இதுவும் கடந்து போகும்' என்பது மாதிரி எல்லாமே சரியா போயிடும்'' என்று உறுதியான குரலில் ரகு சொல்ல, ஆதி மெல்ல புன்னகைத்தான்.

அந்த புன்னகையில் இருந்த விரக்தியைக் கண்டு கொண்ட ரகு, ''ப்ச்... என்ன ஆதி இது? எனக்குத்

தெரிஞ்ச ஆதி எந்த நேரத்திலும் மனசைத் தளர விட மாட்டான்!'' என்று கொஞ்சம் கண்டிப்புடன் ரகு சொல்ல,

''இல்லை ரகு, வாழ்வா, சாவான்னு மட்டும் இருந்தால் கூட பரவாயில்லை... டாக்டர் சொன்ன மாதிரி, ஒரு வேளை மூளை மட்டும் செயல் இழந்து ஜடம் மாதிரி இருக்க நேர்ந்தால்...'' என்று அதற்கு மேல் சொல்ல முடியாமல், ஆதியின் உடல் சிலிர்த்தது.

அதுவரை, தானும் கலங்கி நின்றால் ஆதிக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று எண்ணி, கொஞ்சம் நிமிர் வாகப் பேசிக் கொண்டிருந்த ரகுவுக்குமே அதே கலக்கம் எழுந்தது.

சிறிது நேர அமைதிக்குப் பின், ''அப்படி நடக்கிறதுக்கு வாய்ப்பு கம்மின்னுதானே டாக்டர் சொன்னார் ஆதி'' என்று ஆதியை ஆறுதல்படுத்த ரகு சொல்ல, ''என் கிட்டே சொன்னதை விட உங்ககிட்ட தெளிவாகவே டாக்டர் சொல்லி இருப்பாரே ரகு'' என்றான் ஆதி.

ரகுவுக்கு அன்று டாக்டர். நீலகண்டன் ''மூளை செயல் இழந்து போக தொண்ணூறு சதவீதம் வாய்ப்பு இருக் கிறது'' என்று சொன்னது காதில் எதிரொலித்தது.

இப்பொழுது மன உறுதிதான் நண்பனுக்குத் தேவை என்று உணர்ந்த ரகு, ''நாம் நல்லதையே நினைக்க லாமே ஆதி... டாக்டர் ஒரே அடியா நம்பிக்கை இல்லை என்று சொல்லலையே?'' என்றான்.

''ரொம்பவும் நம்பிக்கையாகவும் சொல்லலையே!'' என்று சொல்ல வாயெடுத்த ஆதி, சொல்லாமல் நிறுத் தினான்.

''அம்மாகிட்ட சீக்கிரம் வரேன் என்று சொல்லி இருந் தேன், நான் கிளம்பறேன் ரகு'' என்று சொல்லிவிட்டு



ஆதி கிளம்ப, ''இரு ஆதி, நானும் வரேன்'' என்று ரகுவை தடுத்து, ''இல்லை ரகு, நீ வேலையைப் பாரு... நாளை யில இருந்து நானும் ஆபீசுக்கு வந்திடறேன்'' என்று விட்டு வீட்டுக்குச் சென்றான்.

வாடி இருந்த ஆதியின் முகத்தைப் பார்த்த மீனாட்சி, ''இன்னைக்கே ஆபீசுக்குப் போயிருக்கணுமா? பாரு முகமெல்லாம் வாடி இருக்கு... இன்னும் ஒரு வாரம் கழிச்சு ஆபீசுக்குப் போகலாம் கண்ணா... ரகுதான் இருக்கானே... அவன் எல்லாத்தையும் பார்த்துப்பான்'' என்று அக்கறை யுடன் கூற,

'தன்னுடைய வாடிய முகமே அம்மாவுக்குத் தாங்கவில் லையே, விஷயம் தெரிந்தால் எப்படித் தாங்குவார்கள்?' என்று நினைத்த ஆதிக்கு மனம் வலித்தது.

''சரிம்மா... ரொம்ப டயர்டா இருக்கு... கொஞ்ச நேரம் படுக்கறேன்'' என்று சொல்லி விட்டு தன் அறைக்குள் வந்தவன், இணைய தளத்தில் சில விஷயங்களைத் தேடிப் படிக்க, மனம் மேலும் சோர்ந்து போனது.

மாலை அலுவலகத்தில் இருந்து வந்த விஸ்வநாதன், ஆதியைத் தேடிப் போனார். டாக்டர் ரங்கநாதன் ஏற்கனவே ஆதி மருத்துவமனைக்கு வந்த விஷயத்தை விஸ்வநாத னிடம் சொல்லி இருந்தார். வீட்டில் இருந்தால், பைத் தியமே பிடித்துவிடும் போலத் தோன்றியதால்தான் அலுவலகத்துக்குச் சென்றார். ஆனால், ஒரு நிமிடம் கூட அவரால் வேலை செய்ய முடியவில்லை.

ஆதியை அவன் அறையில் பார்த்தபோது, எப்போதும் கண்களில் சிரிப்போடும், முகத்தில் கம்பீரத்தோடும் வளைய வரும் மகனின் முகத்தில் இருந்த வேதனையும், சோர்வும் விஸ்வநாதனின் மனதை உலுக்கியது.

அதே போல், எப்போதும் ஒரு கடினத்தன்மையுடன் இருக்கும் அப்பாவின் முகத்தில் இருந்த பயம் கலந்த வேதனை ஆதியை என்னமோ செய்ய, தற்காலிகமாக தன் வேதனையை ஒதுக்கி வைத்து, ''என்னப்பா? நீங்களே இப்படி அப்சட் ஆனால் எப்படிப்பா? எல்லாம் சரி ஆகி விடும்... நீங்க இப்படி இருக்கிறதைப் பார்த்தா அம்மாவுக்குச் சந்தேகம் வரும்... எப்படியும் தெரியப் போகிற விஷயம்தான் என்றாலும், இப்போ இருந்தே எதுக்குப்பா அவங்களையும் வேதனைப்படுத்தணும்'' என்று அவரை ஆறுதல் படுத்த முனைந்தான்.

அடுத்த நாள், அலுவலகம் செல்லலாம் என்று கிளம்பிய ஆதியை, மீனாட்சி தடுத்தார். ''ப்ளீஸ் கண்ணா! நேத்தே ரொம்ப சோர்வா இருந்தே... ஒரு வாரம் கூட வேண்டாம்... இன்னும் ரெண்டு நாளாவது வீட்டில் இரு'' என்று சொன்னபோது, அவனால் அவர் பேச்சை மீற முடியவில்லை.

தொழில் ஆரம்பித்த பிறகு அம்மாவிடம் பேசுவதே குறைந்துதான் விட்டது. அதை இப்போதாவது ஈடு கட்டலாம் என்று நினைத்தவன், அம்மாவிடம் உட்கார்ந்து கதை பேசத் தொடங்கினான். அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தது மனதுக்கு இதமாக இருந்தாலும், அவரது பேச்சு முழுதுமே, அவனது எதிர்காலத்தைச் சுற்றியே வந்தது. அவனை உட்கார விடாமல் செய்தது.

இரண்டு நாட்கள் கழித்து அலுவலகம் சென்றவனிடம், ''ப்ளீஸ் ஆதி... மனசை அமைதியா வைச்சுக்க முயற்சி பண்ணு, எல்லாம் நல்லபடியா நடக்கும் என்ற பாசிடிவ் எண்ணம்தான் உனக்கு மன வலிமையைக்



கொடுக்கும்'' என்று ரகு அக்கறையுடன் சொன்ன ஆறுதல் வார்த்தைகள் வேலை செய்ய, வேலையில் முழு மனதோடு ஈடுபட்டான்.

வேலையில் முழுமையாக ஈடுபட்டது ஆதிக்கு மனதுக்கு ஆறுதலையும், வலிமையையும் தருவதாக இருந்தது. இரண்டு நாட்களாக அவன் மனதில் தோன்றி இருந்த சின்ன நம்பிக்கையை, மன உறுதியை விஸ்வநாதனின் பேச்சு அடியோடு அழித்தது.

தான் கட்டி வைத்த சாம்ராஜ்யத்தின் வாரிசு என்று தான் எண்ணி இருந்த மகனின் நோய், விஸ்வநாதனுடைய மன திடத்தைக் குலைத்து இருந்தது. தன் மகனை நல்ல படியாகப் பிழைக்க வைக்க எவ்வளவு செலவு செய்ய நேர்ந்தாலும் சரி என்று அவர் முனைப்பாக இருக்க, அவர் முயன்ற எல்லா இடங்களில் இருந்தும், டாக்டர் நீலகண்டன் சொன்ன பதிலே கிடைத்தது. அவர் அரும் பாடுபட்டு சேர்த்து வைத்த செல்வத்துக்கு, வாரிசு இல்லாமல் போய் விடுமோ என்ற கவலை அவர் மனதை அரித்துக் கொண்டிருந்தது.

'யாரோ ஆண்டு அனுபவிக்க, தான் அவ்வளவு கஷ்டப்பட்டோம்' என்று நினைத்தவருக்கு மனம் தாளவில்லை' ஏழைப் பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லை, எல்லா விஷயத்தையும் சொல்லித் திருமணம் செய்து வைத்து விடலாமா? அப்படியாவது மகனுக்கு ஒரு குழந்தை பிறந்து, இந்தக் குடும்பத்துக்கு வாரிசு வந்து விடாதா?'' என்றுகூட யோசனை செய்து அதை மகனிடம் கேட்கவும் செய்தார்.

விஷயத்தைச் சொன்னபோது, அதிர்ச்சி அடைந்த ஆதி, அவரை நம்ப முடியாமல் பார்த்தான்.

''என்ன பேசறீங்கன்னு தெரிஞ்சுதான் பேசறீங்களாப்பா?'' என்றவன் குரலில் அதிர்ச்சியை விட ஆத்திரம் தான் நிறைந்து இருந்தது.

பதில் பேசாமல் நின்றவரைப் பார்த்தவன், ''ப்ளீஸ்பா... இப்போதான் ரெண்டு நாளாக நான் கொஞ்சம் நார்மலா இருக்கேன்... அதையும் கெடுத்துடாதீங்க... எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு பெண்ணோட வாழ்க்கையைக் கெடுக்க என்னால முடியாது'' என்று உறுதியாகச் சொல்லி விட்டான்.

'தன் சொத்துக்கு வாரிசு இல்லாமல் போய் விடுமோ?' என்ற கவலை ஒவ்வொரு நாளும் மனதை அரிக்க, குருட்டாம்போக்கில் ஒரு பத்திரிகையைப் புரட்டியவரின் கண்களில் பட்ட ஒரு செய்தி, அவரை நிமிர்ந்து உட்கார வைத்தது. உடனடியாக டாக்டர் ரங்கநாதனிடம் அதைப் பற்றிப் பேசினார்.

நான்கு நாட்கள் கழித்து, ரங்கநாதனிடம் இருந்து அவர் விரும்பிய செய்தி வரவே, உற்சாகத்துடன் வீட்டுக்கு வந்த விஸ்வநாதன் ஆதியைத் தேடினார்.

ஆதி மருத்துவமனையில் இருந்து வந்த நாளாய், கணவன், மகன் இருவர் முகமும் களை இழந்து போய் இருந்ததைக் கண்ட மீனாட்சிக்கு மனதில் ஒரு கலக்கம் இருந்து கொண்டே இருந்தது. அதைப் பற்றி விசாரித்தவருக்கு, இரண்டு பேரிடம் இருந்தும், ''ஒண்ணுமில்லைம்மா...'' என்ற பதிலே வந்தது.

அலுவலகத்துக்குப் போகத் தொடங்கிய பிறகு, மகன் முகத்தில் தெரிந்த அமைதியில் சற்றே மனக்கலக்கம் குறைந்திருந்த மீனாட்சிக்கு, கணவரின் முகத்தில் தெளிவைப் பார்த்ததும், இன்னும் கொஞ்ச நேரத்தில்



அடியோடு மன அமைதி மறையப் போவதை அறியாமல், மனம் நிறைந்தது.

''ஆதித்யா இன்னும் வரலை மீனா?'' என்று விசாரித்தவரிடம், ''வந்துட்டான். அவன் ரூமில்தான் இருக்கான். என்ன விஷயம்?'' என்று மீனாட்சி கேட்க, ''கொஞ்ச நேரம் அவன் கிட்ட தனியாப் பேசணும்... எங்களைத் தொந்தரவு பண்ணாதே'' என்று சொல்லி விட்டு ஆதியின் அறைக்கு வந்தார்.

மீனாட்சிக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்பா, மகன் இருவரும் தனியாக, தனக்குத் தெரியாமல் என்ன பேசப் போகிறார்கள் என்ற கவலையும் பிறந்தது. இருந்தாலும், கணவரின் பேச்சை மீற முடியாமல், அமைதியாக ஹாலில் அமர்ந்தார்.

திருமண விஷயம் பேசியதிலிருந்து அப்பாவிடம் இருந்து ஒதுங்கியே இருந்த ஆதிக்கு, அவரே தன் அறையைத் தேடி வரவும், ஆச்சரியத்தோடு, பயமும் சேர்ந்து வந்தது. 'இப்போது என்ன சொல்லப் போகிறாரோ?' என்று அவர் மனம் யோசனையில் ஆழ்ந்தது.

பேசவேண்டும் என்று வேகமாக வந்துவிட்ட விஸ்வநாதனுக்கு, ஆதியின் முகத்தைப் பார்த்ததும் சட்டென்று பேச்சு வரவில்லை.

விஸ்வநாதன் தயங்கி நிற்பதைப் பார்த்த ஆதி, ''என்ன விஷயம்? சொல்லுங்கப்பா'' என்றான்.

''ஆதித்யா! உனக்கு நல்ல படியாக குணமாகி, பழைய மாதிரி இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம், ஆசை, கனவு எல்லாமே... ஆனால், டாக்டர் சொன்னபடி ஏதாவது விபரீதமாக நடந்து விட்டால்...'' என்றவருக்கு அடுத்த வார்த்தை வரவில்லை.

அப்பா எதோ முக்கியமான விஷயம் பேச வந்திருக்கிறார் என்பது ஆதிக்குப் புரிந்து போனது.

''சொல்லுங்கப்பா... நெருப்புன்னா வாய் வெந்து விடுமா என்ன?'' என்று இயல்பாகச் சொல்வது போலச் சொன்னான்.

''நான் இந்தக் கம்பெனியை உருவாக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் என்று உனக்குத் தெரியும்... உனக்கு ஏதாவது ஆகிவிட்டால், நான் கட்டிக்காத்த இந்த கம்பெனிக்கும், சொத்துக்கும் வாரிசே இல்லாமல் போய் விடும்...'' என்றவரை,

''அப்பா... ப்ளீஸ்பா... கல்யாணம் என்ற பேச்சைத் திரும்பவும் எடுக்காதீங்க'' என்ற ஆதியின் குரல் இடையிட்டது.

''இல்லை ஆதி... நான் பேச வந்தது வேற விஷயம்'' என்றவர் கொஞ்சம் தயங்கி, ''இவ்வளவு கஷ்டப்பட்டு நான் சம்பாதித்த சொத்தை யாரோ அனுபவிக்கப் போவதை என்னால் அனுமதிக்க முடியாது ஆதி... அதனால் நான் ஒரு முடிவு செய்திருக்கிறேன்.... இந்தக் குடும்பத்துக்கு ஒரு வாரிசைப் பெற, அதாவது உன் குழந்தையைப் பெற ஒரு வாடகைத் தாயை ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்று விஸ்வநாதன் சொல்ல, பேச்சிழந்து நின்றான் ஆதி.

அவன் அதிர்ச்சியை எதிர்பார்த்திருந்த விஸ்வநாதனும் அமைதியாக இருந்தார். ரொம்ப நேரம் கழித்தும், ஆதி எதுவும் பேசாமல் இருக்கவே, அவனருகில் வந்து தோளைத் தட்டி, ''ஆதித்யா?'' என்று அழைத்தார். மெல்ல நிமிர்ந்து அவரை பார்த்தவனின் கண்களில் இருந்த எதோ ஒன்று விஸ்வநாதனை பலமாகத் தாக்கியது.



மெல்ல அவர் கையைத் தன் தோளில் இருந்து எடுத்தவன் எதுவும் பேசாமல் எழுந்து சென்று கதவைத் திறக்க, ''ஏதாவது சொல்லிவிட்டுப் போ ஆதித்யா'' என்ற தந்தையின் குரல் தடுத்தது. ''நீங்க சொல்ற விஷயத்துக்கு நான் ஒரு போதும் ஒத்துக்க மாட்டேன்'' என்று ஆதி உறுதியாகச் சொல்ல,

தான் சொல்லுவதை முழுதாகக் கேட்காமல் ஆதி மறுப்பு சொன்ன விதம், அவரது கோபத்தைக் கிளறி விட, ''அப்போ நீயும் நான் சொல்றதை நல்லா கேட்டுக்கோ... இந்தக் குடும்பத்துக்கு வாரிசு இல்லாமல் போவதற்கு நான் விடமாட்டேன்... வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற நீ சம்மதித்துதான் ஆக வேண்டும்'' என்று கட்டளை இட்டார்.

கதவைத் திறக்கும் சத்தம் கேட்டு எழுந்து வந்த மீனாட்சியின் காதில், விஸ்வநாதன் சொன்ன வார்த்தைகள் தெளிவாக விழ, அந்த வார்த்தைகளின் வீரியம் தாங்காமல் மயங்கிச் சரியப் போன மீனாட்சியை ''அம்மா!'' என்று அழைத்துக் கொண்டே தாங்கிப் பிடித்தான் ஆதி.

மயக்கத்தில் இருந்த மீனாட்சியை மருத்துவர் வந்து பார்த்துவிட்டு, ''எதோ மனக்கலக்கத்தில் இருந்திருக்காங்க என்று நினைக்கிறேன்... அந்த சமயத்தில் இன்னும் அதிர்ச்சி தரக்கூடிய விஷயம் அவங்களை மயக்கம் அடைய வைச்சிருக்கு'' என்று சொன்னபோது, ஆதி ஒரு குற்றம் சாட்டும் பார்வையை விஸ்வநாதனின் பக்கம் வீசினான்.

மயக்கத்தில் இருந்து விழித்த மீனாட்சி, ''கண்ணா! அப்பா என்ன என்னமோ சொல்றாரே? எனக்கு ரொம்ப பயமா இருக்கே... என்ன விஷயம்னு என் கிட்ட

சொல்லு, தயவு செய்து மறைக்காதே'' என்று கெஞ்சத் தொடங்க, ''அம்மா... நீங்க பயப்படற அளவுக்கு ஒண்ணுமில்லை... இப்போ நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க... நான் அப்புறமா எல்லா விஷயத்தையும் சொல்றேன்'' என்று அவரை வற்புறுத்தி ஓய்வெடுக்க வைத்தான்.

அம்மாவுக்குத் தெரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று ஆதிக்குத் தோன்றியது. ஆனால், அம்மாவின் முகம் பார்த்து அதைத் தன்னால் சொல்ல முடியாது என்பதை உணர்ந்து ரகுவை அழைத்தவன், மீனாட்சியிடம் விஷயத்தைச் சொல்லும் பொறுப்பை ரகுவிடம் ஒப்படைத்தான்.

ரகுவுக்கும் மீனாட்சியிடம் சொல்வதில் தயக்கம்தான் என்றாலும், அரைகுறையாக எதையோ நினைத்து மனதை வருத்திக் கொள்வதை விட, விஷயத்தை அவர் அறிந்து கொள்வதே நல்லது என்று நினைத்து, மீனாட்சிக்கு எல்லாவற்றையும் சொன்னவன், அவருக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாகவும் பேசினான்.

என்னதான் ரகு நம்பிக்கை அளிக்கும் விதமாகப் பேசி இருந்தாலும், விஷயத்தை அறிந்த மீனாட்சியின் உள்ளம் தன் மகனைப் பற்றி கலங்கிக் கொண்டிருந்தது. அடக்க முயன்றும் முடியாமல் கண்ணீர் வழிந்த வண்ணம் இருந்தது. கணவரின் செயல் இன்னும் வேதனையை அதிகப்படுத்தியது.

எப்போதும் கணவரிடம் எதிர்த்துப் பேசி அறியாதவர், ''இந்த நேரத்தில்தானே நாம் அவனுக்குப் பக்கபலமாக இருக்கணும்... நீ போனாலும் பரவாயில்லை, சொத்துக்கு வாரிசுதான் வேணும்னு சொல்ற மாதிரி நீங்க செய்ற இந்த விஷயம் அவனுக்கு எவ்வளவு மன வேதனையைத் தரும்னு யோசிச்சுப் பார்த்தீங்களா? அவனுடைய உறுதியை நாமளே குலைக்கிற மாதிரி நடந்துக்கலாமா?'' என்று வேதனை கலந்த கோபத்தோடு கேட்டபோது விஸ்வநாதன் அமைதியாகவே இருந்தார்.



அவரது அமைதியே அவரது முடிவைச் சொல்லிவிட, ''பணத்தைப் பற்றி உங்க அபிப்ராயத்தை கூட நீங்க அந்த சமயத்தில் பட்ட கஷ்டத்தின் பாதிப்புன்னு என்னால ஏத்துக்க முடிஞ்சது... ஆனால் இப்போ நீங்க நடந்துக்கிற விதத்தைப் பார்த்தால், உங்களுக்கு மனசாட்சியே இல்லையோன்னு நினைக்கத் தோணுது'' என்று வெறுப்புடன் மீனாட்சி மொழிந்த போதும், விஸ்வநாதன் அசையவில்லை.

இரண்டு நாட்கள் சென்ற பிறகு, மீனாட்சியையும், ஆதியையும் அழைத்த விஸ்வநாதன், திரும்பவும் தன்னுடைய எண்ணத்தை வெளியிட்டபோது, இருவரும் அமைதியாகவே இருந்தனர்.

''இப்படி நீங்க ரெண்டு பேரும் அமைதியாக இருக்கிறதால என் முடிவு மாறப் போவதில்லை... வாடகைத் தாயா இருக்கிறதுக்கு ஒரு பெண்ணை ஏற்பாடு செய்தாச்சு... நீ இதை ஏற்றுக்கொண்டுதான் ஆகணும் ஆதித்யா'' என்று அவர் கடினமான குரலில் சொன்னபோது,

''ஏன்பா... ஒருவேளை... இந்த ஆபரேஷன் முடிஞ்சு நான் நல்லபடியா பிழைச்சிட்டா... எனக்கு கல்யாணம்னு ஒண்ணு செஞ்சு வைப்பீங்கதானே... அப்போ குழந்தையோட நான் நின்றால் பிரச்சனை வராதா?'' அவரது எண்ணத்தை மாற்றி விடும் வேகத்துடன் ஆதி கேட்க,

''நம்ம கிட்ட இருக்கிற பணத்துக்கு, எந்தக் கேள்வியும் கேட்காமல் பெண் வீட்டில் இருந்து வருவாங்க''

என்று விஸ்வநாதனிடம் இருந்து உடனடியாக பதில் வந்தது.

''பணம்! பணம்! பணத்தாலே எல்லாத்தையும் சாதிச்சிட முடியும் இன்னும் நம்பறீங்களா? எங்கே அந்தப் பணத்தால, எந்தப் பிரச்சனையும் இல்லாமல் என்னை குணப்படுத்திட முடியும்னு உங்களால உத்திரவாதம் கொடுக்க முடியுமா?'' என்று தன் மனக்குமுறலை வெளியிட்டான்.

''நீ என்ன சொன்னாலும், நான் பாடுபட்டு சேர்த்த சொத்துக்கு வாரிசு இல்லாமல் போவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது'' என்று விஸ்வநாதன் உறுதியாக இருந்தார்.

''ஓஹ்! உங்களுக்கு வாரிசுதான் முக்கியம் இல்லையா? அப்படின்னா நீங்களே அந்த வாடகைத் தாய் மூலமா குழந்தை பெத்துக்கலாமே? நேரடியான வாரிசாவும் இருக்கும்!'' என்று எல்லை மீறிய கோபத்துடன் ஆதி வார்த்தைகளை உதிர்க்க,

பிறந்ததில் இருந்து தன் மகனிடம் அதிர்ந்து கூட பேசி இராத மீனாட்சியின் கரம் ''கண்ணா!'' என்ற அதட்டலுடன் ஆதியின் கன்னத்தில் இடியாக இறங்கியது.

## 15

பிறந்ததில் இருந்தே, தன் அன்னையிடம் இருந்து ஒரு சுடு சொல்லைக் கூட கேட்டறியாத ஆதிக்கு, அவர் தன்னை அடித்தது பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அப்பா எப்படி நடந்திருந்தாலும், தான் பேசியது தவறுதான்



என்று அவனுக்கும் தோன்றி விட, குற்ற உணர்வுடன் தன் அறைக்கு விரைந்தான்.

ஏற்கனவே இருந்த மன வேதனையில், தன் மகனை அடித்ததும் சேர்ந்து கொள்ள, மீனாட்சி கண்ணீரில் கரைந்தார்.

ஆதி சொன்ன விஷயம் விஸ்வநாதனையும் தாக்கிவிட, கண்ணீரில் கரைந்து கொண்டிருந்த மனைவியை ஆறுதல் படுத்தவும் துணிவின்றி, அவரும் தன் அறைக்குள் தஞ்சமடைந்தார்.

தன்னை அடித்ததில் தன்னை விட, அம்மாதான் அதிகம் வேதனைப்பட்டிருப்பார்கள் என்பதை உணர்ந்த ஆதி, கொஞ்ச நேரத்தில் மீனாட்சியைத் தேடி வந்தான். அவன் எதிர்பார்த்ததைப் போலவே, கண்களை மூடிக் கொண்டு கட்டிலில் அமர்ந்திருந்த மீனாட்சியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்த வண்ணம் இருந்தது.

அன்னையின் காலடியில் அமர்ந்த ஆதி, அவர் மடியில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டான். தொடுகை உணர்ந்து கண் திறந்த மீனாட்சியின் கண்கள் மேலும் கண்ணீரால் நனைய, ''என்னை மன்னிச்சிடு கண்ணா! இருக்கிற வேதனை போதாதென்று நான் வேற உன்னைக் காயப்படுத்திட்டேன்'' என்று அழுகைக் குரலில் சொல்ல,

''என்னம்மா இது? என்னை அடிக்கிற உரிமை உங்களைத் தவிர வேறு யாருக்கும்மா இருக்கு? நான்தான் கோபத்தில் பேசக் கூடாததை எல்லாம் பேசிட்டேன்... நான்தாம்மா மன்னிப்பு கேட்கணும்'' என்றான் ஆதி.

தன் மடியில் இருந்த மகனின் தலையை வருடிய மீனாட்சி, ''அப்பா அவரோட முடிவில் ரொம்ப உறுதியா

இருக்கிறாரே கண்ணா. இப்போ என்ன செய்யறது?'' என்று பரிதவிப்புடன் வினவ, எழுந்து அன்னையின் அருகில் அமர்ந்த ஆதி, அவரின் கையைப் பற்றிக் கொண்டு, ''உங்களுக்கு நான் நல்லபடியாக குணமாகி விடுவேன் என்று நம்பிக்கை இருக்கிறதா அம்மா?'' என்று விசாரித்தான்.

''நான் ஒவ்வொரு வினாடியும் கடவுளிடம் அதைத் தான் வேண்டிட்டு இருக்கேன் கண்ணா... என் உயிரை எடுத்துக் கொண்டாவது என் குழந்தையைக் காப்பாற்று என்பதுதான் என் பிரார்த்தனையா இருக்கு!'' என்றவரின் வாயை அவசரமாக மூடிய ஆதி, ''அம்மா! அப்படி சொல்லாதீங்கம்மா ப்ளீஸ்!'' என்று அன்னையை அணைத்துக் கொண்டான். மகனின் அணைப்பு ஆறுதலைத் தர, கண் மூடி அந்த ஆறுதலை அனுபவித்தது அந்த அன்னையின் உள்ளம்!

ஆதி அலுவலகத்துக்கும் வராமல், போனையும் எடுக்காமல் இருக்கவே, ரகுவுக்கு பதட்டமாக இருந்தது. அலுவலகத்தில் வேலை ஓடாமல் ஆதியின் வீட்டுக்கு வந்தவனுக்கு, அங்கே நிலவிய அசாதாரணமான அமைதி பயத்தைக் கொடுத்தது.

ரகு வேலையாளிடம் விசாரிக்கும் அரவம் கேட்டு, மீனாட்சியும் ஆதியும் வெளியில் வர, அவர்களின் முகத்தைப் பார்த்த ரகுவுக்கு மேலும் பதட்டம் அதிகரித்தது. என்னவென்று விசாரித்தவனிடம், ஆதி நடந்த விஷயத்தைச் சொல்ல, ரகுவுமே அதைக் கேட்டு நிலை குலைந்துதான் போனான்.

அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் மூவரும் அமைதியாக இருக்க, ஆதிதான் முதலில் பேசினான்.



''யோசிச்சுப் பார்த்தால் அப்பாவோட ஆசையும் தப்பில்லைன்னுதான் தோணுது. ஆனால், முகம் தெரியாத ஒரு பெண் என் குழந்தையைச் சுமக்கிறதை என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியலைம்மா.. குழந்தை என்பது ரெண்டு பேரோட உணர்வும் உயிரும் கலந்த விஷயமில்லையா? வெறும் உயிரணு சம்மந்தப்பட்ட விஷயமில்லையே? அதுவுமில்லாமல், இந்த விஷயம் என்னோட மன உறுதியை குறைக்கிற மாதிரி தோணுதும்மா'' என்றவன் குரலில் வேதனையும், ஆயாசமும் கலந்திருந்தது.

மகனின் வேதனையைத் தாங்க முடியாத மீனாட்சி, ''நான் வேணுமானால் அந்தப் பொண்ணு கிட்டே பேசவா கண்ணா? பேசி இருக்கிற பணத்தைக் கூடக் கொடுத்திடலாம்'' என்றார்.

''அப்பா எப்படிம்மா ஒத்துக்கொள்வார்?'' என்று கேட்ட ஆதியைப் பார்த்த மீனாட்சி, ''நான் அவர் கிட்ட பேசறேன்'' என்று எழுந்து போனார்.

காலையில் நடந்த விஷயங்கள் மனதை பாதித்து இருந்தாலும், விஸ்வநாதனின் முடிவில் மாற்றமேதும் ஏற்படவில்லை. சொத்துக்காக மட்டுமன்றி, வயதான காலத்தில் ஆதியின் குழந்தை தங்களுக்கு ஆறுதலாக இருக்கும் என்ற அவருடைய எண்ணத்தில் தவறேதும் இருப்பதாகவும் அவருக்குத் தெரியவில்லை.

ஆதி நல்லபடியாக பிழைக்க வேண்டும் என்பதுதான் அவருடைய விருப்பமும். தொழிலில் எப்போதும் ஒரு திட்டம் தோல்வி அடைந்தால், அடுத்தத் திட்டம் ஒன்று தயாராக இருக்க வேண்டும் என்பது போலத்தான் அவர் குழந்தை விஷயத்தையும் வைத்திருந்தார்.

அவருடைய இந்த செயல், ஆதிக்கு மன வேதனையைக் கொடுக்கும் என்று அவருக்குத் தெரியாமலில்லை. முப்பது வருடங்களாக, உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், எதார்த்தமாக யோசித்தே செயல்படுவதே அவருக்குப் பழக்கமாக இருந்ததால், அவரது முடிவு அவருக்குத் தவறாகவும் படவில்லை.

மீனாட்சியும் முகத்தில் இருந்த வேதனையும், வெறுப்பும் விஸ்வநாதனை கலங்கத்தான் வைத்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டவர், ''மீனா... நான் சொல்றது முதல்ல ஏத்துக்கறதுக்குக் கஷ்டமாதான் இருக்கும்... டாக்டர் சொல்லுவது ரொம்ப அவநம்பிக்கையாய் இருக்கும்மா... ஒருவேளை, அவங்க சொல்றபடி நடந்திட்டா... உனக்கும் எனக்கும் கடைசி காலத்தில் யாரு துணையா இருப்பா? அந்தக் குழந்தையின் முகத்திலாவது நாம் ஆதியைப் பார்த்து ஆறுதல் அடையலாம் இல்லையா?'' என்று கணவர், கலங்கியபடி கேட்ட போது மீனாட்சியாலும் பதில் சொல்ல முடியவில்லை.

ஆனால், இந்த நேரத்தில் கணவரை விட மகனின் வேதனையே மனதில் நிற்க, ''யாரோ, எப்படிப்பட்ட பொண்ணோ, எதுவுமே தெரியாமல் நம்ம குடும்ப வாரிசை சுமக்கப் போறதா சொல்றீங்களே? அவள் ஒரு கெட்ட கேட்ட எண்ணங்கள் கொண்ட பெண்ணா இருந்து, அந்த குணம் அந்தக் குழந்தைக்கு வராதா?'' ஒரு முகமறியாத பெண்ணைப் பற்றித் தவறாகப் பேசுகிறோமே என்று உள்ளூர உறுத்த, ஒரு குற்ற உணர்வோடு மீனாட்சி வினவினார்.

மீனாட்சியின் கேள்விக்குப் பதிலாக விஸ்வநாதனின் முகம் லேசாக மலர்ந்தது. ''இல்லை மீனா, ரொம்ப நல்ல



பொண்ணு... நல்ல குடும்பத்தில் பிறந்து, நல்ல படிப்பு படித்த பெண்ணும் கூட'' என்று விஸ்வநாதன் சொல்லும்போதே இடையிட்ட மீனாட்சி, ''அப்படிப்பட்ட பெண்ணுக்கு இந்த மாதிரி செய்யணும் என்று என்ன தலை எழுத்து?'' என்றார்.

எதோ சொல்ல வாயெடுத்த விஸ்வநாதன், அதைச் சொல்லாமல், ''இப்போ எதோ பண நெருக்கடியாம்'' என்று மட்டும் சொன்னார்.

''நான் அந்தப் பொண்ணைப் பார்க்க முடியுமா?'' என்று கேட்ட மீனாட்சியைச் சந்தேகமாக விஸ்வநாதன் பார்க்க, ''இந்தக் குடும்பத்தோட வாரிசை சுமக்கப் போற பெண்ணைப் பார்க்கக் கூட எனக்கு உரிமை இல்லையா என்ன?'' என்று கொஞ்சம் எரிச்சலுடன் மீனாட்சி கேட்டார்.

''பார்க்கலாம்... ஏற்பாடு பண்றேன்... ஆனால் அவள் மனசை மாத்திடலாம்னு நினைக்காதே மீனா... அப்படி எதாவது நடந்தாலும், இன்னொரு பெண்ணை ஏற்பாடு பண்றது எனக்குப் பெரிய விஷயமில்லை'' என்று எச்சரித்தவர், அந்தப் பெண்ணை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

அந்தப் பெண்ணை பார்த்து விட்டு வந்த மீனாட்சியை, ஒரு ஆவலுடன் எதிர்கொண்ட ஆதிக்கு, அவர் முகத்தில் அதிகரித்திருந்த வேதனையை கண்டு மனம் கலங்கியது.

''என்ன ஆச்சும்மா?'' என்று பரிவுடன் விசாரித்தவனை, கண் கலங்கப் பார்த்தவர், ''அந்தப் பொண்ணு நிலைமை இன்னும் மோசம் கண்ணா! பணம் வேணுமானாலும் தரேன், இந்த வேலையை மறுத்துடும்மான்னு சொன்னதுக்கு, உங்களுக்குப் பிடிக்கலைன்னா விட்டுடறேன். ஆனால் பணம் வேண்டாம்னு சொல்லிட்டாள்...

ஆனால் பணம் ரொம்பவே தேவைப்படுற நிலையில் இருக்கா கண்ணா... அவளை பார்க்கும்போது...'' என்று எதையோ சொல்ல வந்தவர்,

தன்னைச் சமாளித்துக்கொண்டு, அந்தப் பெண்ணின் தேவையைப் பற்றிச் சொல்ல, ஆதிக்கு மனம் கனத்துப் போனது. தன் வேதனையை கூடக் கொஞ்ச நேரம் மறந்து, முகம் அறியாத அந்தப் பெண்ணின் மேல் மனம் பரிதாபம் கொண்டது.

''இந்தப் பெண் வேண்டாம் என்று சொன்னாலும், அப்பா இன்னொரு ஏற்பாடு செய்யத்தான் போறார்... அதுக்கு இந்த பெண்ணுக்கே நாம் உதவி செய்த மாதிரி இருக்கட்டுமே...'' என்று கெஞ்சுதலாக கேட்ட அன்னையை அதிர்ந்து போய் பார்த்த ஆதி, ஒன்றும் பேசாமல் அலுவலகத்துக்குப் போனான்.

காரில் பயணம் செய்த நேரமெல்லாம், மனம் சிந்தனையில் ஆழ்ந்து ஒரு முடிவையும் எடுத்தது.

மூளை செயல் இழந்து போய் ஒரு ஜடப்பொருளாகி, மற்றவருக்கு பாரமாய் இருப்பதில் அவனுக்கு எள்ளளவும் விருப்பமில்லை. அவன் அறுவை சிகிச்சை செய்து கொள்ளப் போவதில்லை என்று முடிவு செய்து விட்டான். இணைய தளத்தில், ஒரு பெண்மணி முப்பத்தியேழு வருடங்களாக கோமாவில் இருக்கிறார் என்ற செய்தியை பார்த்த பின்பு, அவனது முடிவு மேலும் உறுதியாகி இருந்தது.

அவன் எடுத்திருக்கும் இந்த முடிவு, அன்னையை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதை உணர்ந்தேதான் இருந்தான். ஆனால், தினமும் தன்னை உயிரிருந்தும் இல்லாத ஒரு பொருளாய்ப் பார்த்து வருத்தப்படுவதை



விட, ஒரேயடியாக மகன் இல்லை என்று மனதைத் தேற்றிக் கொள்ளட்டும் என்ற முடிவுக்கு அவன் வந்திருந்தான். காலம் எல்லாக் காயத்தையும் ஆற்றி விடும் என்று எண்ணினான்.

அவன் ஏற்கனவே எடுத்திருந்த முடிவுக்கு, அன்னை இன்று அந்தப் பெண்ணைப் பற்றிச் சொன்ன விவரமும் வலு சேர்த்தது. தன் வாழ்க்கையைப் பற்றிக் கூட எண்ணாமல், இப்படிப்பட்ட முடிவை எடுத்திருக்கும் பெண்ணுக்கு எவ்வளவு நல்ல மனம் இருக்க வேண்டும்! அப்படிப்பட்ட பெண்ணின் வாழ்க்கையில் தன்னால் எந்தப் பிரச்னையும் வரக்கூடாது என்றால், இப்போதே இங்கிருந்து போக வேண்டும் என்று எண்ணினான்.

ஆதியின் வருகைக்காகவே காத்திருந்த ரகு என்ன நடந்தது என்று விசாரிக்க, அவனிடம் அனைத்தையும் பகிர்ந்து கொண்ட ஆதியின் முகத்தில் ஒரு முடிவெடுத்த பாவனை இருந்தது.

''என்ன ஆதி?'' என்று கொஞ்சம் பயத்துடன் கேட்ட ரகுவிடம், ''அப்பா இவ்வளவு உறுதியா இருக்கிறதை பார்த்தால், டாக்டர் ரொம்ப அவநம்பிக்கையா பேசி இருப்பார் போல இருக்கு ரகு'', என்றவன்,

''அப்பாவுக்காக என்று யோசித்தாலும் கூட, இந்தக் குழந்தை... என்னால ஒத்துக்கவே முடியலை ரகு'', என்று தவிப்புடன் சொல்லி நிறுத்த,

''நீ என்ன முடிவு எடுத்திருக்கே ஆதி?'' என்று ரகு கேட்டவுடன், எந்த நேரத்திலும் தன் எண்ணத்தை கண்டு கொள்ளும் நண்பனை பெருமையாக பார்த்தவன், ''நான் இங்கே இருந்து எங்கேயாவது கொஞ்ச நாளைக்கு போயிடலாம் என்று பார்க்கிறேன்'' என்றான்.

''எங்கே போவாய் ஆதி... இன்னும் இரண்டரை மாசத்தில ஆபரேஷன் வேற இருக்கு?''

'தான் இங்கே இருந்து கொஞ்ச நாளைக்கு எங்கேயோ போகப் போகிறேன் என்று சொன்னதற்கே பதட்டப்படும் நண்பன், தான் அறுவை சிகிச்சை செய்து கொள்ளவே வரப் போவதில்லை என்று தெரிந்தால் என்ன செய்வான்?'' என்று யோசித்தான் ஆதி.

உயிர் இருந்தும் உணர்ச்சி இல்லாத ஜடமாய் இருப்பதை விட, இருக்கும் வரை மற்றவர்க்கு உபயோகமாக, ஒரு சுதந்திரமான மனிதனாக இருக்கலாம் என்று அவன் முடிவு செய்ததை அவன் இப்போதைக்கு ரகுவிடம் கூற விரும்டவில்லை. எப்போதும், ஆதியின் நலத்தையே விரும்பும் நண்பன் அதை ஏற்றுக்கொள்ளப் போவது இல்லை.

ஆதி பதில் பேசாமல் யோசனையில் ஆழ்ந்ததைப் பார்த்த ரகுவுக்கு, அவனாக எங்கும் செல்வதற்கு பதில் தானே அவன் போவதற்கு இடம் ஏற்பாடு செய்யலாம் என்று தோன்றியது. அதற்கு முன் ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்திக் கொள்ள விரும்பியவனாக,

''சரி ஆதி... நீ அறுவை சிகிச்சை சமயத்தில் சரியாக இங்கே வந்து விடுவாய்தானே?'' என்று விசாரித்தான்.

'கண்டிப்பா ரகு... இந்த இட மாறுதல் எனக்கு ரொம்பவே தேவையா இருக்கு... எனக்குத் தெரியும் அம்மா ரொம்பவே வருத்தப்படுவாங்கன்னு... ஆனால் என்னால் இங்கே ஒரு நிமிஷம் கூட நிம்மதியா இருக்க முடியலை ரகு... உனக்குப் புரியுதுதானே?'' என்று தவிப்புடன் கேட்ட ஆதியின் கைகளைப் பற்றிக்கொண்ட ரகு,

''நல்லாப் புரியுது ஆதி. நானே இன்னும் இரண்டு நாள்ல, ஒரு இடத்தில ஏற்பாடு பண்றேன்'' என்றான்.



''ஒரு வேலைக்கும் ஏற்பாடு பண்ணு ரகு'', என்றவனை ஆச்சரியத்துடன் ரகு ஏறிட, ''என்னைப் பற்றித் தெரியாத, மனுஷங்களோட ஒருத்தனா, கொஞ்ச நாளைக்காவது எல்லாத்தையும் மறந்திட்டு சந்தோஷமா... புதுசா... ஒரு வாழ்க்கை வாழணும் போல இருக்கு'', என்ற ஆதியை ரகு அணைத்துக்கொண்டான்.

''கோவையில் நான் வளர்ந்த 'அன்னை இல்லம்', அந்த மேடம் கிட்ட சொல்லி வைக்கிறேன் ஆதி'' என்று ரகு சொல்லும்போதே,

''ப்ளீஸ் ரகு... அவங்க கிட்ட என்னை பத்தின எந்த விஷயத்தையும் சொல்லிடாதே... அங்கே போயும் ஒரு பரிதாப பார்வையைத் தாங்கும் சக்தி எனக்கு இல்லை'' என்றான் ஆதி.

''இல்லை ஆதி... என்னுடைய பிரண்டுன்னு மட்டும் சொல்றேன்'' என்றவன், அடுத்த நாளே, ஆதி சென்னையில் இருந்து கிளம்ப ஏற்பாடு செய்து விட்டான்.

அங்கே இருந்து கிளம்பி விட வேண்டும் என்று முடிவு செய்து விட்டாலும், கிளம்பும்போது அன்னையின் நினைவில் ஆதிக்கு மனம் கலங்கியது. அவன் திரும்ப இங்கே வரவே போவதில்லை என்று வேறு முடிவு செய்திருக்கிறானே!

அன்னைக்கென்று ஒரு கடிதம் எழுதும்போது கை நடுங்கத்தான் செய்தது. ''அம்மா! கொஞ்ச நாளைக்கு உங்களை விட்டுப் போகிறேன்... இங்கேயே இருந்தால் பைத்தியம் பிடித்து விடும் போல் இருக்கிறது... ப்ளீஸ் அம்மா... உடம்பை பார்த்துக்கோங்க... நீங்க அழாமல் இருந்தால்தான் நான் திரும்ப வருவேன் என்பதை நினைவில் வைச்சுக்கோங்க!'' என்று எழுதியவன்,

''அப்பா! உங்கள் செல்வாக்குக்கு நான் எங்கே இருக்கிறேன் என்று கண்டு பிடிப்பது உங்களுக்குச் சுலபம் என்று எனக்குத் தெரியும்... ஆனால் கண்டுபிடித்து நீங்கள் என்னைத் தேடி வந்தால், அன்றுதான் எனக்கு வாழ்வின் கடைசி தினம் என்பதை நினைவில் வையுங்கள்!'' என்று அப்பாவுக்கு எழுதியவன், இரண்டு கடிதத்தையும் ஒரு கவரில் போட்டு, பெற்றோரின் அறையில் வைத்தான்.

அப்பா, ரகுவை கண்டிப்பாக சந்தேகப்படுவார் என்று எண்ணியவன், அம்மா அப்பாவை பார்த்துக்கொள்ளும் பொறுப்பு உன்னுடையது!'' என்று ரகுவுக்கும் ஒரு கடிதம் வைத்து விட்டு கிளம்பினான்.

* * *

ஆதி அனுபவித்த வேதனையை, அவன் வாய் மொழியாக கேட்டிருந்த வந்தனாவின் கண்கள் மடை திறந்த அணையாய் கண்ணீரைப் பொழிந்து கொண்டிருந்தது.

அவள் கண்ணீரைப் பார்த்த ஆதி, ''இதெல்லாம் தெரிஞ்சு நீ வேதனை படக்கூடாதுன்னுதான் இத்தனை நாள் சொல்லாமல் இருந்தேன்... இப்போ நான் வேண்டிக்கிறதெல்லாம் என்ன தெரியுமா வது? நீ இருக்கிற வரைக்குமாவது கடவுள் எனக்கு ஆயுளை கொடுக்கணும் என்றுதான்'', என்று அவன் சொல்லி முடித்தவுடன்,

பாய்ந்து வந்து அவனை அணைத்துக்கொண்ட வந்தனா, ''தயா... தயா... தயா'' என்று அவனது பெயரை தவிர மற்ற வார்த்தைகளை மறந்தவளாக, தன் இதழ்களால் அவன் முகத்தில் முத்திரையை பதித்து கொண்டிருந்தாள்.

அவள் மனதை உணர்ந்தவனாக, அவனும் அவளை அணைத்தபடி அமைதியாக இருந்தான்.

அந்த நேரம், ஆதியின் கைப்பேசி ஒலித்து, அவர்களின் அமைதியை கலைத்தது.



கைப்பேசியை எடுத்து பார்த்த ஆதி, ''ரகுதான் கால் பண்ணறான்... ஈவ்னிங் அவன் கால் பண்ணும்போது, நான் சென்னைக்கு வரப் போவதில்லை என்று சொல்லிட்டேன்... அதான் திரும்பக் கூப்பிடறான்'', என்று சொல்லி விட்டு, அவன் அழைப்பைத் துண்டிக்க, அடுத்த விநாடியே திரும்பவும் அழைப்பு வந்தது.

திரும்ப அழைப்பை துண்டிக்க போன ஆதியின கையில் இருந்து போனை வாங்கிய வந்தனா, அழைப்பை எடுத்து, ''அண்ணா... இன்னும் நாலு நாள்ல நாங்க ரெண்டு பேரும் சென்னையில இருப்போம்!'' என்று உறுதியாகச் சொல்லி விட்டு வைக்க, அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான் ஆதி.

அதிர்ச்சியோடு நின்றிருந்த ஆதியை கண்ட வந்தனாவுக்கு, தான் உண்மையைச் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது என்று தோன்றியது.

ஆதி இவ்வளவு உணர்ச்சிக் கொந்தளிப்புடன் இருக்கும் இந்த நேரத்தில், எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்று யோசனையுடன் வந்தனா நிற்க, ஆதியின் குரல் அவளது யோசனையைக் கலைத்தது.

''வது... நாம இங்கே இருந்து கிளம்ப வேண்டிய நேரம் வந்திடுச்சு... நான் ஏற்கனவே எல்லா ஏற்பாட்டையும் செய்திட்டேன்... ரகுவுக்கு சொல்லாமல் கிளம்பணும் என்று நினைத்திருந்தேன்... அவன் திடீர்னு போன் செய்து கேட்டவுடன் அங்கே வரப் போவதில்லை என்று ஏதோ வேகத்தில் சொல்லிட்டேன்... எனக்கு தெரிஞ்சு கண்டிப்பா, ரகு இங்கே வருவான்... அதுக்குள்ளே நாம கிளம்பணும்.''

''கண்டிப்பா கிளம்பித்தான் ஆகணும்... ஆனால் வேறு எங்கேயும் போகப் போவதில்லை... நான் ரகு அண்ணா

கிட்ட சொன்ன மாதிரி சென்னைக்கு தான் போறாம்'', என்று வந்தனா உறுதியான குரலில் சொல்ல,

''ப்ளீஸ் வது... புரிஞ்சுக்கோ... ஆபரேஷன் தப்பா போறதுக்கு தொண்ணூறு சதவீதம் வாய்ப்பு இருக்குன்னு டாக்டர் சொல்லி இருக்காரு'' என்று ஆதி தவிப்புடன் சொன்னான்.

''நாம ஏன் பாசிடிவா இருக்கிற பத்து சதவீதத்தைப் பற்றி யோசிக்க கூடாது தயா?'' என்றாள் வந்தனா.

''போன ஜென்மத்தில என்ன பாவம் பண்ணினேனோ, இப்ப இந்த மாதிரி ஒரு நிலை வந்திருக்கு... இப்போ தெரிஞ்சே ஒரு பாவம் பண்ண முடியாது வது. திரும்ப வருவேனா, இல்லையா என்று தெரியாத நிலையில், உன்னை... உன்னை விட்டுட்டு நான் எங்கேயும் போகத் தயாரா இல்லை...''

ஆதியின் வேதனை நிறைந்த குரல் மனதை பிசைய, ''நீங்க எந்த பாவமும் பண்ணி இருக்க மாட்டீங்க தயா... ஊரை விட்டு கிளம்பிய அந்த நிலையில் கூட, ரகு அண்ணா கிட்ட சொல்லி வாடகைத் தாயா உங்க அப்பா ஏற்பாடு செய்திருந்த அந்த பெண்ணுக்கு பணம் கொடுக்க சொல்லிட்டு வர அளவுக்கு உங்களுக்கு நல்ல மனசு! அந்த மனசு யாருக்கும் பாவம் செய்ய நினைக்காது!'' என்று உறுதியாக சொன்னவளை, ஆச்சரியத்தோடு பார்த்தவன்,

'வது! அந்த விஷயம் உனக்கெப்படி தெரியும்?'' என்றான்.

ஒரு கணம் அவனைத் தீர்க்கமாக பார்த்த வந்தனா, ''உங்க குழந்தையை சுமக்கறதுக்கு, உங்க அப்பா ஏற்பாடு செய் திருந்த அந்த 'வாடகைத் தாய்' நான் தான்!'' என்றாள்.



தன் காதுகளையே நம்ப முடியாமல், வந்தனாவை அதிர்ச்சியோடு பார்த்துக்கொண்டிருந்த ஆதியின் காலடி யில் பூமி நழுவியது போல் இருந்தது.

## 16

ஆதியின் அப்பா ஏற்பாடு செய்திருந்த வாடகைத் தாய் தான்தான் என்று வந்தனா சொன்னதை நம்ப முடியாமல் நின்றிருந்த ஆதியின் மனதில், 'அப்பாதான் இவளை இங்கே அனுப்பி இருக்கிறாரோ? இந்த காதல், கல்யாணம் எல்லாம் குழந்தையை பெறுவதற்கான நாட கமா?'' என்ற எண்ணம் தோன்ற, அவன் முகம் வேதனை யில் கசங்கியது.

ஆதியின் முகத்திலிருந்தே அவனது எண்ண ஓட் டத்தைப் புரிந்து கொண்ட வந்தனா, ''தயா! நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை தயா! நம்முடைய கல்யாணத்துக்கு நம் காதல் மட்டும்தான் காரணம் தயா! நீங்க வேற எதுவும் நினைச்சு மனசை வேதனைப்படுத் திக்காதீங்க... ப்ளீஸ்!'' என்று கெஞ்சல் குரலில் சொல்ல,

''இவள் மட்டும் என் மனதில் இருப்பதை எப்படி கண்டு கொள்கிறாள்?'' என்று அந்த நேரத்திலும் அவனுக்கு ஆச்சரியம் தோன்றியது. உடனே, மனதில் இருப்பதை அறிய முடிந்ததால்தான் எளிதாக ஏமாற்றவும் முடிந்ததோ என்ற எண்ணம் தோன்ற, மனம் வலித்தது.

மனதில் ஆயிரம் கேள்விகள் அலை மோதினாலும், ஒரு கேள்விக்கு பதில் உடனே தெரிந்தாக வேண்டும் போலத் தோன்ற, அதை அவளிடமே கேட்டான்.

''உனக்கு இதய நோய் என்று சொன்னது பொய் தானே?''

அவர் கூர் பார்வையை தாங்காதவளாக தலையை குனிந்தவள், மௌனமாக 'ஆமாம்' என்பதாய் தலை அசைத்தாள்.

கண் மூடி நின்ற ஆதியின் நெஞ்சுக்குள் ஒரு இனம் புரியாத நிம்மதி பரவியது. அவள் எதற்காக வந்திருந் தாலும், அவன் அவள் மேல் வைத்த நேசம் உண்மையாது. அதனால், அவளது உயிருக்கு ஆபத்தில்லை என்ற விஷயம் அவனுக்கு நிம்மதியைத் தோற்றுவித்தது.

ஆனால்... அவள் வந்த விதம் மனதை பிழிய, ''நீ எதற்காக இங்கே வந்தாய் வந்தனா? அமைதியை தேடி வந்தவனுக்கு சந்தோஷத்தைத் தர வந்தவள் என்று நினைச்சிருந்தேனே... இப்படி என் நிம்மதியை அடி யோடு கெடுப்பதற்காக வந்தவள் என்று தெரியாமல் போச்சே... ச்சே... எத்தனை பொய்!'' என்று வெறுப்புடன் மொழிந்தவனின் கையை பற்றியவள்,

''எனக்கு இதய நோய் என்று சொன்னது மட்டும்தான் பொய் தயா... மற்றபடி என்னோட அன்பு உண்மை யானது தயா... ப்ளீஸ் தயா... என்னை நம்புங்க'', என்று கண்களில் நீரோடு கெஞ்சினாள்.

அவளது கையை உதறியவன், ''உன்னை நம்பத்தான் எனக்கும் ஆசையா இருக்கு... ஆனால் அடிப்படையே பொய் எனும்போது எப்படி நம்ப முடியும்?'' என்றபோது, அவன் குரலில் கோபத்தை விட வேதனைதான் மிஞ்சி இருந்தது.

அவன் தன்னை நம்பாததைவிட, அவன் வேதனைப் படுவது மனதை தாக்க, ''ப்ளீஸ் தயா... நான்



எல்லாத்தையும் ஆரம்பத்தில் இருந்து சொல்றேன்... அதுக்கப்புறமும் நீங்க என்னை நம்பலைன்னா, நீங்க என்ன தண்டனை கொடுத்தாலும் ஏத்துக்கறேன், ப்ளீஸ் தயா...'' என்று அவனை வேண்டியவள், அவன் அமைதி யாக இருப்பதையே அனுமதியாக எடுத்துக்கொண்டு சொல்லத் துவங்கினாள்.

* * *

வந்தனாவின் பெற்றோரான ராஜேந்திரன்-சுபத்ரா தம்பதியினருக்கு, தங்கள் செல்ல மகள் மருத்துவம் படித்து பெரிய டாக்டராக வேண்டும் என்று ஆசை. அதையே அவர்கள் சொல்லிச் சொல்லி வளர்க்க, வந்தனா வுக்குமே அந்த ஆசை தோன்றி விட்டது. கொஞ்சம் பெரியவளானதும், மற்றவரின் வேதனையை போக்கும் மருத்துவ தொழில் மீது அவளுக்கு ஒரு பெரிய மரி யாதையே வந்திருந்தது.

அழகும் அறிவும் சேர்ந்து அமைந்திருந்த தனது மகளை 'ராஜாத்தி' என்று கூப்பிடுவதோடு மட்டுமல்லா மல், அவளை ராஜாத்தியாகவே வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதுமே ராஜேந்திரனுக்கு உண்டு.

அதற்காக, தனது வருமானத்தை பெருக்கிக் கொள்ள நினைத்தவர், தங்கள் வீட்டுப்பத்திரத்தை வைத்து கடன் வாங்கி, நண்பருடன் சேர்ந்து புதிதாக தொழிலும் துவங்கி இருந்தார்.

வருமானமும் ஓரளவுக்கு நல்ல படியாக வந்து கொண் டிருந்த நேரத்தில்தான், வந்தனாவுக்கு பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வந்தது.

நல்ல மதிப்பெண்களை பெற்று ஆசிரியர்களின் ஆசியையும், நண்பர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டு, மருத்துவக் கல்லூரியில் சேரப் போகும் இனிய

கனவுகளோடு பள்ளியில் இருந்து வீட்டுக்கு வந்தவளை, ராஜேந்திரனின் உயிரற்ற உடல்தான் வரவேற்றது. ஒரு சாலை விபத்து அவரது உயிரைப் பறித்திருந்தது.

ஒன்றும் புரியாமல், மலங்க மலங்க விழித்தவளை கட்டிக்கொண்டு சுபத்ரா அழுதபோது, வந்தனாவுக்கு கண்ணீர் கூட வரவில்லை. அவ்வளவு சீக்கிரம், தன் தந்தை இறந்து விட்டார் என்பதை அவளால் நம்பக் கூட முடியவில்லை.

அதன் பின்னரும், தந்தை இறந்த அதிர்ச்சியில் அடிக்கடி மயக்கமாகி விழுந்த தாயை கவனிக்கவே அவளுக்கு நேரம் சரியாக இருந்தது. தாய் தந்தையில்லாத தன்னை மணந்து கொண்ட ராஜேந்திரனும், தங்கள் பெண் வந்தனாவும்தான் சுபத்ராவின் உலகம்.

அந்த சின்ன உலகத்தில், தான் உயிராய் நேசித்த கணவன் இல்லை என்பது, சுபத்ராவின் மன வலிமையை முற்றிலும் போக்கி இருந்தது. ஏற்கனவே பலகீனமான இதயம் கொண்டிருந்த சுபத்ராவைத் தேற்றுவதற்காக, வந்தனா தன் துயரத்தை கட்டுப்படுத்திக்கொண்டு அன்னைக்கு உறுதுணையாக நிற்க வேண்டிய நிலை.

தந்தை மறைந்து ஒரு வாரம் ஆன பின்னும், தாயின் கண்ணில் இருந்து கண்ணீர் வருவது நிற்கவில்லை என்றதும், வந்தனா தன் தாயிடம் ''அப்பா போனது நமக்குப் பெரிய இழப்புதான் அம்மா... அதுக்காக நீங்க சரியாய் சாப்பிடாமல், தூங்காமல் கண்ணீர் விட்டுட்டு இருக்கிறது, அப்பாவுக்குப் பிடிக்குமா சொல்லுங்க? அப்பாவுக்கு அழறதே பிடிக்காதேம்மா...'' என்று தேற்ற முயன்ற போதுதான், தாய் தனக்காகவும் சேர்த்துதான் அழுகிறார் என்பது வந்தனாவுக்குத் தெரிந்தது.



''அப்பாவுக்கு உன்னைப் பெரிய டாக்டர் ஆக்கி பார்க்கணும்னு ஆசை கண்ணு. இந்த வீட்டைத் தவிர நமக்கு எதுவும் இல்லைன்னு உனக்குத் தெரியும்தானே... இந்த நிலைமையில நீ எப்படி டாக்டருக்கு படிக்க...'' என்று மேலே எதுவும் பேச முடியாமல் சுபத்ரா நிறுத்திய போது வந்தனாவுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

வந்தனாவும் இரண்டு நாட்களாக இதைப் பற்றி யோசித்துக் கொண்டுதான் இருந்தாள். என்னதான் மெரிட்டில் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தாலும், செய்ய வேண்டிய செலவுகளும் நிறையவே இருக்கத்தான் செய்தன.

தந்தையின் சம்பாத்தியம் இல்லாமல் தான் மருத்துவப் படிப்பைப் படிக்க முடியுமா என்பது அவளுக்குமே சந்தேகமாகத்தான் இருந்தது.

ஆனால் அதை சொல்லி தாயை பயமுறுத்த விரும்பாமல், ''தேவா அங்கிளோடு சேர்ந்து அப்பா பிசினெஸ் செய்துட்டு இருந்தாரேம்மா... அதில் இருந்து பணம் வரும்... நம்ம ரெண்டு பேரும் மாடில இருக்கிற ரூமில் இருந்திட்டு, கீழே வாடகை விட்டுடலாம்... பணத்தை பற்றிக் கவலைப்படாதீங்கம்மா'', என்று அன்னைக்கு மட்டுமல்லாது தனக்கும் சேர்த்து ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

அந்த ஆறுதலுக்கும் ஆயுள் குறைவாகவே இருந்தது. வீட்டுப்பத்திரத்தை வைத்து தன்னிடம் ராஜேந்திரன் வாங்கிய ஐந்து லட்ச ரூபாயை வட்டியோடு செலுத்தினால்தான், அந்த வீடு இவர்களுக்குச் சொந்தம் என்று சந்திரன், கடன் கொடுத்தவர் வந்து சொன்னபோது, பெண்கள் இருவருக்குமே அடுத்து என்ன செய்வது என்று புரியவில்லை.

வந்தனா, தந்தையின் நண்பரான தேவசகாயத்திடம் உதவி கேட்ட போது, அவராலும் பெரிதாக எதுவும் செய்ய முடியவில்லை.

''இரண்டு வருஷமாதான் நானும் அப்பாவும் வேலையை விட்டுட்டு தொழில் ஆரம்பிச்சிருக்கோம்... நான் நகையை விற்று பணம் போட்டேன்... அப்பா வீட்டின் மேல் கடன் வாங்கி போட்டாரு... இப்போதான் ஒரு வருஷமாதான் மாச வருமானமே எடுக்க ஆரம்பிச்சிருக்கோம்... இப்போதைக்கு பெரிசா பணம் எடுக்க முடியாதும்மா... அப்பா போட்ட பணத்தை நான் வேணுமா மாசாமாசம் வட்டியோட கொடுத்திடறேன்'' என்று அவர் சொன்ன போது, அதுதான் அப்போதைக்கு அவரால் செய்ய முடியும் என்று உணர்ந்த வந்தனாவால் எதுவும் சொல்ல முடியவில்லை.

வீட்டை விற்றுக் கடனை அடைத்து விடலாம் என்று நினைத்தால், சந்திரன் அதற்கும் தடையாக நின்றார். வீட்டை பார்க்க வருகிறவர்களிடம் சொத்தில் வில்லங்கம் இருக்கிறது என்று சொல்லி அவர்கள் மனதை கலைத்தார். சந்திரன் மேல் கேஸ் போடலாம் என்று தேவசகாயம் சொன்ன போது, வந்தனாதான் வேண்டாம் என்றாள்.

''ஏற்கனவே ஊரில் இருக்கிற நிலத்துக்காக அப்பாவுடைய சித்தப்பா பையன் கூட கேஸ் நடக்குது அங்கிள்... உங்களுக்கு தெரியும் எவ்வளவு வருஷமா அது நடக்குது என்று... இப்போ இன்னொண்ணு எல்லாம் எங்களால் முடியாது... இப்போதைக்கு பணமும் அவசியம்... அதனால் நான் சந்திரன் சார் கிட்டே வீட்டை வாங்கிக்கறீங்களான்னு கேட்கலாம்னு நினைக்கிறேன்'', என்று வந்தனா சொன்ன போது, இந்த சின்ன வயதில் இந்த பெண



ணுக்குத்தான் எவ்வளவு சோதனை என்று அவரும் வேதனைப்பட்டார்.

பெரிய குடும்பத்தை கட்டி காக்கும் பொறுப்பில் இருந்தவருக்கு, வேதனைப்படுவதை விட வேறு எதையும் செய்யவும் முடியவில்லை. ராஜேந்திரன் வாங்கிய ஐந்து லட்சம், இரண்டு வருடத்தில் வட்டியோடு சேர்த்து எட்டு லட்சம் ஆகி இருக்கிறது என்று சந்திரன் சொன்ன போது வந்தனாவுக்கு மயக்கம் வராத குறைதான்.

என்னதான் ஊருக்கு வெளியே கட்டி இருந்த வீடு என்றாலும், குறைந்தது பதினைந்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள வீட்டை, பத்து லட்சம் என்று அடித்து பேசி, கடன் போக மீதி என்று கையில் இரண்டு லட்ச ரூபாயை சந்திரன் கொடுத்த போது, எதுவும் பேசாமல் வாங்கி கொள்ளத்தான் வந்தனாவால் முடிந்தது.

மருத்துவ படிப்பு படிக்க முடியவில்லை என்றாலும், மருத்துவம் சார்ந்த நர்சிங் படிப்பை படிக்கலாம் என்று முடிவு செய்த வந்தனா, பல்வேறு முயற்சிக்கிடையில் நர்சிங் சேர்ந்தாள். சின்னதாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, தேவசகாயம் மாதா மாதம் கொடுத்த பணத்தில் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு இருவரும் இருந்தாலும், சுபத்ராவுக்கு தங்கள் பெண் மருத்துவம் படிக்கவில்லையே என்ற வருத்தம் இருந்து கொண்டேதான் இருந்தது. வந்தனாதான் அம்மாவை தேற்றுவாள்.

அவள் இரண்டாவது ஆண்டு படிக்கும்போதே, பகுதி நேர வேலையில் சேர்ந்த போது, சுபத்ராவுக்கு மனம் ஆறவில்லை. தான் ஏதாவது வீட்டிலேயே வேலை செய்கிறேன் என்று தையல் வேலை செய்து கொடுத்தார்.

என்னதான் பெரிதாக வசதி இல்லை என்றாலும், ராஜேந்திரன் இருக்கும் வரையில் இருவரையும் எந்த குறையும் இல்லாமல்தான் வைத்திருந்தார். அதிலும், மனைவிக்கு பூஞ்சை உடம்பு என்று ரொம்பவே தாங்கு வார். அப்படிப்பட்ட அம்மா, உடல் வருத்தி வேலை செய்வது வந்தனாவுக்கும் வருத்தமாக இருந்தது.

''உங்களுக்கு ஏற்கனவே உடம்புக்கு முடியாதும்மா... இப்போ போய் எதுக்காக இந்த வேலை எல்லாம்?'' என்று வந்தனா தடை சொன்ன போது... ''நீயும் காலே ஜுக்கு போயிடறே... எனக்கு சும்மாவே உட்கார்ந் திருந்தா அப்பா ஞாபகம் வந்து மனம் சங்கடப்படுது கண்ணு'',என்று கண் கலங்க சொல்ல, அதற்கு மேல் அவரை அவள் தடுக்கவில்லை.

மூன்றாண்டு படிப்பு முடிந்து, பெரிய மருத்துவமனை யில், அவளுக்கு வேலையும் கிடைத்தது.

ஒரு நாள் தேவசகாயத்துக்கு உடல் நிலை சரியில்லை என்ற தகவல் வந்து பார்க்க போன போது, மிகவும் உடம் புக்கு முடியாத நிலையில் இருந்தார். வியாபாரத்தை கவனிக்க முடியவில்லை என்றும், வேறு யாருக்காவது கொடுத்து விட போவதாகவும் சொல்ல அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

வரும் பணத்தில் ஒரு தொகையை அவளுக்கு தருவ தாக அவர் சொன்ன போது, ''இல்லை அங்கிள். நீங்க இவ்வளவு நாள் உதவி செய்ததே பெரிசு... என்னதான் அப்பா பணம் போட்டிருந்தாலும், தொழிலுக்கு என்ன என்ன செலவாகி இருக்கும் என்று இப்போ எனக்குப் புரியுது அங்கிள்... எனக்கு நல்ல மருத்துவமனையில் வேலை கிடைச்சிருக்கு... நாங்க ரெண்டு பேர்தானே. பணத்துக்குப் பிரச்சனை இருக்காது அங்கிள்... உங்களுக்கு



பெரிய குடும்பம்... உங்களுக்குத்தான் அதிக தேவை'', என்று சொல்லி மறுத்து விட்டாள்.

மருத்துவமனையில் வேலை பார்ப்பது அவளுக்கு ரொம்பவே மனதுக்கு இதமாக இருந்தது. மருத்துவராக வேண்டும் என்ற ஆசை நிறைவேறவில்லையே என்ற எண்ணம் கூட அவளுக்குத் தோன்றுவதில்லை. எல்லோ ரிடமும் தோழமையுடன் பழகுவது வந்தனாவின் வழக்கம் என்றாலும், ஜெயா என்று அவளுடன் வேலை பார்த்த நர்ஸ் நல்ல தோழியாக ஆனாள்.

இருவரும் சேர்ந்து சாப்பிடும்போது, சாப்பாட்டோடு தங்கள் விஷயங்களையும் பகிர்ந்து கொள்ளும் அளவுக்குத் தோழிகளாக இருந்தனர். ஜெயாவுக்கு மகப்பேறு துறை யில் வேலை என்றால், வந்தனாவுக்கு இதய நோயாளி கள் இருக்கும் துறையில் வேலை. ஜெயா கூட கேட்பாள், ''ஏன் வந்தனா, நீயும் மகப்பேறு துறைக்கே வந்திருக் கலாம் இல்லை... இங்கே நச்சு நச்சுன்னு தொல்லையா இருக்குமே?'' என்று.

''எங்கே நம் தேவை அதிகமோ, அங்கே இருக்கிறது தான் எனக்குப் பிடிக்குது... ஏதோ நம்மால முடிஞ்ச அள வுக்கு உதவியா இருக்கிறது நல்லதுதானேப்பா'' என்பது தான் வந்தனாவின் பதிலாக இருக்கும்.

''உன் அளவுக்கு எனக்குப் பொறுமை இல்லைப்பா... சில சமயம் சில பேஷண்ட்ஸ் பண்ற தொல்லையை பார்த்து, ஏன்டா நர்சிங் படிச்சோம்னு இருக்கும்'', என்று ஜெயா சலித்துக் கொள்ளும்போதும், வந்தனா ஒரு புன் னகையோடு, ''எல்லா வேலையிலும் ஏதாவது ஒண்ணு இருக்கத்தான் செய்யும் ஜெயா... நாம செய்ற வேலையை சுவாரசியமா அமைச்சிக்கிறது நம்ம கைலதான் இருக்கு''. என்று சொல்லுவாள்.

ஒரு நாள் உணவு இடைவேளையின் போது, ஜெயா வாட்டத்தோடு உட்கார்ந்திருக்க, வந்தனா என்னவென்று விசாரித்தாள்.

''ப்ச்... இன்னைக்கு ஒரு வினோதமான விஷயம் காதுக்கு வந்தது வந்தனா'', என்ற ஜெயாவிடம், ''என்னப்பா... என்ன விஷயம்?'' என்றாள் வந்தனா.

''கொஞ்சம் கான்பிடன்ஷியல் விஷயம் வந்தனா... நம்ம டீன் இருக்காரே, அவரோட மனைவிதான் எங்க டிபார்ட்மென்ட் தலைமை டாக்டர்... தெரியுமில்லை?'' என்று ஜெயா கேட்க,

''ஹே... இதுதான் எல்லோருக்கும் தெரியுமே! இதுதான் கான்பிடன்ஷியல் விஷயமா?'' என்று வந்தனா கேலி செய்தாள்.

''ப்ச்... நீ வேற வந்தனா... இவ்வளவு நாள் பணம் குறைச்சலா இருக்கிறதுதான் பிரச்சனை என்று நினைச்சேன்... அதிகம் இருந்தாலும் பிரச்சனைதான் போல?'' என்று சலித்துக் கொண்டவளிடம்,

''ஏய்! என்ன விஷயம்னு சொல்லாமல், தத்துவம் பேசிகிட்டு இருக்க? என்ன விஷயம் சொல்லுப்பா!'' என்றாள் வந்தனா.

''நம்ம டீனோட நண்பர் பெரிய பிசினஸ் மேன்பா... அவரோட பையனுக்கு பிரைன் ட்யூமராம்... ஆபரேஷன் பண்ணினா பிரைன் டெத் நடக்க நிறைய சான்ஸ் இருக்குன்னு டாக்டர் நீலகண்டனே சொல்லிட்டாராம்... உடனே அந்த அப்பா, தன் மகனுக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா, தன் எக்கச்சக்க சொத்துக்கு வாரிசு இருக்காதுன்னு, வாடகைத் தாய் வழியா தன் பையனோட வாரிசு வேணும்னு டிசைட் பண்ணி மேடம்கிட்ட வாடகைத் தாய்க்கு ஏற்பாடு பண்ணச் சொல்லி இருக்காராம்''



ஜெயா சொன்னதைக் கேட்ட வந்தனாவுக்கு எரிச்சலோடு கோபமும் வந்தது.

''இது என்னப்பா அநியாயமா இருக்கு... இந்த நேரத்தில்தானே அவருக்கு குடும்பம் பக்க பலமா இருந்து தைரியம் கொடுக்கணும்... அவங்க அப்பவே இப்படி செய்தால்... ச்சே... இந்த மாதிரி நேரத்தில் வாரிசுதான் முக்கியமோ?'' என்று தோழியிடம் பொரிந்தாள்.

வந்தனாவை ஜெயா ஆச்சரியத்துடன் பார்க்க, ''என்ன பார்க்கிறே?'' என்று கொஞ்சம் எரிச்சலுடன் வந்தனா கேட்க, எப்போதும் எல்லா விஷயத்தையும் அமைதியாகவும், விவேகமாகவும் அணுகும் தோழியின் இப்போதைய எரிச்சல், ஜெயாவுக்கு மேலும் ஆச்சரியத்தை தந்தது.

''இல்லைப்பா... யாரையாவது ஒரு விஷயத்துக்காக தப்பா சொன்னால், உடனே அவங்க பக்கம் இருக்கிற நியாயத்தை எடுத்து சொல்லிட்டு இருப்பியே? இப்போ இந்த விஷயத்துக்கு இவ்வளவு கோபப்படறீயே? அதான் பார்த்தேன்'' என்றாள் ஜெயா.

''நீ சொல்றது சரிதான் ஜெயா... இப்போ கூட அந்த பெரியவருக்கு அவர் பக்க நியாயம் சரியாவே இருக்கலாம்... ஆனால் அவரோட இந்த முடிவு அவர் பையன் மனசை எந்த அளவுக்குப் பாதிக்கும்னு யோசிச்சுப் பார்க்க வேண்டாமா?'' என்றவள் ஜெயா அமைதியாக இருக்கவே தொடர்ந்தாள்.

''இந்த மாதிரி நோய் இருக்கிற ஒருத்தர் நல்ல படியா பிழைச்சு வரணும்னா, அவங்க அந்த சிகிச்சையை ரொம்ப மன தைரியத்தோட எதிர்கொள்ளணும் இல்லையா? உடல் பலத்தை விட மன பலம்தான் இப்போ முக்கியம்?'' என்று வந்தனா வினவ, ஜெயா ஆமோதிப்பதாய் தலையாட்டினாள்.

''விஷயம் கேள்விப்பட்ட உடனே கண்டிப்பா அவரோட மனசு உடைஞ்சு போய் இருக்கும்... இந்த நேரத்தில் குடும்பத்தில் இருக்கறவங்க அவங்களுக்கு கொடுக்கிற மாரல் சப்போர்ட்தான் அவங்களை சிகிச்சைக்கு நல்ல படியா தயார் செய்யும்... ஆனால், 'நீ போனாலும் பரவாயில்லை... சொத்துக்கு வாரிசு கொடுத்திட்டு போ'ன்னு சொல்ற மாதிரியான இந்த விஷயம், அந்த மனுஷன் மனசில இருக்கிற கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் அழிச்சிடாதா? அதுவுமில்லாமல், நல்ல படியா பிழைக்கறதுக்கு வாய்ப்பே இல்லைன்னு டாக்டர் சொல்லலை இல்லை?'' கோபம் குறையாமலே பேசிக் கொண்டிருந்த வந்தனாவை பார்த்த ஜெயா.

''இதுக்கே இப்படி சொல்றீயே வந்தனா... வாடகை தாயா இருக்கிற பொண்ணுக்கு, என்ன என்ன தகுதிகள் இருக்கணும்னு அவர் லிஸ்ட் போட்டிருக்கார் பாரு... அதை கேட்கணும் நீ'' என்றவள், ''பொண்ணு அழகா இருக்கணுமாம்... நல்லா படிச்சிருக்கணுமாம்... நல்ல குடும்பத்தில் இருந்து வந்திருக்கணுமாம்... அதுவும் சீக்கிரமே வேணுமாம்... இவர் ஏதோ தன் பையனுக்கு கல்யாணத்துக்கு பொண்ணு தேடற மாதிரி இல்லை?'' என்றாள் எரிச்சலுடன் மொழிய,

வந்தனாவின் மனமோ முகம் தெரியாத அந்த மனிதனுக்காகப் பரிதாபப்பட்டது. அந்த அப்பாவைப் பார்த்துச் சூடாக நான்கு கேள்விகள் கேட்க வேண்டும் போல மனம் பரபரத்தது.

வேலை முடிந்து வீட்டுக்கு வரும் வழி முழுதும், அவளுக்கு ஜெயா சொன்னதே மனதில் ஓடியது. ''பாவம்! தன் சொந்த அப்பாவே இப்படி செய்யும்போது, அவனுக்கு எப்படி இருக்கும்?'' எனறு மனம் முழுக்க அதே



யோசனையுடன் இருந்தவளுக்கு, வீட்டுக்கு வந்தவுடன் அவனைப் பற்றி நினைக்கக் கூட முடியாத அளவுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.



## 17

வாரிசுக்காக தன் பிள்ளையின் குழந்தையைப் பெற வாடகைத்தாய் தேடும், அந்த பெரியவரின் மேல் கோபமாய் இருந்த வந்தனா, தானே அந்த வாடகை தாயாக இருக்க போகிறோம் என்று கனவிலும் நினைக்கவில்லை. ஆனால் உண்மையில் அதுதான் நடந்தது.

மருத்துவமனையில் இருந்து அன்று வீடு வந்தவள், தன் தாய் மூச்சுக்கு திணறிக் கொண்டிருப்பதை பார்த்தும் உறைந்துதான் போனாள். அவசரமாக தான் வேலை செய்த மருத்துவமனையில் தாயை சேர்த்தவளுக்கு, அடுக்கடுக்காக அதிர்ச்சிகள் காத்திருந்தது.

ஏற்கனவே இதய பலகீனம் கொண்டிருந்த சுபத்ராவின் இதயம் மேலும் பழுது அடைந்திருப்பதை மருத்துவர் சொன்ன போது, அவளால் நம்பக் கூட முடியவில்லை. உடனடியாக அறுவை சிகிச்சை செய்யவில்லை என்றால், உயிருக்கு ஆபத்து என்று செரன்ன போதோ, மயக்கம் வராத குறைதான்.

அம்மா, ஏற்கனவே கொஞ்சம் பலகீனமானவர்கள் தான். ஆனால், இவ்வளவு தூரம் வரும் வரை அவர்களை தான் சரியாக கவனிக்கவில்லையே என்ற குற்ற உணர்வு அவளை வாட்டியது. கொஞ்ச நாளாகவே அம்மா சரியாக இல்லைதான்.

அப்பா ஞாபகம், தனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்ற கவலை என்று அம்மா சொன்னதை நம்பி, தான் அவரைக் கவனிக்காமல் விட்டது எவ்வளவு பெரிய தவறு என்று புரிந்து அவள் அழுதாள்.

''நீ வேணும்னு கவனிக்காம விடலைப்பா... அவங்க உனக்குத் தெரியக் கூடாதுன்னு கவனமா இருந்திருக்கும் போது நீ என்ன பண்ண முடியும்?'' என்று ஜெயா தேற்றியபோதும், அவளுக்கு சமாதானம் ஆகவில்லை.

''இன்னும் நாலு நாளைக்குள்ள ஆபரேஷன் செய்யணும் என்று சொல்றாங்க ஜெயா... எட்டு லட்சம் செலவாகும்னு டாக்டர் சொல்றாரு... இந்த இரண்டு வருஷமாதான் நான் சம்பாதிக்க ஆரம்பிச்சிருக்கேன்... இப்போ என்கிட்டே சேமிப்புன்னு பெரிசா எதுவுமில்லை ஜெயா... எப்படி பணத்துக்கு ஏற்பாடு செய்யப் போறேன்னு தெரியலை!'' என்று வந்தனா தவித்த போது, ஜெயாவுக்கும் அவளோடு சேர்ந்து வேதனைப்படத்தான் முடிந்தது.

ஊரில் உள்ள நிலத்துக்காக வழக்கு இன்னும் நடந்து கொண்டுதான் இருந்தது. அந்த நிலம் இவர்களுக்கு சாதகமாக அமைய எவ்வளவோ வாய்ப்பு இருந்தும், அப்பாவின் சித்தப்பா பையனின் திருகு வேலையால் இன்னும், வழக்கு இழுத்துக்கொண்டிருந்தது. அப்பா போன பிறகு, வந்தனாவும் அந்த வழக்கைப் பற்றி அதிகம் கண்டு கொள்ளவில்லை.

ஒரு சமயம், ஊரில் இருந்து வந்த ஒரு பெரியவர் கூட, ''வழக்கு நடந்திட்டு இருக்கு... இருந்தாலும் உங்கப்பாவுக்கு சொந்தமான நிலத்தில் உங்க சித்தப்பன் பயிரிட்டு லாபம் பார்த்திட்டு இருக்கான் வந்தனா... நீ கொஞ்சம் முயற்சி செய்தால் அந்த சொத்து உங்களுக்குக்



கிடைக்கும்'', என்று சொன்னபோது கூட அவள் அதைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை.

பணம் தேவைப்படுகிற இந்த நேரத்தில், அந்த நினைவு வர ஜெயாவிடம் அம்மாவை பார்த்துக்கொள்ளச் சொல்லி விட்டு, மதுரைக்கு சென்று பணத்துக்கு ஏற்பாடு செய்யச் சென்றவள், ஏமாற்றத்தோடுதான் திரும்பி வந்தாள்.

ஆவலாக விசாரித்த ஜெயாவிடம், ''அவர் பணம் தர மாட்டேன்னு சொல்லி இருந்தால் கூடப் பரவாயில்லை ஜெயா... அப்பாதான் அவரை ஏமாத்திட்டாராம், அதுக்குதான் அல்பாயிசில போயிட்டாராம்... இப்போ அதே மாதிரி அம்மாவும்...'' என்று மீதியை சொல்ல முடியாமல், உதட்டை கடித்து அழுகையைக் கட்டுப்படுத்த வந்தனா முயன்ற போது, ஜெயாவுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

''இந்த கடவுள் வித்தியாசமானவர் வந்தனா... பணம் இருக்கிறவங்களை ஒரு மாதிரி சோதிக்கிறார், பணம் இல்லாதவங்களை இன்னொரு விதமா சோதிக்கிறார்!'' என்று ஜெயா விரக்தியுடன் சொன்ன போது, அன்றும் அவள் இப்படி பேசியது நினைவுக்கு வர, எதையோ முடிவு செய்தது போல், வந்தனா ஜெயாவிடம் கேட்டாள்.

''நேற்று அந்த வாடகைத் தாய் விஷயம் சொன்னாயே ஜெயா... எவ்வளவு பணம் தருவாங்களாம்?'' வந்தனா இப்படி கேட்டதும், 'இப்போது எதற்கு சம்மந்தம் இல்லாமல் இதை கேட்கிறாள்?' என்று யோசித்தபடி வந்தனாவை பார்த்த ஜெயாவுக்கு, வந்தனாவின் முகத்தில் இருந்த எதோ ஒன்று விஷயத்தை தெளிவாக்கியது.

அதை நம்ப முடியாமல் வந்தனாவை பார்த்தவள், ''வந்தனா! நீ என்ன சொல்ல வரே?'' என்று கலவரத்துடன் கேட்க,

"ப்ளீஸ் ஜெயா... என்னை உங்க மேடம் கிட்ட கூட்டிட்டு போயேன்!" என்றாள் வந்தனா.

"வந்தனா... நீ... இது..." என்று தடுமாறிய ஜெயா, சமாளித்துக்கொண்டு "உன் அம்மாவை காப்பத்தறதுக்காக உன் வாழ்க்கையையே நீ பணயம் வைக்கப் போறியா?" என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்டாள்.

"ப்ளீஸ் ஜெயா... இப்போ எதையும் யோசிக்கிற நிலையில் நான் இல்லை... என் அம்மாவை எப்படியாவது காப்பாத்தணும்... அது மட்டும்தான் என் மனசில ஓடிட்டு இருக்கு... ஒரு வேளை எங்கம்மாவுக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா வாழ் நாள் முழுக்க, அவங்களை காப்பாற்ற நான் எதுவும் செய்யலைன்னு என் மனசு உறுத்திட்டே இருக்கும்", என்றவள், அதற்கு மேல் ஜெயா கெஞ்சி, கோபப்பட்டு சொன்ன எதையும் காதில் வாங்கவில்லை.

தோழியின் உறுதியை பார்த்தவள், அவளை தன் சீப் டாக்டரிடம் கூட்டிப்போனாள். அதற்கப்புறம் எல்லாமே விரைவாக நடந்தது.

யாரை பார்த்து சூடாக நான்கு கேள்விகள் கேட்க வேண்டும் என்று நினைத்தாளோ, அவரிடமே அவருடைய கேள்விகளுக்கு அமைதியாக பதில் சொல்ல வேண்டிய நிலை வந்தது.

இரண்டு நாளில் பாதியாகி இருந்த தாயை பார்த்ததும் வந்த அழுகையை கட்டுப்படுத்திக்கொண்டு, அவர் அருகில் வந்தவளை, சுபத்ராவின் மெலிந்த கைகள் வருடியது.

தாய் இருந்த அறையை நோட்டமிட்ட சுபத்ரா, "நிறைய செலவாகுமே கண்ணு... ஆபரேஷனுக்கு கூட நிறைய செலவாகும்னு பேசிட்டு இருக்காங்களே?" என்றாள். அந்த இரண்டு கேள்வியை கேட்பதற்குள், மூச்சு வாங்கியது.



அம்மாவின் கையை ஆரதவுடன் பற்றிக்கொண்ட வந்தனா, "செலவைப் பற்றி கவலைப்படாதீங்கம்மா... ரெண்டு நாளைக்கு முன்னாடி அப்பா ஊரில் இருந்த நிலத்துக்காக போட்டிருந்த கேஸ் நமக்கு சாதகமா வந்திடுச்சு அம்மா... அதில இருந்து வர பணத்துல இதெல்லாம் பார்த்துக்கலாம், நீங்க கவலைப்படாதீங்க!" என்று இதமாக சொல்ல,

ஒரு கணம் மலர்ந்த சுபத்ராவின் முகம் அடுத்த கணமே வாடியது. "அது வந்தால் உன்னோட கல்யாணத்துக்கு ஆகும் என்று நினைச்சிருந்தேனே!" என்று வாட்டமுடன் சொல்ல,

"நீங்க சரியாகிட்டு வாங்கம்மா, அதுதான் இப்போ ரொம்ப முக்கியம்... வேற எதையும் நினைச்சு மனசை குழப்பிக்காதீங்க" என்று சொன்னவள், ஒரு வார்த்தை பேசுவதற்கே அம்மா படும் பாட்டை பார்த்து விட்டு, அங்கே இருந்து எழுந்து வந்தாள்.

வெளியே வந்தவளை ஜெயாதான் வற்புறுத்தி கேண்டீனுக்கு கூட்டிச் சென்றாள். "என்னப்பா ரொம்ப நேரம் அந்த விஸ்வநாதன் பேசிட்டு இருந்தார்?" என்று விசாரிக்க,

விரக்தியுடன் புன்னகைத்த வந்தனா, "நிறைய கேள்விகள் கேட்டார்.. அம்மா ஆபரேஷன் முடிந்ததும் வேலையை..." என்றவளின் மனம் 'அது வேலையா?' என்று கேள்வி கேட்க, அதை ஒதுக்கியவள், "வேலையை செய்யறேன்னு சொன்னேன்... பணம் முழுசா கிடைச்சதும் மனம் மாறிட மாட்டாயேன்னு கேட்டார்", என்றாள்.

''ச்சே... பணம் இருந்திட்டா இப்படித்தான் பேசுவாங்க போலிருக்கு?'' என்று ஜெயா எரிச்சல் பட்ட போது, ''அவர் கேட்டதில் தப்பில்லையே ஜெயா... எட்டு லட்சம் கொடுக்க போறார்... முழுசா விசாரிக்காம கொடுக்க முடியாதே... அப்புறம் சில லீகல் பேப்பர்ல கையெழுத்து போடணும்னு சொன்னார்... சரின்னு சொல்லிட்டேன்!'' என்றாள் வந்தனா.

''திரும்பத் திரும்ப கேட்கறேன்னு தப்பா நினைக்காதே வந்தனா... நீ நல்ல யோசிச்சுதான் இந்த முடிவு எடுத் திருக்கியா? இதோட பின் விளைவுகள் எவ்வளவுன்னு உனக்கு உண்மையிலேயே புரியுதா? இதுக்கப்புறம் உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமையறதே கேள்விக் குறியா ஆகிடும்னு உனக்கு புரியுதா? இல்லையா?'' என்று அக்கறையுடன் கேட்டவளைப் பார்த்த வந்தனா வுக்குத் தோழியின் அன்பில் மனம் நெகிழ்ந்தது.

''நீ சொல்ற எல்லாமே எனக்குத் தெரியாமல் இல்லை ஜெயா... இப்போதைக்கு அம்மாவை காப்பாத்தறது மட்டும்தான் எனக்குப் பிரதானமா படுது... வேற வழியில பணம் ஏற்பாடு பண்ற அளவுக்கு நேரம் இல்லையே ஜெயா'', என்றவள்,

''அந்தப் பையனோட மனசை அவங்கப்பா வேதனைப் படுத்தறார்னு கோபப்பட்டேன்... அந்த செய்யல்ல நானும் பங்கேற்கப் போறேன்னுதான் எனக்கு வருத்தமா இருக்கு... என்ன இருந்தாலும், நம்மோட சுயநலம்தான் ஜெயிக்குது இல்லை?'' என்று சொல்லி விட்டு தோழி வருத்தப்படுவதைப் பார்க்க முடியாமல்,

''ப்ச்... என்னப்பா இது? நீ இல்லன்னா இன்னொரு பொண்ணு... எப்படியும் அந்த பெரியவர் தான் நினைச் சதை செய்யப் போறார்... இதுல உன் தவறு எதுவும்



இல்லைப்பா'', என்று ஜெயா சமாதானப்படுத்த முயன் றாள்.

அடுத்த நாள் விஸ்வநாதனின் மனைவி அவளைச் சந்திக்க வந்திருப்பதாக ஜெயா சொன்ன போது, வந்தனா வின் மனம் படபடத்தது.

விஸ்வநாதன் கேட்ட கேள்விகள் அவரை பொறுத்த வரை நியாயமானது என்றே அவள் நினைத்தாலும், பதில் சொல்லி அவள் மனம் சோர்ந்து போய்தான் இருந்தது.

இப்பொழுது இந்த அம்மா என்ன என்ன கேட்க போகி றார்களோ என்று அவள் பயந்து கொண்டேதான் அவர் இருந்த அறைக்கு வந்தாள்.

கதவை தட்டி விட்டு அவள் உள்ளே சென்ற போது, பார்த்து கொண்டிருந்த எதையோ சோபாவில் வைத்த அந்த பெண்மணி, இவளை பார்த்து மெதுவாக முறு வலித்தார். பதிலுக்கு முறுவலித்தபடியே அருகில் வந்து வணக்கம் சொல்லியவளின் கையைப் பற்றி அழைத்து தன் அருகில் அமர்த்திக்கொண்டார்.

''நான் மீனாட்சி... ஆதியின் அம்மா!'' என்று அவர் அறிமுகப்படுத்திக்கொள்ள, 'ஓ...! அவன் பெயர் ஆதியா?' என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டு, அவருக்கு தெரிந்திருக்கும் என்று தெரிந்தாலும், ''நான் வந்தனா'' என்றாள்.

''நல்ல பெயர்...'' என்றவர் கொஞ்ச நேரம் அமைதி யாக இருக்க, ''சொல்லுங்க மேடம்... ஏதோ கேட்க நினைக்கறீங்க... ஆனால் தயங்கறீங்க... பரவாயில்லை சொல்லுங்க'', என்று வந்தனா ஊக்க மீனாட்சி ஆச் சரியத்துடன் அவளைப் பார்த்தார்.

''வந்து... உங்கம்மாவுக்கு எப்போம்மா ஆபரேஷன்?'' என்று மீனாட்சி வினவியதும், வந்தனாவுக்கு அவர் சொல்ல வந்த விஷயத்தை சொல்லுவதில் இன்னமும் தயக்கம் காட்டவே, காரணம் புரியாமல் மனம் அடித்துக் கொண்டது.

''இன்னும் ரெண்டு நாளில் மேடம்...''

''இந்த குழந்தை... இந்த ஏற்பாடு'' என்று தயங்கியவர், ''இதெல்லாம் என் பிள்ளைக்கு ரொம்ப வருத்தமா இருக்கும்மா... இங்கே வந்து உன் தேவை தெரிஞ்சதுக்கப்புறம் நான் சொல்ல வந்ததை உடனே சொல்ல முடியலை'' என்றவர்,

''நீ ஆதி அப்பா கிட்ட இது முடியாதுன்னு சொல்லிடறியாம்மா?'' என்று சொன்னதும், அவள் அதிர்ச்சியுடன் பார்க்க, ''இல்லைம்மா... நான் முழு பணத்தையும் கொடுத்திடறேன்', என்று அவசரமாக சேர்த்து சொன்னார் மீனாட்சி.

''இல்லை மேடம்... உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா... நான் மறுப்பு சொல்லிடறேன்... ஆனால் பணம் தேவை இல்லை!'' என்று உறுதியாக சொன்னாலும், 'இன்னும் இரண்டு நாட்களில் எப்படி பணம் ஏற்பாடு செய்வது?' என்று தவிப்பு அவள் கண்களில் தெரிந்தது.

அவள் கண்களில் இருந்த தவிப்பு மீனாட்சியை எதோ செய்ததோ? அவள் கைகளை பற்றிக்கொண்டவர், ''இல்லைம்மா... நீ கவலைப்படாதே... இந்த ஏற்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை!'' என்று விட்டு மேலே எதுவும் பேசாமல் கிளம்பினார்.

அவர் போனதும், வந்தனா அதுவரை அடக்கி வைத்திருந்த மூச்சை வெளியிட்ட படியே எழுந்த போது,



சோபாவில் இருந்த ஒரு அட்டையின் மேல் அவளது பார்வை பட்டது.

அதை கையில் எடுத்தவளுக்கு, அது ஒரு புகைப் படத்தின் பின் பகுதி என்று புரிந்தது. அதில் எதோ எழுதி இருக்கவே, அதை படித்தாள்.

''இப்போ எதுக்காக உம்முன்னு இருக்கீங்க?

கொஞ்சம் சிரிங்க...

இன்னும் கொஞ்சம்...

ம்ம்ம்... இதுதான் சரி!

எப்பவும் இப்படித்தான் இருக்கணும்!

கீப் ஸ்மைலிங்...!'' என்று எழுதி ஒரு ஸ்மைலி வரையப்பட்டிருக்க,

அதன் கீழே ''ஐ லவ் யூம்மா... அன்புடன் ஆதி'' என்று எழுதி கையெழுத்து இடப்பட்டிருந்தது.

அதை படித்து முடித்ததும், தன் நிலை மறந்து அவள் முகத்திலுமே ஒரு புன்னகை மலர்ந்தது. எதோ நினைத்தவளாக சட்டென்று அதை திருப்பி புகைப்படத்தில் இருந்தவனைப் பார்த்தவள், கண் இமைக்கவும் மறந்து போனாள்.

புகைப்படத்திற்காக என்று இல்லாமல், எதோ ஒரு சந்தர்ப்பத்தில் வாய் விட்டுச் சிரித்த போது எடுத்த படமாக இருக்கக் கூடும் என்று அவளுக்குத் தோன்றியது.

உதடுகள் மட்டுமல்லாமல், கண்களும் சேர்ந்து சிரித்து, ''என்னோட சேர்ந்து நீயும் சிரியேன்!'' என்று அழைப்பது போலத் தோன்ற, அவளது சின்னப் புன்னகை மேலும் கொஞ்சம் விரிந்தது.

நேரில் நின்றே அவன் சிரிப்பதை போலத் தோன்றிவிட, ஆச்சரியத்துடன் அந்த புகைப்படத்தையே

பார்த்துக் கொண்டிருந்தவள், யாரோ கதவை திறக்கும் அரவம் கேட்டு நிமிர்ந்தாள்.

மீனாட்சிதான் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். சட்டென்று வந்தனாவின் கரங்கள் புகைப்படத்தை பின்னால் எடுத்து சென்று மறைத்தது வந்தனாவுக்கே அதிர்ச்சியாக இருந்தது.

''இங்கே என்னோட பையனோட போட்டோ பார்த்திட்டு இருந்தேன்மா... இங்கேயே வச்சிட்டு போயிட்டேன் போல! என்றவர், சோபாவில் தேடும்போது, இவள் திரும்பி நின்று கொண்டாள்.

தேடியது கிடைக்காமல், ''இங்கேதான் வச்ச மாதிரி ஞாபகம்... வர வர எல்லாமே மறந்து போய்டுது'' என்று அலுத்துக்கொண்ட மீனாட்சி, ''அவன் வேலை விஷயமா ரெண்டு மாசம் வெளிநாடு போகும்போது, நான் உம்முன்னு இருந்தேன் என்று என்கிட்டே அந்த போட்டோவை கொடுத்து, 'என் ஞாபகம் வரும்போதெல்லாம், இதை எடுத்து பார்த்திட்டு, படிச்சிட்டு சிரிக்கணும்... உம்முன்னே இருந்தீங்கன்னா இன்னும் ரெண்டு மாசம் கழிச்சுதான் வருவேன்'' என்று சொன்னான், என்றவரின் கண்கலங்கியது.

''ரெண்டு மாசத்தையே என்னால தாங்க முடியலை... இப்போ அவனுக்கு ஏதாவது...'' என்று சொல்ல துவங்கியவர், அதற்கு மேல் சொல்ல சக்தியில்லாமல் கண்களை மூடிக்கொண்டு கண்ணீர் வடித்தபடி நிற்க, போட்டோவை அங்கிருந்த ஒரு பைலின் கீழே வைத்த வந்தனா, மீனாட்சியின் கையை பற்றிக்கொண்டாள்.

''ப்ளீஸ் மேடம்... அழாதீங்க! அவருக்கு எதுவும் ஆகாது... நல்ல படியா பிழைச்சு வருவார்! உங்களுக்கு



பையனோட போனசா பேரக்குழந்தையும் கிடைக்கப் போகுது பாருங்க!'' என்று வந்தனா இதமாகச் சொல்ல, கண்களைத் திறந்து பார்த்த மீனாட்சி அவளை ஆச்சரியத்துடன் நோக்கினார்.

''நீ சொல்றபடிதான் நடக்கும்னு நானும் நம்பறேன்... உன்னை பார்க்கும் போது எனக்கு...'' என்று ஏதோ சொல்லத் தொடங்கியவர், சட்டென்று நிறுத்தி, ''நீ நல்ல இருக்கணும்மா!'' என்று வாழ்த்தி விட்டுச் சென்றார்.

அவர் போனதும், போட்டோவை கையில் எடுத்த வந்தனாவுக்கு குற்ற உணர்வு தோன்றியது. அவர் போட்டோவுக்காக தேடிய போது கொடுக்காமல் இருந்தது தவறு என்று தெரிந்தாலும், அதை அவள் கொடுக்காமல் இருந்ததற்கு காரணம்தான் புரியவில்லை.

ஒரு முறை அந்த போட்டோவைத் திரும்ப பார்த்தவளுக்குள் ஏதோ சக்தி பரவுவதை உணர முடிந்தது. அதை தன் பையில் பத்திரப்படுத்தி கொண்டாள்.

அம்மா இருந்த அறைக்கு வந்தவள், அம்மா தூங்கி கொண்டிருப்பதை பார்த்ததும், அவர் அருகில் வந்து அவரது கையை எடுத்து தன் கன்னத்தில் வைத்து மெல்ல அழுத்திக் கொண்டு, தன் தாயோடு மானசீகமாக பேசத் தொடங்கினாள்.

''சாரிம்மா... உங்ககிட்ட கூடச் சொல்லாமல் நான் ஒரு பெரிய வேலை செய்ய போறேன்... இப்போதைக்கு எனக்கு வேற வழி எதுவும் தெரியலைம்மா... நான் எடுத்திருக்கும் இந்த முடிவை உங்களால் தாங்கிக் கொள்ள முடியாதுன்னு எனக்குத் தெரியும்.''

''அதனால் நான் ஒரு முடிவு செஞ்சிருக்கேன்... ஆபரேஷன் முடிஞ்சு நீங்க நல்ல படியா வந்த ரெண்டு

மூணு மாசத்துக்கு அப்புறம், வெளியூர்ல வேலை கிடைச்சிருக்குன்னு சொல்லி நான் உங்களை விட்டு போகப் போறேன்... ஜெயா உங்களை நல்ல படியா பார்த்துக்குவா அம்மா! குழந்தையை அவங்க கிட்ட ஒப்படைச்ச பிறகு உங்ககிட்ட வந்திடுவேன்.''

''இந்த தற்காலிகப் பிரிவு நம்ம ரெண்டு பேருக்குமே கஷ்டமாதான் இருக்கும்... ஆனால் நிரந்தரமா உங்களைப் பிரிவதை விட இது மேல் என்றுதான் எனக்குத் தோணுது.''

''எனக்கு நீங்க வேணும் அம்மா! அதுக்காகத்தான் இதைச் செய்ய போறேன்... என்னை மன்னிச்சுடுங்கம்மா!''

மனதுக்குள் அன்னையிடம் பேசி முடித்தவளுக்கு அடக்க மாட்டாமல் கண்ணீர் வழிந்தது.

எதோ தோன்றவும், பையில் இருந்து ஆதியின் போட்டோவை எடுத்துப் பார்த்தவளுக்கு, கண்ணீர் மெல்ல அடங்கியது.

மெல்ல எழுந்து நோயாளியுடன் இருப்பவருக்கு என்று இருந்த படுக்கையில் சரிந்தவள், இந்த இரண்டு நாட்களில் முதல் முறையாக, தனக்கு பிறக்கப் போகும் குழந்தையை பற்றி நினைத்தாள்.

'எப்படி இருக்கும் அந்தக் குழந்தை? என்னைப் போலவா? இல்லை ஆதியைப் போலவா? தன் உயிரையும் உணர்வையும் சேர்த்துப் பெற போகும் குழந்தையை தூக்கி கொடுத்து விட்டு தன்னால் காலம் முழுதும் நிம்மதியாக இருக்க முடியுமா?' என்ற கேள்வி மனதை அழுத்த, சற்று முன் அடங்கி இருந்த கண்ணீர் மீண்டும் பெருகத் தொடங்கியது.

'அம்மாவுக்காக இதை செய்துதான் ஆக வேண்டும்' என்று மனதை முயன்று திடப்படுத்தியவள், ஆதியின்



போட்டோ இருந்த பையை பற்றிக்கொண்டு உறங்க முயற்சி செய்தாள்.

வந்தனா மானசீகமாக தன் தாயுடன் பேசியது, அந்த தாய் உள்ளத்தை எட்டியதோ என்னமோ? காலையில் வந்தனா விழித்தபோது, தன் குழந்தை படும் பாட்டைத் தாங்க முடியாமல், அவளுக்கு மேலும் துக்கத்தை கொடுக்க விரும்பாமல், ஏற்கனவே ஒடுங்கி போயிருந்த அந்த தாயின் இதயம், தன் இயக்கத்தை நிறுத்தி இருந்தது.

## 18

''இப்படி நீ அழுதுகிட்டே இருந்தால் உங்க அம்மா திரும்ப வந்திடப் போறாங்களா?'', இந்த இரண்டு நாட்களில், ஆயிரம் தடவையாக கேட்ட கேள்விதான் என்றாலும், வேறு எதைச் சொல்லி தேற்றுவது என்று தெரியாமல், இப்போதும் அதையே சொல்லி, அழுதழுது முகம் வீங்கி, இரண்டு நாட்களாக எதுவும் சாப்பிடாமல், தூங்காமல் சோர்ந்து போயிருந்த வந்தனாவைத் தேற்ற முயன்று கொண்டிருந்தாள் ஜெயா.

தன் தந்தை இறந்த போது, தாய்க்கு உறுதுணையாக நிற்க வேண்டிய அவசியத்தால், தன் துக்கத்தை அடக்கி கொள்ள முயன்ற வந்தனாவால் இப்போது அப்படி இருக்க இயலவில்லை.

மருத்துவமனையில் எத்தனையோ நோயாளிகளின் உறவினர்களுக்கு ஆறுதல் சொல்லும் வந்தனாவுக்கு, தன் தாயின் மரணத்தை ஏற்றுக்கொள்ளும் சக்தி இருக்கவில்லை. தான் சரியாக கவனிக்காததால்தான் தன்

தாய்க்கு இந்த நிலைமை ஏற்பட்டது என்று நினைத்து நினைத்து, அவள் இன்னும் தன்னை வருத்திக்கொள்வதை பார்த்த ஜெயாவுக்கு வேதனையாக இருந்தது.

''இங்கே பார் வந்தனா... என்ன ஆறுதல் சொன்னாலும், உன் துக்கத்தை குறைக்க முடியாதுன்னு எனக்குப் புரியுது... அதுக்காக நீ இப்படி மனசோட, உடம்பையும் போட்டு வருத்திக்கறதை என்னால் பார்க்க முடியலை... ப்ளீஸ் எனக்காக ஒரு வாய் சாப்பிடு...'' என்று வற்புறுத்தி வந்தனாவை சாப்பிட வைத்தவள்,

''நான் கிளம்பறேன்பா... ரெண்டு நாளா வீட்டுக்கும் போகலை... நீ அழுகையை நிறுத்திட்டு இன்னைக்காவது தூங்க பாரு!'' என்று சொல்லி விட்டு ஜெயா கிளம்பினாள்.

ஜெயா கிளம்பியதும், அவள் சொன்னபடி உறங்க முயற்சி செய்த வந்தனாவுக்கு தூக்கம் வர மறுத்தது. திரும்பவும், அன்னையின் நினைவில் கண்ணீர் வர ஆரம்பிக்கவே, தூக்க மாத்திரை போட்டாவது தூங்கலாம் என்று நினைத்தாள்.

அப்பாவின் நினைவில் சில சமயம் அம்மா தூக்கம் வராமல் கண்ணீர் விடும்போது, அவருக்கு கொடுப்பதற்காக என்று அவள் கைப்பையில் தூக்க மாத்திரை வைத்திருப்பது வழக்கம். அம்மா அதை அதிகம் பயன்படுத்தக் கூடாது என்று எண்ணி தன் கைப்பையில்தான் வைத்திருப்பாள்.

மாத்திரைக்காக பையில் கையை விட்டவளுக்கு ஆதியின் போட்டோ சிக்கியது. எடுத்து அதை பார்த்தவளின் மனதில் இனம் புரியாத இதம் பரவ, வேறு எதையும் நினைக்கக் கூட முடியாமல், அதை கையில் பற்றியபடியே உறங்கிப் போனாள்.



அடுத்த நாள் காலை எழுந்த போது, அம்மா இல்லாத வெறுமை மனதை தாக்கியது. வேலைக்கு போனாலாவது மனப்பாரம் குறையுமோ என்று நினைத்தவள், அமைதியாய் கிளம்பினாள்.

தலை வாரிக்கொண்டிருக்கும்போது, கதவை தட்டும் ஒலி கேட்க, யாராக இருக்கும் என்று எண்ணிக்கொண்டே வந்தவள், அங்கே நின்றிருந்த ஆடவனை பார்த்து ஒன்றும் புரியாமல் நின்றாள்.

''இங்கே வந்தனான்னு...'' என்று வந்தவன் இழுக்கவும்,

''நான்தான் வந்தனா... நீங்க யாரு?'' என்றவளிடம்,

''கொஞ்சம் உள்ளே போய் பேசலாமா?'' என்றவன், அவள் தயங்கி நிற்கவும், ''நான் விஸ்வநாதன் சார் வீட்டில் இருந்து வரேன்... என் பேர் ரகு... ஆதியின் நண்பன்'', என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான்.

அவன் அப்படிச் சொன்னதும் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தவள், உள்ளே அழைத்துச் சென்றாள்.

உள்ளே வந்தவன் கண்ணில், ஒரு பெண்மணியின் பொட்டு வைத்த போட்டோவும், அருகில இருந்த விளக்கும் பட, என்ன நடந்திருக்கும் என்று ஊகிக்க முடிந்தது. இருந்தாலும், தெளிவு படுத்திக்கொள்ள விரும்பி, ''உங்க அம்மாவுக்கு இன்னைக்குதான் ஆபரேஷன் இல்லையா?'' என்று தயக்கத்துடன் கேட்டவனை, நிமிர்ந்து பார்த்தவள், ''ஆபரேஷனுக்குத் தேவை இல்லாமல் போய் விட்டது!'' என்று கண்ணீரை அடக்கி கொண்டு பதில் சொன்னாள்.

தன் ஊகம் சரிதான் என்று நினைத்தவன், வருத்தத்துடன் ''சாரி!'' என்றான்.

கொஞ்ச நேரம் அமைதியாகக் கழிய, ''நீங்க என்ன விஷயமா வந்தீங்க?'' என்று வந்தனா விசாரித்தாள்.

"ஆதியோட அம்மா உங்க கிட்ட ஆபரேஷனுக்கான பணத்தை கொடுக்க சொல்லி அனுப்பிச்சாங்க" என்றான்.

"ஆதியோட அம்மாவா? விஸ்வநாதன் சார் லீகல் பேப்பரில் கையெழுத்து போட்ட பிறகு தரேன்னு சொல்லி இருந்தாரே..." என்றவள் ஒரு பெருமூச்சுடன், "இப்போதைக்கு பணத்துக்கு அவசியமும் இல்லை... என்னால..." என்றவளுக்கு மேலே என்ன சொல்வதென்றே புரியவில்லை.

அவளது தயக்கத்தைப் புரிந்து கொண்டு, "உங்களுக்கு பணத்துக்கு அவசியமில்லை... அங்கே விஸ்வநாதன் சார் செய்த ஏற்பாட்டுக்கும் அவசியம் இல்லாமல் போய் விட்டது", என்று ரகு சொன்னவுடன்,

"அப்படின்னா!? ஆதி... அவருக்கு எதுவும் ஆகலையே?" என்று அதீத பதட்டத்துடன் விசாரித்தவளை, ரகு ஆச்சரியத்துடன் பார்த்தான்.

அவன் அமைதியாக இருப்பதைப் பார்த்து அவள் பதட்டம் அதிகமாவதை பார்த்தவன், "ஆதிக்கு ஒண்ணுமில்லை!" என்று அவசரமாகச் சொன்னான்.

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் அவனைப் பார்த்தவள், "பின்னே?" என்று கேள்வியாக இழுக்க,

"ஆதி வீட்டை விட்டு போய்ட்டான்!" என்றதும், அவளுக்கு மீண்டும் பதட்டம் தொற்றிக்கொண்டது.

"எங்கே? எங்கே போனார்? இந்த நேரத்தில் அவரை எப்படித் தனியா விட்டீங்க?" என்று வந்தனா படபடவென்று கேள்விகளை அடுக்க, ரகுவின் ஆச்சரியம் கூடியது. 'இவளுக்கு முன்பே ஆதியை தெரியுமா என்ன?' என்ற கேள்வி பிறக்க, அதை வாய் விட்டும் கேட்டான்.

அவன் அப்படி கேட்டதும்தான் தான் ஆதியை பார்த்ததே இல்லை என்று வந்தனாவுக்குத் தோன்றியது. யோச



னைக்குப் பிறகு, 'இல்லை' என்பதாய் தலை அசைத்த வந்தனாவை விசித்திரமாக பார்த்தபடி நின்றான் ரகு.

"சொல்லுங்க சார்... இந்த நேரத்தில எப்படி அவரை தனியா விட்டீங்க?" என்று மறுபடியும் வந்தனா கேட்க,

"இல்லைங்க... அவன் யார் கிட்டயும் சொல்லாமல் லெட்டர் எழுதி வச்சிட்டு போய்ட்டான்" என்றான்.

"இன்னும் ரெண்டு மூணு மாசத்தில ஆபரேஷன் இருக்கே சார்? அதுவரைக்கும் அவர் அமைதியா இருக்கிறதுதான் நல்லது... இப்போ போய்... நீங்க அவர் பிரண்டுன்னு சொல்றீங்க... உங்களுக்குக் கூடத் தெரியாம எப்படி போனார்?" என்று வந்தனா கேட்டதும் ரகுவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

ஆனாலும் அவள் அக்கறையுடன் கேட்பது புரிந்து, "இல்லைங்க... எனக்கும் தெரியாது... கொஞ்ச நாள் எதை பற்றியும் நினைக்காமல் நிம்மதியா இருந்திட்டு வரேன்னு எழுதி வச்சிட்டு போய் இருக்கான்... ஆபரேஷனுக்கு வந்திடுவான்" என்றான்.

"இந்த குழந்தை... இந்த ஏற்பாடு பிடிக்காமல்தான் போய்ட்டாரா? இந்த மாதிரி நேரத்தில குடும்பத்தோட இருக்கிறதுதானே சப்போர்ட்டா இருக்கும்... அவர் போனதுக்கு ஒரு விதத்துல நானும் காரணம் இல்லையா? அவங்க அம்மா ரொம்ப மனசு ஒடிஞ்சு போய் இருப்பாங்களே?" என்று வருத்தத்துடன் கேட்டவளை பார்த்தவனுக்கு, அம்மாவை இழந்த இந்த நிலையிலும், மற்றவரைப் பற்றி யோசிக்கிறாளே என்ற ஆச்சரியம் தோன்றியது.

"அப்படி இல்லை... நீங்க வருத்தப்படாதீங்க... நீங்க இல்லன்னா வேறொரு ஏற்பாடு பண்ணி இருப்பார் அவங்க அப்பா" என்று அவளைத் தேற்றினான்.

''அவர் எங்கே போய் இருப்பார்னு உங்களுக்கு ஏதாவது க்ளூ இருக்கா? எனக்கு என்னவோ மனசு தவிப்பாவே இருக்கு!'' என்றாள்.

அவள் தவிப்பைப் பார்த்தவனுக்கு, இன்னும் கொஞ்ச நேரம் இவளுடன் பேசிக்கொண்டிருந்தால், உண்மையை சொல்லி விடுவோம் என்று தோன்றியது.

அது, அவள் ஆதியை பற்றி அக்கறையாய் விசாரிப்பதாலா என்னமோ, அவனுக்கும் அவளை பார்க்கும்போது ஒரு இனம் புரியாத பாசம் ஏற்பட, ''அவன் நல்ல இடத்தில்தான் இருப்பான்... நீங்க வருத்தப்படாதீங்க'' என்று ஆறுதலாகச் சொன்னவன்,

''டேக் கேர்... ஏதாவது உதவி தேவை என்றால் என்னைக் கூப்பிடுங்க...'' என்று சொல்லி தன் எண்ணை கொடுத்து விட்டு, அவளது கைப்பேசி எண்ணையும் வாங்கிக் கொண்டு கிளம்பினான்.

ரகு கிளம்பிப் போனதும், கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருந்த வந்தனாவுக்கு குற்ற உணர்வு தலை தூக்கியது. அன்றே, ஆதி அம்மா சொன்னது போல் இந்த ஏற்பாட்டுக்கு மறுப்பு தெரிவித்திருந்தால், ஆதி வீட்டை விட்டு போய் இருக்க மாட்டானோ?

என்னதான் அவன் அப்பா, இன்னொரு வழி கண்டு பிடித்திருப்பார் என்றாலும், அவருடைய நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஆள் கிடைக்கக் கொஞ்ச நாள் ஆகி இருக்குமே. அதுவரையாவது அவன் இங்கேயே இருந்திருப்பான். இப்பொழுது எங்கே போய், என்ன செய்கிறானோ... தனியே தன் துன்பத்தில் உழல்கிறானோ? என்றெல்லாம் எண்ணி எண்ணி இவள் இங்கே தவித்துக்கொண்டிருந்தாள்.



ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருக்க முடியாமல், அவளது தவிப்பை ஜெயாவின் போன் அழைப்பு தற்காலிகமாக நிறுத்தியது.

''வந்தனா! சாப்பிட்டாயா? வீட்டிலேயே அடைஞ்சு கிடக்கறது இன்னும் வருத்தமாத்தான் இருக்கும்... ஹாஸ்பிடல் வரியா? என்று தோழியின் அக்கறையில் மனம் நெகிழ்ந்தவள், ''இதோ... ஹாஸ்பிடலுக்குத்தான் கிளம்பிட்டு இருக்கேன்... வாரேன்'' என்று சொல்லி விட்டு அழைப்பை துண்டித்தாள்.

மருத்துவமனைக்கு சென்று வேலையை கவனித்து, மனதை அரித்துக்கொண்டிருந்த வேதனையை முழுதாக போக்கா விட்டாலும், காயத்துக்கு மருந்து தடவியதை போல கொஞ்சம் இதமாக இருந்தது.

ஏதோ வேலையாக வரவேற்பறைக்கு வந்தவள், அங்கே சோர்ந்து போய் அமர்ந்திருந்த மீனாட்சி அம்மாவை பார்த்ததும் அவரிடம் விரைந்து சென்றாள்.

''என்ன மேடம்... என்ன ஆச்சு?'' என்று அக்கறையுடன் விசாரித்தவளை பார்த்த மீனாட்சியின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

''ஆதி லெட்டர் எழுதி வச்சிட்டு வீட்டை விட்டு போய்ட்டான்'' என்றவர் ''ஆதி வீட்டை விட்டுப் போன வருத்தத்தில, உன்னை மறந்தே போயிட்டேன்மா... இங்கே வரும் போதுதான் உன்னைப் பற்றி விசாரித்தேன்... அம்மாவோட விஷயம் சொன்னாங்க... மனசுக்கு வருத்தமா இருந்தது'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் மீனாட்சி சொல்ல, வந்தனாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

மீனாட்சி அம்மா பணம் கொடுக்க சொன்னார் என்று ரகு சொன்னாரே என்று எண்ணியவள், தனது

சந்தேகத்தை புறம் தள்ளி, மீனாட்சியின் கைகளை பற்றிக்கொண்டு, ''கவலைப்படாதீங்க மேடம்... அவர் நல்ல படியாதான் இருப்பார்... சீக்கிரமே உங்களைத் தேடி வந்திடுவார்'' என்று ஆறுதல் படுத்த, மீனாட்சி அவளை ஆச்சரியத்துடன் நோக்கினார்.

இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போதே அங்கே வந்த ரகு, வந்தனாவை பார்த்ததும் திகைத்து நின்றான். பதிலுக்கு குற்றம் சாட்டும் பார்வையோடு, வந்தனா அவனை பார்த்துக்கொண்டு நின்றாள்.

சமாளித்துக்கொண்ட ரகு, ''போகலாமாம்மா?'' என்று கேட்ட படி மீனாட்சியை பார்க்க, அவரும் வந்தனாவின் கையை ஆறுதலுடன் தட்டிக் கொடுத்து விட்டுக் கிளம்பினார்.

தன் பிளாட்டுக்கு வந்த ரகுவுக்கு, வந்தனாவிடம் இருந்து கைப்பேசியில் அழைப்பு வந்தது. எதிர்பார்த்தது தான் என்றாலும், அவளிடம் என்ன பேசுவது என்று புரியாமல் அவன் அழைப்பை எடுக்காமல் இருக்க, கொஞ்ச நேரத்தில் திரும்பவும் அழைப்பு வந்தது.

ஒரு பெருமூச்சோடு எடுத்தவனிடம், ''உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்... எப்ப பார்க்கலாம்?'' என்று வந்தனா வினவ, ''நாளைக்கு காலையில் வீட்டுக்கு வரேன்!'' என்று சொன்னவன் வேறு எதுவும் பேசாமல் போனை வைத்தான்.

அடுத்த நாள் அவன் வந்தனாவின் வீட்டுக்குச் சென்ற போது, ''நேற்று நீங்க சொன்னது பொய் என்று தெரிஞ்சு போச்சு... அதைப் பற்றிப் பேச வேண்டாம்... ஆதிதான் என்னிடம் பணம் கொடுக்க சொல்லி சொல்லிட்டு போய் இருக்கார் இல்லையா? அப்போ, அவர் போய் இருக்கிற



இடமும் உங்களுக்குத் தெரியும்?'' என்று நேரடியாக வந்தனா கேட்ட போது ரகு முதலில் எதுவும் பேசவில்லை.

''ஆதி இங்கே இருந்து போனதில எனக்கும் பங்கு இருக்குன்னு குற்ற உணர்வா இருக்கு... இந்த நேரத்தில் தான் அவருக்கு எல்லாரும் சப்போர்ட்டா இருக்கணும்... இந்த நேரத்தில தனியா போய்...'' என்று தவிப்போடு அவள் புலம்ப,

''அவன் இங்கே இருந்து போனதுக்கு அது மட்டும் காரணமில்லை வந்தனா... அவன் மனசளவில் ரொம்ப ஓய்ந்து போய் இருக்கான்... இங்கே இருந்து எல்லாரையும் பார்க்கும்போது, அவனுடைய நோயை பற்றி நினைவு ஒவ்வொரு நிமிஷமும் மனசில வந்திட்டே இருக்குன்னு தான் போய் இருக்கான்!'' என்று ரகு ஆறுதலாகச் சொன்னான்.

''ஆபரேஷனுக்கு கண்டிப்பா வந்திடுவார் இல்லை?'' என்ற வந்தனாவின் கேள்வி அவனைக் கொஞ்சம் யோசிக்க வைத்தது.

''என்ன யோசிக்கறீங்க?'' பதட்டத்துடன் வந்தனா கேட்டவுடன், ''எனக்கும் அவனோட பேசும்போது இந்த சந்தேகம் வருது... ஆதியோட இத்தனை வருஷ பழக்கத்தில, அவனோட மனசை என்னால புரிஞ்சிக்க முடியும்... அவன் மனசில வேற எதோ எண்ணம் இருக்கிற மாதிரி எனக்குச் சந்தேகமா இருக்கு'' என்று ரகு சொல்லிக்கொண்டிருக்கும்போதே,

''ஓ...! சந்தேகம் இருந்தும் அவரைத் தனியா அனுப்பி வச்சிட்டீங்களா? இங்கே இருந்து போனவர் அங்கே இருந்தும் உங்களுக்குத் தெரியாமல் வேறு எங்கேயாவது போய்ட்டால் என்ன செய்வீங்க?'' என்று வந்தனா ஆத்திரத்துடன் குறுக்கிட,

''இல்லைம்மா... அங்கே அவனோட நடமாட்டத்தை கண்காணிக்க நம்பிக்கையான ஆளை ஏற்பாடு பண்ணி இருக்கேன்'' என்றான் ரகு.

''சாரி!'' என்று இறங்கிய குரலில் சொன்னவள், ''எனக்கு இல்லாத அக்கறை உனக்கென்ன வந்ததுன்னு உங்களுக்குத் தோணலாம்! இதுக்கு என்னால பதில் சொல்ல முடியாது... ஏன்னா எனக்கே என்ன காரணம்னு புரியலை... அவரை பார்க்கிற வரை இந்த தவிப்பு இருந்துகிட்டே இருக்கும் என்று மட்டும் புரியுது!'' என்று வந்தனா தவிப்புடன் சொன்ன போது, ரகுவுக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

''ஆதி எங்கே போய் இருக்கார்னு உங்களால் சொல்ல முடியுமா? வந்து... அவருக்கு ஆபரேஷன் செய்யறதில தயக்கம் இருக்குன்னு சொல்றீங்க... இந்த நேரத்தில சிகிச்சையை நல்ல படியா எதிர்கொள்ள அவரை தயார் செய்யறதுதான் நல்லது... இந்த நேரத்தில தனியா இருக்கிறது நல்லதில்லை... நான் அங்கே போய் என்னால் முடிஞ்ச அளவுக்கு நம்பிக்கை தர முயற்சி செய்வேன்... சொல்றீங்களா? ப்ளீஸ்!'' என்று தயக்கத்துடன் கேட்டவளை ரகு ஆச்சரியத்துடன் நோக்கினான்.

''அவன் இருக்கிற இடத்தை யாருக்கும் சொல்ல மாட்டேன்னு நான் அவனுக்கு ப்ராமிஸ் செஞ்சிருக்கேன்'' என்றான்.

''ப்ளீஸ் சார்! உங்க சத்தியத்தை விட அவர் இங்கே சிகிச்சை செஞ்சுக்க வருவதுதானே முக்கியம்... நீங்களே சொல்லுங்க! அதுவுமில்லாமல் எனக்கும் அம்மா போனதில் இருந்து, இங்கே இருக்கவே முடியலை... அங்கே போறது எனக்குமே ஒரு மாறுதலா இருக்கும்னு நினைக்கிறேன்!'' என்று வந்தனா சொன்னவுடன்,



ஒரு நிமிடம் யோசித்த ரகு, ''ஆதி எங்கே போய் இருக்கான்னு நான் உன்கிட்ட சொல்றேன்... நீ அங்கே போய் அவனை பார்க்கலாம்... பழகலாம்... ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும், அவனோட நிலை தெரிஞ்ச மாதிரி நடந்துக்கக் கூடாது!'' என்று சொன்னவன்,

சற்று முன் அவள் மேல் எழுந்த பாச உணர்வின் காரணமாக, தான் அவளை ஒருமையில் அழைப்பதை அப்போதுதான் உணர்ந்து ''சாரி! வா போன்னு பேசிட்டேன்'' என்றான்.

அவன் ஆதி இருக்கும் இடத்தைப் பற்றிச் சொல்கிறேன் என்றதும், சந்தோஷமடைந்த வந்தனா, அவன் தன்னை ஒருமையில் அழைத்ததை உணரவே இல்லை.

அவன் சாரி சொன்னதும், ''பரவாயில்லை... நீங்க அப்படியே கூப்பிடலாம்... எனக்குமே உங்களை பார்க்கும் போதே ஒரு அண்ணன் மாதிரிதான் தோணுது'' என்ற போது, ரகுவுக்கு மனம் நெகிழ்ந்தது.

''ஆதியோட அப்பா, அந்த ஏற்பாட்டில் ரொம்ப உறுதியா இருந்தாரே... உங்களை அவர் எதுவும் விசாரிக்கலையா?'' என்று வந்தனா விசாரித்த போது,

''ஹூம்... நிறைய விசாரிச்சார்... ஆதி வேற அவருக்கு பயமுறுத்தலா ஒரு லெட்டர் எழுதி இருந்தான்... அதனால் அவரால் என்கிட்டே விசாரிப்பதை தவிர வேறு எதுவும் பெரிசா பண்ண முடியலை... இதோ இங்கே வரும்போது கூட, காரை ஒரு க்ளைன்ட் ஆபீஸில் நிக்க வச்சிட்டு ஆட்டோ பிடிச்சுதான் வந்தேன்'' என்றவன் ஒரு பெருமூச்சோடு,

''ஆதி போனதில் இருந்து அம்மாவுக்கு உடம்பு சரி இல்லை... அப்பா கூட பேசறதை கூட நிறுத்திட்டாங்க..

நான்தான் நேத்து வற்புறுத்தி ஹாஸ்பிடலுக்கு கூப்பிட்டு வந்தேன்'' என்றான்.

''உங்களை மாதிரி ஒரு நண்பர் கிடைக்க ஆதி கொடுத்து வச்சிருக்கணும்னு தோணுது!'' என்று வந்தனா சொல்ல,

''இல்லை வந்தனா... அவனை மாதிரி ஒரு நண்பன் கிடைக்க நான்தான் கொடுத்து வச்சிருக்கேன்... அவனாலதான் எனக்கு சமூகத்தில இந்த அளவுக்கு ஒரு இடம் கிடைச்சிருக்கு... அதுவுமில்லாமல், என்னையும் தன் மகனா நினைக்கிற அம்மா கிடைச்சிருக்காங்க...'' என்று பெருமிதத்துடன் சொன்ன ரகுவிடம்,

''ஆதியோட அம்மா உங்களை எதுவும் கேட்கலையா? உங்களுக்கு ஆதி எங்கே போய் இருக்கார்னு தெரியும் என்று அவங்களுக்கு சந்தேகமே வரலையா?'' என்று வந்தனா வினவினாள்.

''அவங்களுக்கு கண்டிப்பா சந்தேகம் இருக்கும்! ஆனால் என்னை எதுவும் கேட்கலை... என்னை பொய் சொல்ல வைக்க வேண்டாம்னு நினைச்சிருப்பாங்க... அதுவும் இல்லாமல், ஆதி இங்கே இருந்து வேதனை படறதை விட கொஞ்ச நாள் எங்கேயாவது அமைதியா இருந்திட்டு வரட்டும்னு அவங்களே நினைக்கிறாங்கன்னு நினைக்கிறேன்... என்னதான் நினைச்சாலும், அவன் இல்லாத வீடு அவங்களுக்கு வெறுமையாதான் இருக்கு... அதுதான் உடலையும் பாதிக்குது'' என்று வருத்தத்துடன் சொன்னவன்,

''எப்படியாவது ஆதியை ஆபரேஷனுக்குள்ள இங்கே கூட்டிட்டு வருவது உன் பொறுப்பு வந்தனா!'' என்று பொறுப்பை அவளிடம் ஒப்படைக்க,



''கண்டிப்பா அண்ணா!'' என்று வந்தனா உறுதியுடன் சொல்ல, ரகுவும் சந்தோஷத்துடன் புன்னகைத்தான்.

ரகு அன்னை இல்லத்தில் பேசி வேலைக்கு ஏற்பாடு செய்தான்.

முதலில் இரண்டு நாட்கள், அவனை நேரடியாக சந்திக்காமல், அவனுடைய தினப்படி வழக்கத்தை பார்க்க விரும்புவதாக வந்தனா சொல்ல, ரகு அதற்கான ஏற்பாட்டை செய்து கொடுத்தான்.

போக வேண்டும் என்று உறுதியாக முடிவெடுத்து இருந்தாலும், ஒரு வித படபடப்புடனே வந்தனா சென்னையில் இருந்து கோவைக்கு புறப்பட்டாள்.

தன்னை ஆதியிடம் இழுத்துச் செல்லும் சக்தி எதுவென்றே புரியாமலே அந்த ரயில் பயணம் கழிய, அந்த சக்தி என்னவென்று முழுமையாக உணர்ந்த போது, அவள் உண்மையிலேயே அதிர்ந்துதான் போனாள்.

## 19

வந்தனா ஆதியை முதல் முதலில் பார்த்தது, பூங்காவில் ஒரு குழந்தையோடு சிரித்தபடி விளையாடிக் கொண்டிருக்கும்போதுதான்.

அவனது உள்ளும் புறமும் மலர்ந்த சிரிப்பை புகைப்படத்தில் கண்டிருந்தவளுக்கு, இப்போது அவன் இதழ்கள் சிரித்தபடி இருந்தாலும், கண்களில் வலி குடி கொண்டிருந்ததை உணர முடிந்தது. ''கடவுளே பழைய மாதிரி இந்த கண்களில் சிரிப்பை மீட்டுத்தா!'' என்று அவளது உள்ளம் வேண்டியது.

குழந்தையோடு குழந்தையாக அவன் விளையாடியது மனதை மகிழ்விக்க, கொஞ்ச தூரத்தில் இருந்து இரு வரும் விளையாடிக் கொண்டிருப்பதை பார்த்தவளின் மனமும் அவர்களது விளையாட்டில் லயித்தது.

சிரித்தபடி இருந்தவன் முகத்தில் திடீரென்று வாட்ட மும் ஏக்கமும் தென்படவே, காரணம் என்னவென்று அறிய அவன் பார்வை பதிந்திருந்த இடத்துக்கு தன் பார்வையை திருப்பியவளின் மனம் உருகிப் போனது. அங்கே கணவன் மனைவி இருவர் தங்கள் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது.

அவன் முகத்தில் இருந்த ஏக்கம் மனதைத் தொட, 'நான் இருக்கும்போது நீ ஏன்டா கவலைப்படுகிறாய்?' என்று மனதுக்குள் சொல்லியபடியே, தன்னை மீறி இரண்டு அடி அவனை நோக்கி எடுத்து வைத்தவள் திகைத்து நின்றாள்.

இத்தனை நாளாய், தான் ஏன் ஆதியை தேடிப் போக வேண்டும் என்று மனம் கேட்டுக் கொண்டிருந்த கேள் விக்கு விடை கிடைத்ததை போல இருந்தது. இது நடை முறைக்கு ஒத்துவருமா? என்ற கேள்விக்கெல்லாம் அவளிடம் விடை இல்லை.

அமைதியாக பூங்காவை விட்டு வெளியேறியவள் தான் தங்கி இருந்து இடத்தை அடைந்து, தன் மனதை முழுமையாக ஆராய ஆரம்பித்தாள்.

என்ன யோசித்தும், இந்த நேசம் எப்போது ஆரம் பித்தது என்பதை அவளால் கண்டறிய முடியவில்லை. ஒருவேளை அவன் மேல் இருந்த பரிதாபம் அன்பாக மாறிப் போனதா? என்று யோசித்தவளுக்கு, 'இல்லை' என்று பதிலே அழுத்தமாக கிடைத்தது.



வந்தனா, இதுவரை எத்தனையோ நோயாளிகளோடு பழகி இருக்கிறாள். அவர்கள் வலியிலும், வேதனை யிலும் துன்பப்படும்போது, அவர்கள் துன்பத்தைப் போக்கத் தன்னால் இயன்றதை செய்ய வேண்டும் என்று எண்ணி இருக்கிறாளே தவிர, அவர்கள் துன்பத்தை தன் துன்பமாக நினைத்ததில்லை.

ஆனால், இப்பொழுது ஆதியின் வேதனையை தன் னுடையதாக எண்ணித்தான் அவள் மனம் கலங்கிக் கொண் டிருந்தது. அவன் துன்பத்தைப் போக்க என்ன செய்ய வேண்டி இருந்தாலும், அதைச் செய்ய மனம் தயாராக இருந்தது.

இதற்குக் காரணம் காதலே அன்றி வேறென்னவாக இருக்க முடியும்!

அம்மா இறந்து அவள் வேதனைப்பட்டுக் கொண் டிருந்த நேரத்திலும், அவனது புகைப்படம் அவளுக்கு இதம் தந்ததற்கான காரணம் இப்போது தெளிவாகப் புரிந்தது.

அவளது மனதை முழுமையாக கண்டு கொண்ட அந்த நேரத்தில், அவளது மனதில் பூவாய் மலர்ந்திருந்த நேசம், மனதை நிறைத்ததோடு அவளது முகத்திலும் புன்னகை என்னும் வாசத்தை நிரப்பியது.

கண்களை மூடி காதல் உணர்வு தந்த சுகத்தை அனு பவித்தாள். அந்த சுகத்தை, ஆதியின் நோய் பற்றிய எண்ணத்தால் கூட தடை செய்ய முடியவில்லை.

இங்கே வரும்போது, ஆதியுடன் ஒரு நல்ல நட்டை உருவாக்கிக் கொண்டு, அறுவை சிகிச்சைக்கு முன் அவன் மனதில் ஒரு நம்பிக்கையை உருவாக்க வேண்டும் என் பதுதான் அவளது எண்ணமாக இருந்தது.

ஆனால், இங்கே வந்து அவனைப் பார்த்ததும், அவனோடு தன் வாழ்க்கையை பகிர்ந்து கொண்டு, தன்னால் ஆன சந்தோஷத்தை எல்லாம் அவனுக்குத் தர வேண்டும் என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

இப்படி யோசித்துக்கொண்டிருக்கும்போதே, 'முட்டாள்... நீதான் அவனை விரும்புகிறாய். அவன் எப்போது இருக்கும் நிலையில் காதலைப் பற்றி எல்லாம் அவனால் நினைக்கக் கூட முடியாதே' என்று மனசாட்சி அவளைக் குட்டியது.

வாடிய மனதை சரி செய்து கொண்டவள், தான் முன்பு நினைத்து வந்த வேலையையே செய்யலாம் என்று முடிவெடுத்துதான், அடுத்த நாள் அன்னை இல்லத்துக்குச் சென்றாள்.

முதல் நாள் தன்னை பார்த்த போது, ஆதி தன்னை மறந்து நின்ற கோலம் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. தன்னைப் பார்த்ததும், அவனுக்குள்ளும் பாதிப்புத் தோன்றியதை அறிந்த அவளால் அன்று தூங்கவே முடியவில்லை.

நட்பாகப் பழக வேண்டும் என்ற எண்ணத்தையும் மீறி, அவளது நேசம் அவளது சில வார்த்தைகளில், செய்கைகளில் அவ்வப்போது வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு நாள் நன்றாக பேசினால், அடுத்த நாள் அவன் முகத்தைத் திருப்பி கொள்வதற்கான காரணமும் அவள் அறியாதது அல்ல!

ஆனால், தான் அவனை விரும்புவதாலேயே, அவனும் தன்னை விரும்புகிறான் என்று நினைக்கிறோமே என்று சந்தேகமும் தோன்றாமல் இல்லை.

அவளுக்கு அடிபட்ட அன்று, அவன் பதறியதைப் பார்த்த போது, அவளுக்கு இருந்த சந்தேகம் விலகியது.



அதுவரை, மனதின் அடியில் மறைந்து இருந்த நேசம், திரும்பவும் மேலே வந்தது. அவனும் தன்னை விரும்புகிற பட்சத்தில் அவனோடுதான் தன் வாழ்வு என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

அவன் இல்லத்துக்கு வராமல், அவனைப் பார்க்காமல் இருந்த அந்த இரண்டு நாட்களில் அவளின் முடிவு மேலும் உறுதியாகியது.

அவன் வாய் வழியாகவே, அவன் தன் மேல் கொண்ட நேசத்தை அறிந்தவளுக்கு, திருமணம் என்பதை தள்ளிப் போட விரும்பவில்லை. அவன், திருமணத்துக்கு ஒத்துக் கொள்ள மாட்டான் என்பதும் அவள் அறிந்ததே.

ஆனால், அவன் மனதை எந்த வித சந்தேகத்துக்கும் இடமில்லாமல், முழுமையாக அறிந்த அன்று அவனோடு எதிர்மறையாக எதுவும் பேச வேண்டாம் என்றுதான் அவள் அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

ஆனல், அவன் அவ்வளவு சீக்கிரம் அங்கே இருந்து போக முயல்வான் என்று அவள் நினைக்கவில்லை. ஆதியோடு, பேசிவிட்டு வந்த அடுத்த நாள் காலையிலேயே ரகு அவளை அழைத்தான்.

இவ்வளவு காலையில் ரகு போன் செய்கிறானே என்று கொஞ்சம் பதட்டத்துடன் அவள் அழைப்பை எடுத்தாள்.

அவள் எதுவும் பேசுவதற்கு முன்பே, ''என்னமா? என்ன நடந்தது அங்கே? எதுக்கு ஆதி உடனே அங்கே இருந்து கிளம்பணும் என்று சொல்கிறான்?'' என்று அடுக்கடுக்காக ரகு கேள்விகளை கேட்க, ஆதியின் எண்ணம் வந்தனாவுக்குப் புரிந்தது.

''சொல்றேன் அண்ணா... ஆதி என்ன சொன்னார்னு கொஞ்சம் சொல்லுங்க'', என்றவள், ரகு ஆதி தன்னிடம் சொன்னதை எல்லாம் சொன்ன பிறகு.

''வண்டியை ஒரு அரை மணி நேரம் லேட்டாக அனுப்ப முடியுமா அண்ணா? நான் ஆதி வீட்டுக்குத் தான் போகிறேன்... நான் போய் பேசிய பிறகு அவர் கிளம்ப மாட்டார் என்றுதான் நினைக்கிறேன்... மற்ற விஷயங்களை அப்புறம் சொல்கிறேனே ப்ளீஸ்'' என்று வந்தனா சொன்ன பிறகு, வேறு எதையும் கேட்காமல் ரகுவும் அவளது வேண்டுகோள் படி வண்டியை அனுப்புவதாக சொல்லி விட்டு போனை வைத்தான்.

ரகுவிடம் பேசி விட்டு வைத்த பிறகு, வந்தனா கொஞ்சம் நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். வந்தனாவின் வாழ்வு தன்னால் கெட்டுப்போகக் கூடாது என்று ஆதி நினைப்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. அவன் அப்படி நினைத்ததே, அவள் அவன்பால் கொண்டிருந்த நேசத்தை அதிகப்படுத்தியது.

ஒரு முடிவுடன், தனது அன்னையின் ரிப்போர்ட்களை ஒரு பையில் எடுத்து வைத்தவள், ஆதியை பார்க்க கிளம்பினாள்.

தன் மேல் நேசம் கொண்டிருந்த ஆதிக்கு, தான் சொல்லும் விஷயம், மன வேதனையை அளிக்கும் என்று அவளுக்குத் தெரிந்தேதான் இருந்தது. ஆனால், அந்த வேதனையை தன்னுடைய அன்பினால் துடைத்திட முடியும் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது.

ஆதியிடம் சென்று தனக்கு இதய நோய் என்றும் சிகிச்சையால் பயனில்லை என்றும் பொய் சொன்ன போது, அவளுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால், இந்த பொய்யினால் அவர்கள் இருவருக்குமே நன்மை தான் விளையப் போகிறது என்பதை நினைத்து, தன் வருத்தத்தை மறந்தாள்.



அதைச் சொன்ன போது அவன் மனம் வேதனைப்பட்டதை பார்த்தவள், 'இந்த ஒரு முறை என்னை மன்னிச்சிடுங்க ஆதி... இனிமேல் வேதனையின் நிழலை கூட உங்கள் மேல் பட விடமாட்டேன்' என்று மனதுக்குள் உறுதி எடுத்துக்கொண்டாள்.

உங்கள் முடிவு எதுவானாலும் சரி என்று சொல்லி விட்டு வெளியே வந்தவள், வெளியே வந்து மறைந்து நின்று கொண்டிருந்தாள்.

அவள் அன்னையின் ரிப்போர்ட்டை அவனிடம் அவள் கொடுத்ததற்கும் ஒரு காரணம் இருந்தது. தங்களுடைய காதலுக்கு தான் வைக்கும் ஒரு சோதனையாகதான் அவள் நினைத்தாள்.

இவர்கள் இருவரும் இணைவதற்கு கடவுள் அருள் முழுமையாக இருக்குமானால், ஆதி அந்த ரிப்போர்ட்டை படித்து பார்க்க மாட்டான் என்று அவள் முழுமையாக நம்பினாள்.

அதே சமயம், அவளுடைய சிகிச்சைக்கு ஏதாவது வழி இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளவும் அவன் விரும்புவான் என்றும் அவள் எண்ணினாள்.

அவள் எண்ணியதேதான் நடந்தது. ஆதி வெளியே வந்து வந்திருந்த வண்டியை திருப்பி அனுப்பினான். கடவுளுக்கு நன்றி சொல்லிய படியே அவளும் இல்லத்துக்குக் கிளம்பினாள்.

ரகுவிடம் இருந்து அழைப்பு வரும் என்று அவள் நினைத்திருந்ததைப் போலவே, ரகுவும் அடுத்த நாள் அவளை அழைத்தான்.

''என்ன வந்தனா? எனக்கு ஒண்ணுமே புரியலை. உடனே அங்கே இருந்து கிளம்பணும்'' என்று துடிச்ச ஆதி,

இன்னைக்கு எதோ ரிப்போர்ட் அனுப்பி இருக்கான்... பிரிச்சு பார்த்த அது உங்கம்மாவோட ரிப்போர்ட்... சிகிச்சைக்கு வழி இருக்கான்னு விசாரிக்க சொல்றான்... எனக்குத் தலையும் புரியலை... வாலும் புரியலை...'' என்றபோது,

ஒரு நிமிடம் அமைதியாக இருந்த வந்தனா, ''நான் அவர்கிட்ட என்னை கல்யாணம் செஞ்சுக்கும்படி கேட்டிருக்கேன் அண்ணா!'' என்றாள்.

''வாட்!!!???''

அவள் பேசியது தன் காதில் சரியாக விழவில்லையோ என்று நினைத்த ரகு, ''வந்தனா என்னம்மா சொல்றே?'' என்று திருப்பிக் கேட்டான்.

''நீங்க சரியதான் கேட்டீங்க அண்ணா! நான் அவர் கிட்ட என்னைக் கல்யாணம் செஞ்சுக்கும்படி கேட்டிருக்கேன்'' என்று திரும்பவும் அவள் நிதானமாகச் சொல்ல, அதிர்ச்சியில் வாயடைத்து போய் இருந்தான் ரகு.

''அண்ணா! அண்ணா!'' என்று வந்தனா இருமுறை கொஞ்சம் சத்தமாக அழைத்தவுடன், சுய நினைவுக்கு வந்தவன், ''என்ன நடந்தது அங்கே?'' என்று இறுகிய குரலில் விசாரிக்க, வந்தனா முதலில் இருந்து நடந்தது அனைத்தையும் சொன்னாள்.

அனைத்தையும் கேட்டவன், ''நான் இப்போ என்ன செய்யணும்னு எதிர்பார்க்கிறாய்?'' என்று விஷயத்துக்கு வந்தான்.

அவனிடம்தான் அந்த உதவியை கேட்க வேண்டும் என்று தெரிந்தாலும், கொஞ்சம் தயக்கத்துடனே இருந்த வந்தனா, ''சிகிச்சைக்கு வழி இல்லைன்னு அவர்கிட்ட சொல்லணும்'' என்று அவள் மெல்லிய குரலில் சொல்லும் போதே,



''நோ! என்னால் முடியாது!'' என்று உறுதியான பதில் ரகுவிடம் இருந்து வந்தது.

அவன் இப்படித்தான் பதில் சொல்வான் என்று அறிந்திருந்த வந்தனாவும் அமைதியாக இருந்தாள்.

சிறிது நேரத்தில், ரகுவே பேசினான்.

''வந்தனா... நீ என்ன செய்யறேன்னு தெரிஞ்சுதான் செய்யறியா? ஆதியை பற்றி... உனக்கு முழுக்க தெரியும் தானே?'' என்று ரகு வினவ,

''ம்...'' என்ற ஒற்றை வார்த்தைதான் அவள் வாயில் இருந்து வந்தது.

''நீ உன்னோட வாழ்க்கையையே பணயம் வைக்க நினைக்கிறாய் வந்தனா! ஆதி மேல் இருக்கிற பரிதாபம் உன்னை இப்படி எல்லாம் செய்ய வைக்குதுன்னு நினைக்கிறேன்'' என்றான்.

''ப்ளீஸ் அண்ணா! அப்படிச் சொல்லாதீங்க... நான் தான் எல்லாத்தையும் சொல்லிட்டேனே... இது கண்டிப்பா பரிதாபம் கிடையாது... இந்த முடிவுக்கு நாங்க ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருக்கிற அன்புதான் காரணமே தவிர, வேறு எதுவும் இல்லை...'' அவன் புரிந்து கொள்ள வேண்டுமே என்ற தவிப்பு அவள் குரலில் தெரிந்தது.

''நீ என்ன சொன்னாலும் சரி... என்னால இதுக்கு ஒத்துக்க முடியாது!''

''அண்ணா ப்ளீஸ்... உங்க நண்பர் அவர் விரும்பின பெண்ணோட சந்தோஷமா இருக்கணும்னு உங்களுக்குத் தோணலையா?''

''எல்லாம் சரியா இருந்து உன்னை மாதிரி ஒரு பெண் அவனுக்கு மனைவியா அமைஞ்சா சந்தோஷப்படுற முதல் ஆள் நான்தான் வந்தனா... கொஞ்ச நாளே

ஆனாலும், நானும் உன் மேல் ஒரு அண்ணனா பாசம் வச்சிட்டேன்... அப்படி ஒரு அண்ணன் நிலையில் இருந்து உன்னோட வாழ்க்கையை நீ இப்படி பணயம் வைக்கிறதை என்னால அனுமதிக்க முடியாது'' என்று ரகு சொன்னவுடன், அவனது பாசத்தில் வந்தனாவின் மனம் நெகிழ்ந்தது.

தன் நெகிழ்ச்சியை காட்ட இது சமயமல்ல என்று உணர்ந்தவள், ''உங்க நண்பர் நல்லபடியா குணமடைவார்னு உங்களுக்கே நம்பிக்கை இல்லையா அண்ணா?'' என்று கொஞ்சம் கடினமான குரலில் வினவ,

''ப்ளீஸ் வந்தனா... நான் விழிச்சிருக்கிற ஒவ்வொரு நொடியும், ஆதி நல்ல படியா குணமடையணும்னுதான் வேண்டிட்டு இருக்கேன்... ஒரு வேளை... ஒரு வேளை... டாக்டர் சொல்ற மாதிரி தப்பா எதுவும் நடந்துச்சுன்னா உன்னோட நிலையை நினச்சு பார்த்தியா?'' என்று ஆதங்கத்துடன் மொழிந்தான் ரகு.

ரகு, தங்கள் இருவருக்குமாகவே யோசிப்பதையே உணர்ந்த வந்தனா, சிறிது நேர அமைதிக்குப் பின், ''ஆதியோட விஷயத்தில எதிர்மறையா எதுவும் பேச நான் விரும்பலை அண்ணா... ஆனால் நீங்க சொல்ற அந்த 'ஒரு வேளை' என்ற விஷயம்தான் என் முடிவில என்னை உறுதியா இருக்க வைக்குது...'' என்றவளுக்கு தொண்டை அடைத்தது.

அவள் சொல்ல வந்தது என்னவென்று புரிந்தாற்போல ரகுவும் அமைதியாக இருந்தான்.

கொஞ்ச நேரத்தில் தொண்டையை செருமி சரி செய்து கொண்ட வந்தனா, ''ஒரு வேளை டாக்டர் சொல்றபடி தப்பா எதுவும் நடந்திச்சுன்னா... இந்த ரெண்டு



மாசமாவது வேதனையில் உழலாமல், ஒரு இயல்பான... சந்தோஷமான வாழ்க்கையை அவர் வாழணும்னு நான் ஆசைப்படறேன் அண்ணா!'' என்று சொல்லி முடிக்கையில், அவள் கண்களில் நீர் நிறைந்து, குரல் தழுதழுத்தது.

அவள் சொன்னதை கேட்ட ரகுவுக்கும், ரகுவின் கண்களில் நீர் நிரம்பியது. 'கடவுளே! என்ன மாதிரியான அன்பு இது! இதை முழுதாக அனுபவிக்கும் கொடுப்பினையை ஆதிக்கு கொடு!' என்று அவன் மனம் வேகமாக கடவுளை வேண்டியது.

''உன்னை மாதிரி ஒரு பெண்ணின் அன்பு ஆதிக்கு கிடைச்சதை நினச்சு எனக்கு சந்தோஷமா இருக்கு வந்தனா... ஆனால் இப்படிப்பட்ட ஒரு பொண்ணோட வாழ்க்கை எந்த விதத்திலும் பாதிப்படையக் கூடாதுன்னு தான் எனக்கு இப்பவும் தோணுது... ப்ளீஸ் வந்தனா... உன்னோட முடிவை நீ மாத்திக்கிறதுதான் நல்லது'' என்று சொன்ன ரகுவிடம்,

''நான் ஒண்ணு சொல்லட்டுமா அண்ணா! நான் இங்கே வருவதற்கு முன்னாடியும் சரி... இங்கே வரும்போதும் சரி, சல்யாணத்தைப் பற்றி நினைச்சுக் கூட பார்த்ததில்லை... ஆனால் இங்கே வந்து ஆதியை பார்த்ததுக்கப்புறம் எல்லாமே மாறிப் போச்சு... ஒரு வேளை ஆதி என்னை விரும்பாமல் இருந்திருந்தா கூட, என்னால வேற ஒரு வாழ்க்கையை நினைச்சிருக்க முடியாது'' என்றவள்,

''அவ்வளவு ஏன்? இப்பவும் ஆதி என்னைக் கல்யாணம் செஞ்சுக்க சம்மதிக்கலைன்னா கூட, என்னால வேற ஒரு வாழ்க்கையை கண்டிப்பா நினைச்சுப் பார்க்கவே முடியாது அண்ணா! எனக்கு கல்யாணம்னு ஒண்ணு நடந்தால்,

அது ஆதியோட மட்டும்தான்! என்னோட முடிவு எப்போதும், எந்த காரணத்துக்காகவும் மாறாது!'' என்று உறுதியுடன் உரைத்தாள்.

அவள் வார்த்தைகளில் இருந்த உறுதியை உணர்ந்த ரகு, பேச வார்த்தைகள் இன்றி அமைதியாக இருக்கவே, ''சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிட்டேன் அண்ணா! இனிமேல் நீங்கதான் முடிவு செய்யணும்!'' என்று விட்டு, அதற்கு மேல் எதுவும் பேச இயலாமல் அழைப்பைத் துண்டித்தாள்.

அடுத்து வந்த இரண்டு நாட்களில் அவள் ஆதியிடம் மட்டுமல்லாமல், ரகுவிடம் கூட எதையும் கேட்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்து ஆதி அவளை அழைத்து, திருமணத்துக்கு சம்மதம் என்று சொன்னதும் அவள் மனம் கடவுளுக்கு மட்டுமன்றி ரகுவுக்கும் நன்றி சொன்னது.

அறுவை சிகிச்சைக்காக சென்னைக்குச் செல்ல இன்னும் ஒரு வாரமே இருக்கிறது என்று இருந்த நிலையில், வந்தனாவுக்குள்ளும் ஒரு பதட்டம் உருவானது. எப்படி அவனிடம் பேச்சை ஆரம்பிப்பது என்று அவள் தவித்துக் கொண்டிருந்த வேளையில்தான், தங்கள் குழந்தை உருவான செய்தி அவளுக்கு சந்தோஷத்தையும், ஆதிக்கு அதிர்ச்சியையும் கொடுத்தது.

அவன் குழந்தை வேண்டாம் என்று சொன்னது வந்தனாவுக்கு அதிர்ச்சியை அளித்தது. இனிமேலும் எதையும் மூடி மறைப்பதில் பயனில்லை என்பதால்தான் அவன் வாயில் இருந்தே விஷயத்தை வெளி வரச் செய்தாள்.

* * *

வந்தனா நடந்ததை சொல்லி முடித்ததும், அவள் பட்ட வேதனைகளை உணர்ந்த ஆதிக்கு, கொஞ்ச



நேரமே ஆனாலும் அவளை சந்தேகப்பட்டு வருத்தப்பட வைத்ததை எண்ணி வருத்தமாக இருந்தது.

அவளுடைய எதிர்ப்பில்லாத அன்புக்கு தான் தகுதியானவன்தானா என்ற எண்ணம் தோன்றியது.

அவள் பொய் சொல்லித் தன்னைத் திருமணம் செய்திருந்தாலும், அவளது அந்தச் செயலுக்கு தன் மேல் அவள் வைத்த களங்கமில்லாத அன்புதான் காரணம் என்று அவனுக்குப் புரிந்தது.

அவளோடு வாழ்ந்த இந்த ஒன்றரை மாதம், அவன் வாழ்வில் ஒரு பொற்காலம்தான் என்பதை அவனால் மறுக்கவே முடியாது.

சிகிச்சையை எதிர்கொண்டு நல்ல படியாக பிழைத்து வந்தால், இவளோடு காலம் முழுதும் வாழும் வாய்ப்பு இருக்கும் என்னும்போது, அந்த வாய்ப்பை விட்டு விட அவனுக்கு மனமில்லை.

மனதில் தைரியத்தோடு அந்த ஆபரேஷனை செய்து கொள்ள வேண்டும் என்று அவன் மனம் உறுதியாக முடிவெடுத்தது.

எதிர்பார்ப்புடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்த வந்தனா, ஆதி அமைதியாக அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், ஆதியின் அருகில் வந்து மண்டியிட்டு அமர்ந்தபடி, ''நான் சொன்னதெல்லாம் உண்மை தயா... நம்ம கல்யாணத்துக்கு நாம ஒருத்தர் மேல் ஒருத்தர் வைத்திருந்த அன்பு மட்டும்தான் காரணம் தயா... என்னை நம்பறீங்க தானே?'' என்று கண்ணில் உயிரை தேக்கி தவிப்புடன் வினவிய போது,

அதற்கு மேல் தாங்க மாட்டாமல், அவளை இழுத்து தன்னோடு அணைத்துக்கொண்ட ஆதி, ''உன்னை நம்பலைன்னா என்னை நானே நம்பாத மாதிரி வது...

உன்னை வருத்தப்பட வைச்சதுக்காக என்னை மன்னிச்சுடு!'' என்றான்.

கணவனுக்கு தன் வார்த்தையில் இருந்த நம்பிக்கை, மனதில் நிம்மதியை பரவச் செய்ய வந்தனாவும் அவன் அணைப்பில் தன்னை மறந்தபடி நின்றிருந்தாள்.

## 20

சென்னைக்குப் போக வேண்டும் என்று முடிவானதும், ரகுவை அழைத்த ஆதி, ''ரகு... நாளைக்கு நாங்க ரெண்டு பேரும் சென்னைக்கு வரோம்... அம்மா அப்பா கிட்ட எங்கள் கல்யாண விஷயத்தை சொல்லி அவங்களை தயார் பண்ணி வைக்க வேண்டியது உன் பொறுப்பு!'' என்று சொல்ல, ரகுவும் சந்தோசத்துடன் சம்மதித்தான்.

அடுத்த நாள், ஒரு முக்கியமான வேலையாக வெளியூர் செல்ல வேண்டி இருப்பதாக ரம்யா வீட்டினரிடம் சொன்ன போது, ''ரம்யா குட்டி பிறந்த நாளுக்கு நீங்க இருக்க மாட்டீங்களா?'' என்று சங்கரி வருத்தத்துடன் கேட்க,

''நீங்க நேற்று சொன்ன மாதிரி அடுத்த வருஷம், நாங்க மூன்று பேரா ரம்யாகுட்டி பிறந்த நாளுக்கு வருவோம் அக்கா!'' என்று சொல்லி விட்டு ரம்யாவுக்கு பிறந்த நாள் பரிசையும் கொடுத்து விட்டுக் கிளம்பினர்.

தைரியமாக கிளம்பி விட்ட வந்தனாவுக்கு, சென்னையை நெருங்கும்போது, தான் பணத்துக்காக ஆதியை திருமணம் செய்து கொண்டதாக நினைத்து, விஸ்வநாதன் தன்னை ஏதும் சொல்வாரோ என்ற கலக்கம் ஒரு கணம் தோன்றியது. அடுத்த கணமே, அவர் என்ன சொன்னாலும் ஆதிக்காக பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான் என்றும் எண்ணினாள்.



வந்தனாவைப் போலவே நினைத்திருந்த ஆதியும், ரகுவிடம் வந்தனாவைப் பற்றி எதுவும் தவறாகச் சொல்லக் கூடாது என்று தந்தையிடம் வலியுறுத்தும்படி சொல்லி இருந்தான்.

மகன் வருகிறான் என்று வழி மேல் விழி வைத்துக் காத்திருந்த அன்னையை ஓடிச்சென்று அணைத்துக் கொண்டான் ஆதி.

''கண்ணா! கண்ணா!'' என்று கண்ணீர் சொரிந்த படி தன் கன்னத்தை வருடிய அன்னையின் கைகளைப் பற்றிக்கொண்டவன், ''சாரிம்மா... உங்களை ரொம்ப வருத்தப்பட வைச்சிட்டு போயிட்டேன்... அப்போ எனக்கு வேற வழி தெரியலைம்மா... என்னை மன்னிச்சுடுங்கம்மா'' என்ற படி மன்னிப்பு வேண்ட,

''நீ திரும்பி வந்ததே போதும் கண்ணா! இனிமேல் எல்லாம் நல்லபடியா நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு!'' என்று மீனாட்சி சொல்ல, அங்கே தாய்க்கும் மகனுக்கும் இடையே ஒரு உணர்ச்சிகரமான பாசப்பரிமாறல் நடந்தது.

தன்னையே பார்த்துக்கொண்டிருந்த தந்தையிடம் சென்ற ஆதி, ''சாரிப்பா... உங்க பக்கத்தில இருந்து பார்த்தால் நியாயமா தெரிஞ்சாலும் என்னால அப்போ அதை ஏத்துக்க முடியலை... அதான்...'' என்று அவன் முடிக்காமல் நிறுத்த, ஒன்றும் பேசாமல் விஸ்வநாதன் அவனை அணைத்துக்கொண்டார்.

கொஞ்ச நேரம் கழித்து ரகுவிடம் திரும்பியவன், ''ரகு உன்னைக் கூட வருத்தப்பட வச்சிட்டேன்... நீ எனக்கு

செய்திருக்கிற உதவிக்கு நான் என்ன பண்ணப் போறேன்னு தெரியலை'' என்று வந்தனாவை நினைத்தபடி சொல்ல, நண்பனின் கையைப் பற்றி அழுத்திய ஆதி, ''வந்தனா தனியா நிற்கிறாள் பாரு!'' என்றான்.

வந்தனாவிடம் சென்று அவள் கைப்பற்றியபடி பெற்றோரிடம் அழைத்து வந்த ஆதி, ''உங்களுக்கு தெரியாமல் கல்யாணம் செஞ்சுகிட்டதுக்கு என்னை மன்னிச்சிடுங்க... தயவு செய்து ரெண்டு பேரையும் ஆசீர்வாதம் பண்ணுங்க!'' என்றபடி காலில் விழ, ''பல்லாண்டு சந்தோஷமா வாழணும்!'' என்று இருவரும் வாழ்த்தினர்.

வந்தனாவின் கையைப் பற்றி தன் அருகில் அமர்த்திக்கொண்ட மீனாட்சி, ''உன்னை முதல் முதல்ல பார்த்த போது, ஆதி அவன் மனசில நினைச்சிட்டு இருக்கிற பொண்ணு மாதிரி இருக்கேன்னுதான் தோணுச்சு...'' என்று சந்தோஷத்துடன் சொல்ல, வந்தனாவுக்கும் ஆதிக்கும் மனம் நிறைந்து போனது.

விஸ்வநாதன் ஒன்றும் பேசாமல் அமைதியாகவே இருந்தார்.

கொஞ்ச நேரம் எல்லாருமாக உட்கார்ந்து பேசியபடியே உணவை முடித்துக்கொண்ட பின், வந்தனாவை தங்கள் அறைக்குள் கூட்டி வந்தான் ஆதி.

''என்ன தயா? ரகு ஆண்ணா கிட்ட என்ன கேட்டுட்டு இருந்தீங்க?'' என்று வந்தனா வினவ,

''நம்ம திருமணம் கோயிலில் நடந்தது இல்லையா? அதை முறைப்படி பதிவு செய்ய சொல்லி சொன்னேன்'' என்றான் ஆதி.

''இப்போ அதுக்கு என்ன அவசரம்?''

''அதை அப்புறம் சொல்றேன்'' என்ற ஆதி, ''நான் ஒன்னு கேட்கட்டுமா?'' என்று கேட்க, அவன் ரொம்ப



சீரியசாக இருப்பதாகத் தோன்ற, அதை மாற்றும் முயற்சியாக ''ஒண்ணு இல்லை... ரெண்டு கூட கேட்கலாம்!'' என்று புன்னகையுடன் வந்தனா ஒப்புதல் தந்தாள்.

''ஒரு வேளை, இந்த ஆபரேஷனுக்குப் பிறகு எனக்கு ஏதாவது...'' என்று சொல்லிக்கொண்டு வந்தவனை,

''ப்ளீஸ் தயா... எதிர்மறையா நாம எதுவும் பேச வேண்டாமே?'' என்ற வந்தனாவின் கெஞ்சல் தடை செய்தது.

''இல்லை வது... இந்த ஒரு தரம் ப்ளீஸ்!'' என்றவன், ''அப்படி ஏதாவது ஆயிடுச்சுன்னா... நீ உனக்குன்னு ஒரு...'' என்றவனை மேலே பேச விடாமல் வந்தனாவின் கரம் ஆதியின் வாயை மூடியது.

''நீங்க என்ன சொல்ல வரீங்கன்னு எனக்குப் புரியுது தயா... ரகு அண்ணாகிட்ட சொன்னதேதான் நான் இப்பவும் சொல்றேன்... நீங்க என்னை கல்யாணம் செஞ்சுக்காமல் இருந்திருந்தால் கூட என்னால வேற ஒரு வாழ்க்கையை நினைச்சிருக்க முடியாது தயா... இப்போ உங்க கூட நான் வாழ்ந்திருக்கேன்... நம்ம அன்புக்கு சாட்சியா எனக்குள்ள ஒரு உயிர் வளருது... இப்போ போய்... ப்ளீஸ் தயா... இப்படி எல்லாம் பேசி என்னைக் காயப்படுத்தாதீங்க'' என்று சொன்னவள்,

''ஒரு வேளை... ஒரு வேளை தப்பா எதுவும் நடந்திட்டால், நம்ம குழந்தைக்கு ஒரு தாயா, உங்களுக்கு ஒரு நர்சா இருந்து பணிவிடை செஞ்சுட்டு இருந்திடுவேன்'' என்று,

உணர்ச்சியற்ற குரலில் சொல்லி முடிக்க, ''அப்படி சொல்லாதே வது!'' என்று அணைத்துக்கொண்ட ஆதி, ''சாரிம்மா! இனிமேல் இப்படி எதிர்மறையா எதுவும் பேச மாட்டேன்!'' என்று வாக்கு கொடுத்தான்.

சென்னைக்கு வந்த மறு நாளே, மருத்துவப் பரி சோதனைக்குப் போக வேண்டும் என்று வந்தனா வலி யுறுத்த, ''ப்ளீஸ் வது... ரெண்டு நாள் கழிச்சு போகலாம்... எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கு... எப்படியும் ஹாஸ் பிடல் போனோம் என்றால் உடனே அட்மிட் செய்ய சொல்வாங்கதானே?'' என்று இரண்டு நாள் அவகாசம் கேட்க, அவளும் ஒத்துக் கொண்டாள்.

தங்களுக்குத் தெரியாமல்தான் என்றாலும், மகன் வந்தனா மாதிரி ஒரு தங்கமான பெண்ணை மணந்திருக் கிறான் என்பது மீனாட்சியின் தாய் உள்ளத்தை சந்தோஷத் தில் ஆழ்த்தி இருந்தது.

ஆதியை பற்றி எல்லாம் தெரிந்திருந்தும், அவனைத் திருமணம் செய்து கொண்டு, சிகிச்சை வேண்டாம் என்று இருந்தவனை, இங்கே கூட்டி வந்திருக்கிறாள் என்றதும், வந்தனாவின் மேல் அவருக்கு இருந்த நல்ல எண்ணத்தை அதிகப்படுத்தி இருந்தது. வந்த இரண்டு நாட்களாய் அவளைத் தன் அன்பால் குளிப்பாட்டி கொண்டிருந்தார்.

அவர் அப்படி இருந்ததே வந்தனாவுக்கு குற்ற உணர்வைத் தந்தது.

''ஏன் அத்தை? என்ன இருந்தாலும் உங்களுக்குத் தெரியாமல் கல்யாணம் செஞ்சுகிட்டதுக்காக உங்களுக்கு கோபமே வரவில்லையா?'' என்று தன் மாமியாரிடம் வினவினாள்.

''ஒரு விஷயம் சொல்லட்டா வந்தனா? அன்னைக்கு உன்னைப் பார்க்க வந்த போது நான் கலங்கிப் போய் இருந்தேன்... அப்போ ஒண்ணு நீ சொன்னாய்... உங்க பையனோடு போனசா உங்க பேரக்குழந்தையும் வரப் போகுதுன்னு... அப்போ நான் என்ன நினைச்சேன் தெரியுமா?'' என்றவர்,



இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது அருகில் வந்து அமர்ந்த ஆதியின் தோளில் கை வைத்த படியே, ''உன்னோட வாய் முஹூர்த்தம் அப்படி நடந் திட்டால், உன்னையே மருமகளா ஆக்கிக்கணும்னு நினைச்சேன்'' என்ற போது,

வந்தனாவின் மனம் நிறைந்து போனது. ஆதியும் மகிழ்ச்சியோடு அன்னையை அணைத்துக் கொண்டான்.

விஸ்வநாதன் மட்டும் வந்தனாவிடம் இருந்து விலகியே தான் இருந்தார். அவர் மனதில் என்ன இருக்கிறது என்று குழம்பிய மீனாட்சி, வந்தனா கருவுற்று இருப்பதாக அவரிடம் சொல்ல, கண்களில் ஒரு மின்னல் தோன்றி மறைந்ததே ஒழிய, வேறு எதுவும் அவர் பேசவில்லை.

அன்று, ரகு அலுவலகத்தில் இருந்து ஆதிக்கு போன் செய்தான்.

''ஆதி... வக்கீல் வந்திருக்காரு... நீ எதோ லீகல் பேப்பர் தயார் செய்ய சொல்லி இருந்தியாமே?'' என்று ஆச்சரியத் துடன் ரகு வினவ, ''ஆமாம் ரகு... எங்களோட திருமண பதிவு சர்டிபிகேட்டும் ஆபீசில்தானே இருக்கு? இன்னும் அரை மணி நேரத்தில நானும் வதுவும் அங்கே வரோம்'' என்று சொல்லி விட்டு வதுவை அழைத்தவன், அலுவல கத்துக்கு போக வேண்டும் என்பதைச் சொல்ல,

''என்ன விஷயம் தயா?'' என்ற வந்தனாவின் கேள் விக்குப் பதில் சொல்லாமல், ''இன்னும் அரை மணி நேரம் தான்... அங்கேயே போய் தெரிஞ்சிக்கலாம் வா'' என்று அவளை அழைத்துச் சென்றான்.

ஆதி என்னதான் எதிர்மறையாக தன் சிகிச்சை பற்றி பேசுவதில்லை என்று வந்தனாவிடம் வாக்கு கொடுத் திருந்தாலும், அவனுக்கு தான் சிகிச்சைக்கு செல்லு முன்

சில வேலைகளைச் செய்தே ஆக வேண்டும் என்று பட்டது.

அதற்கு முதல் படியாகத்தான் அவர்களது திருமணத்தை முறைப்படி பதிவு செய்தான். தானும் ரகுவும் சேர்ந்து உருவாக்கிய விளம்பர நிறுவனத்தை பார்ட்னர்ஷிப் கம்பெனியாக மாற்றி, ரகுவையும், வந்தனாவையும் பங்குதாரர்களாக நியமிக்கத்தான் வக்கீலிடம் பத்திரத்தை தயார் செய்யச் சொல்லி இருந்தான்.

இதை முன்பே சொன்னால், இருவருமே ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்றுதான் அவன் சொல்லவில்லை. தனக்கு ஏதாவது ஒன்று ஆகி விட்டால், பொருளாதார ரீதியாக வந்தனா யாரையும் சார்ந்திருக்கக் கூடாது என்பதில் ஆதி உறுதியாக இருந்தான்.

ரகுவுக்கு பங்கு கொடுப்பது என்பது ஆரம்பத்தில் இருந்தே அவன் மனதில் இருந்ததுதான். ரகு, அப்போது ஒத்துக்கொள்ளாததால் செய்யவில்லையே தவிர, செய்தாக வேண்டிய விஷயம்தானே என்று எண்ணித்தான் இந்த ஏற்பாட்டை செய்திருந்தான்.

காரில் வரும் நேரம் முழுதும், தன்னோடு எதுவும் பேசாமல் வந்த ஆதியைப் பார்த்தவாறே வந்த வந்தனாவுக்கு, உள்ளுக்குள் எதோ படபடப்பாகவே இருந்தது.

பார்ட்னர்ஷிப் ஒப்பந்தத்தில் இருவரையும் கையொப்பம் இடச் சொன்ன போது, இருவருமே மறுத்தார்கள்.

''ஆதி... இப்போ எதற்கு இதெல்லாம் தேவையில்லாமல்?'' என்று ரகுவும்,

''எதிர்மறையா பேச மாட்டேன்னு சொல்லிட்டு, செயல்ல மட்டும் செய்யலாமா?'' என்று வந்தனாவும் வருத்தத்துடன் கேட்டபோது,



ஆதி, ''நான் நல்ல படியா பிழைச்சு வருவேன்னு உங்க ரெண்டு பேருக்கும் உண்மையிலேயே நம்பிக்கை இருந்தால், கையெழுத்து போடுங்க!'' என்று சொல்லி அவர்கள் வாயை அடைத்தான்.

அவன் பேச்சை மீறாமல் கையெழுத்து இட்டு விட்டு, திரும்ப வரும்போது வந்தனாவின் முகத்தில் வேதனையே இருந்தது. அவளது கையை எடுத்து தன் கையில் வைத்துக்கொண்ட ஆதி, ''எதுக்கு இவ்ளோ வருத்தப்படறே? பங்கு உன்னோட பேர்ல இருந்தா என்ன? என்னோட பேர்ல இருந்தா என்ன? எல்லாம் ஒண்ணுதான்'' என்றவன், அவள் முகம் இன்னும் தெளியாததை கண்டு கேலியில் இறங்கினான்.

''சரிடா... ஆபரேஷன் முடிஞ்சு வந்ததும் என் பேரிலேயே மாத்திக்கிறேன்... அப்போ நீ அதெல்லாம் முடியாது... கம்பெனி என்னோடதுன்னு சொல்லி என்னை வெளியே அனுப்பாமல் இருந்தால் சரி!'' என்று பாவமாக சொல்ல, வந்தனாவின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

''ஓ! பொண்டாட்டிக்கு ஆசையாக கொடுத்திருக்கீங்கன்னு பார்த்தால், திருப்பி வாங்கிப்பீங்களா? கொடுத்தது எதுவும் திருப்பி தரப்பட மாட்டாது!'' என்று அவள் புன்னகையுடன் அறிவிக்க,

''ஆஹா... கொடுத்த எதுவுமே திருப்பி தர மாட்டியா? கம்பெனியை தரலைன்னாலும் பரவாயில்லை வது... மற்ற விஷயங்களை கண்டிப்பா திருப்பி கொடுத்துடு'' என்று, காரில் ஓட்டுனர் இருந்ததால், அந்த 'மற்ற விஷயங்கள்' என்ன என்பதை காதில் ரகசியமாக சொல்ல, வந்தனாவின் முகம் சிவந்தது.

''டிரைவர் எதிர்க்கவே... உங்களை'' என்று ஆதியை முறைத்த வந்தனா, ''வீட்டுக்கு வாங்க, உங்களை கவனிச்சிக்கிறேன்'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''வாவ்! நல்லா கவனி வது! இன்னைக்கு செம மூட்ல இருக்கே போல!'' என்று அவனும் முணுமுணுத்து அவளை மேலும் சிவக்கச் செய்தான்.

அடுத்த நாள், மருத்துவ பரிசோதனைக்கு சென்றவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

டாக்டர் தான் சந்தேகப்பட்ட படியே, ஆதியின் ட்யூமர் கான்சர் கட்டியாக மாறி இருந்ததை சொன்ன போது, எல்லோருமே கலங்கித்தான் போனார்கள்.

## 21

மருத்துவ பரிசோதனையில் ஆதியின் கான்சர் ட்யூமர் கட்டியாக மாறி இருந்ததை சொன்ன மருத்துவர், இது ஆரம்ப கட்டம் என்பதால் மூளையின் மற்ற பாகங்களுக்கு பெரிய அளவில் பாதிப்பில்லை என்று சொன்னதுதான் ஒரே ஆறுதலாக இருந்தது.

அவர் முன்பு சொன்னதை போலவே, நல்ல படியாக ஆதி பிழைத்து வந்தாலும், தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் சொன்னபோது, கடவுளிடம் பிரார்த்தித்துக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

கலங்கி போய் இருந்த மீனாட்சிக்கு, வந்தனாவின் நம்பிக்கையான வார்த்தைகள்தான் ஆறுதலைத் தந்தது.

வந்தனாவுக்குமே மனதில் கலக்கம் இருக்கத்தான் செய்தது. தன்னுடைய கலக்கம் ஆதியை எந்த விதத்திலும் பாதித்து விடக் கூடாது என்று முடிவு செய்தவளாக, தன்னுடைய கலக்கத்தை வெளியில் காட்டாமல் மறைத்தாள்.



விஸ்வநாதனை அழைத்த மருத்துவர், இரண்டு நாளில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டு, ''பயப்படாதீங்க மிஸ்டர். விஸ்வநாதன்... எப்பவும் ஆபரேஷனுக்கு முன்னாடி கவுன்சிலிங் செஷன் மாதிரி நாங்க நோயாளிகளுக்கு வைக்கிறதுண்டு... அந்த செஷனில் ஆதி பேசினதை பார்த்து நானே பிரமிச்சு போயிட்டேன்... நான் மூணு மாசம் முன்னாடி அவரைப் பார்த்ததுக்கும், இப்போ பார்க்கறதுக்கும் ஏராளமான வித்தியாசம் தெரியுது... அவர் மனசில தான் நல்லபடியா பிழைச்சு வரணும் என்ற வெறியும், உறுதியும் இருக்கு... சிகிச்சை நல்ல படியா வெற்றி அடையறதுக்கு இந்த உறுதி ரொம்பவே அவசியம்... அது இப்போ அவர்கிட்ட நிறையவே இருக்கு... சிகிச்சையை அவர் இந்த அளவு தைரியமா எதிர்கொள்ள போறது ஒரு நல்ல அறிகுறி... அதனால நீங்களும் கவலைப்படாமல் இருங்க'' என்றார்.

மருத்துவரின் அறையில் இருந்து வெளியே வந்த விஸ்வநாதனின் கண்களில், தன்னுடைய ஆறுதலான வார்த்தைகளால் மீனாட்சிக்கும், தன் கண்களாலேயே ஆதிக்கும் தைரியம் கொடுத்துக்கொண்டிருந்த வந்தனா தென்பட்டாள்.

தான் சொத்துக்கு வாரிசு வேண்டும் என்று, தன் மகனின் நம்பிக்கையை குலைக்க முயன்றது அவருக்கு நினைவு வந்தது.

வந்தனா பணத்துக்காக தன் மகனைத் திருமணம் செய்திருப்பாளோ என்ற எண்ணம் அவர் மனதில் இல்லாமல் இல்லை. அந்த எண்ணமே அவளிடம் இருந்து அவரை விலகி இருக்க வைத்தது.

சிகிச்சையே வேண்டாம் என்று அவநம்பிக்கையோடு வீட்டை விட்டுப் போன ஆதி, இன்று இவ்வளவு

நம்பிக்கையுடன் வந்திருக்கிறான் என்றால், அதற்கு காரணம் வந்தனாதான் என்ற எண்ணம் அவர் மனதை கரைத்து, 'கடவுளே! இந்த நல்ல பெண்ணின் குணத்துக் காகவாவது ஆதியை நல்ல படியாக பிழைக்க வை' என்று கடவுளிடம் வேண்ட வைத்தது.

இன்னும் இரண்டு நாட்களில் அறுவை சிகிச்சை என்பதால், அன்றே ஆதி அட்மிட் செய்யப்பட்டான்.

அவன் முகத்திலும் சரி, மனதிலும் சரி எந்தக் கலக்கமும் தென்படவில்லை. விளையாட்டாய் அவன் சிரித்துப் பேசிக்கொண்டிருக்க, மற்றவர்களுக்கும் தங்கள் மனக் கலக்கம் குறைவதைப் போலிருந்தது.

இன்று மதியம் அறுவை சிகிச்சை என்ற நிலையில், எப்போதும் கலகலவென பேசிக்கொண்டிருக்கும் வந்தனா, தன் கையைப் பற்றிக்கொண்டு அமைதியாக அமர்ந்திருந்த விதம், அவள் மனதளவில் கொஞ்சம் பயந்து போய் இருக்கிறாள் என்பதை உணர்த்தியது.

அந்த பயத்தைக் களையும் நோக்கத்துடன், ''அதான் பக்கத்தில யாரும் இல்லையே... இன்னும் ஏன் தள்ளிய உட்கார்ந்திருக்க வது? கொஞ்சம் பக்கத்தில்தான் உட் காரேன்... அப்படியே உன் புருஷனை கொஞ்சம் கவனிக் கலாம்... இன்னும் எத்தனை நாள் ஆகுமோ மேடம் என்னை கவனிக்கறதுக்கு?'' என்று வம்பிழுத்தான்.

கணவன் தன் பயத்தை கண்டு கொண்டதை உணர்ந்த வந்தனாவும், ''ஆஹா... இப்போ என்னமோ நான் உங் களை கவனிக்கவே இல்லாத மாதிரி என்ன பேச்சு?'' என்று பதிலுக்கு கேலி பேசினாலும், கட்டிலில் அவன் அருகில் அமர்ந்தாள்.

அவள் கையைப் பற்றியவன், ''என்னம்மா? ஏன் இப்படி உம்முன்னு இருக்க? பயமா இருக்கா?'' என்று



மென்மையான குரலில் வினவ, ''இல்லையே!'' என்று அவசரமாக தலை அசைத்தாள் அவள்.

''இல்லையா? அப்படின்னா சரி... எங்கே வழக்கம் போல உன் புருஷனை கவனி பார்ப்போம்!'' என்றவனின் குறும்பு குரலில் புன்னகை மலர,

''இருக்கிற இடம் ஹாஸ்பிடல்னு ஞாபகம் இருக்கா இல்லையா?'' என்று போலியாக மிரட்டினாள்.

''எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... உனக்குத்தான் இன்னைக்கு எனக்கு ஆபரேஷன்னு மறந்து போயிடுச்சு போல... ஆபரேஷனுக்கு முன்னாடி புருஷனுக்கு பூஸ்ட் மாதிரி ஏதாவது கொடுக்கலாம்னு தோண மாட்டேங்குது பாரு'' என்று அவன் குறைபட,

''சாப்பிடறதுக்கு எதுவும் கொடுக்கக் கூடாதுன்னு சொல்லி இருக்காங்களே?'' என்றவள், அவன் முறைக்க தொடங்கவும்,

''கூல்... கூல்'' என்றபடி அவன் நெற்றியில் தன் இதழ் களை மென்மையாக ஒற்றி எடுத்தாள்.

''இதெல்லாம் செல்லாது! இங்கே வேணும்'' என்றபடி அவன் உதட்டை தொட்டு காண்பிக்க,

''இப்போ உதைதான் தர போறேன் உங்களுக்கு!'' என்று சொல்லிக்கொண்டிருந்தவள், மருத்துவர் உள்ளே வரும் அரவம் கேட்டு கட்டிலில் இருந்து எழுந்தாள்.

''இப்போ தப்பிச்சிட்டே... சீக்கிரம் வந்து வட்டியோடு வசூல் செஞ்சுக்கிறேன்'' என்று அவன் முணுமுணுக்க, அந்த வார்த்தைகளில் இருந்த நம்பிக்கை, வந்தனாவின் மனதில் இருந்த பயத்தை நீக்க உதவி செய்தது.

அதன் பின்னர், ஆதியை அறுவை சிகிச்சை அறைக்கு அழைத்து சென்றனர்.

ஆதியின் அறுவை சிகிச்சை அன்று, விஸ்வநாதனின் தொழிற்சாலையில் இருந்த ஊழியர்கள் அனைவரும், தங்கள் உணவு இடைவேளையின் போது, கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டதை அறிந்த விஸ்வநாதனின் மனம் நெகிழ்ந்தது.

இந்த மூன்று வருடத்தில், தன் மகன், தொழிலாளர்களோடு நடந்து கொண்ட விதமே, இந்த அன்புக்கு காரணம் என்று புரிந்த போது, அவருடைய 'பணமே வாழ்க்கைக்கு ஆதாரம்' என்ற கொள்கை தளர்ந்து போனது.

மதியம் இரண்டு மணிக்கு துவங்கிய அறுவை சிகிச்சை இரவு எட்டு மணி வரையிலும் நீண்டு கொண்டிருந்தது.

உணவைப் பற்றிய எண்ணமே இல்லாமல் இருந்த வந்தனாவை, மீனாட்சிதான் குழந்தைக்காகவேனும் சாப்பிட வேண்டும் என்று வற்புறுத்தி உணவருந்த வைத்தார்.

ஒன்பது மணி அளவில், அறுவை சிகிச்சை அறையின் கதவு திறக்கும் சத்தம் கேட்டதும், அனைவரும் ஒரு பதட்டத்துடன் எழுந்து நின்றனர்.

வெளியே வந்த மருத்துவரின் வாயில் இருந்து வரும் நல்ல வார்த்தைக்காக, அனைவரும் அவரையே வைத்த கண் எடுக்காமல் பார்க்க, அவர்களது தவிப்பை புரிந்த மருத்துவரும், ''வாழ்த்துக்கள் மிஸ்டர். விஸ்வநாதன்... உங்கள் பிள்ளையின் அறுவை சிகிச்சை, நாங்க பயந்த மாதிரி எந்த வித எதிர்விளைவையும் ஏற்படுத்தாமல் நல்ல படியா முடிஞ்சது... எங்களுக்குமே இது சவாலான விஷயமாகத்தான் இருந்தது'' என்று சொல்லி அனைவரின் வயிற்றிலும் பாலை வார்த்தார்.

டாக்டர் வெளியே வந்ததில் இருந்த எதிர்பார்ப்பிலும், பயத்திலுமாக உடல் நடுங்க நின்று கொண்டிருந்த



வந்தனா, அவர் விஷயத்தை சொல்லி முடித்ததும், நீண்ட நேர தவிப்பு முடிவுக்கு வந்த களைப்பில் தொப்பென நாற்காலியில் அமர்ந்தாள்.

சத்தம் கேட்டு திரும்பிய மீனாட்சி, வந்தனாவிடம் விரைந்து வந்தார். மூடி இருந்த கண்களில் இருந்து கண்ணீர் வழிய அமர்ந்திருந்த மருமகளின் மன நிலையை உணர்ந்து ஆறுதலுடன் அவள் கைகளைப் பற்றிக் கொண்டார்.

அரை மணி நேரம் சென்ற பிறது, ''பேஷண்டை ஐசியு அறைக்கு மாத்தியாச்சு... நாளை காலை வரையிலும் மயக்கத்தில்தான் இருப்பார்... யாராவது ஒருத்தர் வேணும்னா போய் பார்த்துட்டு வரலாம்'' என்று ஒரு நர்ஸ் வந்து சொன்னவுடன் கண்களை திறந்தபடி எழுந்து நின்ற வந்தனாவுக்கு, உடனே ஆதியைப் பார்க்க வேண்டும் போலத் தோன்றியது.

அவனது பெற்றோருக்குமே அந்த ஆசை இருக்குமே என்ற நினைப்பில், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றிருந்தாள்.

அவளருகில் வந்த விஸ்வநாதன், ''போம்மா வந்தனா... நீ போய் பார்த்துட்டு வா'' என்று மென்மையான குரலில் சொல்ல, ஆச்சரியத்துடன் நிமிர்ந்து அவரை நோக்கியவள், கண்களாலேயே தன் நன்றியைத் தெரிவித்து விட்டு, கணவனைக் காண விரைந்தாள்.

* * *

விஸ்வநாதனின் இல்லம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

நாளை, ஆதி-வந்தனா தம்பதியரின் மகனுக்கு பேர் சூட்டு விழா, மகனின் திருமணத்தை விமரிசையாக நடத்த முடியவில்லை என்ற குறை விஸ்வநாதனுக்கு இருந்து கொண்டேதான் இருந்தது.

அதனால், குழந்தை பிறந்து மூன்று மாதம் ஆனதும், எல்லாரையும் அழைத்து மருமகளையும், பேரனையும் அனைவருக்கும் அறிமுகம் செய்யப் போவதாக அவர் சொன்ன போது யாரும் மறுப்புக் கூறவில்லை.

பொதுவாக விஸ்வநாதன் ஏதாவது விருந்து வைத்தா ரென்றால், அதில் அவரது அந்தஸ்துகேற்ற விருந்தினர் கள் மட்டுமே பங்கேற்க முடியும்!

ஆனால் நாளைய விருந்தில் முக்கியமான விருந்தாளி கள் அவருடைய தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழி யர்கள்தான்.

ஆதியின் மனதிலும், தொழிலாளர்களை அழைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதை நல்லபடி யாக அப்பாவிடம் சொல்ல வேண்டும் என்று நினைத் திருந்தவன், அப்பாவே அவர்களை அழைத்திருப்பதை அறிந்ததும், ஆனந்த அதிர்ச்சிக்கு உள்ளானான்.

மனைவியிடம் ஒரு சந்தோஷமான விஷயத்தை பகிர்ந்து கொள்ள, மனைவியின் வருகைக்காக கட்டிலில் சாய்ந்து அமர்ந்தபடி அவன் காத்திருக்க, குழந்தையை கையில் ஏந்தியபடி வந்தனா உள்ளே நுழைந்தாள்.

இதே போல், ஒரு நாள் பால் எடுத்துக்கொண்டு உள்ளே வந்த போது, 'இவள், கடவுள் எனக்காக அனுப்பி வைத்த தேவதையோ?' என்று தான் எண்ணியது, ஆதிக்கு ஞாபகம் வந்தது.

'உண்மையிலேயே எனக்கு உயிர் கொடுக்க வந்த தேவதைதான் என் மனைவி!'' என்ற எண்ணம் அவன் உள்ளத்தை நிறைத்தது.

''என்னம்மா இப்போதான் வேலை முடிஞ்சதா? ரூமுக்கு வர இத்தனை நேரமா?'' என்று செல்லக் கோபத் துடன் அவன் வினவ, அதை கண்டுகொள்ளாமல்,



''பாருங்களேன் தயா.. நாளைக்கு விழான்னு நம்ம எல்லாரும் ஏதோ ஒரு வேலை செய்துட்டு, ஏதாவது விட்டுட போகுதேன்னு டென்ஷன்ல இருக்கும்... அதே மாதிரி நம்ம குழந்தையும் டென்ஷனா இருக்கான் போல, எட்டு மணிக்கு தூங்கற ஆளு, இன்னைக்கு பத்து மணி ஆன பின்னாடியும் விழிச்சிட்டு இருக்கான்'' என்று சொன்ன வளிடம் இருந்து ஆதி பிள்ளையை வாங்கி கொண்டான்.

''என்னடா குட்டி? அப்பா இன்னைக்கு ஒரு முக்கிய மான விஷயமா அம்மா கிட்ட பேசலாம்னு நினைச்சால், நீங்க இப்படி தூங்காம இருந்தால் எப்படி?'' என்று விளை யாட்டு காண்பித்தபடி விசாரிக்க, குழந்தை சிணுங்க ஆரம்பித்தான்.

எப்போதும், அனாவசியமாக சிணுங்காத குழந்தை என்பதால், இன்று அவன் அப்படி இருப்பது மனதை வருத்த, கணவன் கையில் இருந்து குழந்தையை வாங்கிக் கொண்ட வந்தனா, அவனை மடியில் படுக்க வைத்த படியே கொஞ்ச ஆரம்பித்தாள்.

''எதுக்கு எங்க செல்ல குட்டி டென்ஷனா இருக்கு, நாளைக்கு நம்ம குட்டியை பார்க்க நிறைய பேர் வரு வாங்களே... அப்போ இப்படி சிணுங்கிகிட்டு இருந்தால், பேட் பாய் என்று சொல்லிட மாட்டாங்களா? நிறைய பேரைப் பார்த்தா கொஞ்சம் பயமாத்தான் இருக்கும்... ஆனால் அவங்க எல்லாருமே, தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, ரகு மாமா மாதிரியே பாப்பாவுக்கு வேண்டிய வங்கதானாம்! அதனால, நாளைக்கு யாரையும் பார்த்து நீங்க பயப்படக் கூடாது சரியா?'' என்று வந்தனா குழந்தையுடன் பேசிக்கொண்டிருப்பதை புன்னகை யுடன் பார்த்துக்கொண்டிருந்த ஆதியின் மனம் மூன்று மாதம் பின்னோக்கிச் சென்றது.

அன்றுதான், ஆதி நல்ல படியாக குணமாகி விட்டான், எந்த சிகிச்சையும் இனி தேவை இல்லை என்று டாக்டர் அறிவித்திருந்தார். அறுவை சிகிச்சையின்போது, ஆதி நல்ல படியாக பிழைத்திருந்தாலும், அதன் பிறகும் அவனுக்கு தொடர்ந்து சிகிச்சை தர வேண்டி இருந்தது.

வேதனை நிறைந்த அந்த சிகிச்சையை, ஆதி மன தைரியத்தோடு சந்தித்து வந்தாலும், உடல் வேதனை இல்லாமல் போகவில்லை.

அதனால், இனி சிகிச்சைக்கு அவசியம் இராது என்று டாக்டர் சொன்னதும், எல்லார் மனமுமே நீண்ட நாளைக்குப் பிறகு சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்தது.

மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்த வந்தனா நேராக பூஜை அறையை நோக்கிச் செல்ல, மற்றவர்கள் வரவேற்பறையில் அமர்ந்து தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டு இருந்தார்கள்.

பூஜை அறையில் இருந்து சத்தம் வரவே, அவசரமாக எழுந்து பூஜை அறைக்குள் போன ஆதி, அங்கே வந்தனா வாய் விட்டு அழுது கொண்டிருப்பதைப் பார்த்ததும் பதறிப் போனான்.

''வது என்னம்மா?'' என்று சொல்லியபடி அவளை நெருங்கப் போன ஆதியை, அவன் பின்னோடு வந்திருந்த மீனாட்சிதான் கைப்பற்றி அழைத்து வந்தார்.

பார்வை மனைவி மீதே படிந்திருக்க, ''ஏன்மா கூப்பிடறீங்க? அவள் அழுதுட்டு இருக்கா அம்மா!'' என்று தவிப்புடன் சொன்னவனிடம், ''அழட்டும் கண்ணா!'' என்று மீனாட்சி நிதானமாக சொல்ல, அதிர்ச்சியுடன் அன்னையைப் பார்த்தான் ஆதி.

சிறிது நேரம் கழித்தே, ''என்னம்மா இப்படி சொல்றீங்க?'' என்ற கேள்வி அவனிடமிருந்து வந்தது.



அவனை சோபாவில் அமர வைத்தவர், தானும் அருகில் அமர்ந்து கொண்டு, ''நீ இத்தனை நாளாய், சிகிச்சையின் போது உடலால் அனுபவித்த வேதனையை எல்லாம், அவள் மனசால பட்டுகிட்டு இருந்தா கண்ணா! உன் வேதனையை பார்த்து, நான் கண்ணீரால என் வேதனையை கரைத்துக் கொண்டேன்... ஆனால் வந்தனா... தனக்கு வந்த கண்ணீரை எல்லாம் சக்தியா மாற்றி நம்ம எல்லாருக்கும் கொடுத்திட்டு இருந்தாள்... அறுவை சிகிச்சை முடிந்த அன்றைக்கு அழுதவள், அதற்குப் பிறகு இத்தனை நாளாய் ஒரு துளி கண்ணீர் கூட சிந்தலை... இவ்வளவு நாளா அடைத்து வைச்சிருந்த கண்ணீரெல்லாம் இப்போ வெளியே வருது... வரட்டும்... இன்னும் ரெண்டு மூணு நாள்ல குழந்தை பிறக்கப் போகுது... அதற்குள்ள அவள் அடக்கி வச்சிருக்கிற கண்ணீர் எல்லாம் வெளியில் வருவதுதான் நல்லது!'' என்று சொல்ல,

அதைக் கேட்டிருந்த விஸ்வநாதனுக்கே, கண்ணில் நீர் கசிந்தது என்றால், ஆதி மற்றும் ரகுவின் நிலையைப் பற்றி சொல்லத் தேவை இல்லை.

எப்போதுமே ஆதிக்கு, அன்னை, மனைவியின் மேல் மரியாதை இருக்கும். அன்று இருந்த மரியாதை பல மடங்குப் பெருகி, இத்தகைய சிறப்பான பெண்கள் இருவரும் எனக்கு தாயும், மனைவியுமாக அமைந்திருக்கிறார்கள் என்று பெருமிதம் அடைந்தது அவன் உள்ளம்!

குழந்தையை தொட்டிலில் தூங்க வைத்து விட்டு வந்த வந்தனா, கணவன் தான் அருகில் வந்து அமர்ந்ததைக் கூட அறியாமல், புன்னகையுடன் அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், அவன் முகத்தருகே கையை ஆட்டி, ''ஹலோ! கண்ணை திறந்துகிட்டே தூங்கறீங்களா என்ன?'' என்று கேலியுடன் விசாரித்தாள்.

அவளை முதல் முதலாய்ப் பார்த்த அன்று, அவள் இப்படி கேட்டது நினைவுக்கு வர புன்னகையுடன், ''ஆமாம்! உன்னைப் பார்த்த அன்னையில இருந்து, நின்னுக்கிட்டே தூங்கறது, கண்ணை திறந்துகிட்டே தூங்கறது, இது மாதிரி வியாதி எல்லாம் வந்திடுச்சு!'' என்றான் ஆதி.

''ப்ச்... என்ன இது? வியாதி அது இதுன்னு சொல்லிக்கிட்டு... நல்ல பேச்சே வாயில வராதே உங்களுக்கு!'' என்றபடி முகத்தைத் திருப்பிக் கொண்டவளை இழுத்து தன் மேல் சாய்த்துக் கொண்டவன்,

''இனிமேல் எந்த வியாதி வந்தாலும் எனக்குப் பயமே இல்லை தெரியுமா?'' என்றான்.

அவன் சொல்லி முடிக்கும் முன்பே, அவனது வாயைத் தன் கையால் மூடியவள், ''ப்ளீஸ்... அனுபவித்த வேதனை எல்லாம் போதாதா? இனிமேல் பேச்சுக்கு கூட இப்படி சொல்லாதீங்க தயா!'' என்றாள் குரலில் கெஞ்சலுடன்.

மனைவியைத் தன் வார்த்தைகள் வேதனைப்படுத்தியதை உணர்ந்து, தன் வாயை மூடி இருந்த அவன் கையில் தன் இதழைப் பதித்தவன், ''சாரிடா! அந்த அளவுக்கு என் மனசு உறுதியா ஆயிருக்குன்னு சொல்ல வந்தேன்! இனிமேல் இப்படிப் பேச மாட்டேன்!'' என்றவன் கை, தன் தோளில் சாய்ந்திருந்த மனைவியின் கன்னத்தை வருடியது.

''புஜ்ஜிம்மா!''

''ம்...''

''புஜ்ஜ்ஜிம்மா!''

''சொல்லுங்க தயா!''

''ஒரு வருஷம் ஆச்சு! ரொம்ப ஏங்கிப் போய் இருக்கேன்!'' என்று அவன் பாவம் போலச் சொல்ல, அவன் என்ன



சொல்ல வருகிறான் என்று புரிந்ததும், வந்தனாவுக்கு கன்னங்கள் சிவந்தது.

இருந்தாலும், ''என்ன ஒரு வருஷம்? எதுக்கு ஏங்கிப் போய் இருக்கீங்க?'' என்று அப்பாவியாய் விழி விரித்துக் கேள்வி கேட்டாள்.

''ஏய்... உதை படுவ! எதுக்குன்னு உனக்குத் தெரியாதாக்கும்?'' என்றவன், ''நானும் உன்கிட்ட இருந்து சிக்னல் வரும் அப்படின்னு ரொம்ப நாளா வெயிட் செஞ்சுகிட்டு இருக்கேன்!'' என்று தாபத்துடன் சொன்னதும்,

''அதென்ன எப்ப பாரு நானேதான் சிக்னல் தரணுமா? நீங்களா ஒரு தடவை கூட எதுவும் செய்ய மாட்டீங்களா?'' என்று சொல்லி விட்டு, வந்தனா அவன் மார்பில் தன் முகத்தை அழுந்த புதைத்துக்கொண்டாள்.

''ஹே! அப்போ நீ ரெடியா?'' என்று குரலில் துள்ளலுடன் கேட்டவனுக்கு, ''ஹய்யோ... இவ்வளவு சொல்லியும் கேள்வி கேட்டுட்டே இருப்பீங்களா? சரியான ட்யூப் லைட்!'' என்று மனைவி முனகியது காதில் விழுந்தது.

''ஏய்... யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொல்றே?'' என்று போலியாக மிரட்டியவன், அவள் சொன்னதைப் பொய்யாக்கும் முயற்சியில் இறங்கினான்.

இருவரும் தங்களது நீண்ட நாள் ஏக்கத்தை, கணவன் மனைவிக்கே உரிய முறையில் தீர்த்து கொண்ட பிறகு, கணவன் கைவளைவில் வாகாக தன் தலையைப் பொருத்திக் கொண்ட வந்தனா, கணவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க, ''என்னடா?'' என்றான் அவன்.

''ரொம்ப சந்தோஷமா இருக்கிற மாதிரி இருக்கீங்க?'' என்று வினவ, ''ஆமாம்... மனசெல்லாம் நிறைஞ்சு போய் இருக்கு... கோவையில நாம வாழ்ந்த அந்த ஒன்றரை

மாசம் நம்ம வாழ்க்கையில உண்மையிலேயே ஒரு பொற் காலம்தான்... இருந்தாலும் நம்ம ரெண்டு பேர் நோய் பற்றின நினைப்புல, அப்பப்போ மனசில பயம் வந்திட்டே இருக்கும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தவன், தன் கைகளில் மனைவியின் கண்ணீரை உணர்ந்து பேச்சை நிறுத்தினான்.

''ஹே... என்ன இது? இப்போ எதுக்கு கண்ணில தண்ணீர்?'' என்று பதறியபடி அவள் கண்ணீரைத் துடைக்க வந்தவனின் கையைத் தன் கன்னத்தில் வைத்து அழுத்திக்கொண்டவள், ''நான் வேற பொய் சொல்லி உங்களை வருத்தப்பட வைச்சிட்டேன் இல்லை?'' என்று கண்ணீருடன் வினவினாள்.

''என்னடா இரு? நீ அந்தப் பொய்யைச் சொல்லி இருக்கலைன்னா, நான் கண்டிப்பா உன்னைக் கல்யாணம் செஞ்சிருக்க மாட்டேன்... வாழணும் என்ற வெறி வந்திருக்காது... சிகிச்சையைத் தைரியமா சந்திச்சிருக்க மாட்டேன்... இவ்வளவு சந்தோஷமா நாம இருந்திருக்க முடியாது... இப்படி இருக்கிறப்போ நீ ஏன்டா அதையே நினைச்சு பீல் செஞ்சிட்டு இருக்க?'' என்று ஆறுதலாக கணவன் சொன்ன வார்த்தை சந்தோஷத்தைத் தர, அவனது கன்னத்தில் சட்டென்று தன் இதழ்களைப் பதித்தாள்.

''என்னடா புஜ்ஜி... ரெண்டாவது ரவுண்டுக்கு ரெடி ஆகிட்டியா என்ன?'' என்று குறும்பு மேலிட வினவிய கணவனின் கன்னத்தைக் கிள்ளியவள், ''இன்னும் கொஞ்ச நேரத்தில் நைட் ட்யூட்டி பார்க்க உங்க பையன் எழுந்திடுவான். ஞாபகமிருக்கட்டும்!'' என்று மிரட்டினாள்.

''ஹூம்... ஆதி அவ்வளவுதான்டா உன் அதிர்ஷ்டம்!'' என்று போலியாக பெருமூச்சு விட்டவனிடம், ''ஏதோ முக்கியமான விஷயம் பேசப் போறேன் என்று உங்க பையன் கிட்ட சொல்லிட்டு இருந்தீங்களே, என்ன



விஷயம்?'' என்று வந்தனா விசாரிக்க, சட்டென்று எழுந்து அமர்ந்த ஆதி, கட்டிலுக்கு அருகில் இருந்த சின்ன மேஜையில் இருந்து ஒரு கவரை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''என்ன தயா இது?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டவளிடம், ''நீயே பிரிச்சுப் பாரு!'' என்றான்.

பிரித்துப் பார்த்தவள், ஆனந்தமாய் அதிர்ந்தாள். ஊரில் அப்பாவின் நிலத்துக்காக போட்டிருந்த வழக்கு அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பாகி இருந்தது.

ஆச்சரியத்துடன் நிமிர்ந்தவள், ''எப்படி தயா? எவ்வளவு வருஷமா இழுத்திட்டு இருந்த கேஸ் இது?'' என்று கேட்க,

''அப்பா கிட்ட சொல்லி இருந்தால் எப்பவோ முடிஞ்சிருக்கும்... லீகலாகவே போகலாம்னு நினைச்சதால்தான் கொஞ்சம் டைம் ஆயிடுச்சு!'' என்றவன்,

''இந்த நிலத்தை நம்ம அந்த அளவு யூஸ் செய்ய மாட்டோம்தானே வது? அதை வித்துட்டு கூட பணம் போட்டு உங்க வீட்டை வாங்கிடலாமா? உங்க அம்மா அப்பா ஞாபகமா உனக்கு ஏதாவது செய்யணும்னு எனக்கு ரொம்ப நாளாவே ஆசை!'' என்றான்.

கணவனைப் பெருமிதமாக பார்த்தவள், ''நான் ஒண்ணு சொல்லட்டுமா தயா? அந்த வீட்டை வாங்கினாலுமே நாம அங்கே போய் இருக்கப் போறதில்லை... அதுக்கு செலவு செய்யறதுக்கு பதிலா, அந்த பணத்தை'' என்று மடமடவென சொல்லிக்கொண்டு வந்தவள்,

கொஞ்சம் தயக்கத்துடன், ''எவ்வளவோ பேர் நிறைய பணம் தேவைப்படுகிற சிகிச்சைக்கு செலவு செய்ய வழி இல்லாமல் இருக்காங்க... அந்த மாதிரி ஆட்களுக்கு ஏதாவது என்ஜிஓ மூலமா உதவி செய்யலாமே? அந்த

வீட்டை வாங்கறதை விட, இதைதான் எங்க அம்மா அப்பாவும் கூட விரும்புவாங்க!'' என்று சொல்ல,

''ஹே... இதுக்கேன் இவ்வளவு தயக்கம்! நீ இப்படி செய்யலாம் அப்படின்னு சொன்னா, அதையே செஞ்சிட லாம்... நீ சொன்னதுக்கப்புறம் நோ அப்பீல்!'' என்று சொன்ன கணவனை பெருமையாய் பார்த்தவளின் முகத் தில், இன்னும் எதோ ஒன்று இருப்பதைக் கண்டவன், ''வேறென்ன?'' என்று விசாரித்தான்.

''மாமா கிட்ட ஒரு வார்த்தை சொல்லிடலாம்!'' என்றாள்.

''அவர் கிட்ட எதுக்கு சொல்லணும்? அவர் நிறைய விஷயங்கள்ல மாறி இருக்கார்னு எனக்குத் தெரியும் வது. இருந்தாலும் அவர் ஏதாவது மறுப்பா சொல்லிட்டா, அவரை எதிர்த்து செய்யற மாதிரி ஆயிடும்... அதை விட சொல்லாமல் இருக்கிறதே பெட்டர்'' என்றவனிடம்,

''இல்லை தயா... அவர்கிட்டே சொல்லிட்டே செய்ய லாம்!'' என்று வந்தனா உறுதியாகச் சொல்ல, அவனும் ''உன் இஷ்டம்!'' என்று முடித்து விட்டான்.

அதற்குள், குழந்தையும் தான் நைட் ட்யூட்டி செய்ய எழுந்து கொண்டதை, தன் சிணுங்கலில் தெரிவிக்க, வந்தனா அவனுக்கு பசியாற்றுவதற்காக எழுந்தாள்.

## 22

ஆதி-வந்தனாவின் குழந்தையின் பெயர் சூட்டும் விழா மிகவும் விமரிசையாக நடைபெற்றது. எல்லாரும் ஒரு மனதாக 'வினயன்' என்ற பெயரை தேர்ந்தெடுத்து இருந் தார்கள்.



அம்மா நேற்று சொன்னது புரிந்தாற்போல, வினயனும் மொத்தமாய் சூழ்ந்திருந்து விருந்தினரைப் பார்த்து மிரண்டு போகாமல், தன் பொக்கை வாய்ச் சிரிப்பைக் காட்டி மயக்கிக் கொண்டிருந்தான்.

ராமநாதனும் சங்கரியும், ரம்யாவோடு வந்திருந்து வினயனை வாழ்த்தி விட்டுச் சென்றார்கள். இன்னும் நான்கு நாட்களில் வரப்போகும் ரம்யாவின் பிறந்த நாள் விழாவிற்கு அவர்கள் அழைப்பு விடுக்க, குழந்தையோடு வருவதாக ஆதியும் வந்தனாவும் வாக்குக் கொடுத்தனர்.

தன் தோழியின் நல்ல மனதுக்கு ஏற்ற மாதிரியே அவ ளுக்கு சந்தோஷமான வாழ்க்கை அமைந்ததை எண்ணி ஜெயாவும் சந்தோஷத்தோடு வினயனை வாழ்த்தினாள்.

விருந்து முடிந்து எல்லாரும் சென்ற பின்னர், வீட்டில் குடும்பத்தினர் மட்டுமே எஞ்சி இருந்தனர். ரகுவும் கூடத் தான். அவனைத்தான் எப்போதோ, தன் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக விஸ்வநாதனும் ஏற்றுக்கொண்டு விட்டாரே!

குழந்தையை தூங்க வைத்து விட்டு வந்த வந்தனா, தன் மாமனாரிடம் நிலம் பற்றிய விஷயத்தைச் சொல்ல, ''பூர்வீக நிலத்தை எல்லாம் விற்க வேண்டாம்! அது அப் படியே இருக்கட்டும்!'' என்று விஸ்வநாதன் வந்தனாவை திகைக்க வைத்தார்.

''இல்லை மாமா... ஒரு நல்ல விஷயம் செய்யலாமே என்றுதான்...'' என்று அவள் இழுக்க,

''தாராளமா செய்யலாம்... அதுக்காக உங்க அப்பா நிலத்தை விற்க வேண்டாம்... அவர் ஞாபகமா அது உன்கிட்டே இருக்கட்டும்... நான் வேணுமானால் அதற்கு ஈடாக பணம் கொடுத்துடறேன்'' என்று சொல்லி விட்டு

உள்ளே சென்றவர் ஒரு காசோலையை வந்தனாவிடம் நீட்டினார்.

காசோலையை வாங்கிப் பார்த்த வந்தனா, அதில் இருந்த தொகையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து, சரியாகத்தான் பார்த்தோமா என்று எண்ணி, மேலும் ஒரு முறை எண்ணாலும், எழுத்தாலும் நிரப்பப்பட்ட தொகையை உற்றுப் பார்த்து விட்டு, நின்ற இடத்திலேயே சிலையாய் நின்றாள்.

அவள் நின்ற நிலையைப் பார்த்து அருகில் வந்த ஆதி, காசோலையை வாங்கிப் பார்க்க, அவனுக்குமே ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பின்னே... அதிகபட்சமாய் இருபது ல்ட்சம் இருக்க கூடிய நிலத்துக்கு ஈடாக என்று அவர் தந்திருந்த தொகை இரண்டு கோடி என்றால், எல்லாருக்கும் ஆச்சரியமாகத் தானே இருக்கும்.

வருமான வரி விலக்குக்காக மட்டுமே இது போன்ற தர்ம காரியங்களை செய்து வந்தவர், திடீர் என்று இவ்வளவு பணத்தைத் தந்தது ஆதிக்கு ஆச்சரியத்தை தந்தது.

''என்ன ஆச்சு? ஏன் ரெண்டு பேரும் அப்படியே நின்னுட்டீங்க?'' என்று புன்னகையுடன் விசாரித்த விஸ்வநாதன், ''வந்தனா... என்ஜிஓ மூலமா உதவி செய்யறதை விட, நாமே இந்த மாதிரி நல்ல காரியங்களுக்காக ஒரு ட்ரஸ்ட் தொடங்கிட்டா என்ன? பார்த்துக்கறதுக்குத்தான் நீ இருக்கியே'' என்று சாதாரணமாகச் சொல்ல,

''நான்... நான் எப்படி மாமா... அதுக்கெல்லாம் நிறைய டைம் ஒதுக்கணும்... சின்னக் குழந்தை இருக்கும்போது எப்படி?'' என்று வந்தனா தடுமாற,

''குழந்தையைப் பற்றி நீ ஏம்மா கவலைப்படுறே? அதான் நானும் மீனாட்சியும் இருக்கோமே? என்



பையனோட குழந்தைப் பருவத்தைத்தான் நான் சரியாய் என்ஜாய் செய்யலை...'' என்றவர், ''இனிமேல் நோ ஆபீஸ் வொர்க்... பேரன் கூட விளையாடுவதுதான் முழு நேர வேலை!'' என்று புன்னகையோடு அறிவித்தார்.

''என்ன ஆதீத்யா... நீயே இனிமேல் முழு வேலையும் பார்த்துப்பாய்தானே? விளம்பர கம்பெனியை பார்த்துக் கத்தான் ரகு இருக்கானே?'' என்றவர், ''என்ன ரகு, நான் சொன்னது சரிதானே?'' என்று ரகுவிடம் விசாரிக்க,

''கண்டிப்பா சார்'' என்றான் அவன்.

''என்ன சாரா? மீனாட்சி அம்மா! நான் மட்டும் சாரா?'' என்று செல்லமாக அதட்ட,

''சாரிப்பா... அப்பப்போ வந்திடுது'' என்று ரகு சொல்ல,

''இனிமே வரக்கூடாது!'' என்று கண்டிப்புடன் விஸ்வநாதன் சொல்ல,

''சரிப்பா!'' என்றான் ரகு.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மற்ற மூவருக்கும் மகிழ்ச்சியால் உள்ளம் நிறைந்தது.

தன் கணவரைப் பெருமையாகப் பார்த்தபடி நின்றிருந்த மீனாட்சியிடம் திரும்பிய விஸ்வநாதன், ''என்ன மீனா? மருமகள் ஒரு நல்ல காரியம் செய்யப் போகிறாள்... நான் அதற்கு என் பங்காக ஒண்ணு செஞ்சுட்டேன்... நீ எதுவும் செய்யலையே? உனக்கு புண்ணியம் வேண்டாமா?'' என்று சிரித்தபடி விசாரிக்க,

பொதுவாக, வெளிப்படையாக பேசாத தன் கணவர், இவ்வளவு வெளிப்படையாகவும், விளையாட்டாகவும் பேசுவது, மீனாட்சியின் உள்ளத்தை குளிர்வித்தது.

அவரும் விளையாட்டாகவே, ''நான் எதை கொடுத்தாலும் பரவாயில்லையா? அப்புறம் எதுவும் சொல்ல மாட்டீங்களே?'' என்று கேட்க,

''நான்தான் மீனா உன் கிட்டே சொல்லிட்டு, கேட்டுட்டு கொடுக்கணும்! நீ உன் இஷ்டப்படி எது வேணுமானால் செய்யலாம்'' என்று விஸ்வநாதன் புன்னகையுடன் அனுமதி கொடுத்தார்.

மற்ற மூவரும் பெரியவர்களின் பேச்சை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே சென்ற மீனாட்சி, கொஞ்ச நேரத்தில் ஒரு பெட்டியுடன் வெளியே வந்தார்.

வந்தவர், வந்தனாவிடம் சென்று, ''இந்தாம்மா! இது தான் நீ ஆரம்பிக்கப் போகும் ட்ரஸ்ட்டுக்கு என்னோட நன்கொடை!''' என்று சொல்லி விட்டு விஸ்வநாதனைப் பார்க்க, மீனாட்சி கொடுத்தது என்னவென்று உணர்ந்த அவரும் மன நிறைவோடு புன்னகைத்தார்.

பெட்டியைத் திறந்து பார்த்த வந்தனாவுக்குத்தான் அதிர்ச்சியாக இருந்தது.

உள்ளே இருந்தது, ஆதியின் வீட்டுப் பரம்பரை வைர ஒட்டியாணம்!

''இது பரம்பரையா வந்தது என்று ஆதி சொன்னாரே அத்தை?'' என்று அதை வாங்கிக் கொள்ள வந்தனா தயக்கம் காட்டினாள்.

''எந்த ஒரு பொருளுக்குமே அதை சரியாக பயன் படுத்தினால்தான் மதிப்பு! இவ்வளவு நாள், இது வெறும் நகைதான் வந்தனா! இதை நீ பயன்படுத்தப் போற விதத்தில்தான் இதுக்கு உண்மையான மதிப்பே கிடைக் கப் போகுது!'' என்று மீனாட்சி சொல்ல, பெருமையுடன் மாமியாரைப் பார்த்த வந்தனா, சந்தோஷத்துடன் அதை வாங்கிக் கொண்டாள்.



மேலும், சிறிது நேரம் விஸ்வநாதன்-மீனாட்சியிடம் பேசி விட்டு, தங்கள் அறைக்கு வந்த ஆதிக்கு மனம் ஒருவிதமான பெருமிதத்தில் விம்மிக் கொண்டிருந்தது.

சந்தோஷமாகவே இருந்தாலும் மனைவியின் முகத்தில் ஒரு வித யோசனை படிந்திருப்பதைக் கண்ட ஆதி, ''என்ன மேடம், யோசனை எல்லாம் பலமா இருக்கு? ஏற்கனவே மாமியார் மெச்சிய மருமகள்தான்! இப்போ மாமனாரும் மெச்சுகிற மருமகளாகவும் ஆயாச்சு! இன் னும் எந்த கோட்டையைப் பிடிக்க யோசனை?'' என்று பெருமிதம் கலந்த கேலியோடு விசாரித்தான்.

''மாமா ரொம்ப பெரிய வேலை செய்ய சொல்லி இருக்காரே தயா... என்னாலே இதை செய்ய முடியுமா?'' என்று அவள் கவலையுடன் வினவ,

''என் வதுவால முடியாதது ஏதாவது இருக்கா என்ன?'' என்றவன், அவள் ''ப்ச்...'' என்று சலித்துக்கொள்ளவும், அவள் கையைப் பற்றிக்கொண்டு,

''இந்த வேலை செய்யறதுக்கு பணத்தை விட மனம் தாண்டா முக்கியம்! அது உன்கிட்ட நிறையவே இருக்கு... நாமே செய்யும்போது, சரியான நபருக்கு போய்ச் சேரு கிற மாதிரி செய்ய முடியும் இல்லையா? அதே சமயம் நிறைய பேருக்கும் செய்யலாம்! முதலில் கொஞ்சம் கஷ்டமா இருந்தாலும், போகப் போக சரி ஆகிடும்'' என்று நம்பிக்கையுடன் சொல்ல, அவளுக்கும் அதே நம்பிக்கை தோன்றியது.

நம்பிக்கையோடு புன்னகைத்தவளிடம், ''ஹப்பாடா! சிரிச்சிட்டியா? எங்கே உன்னைச் சமாதானம் செய்ய நேரமாகிடுமோ... அப்புறம் நம்ம பையன் எழுந்துக்கற துக்கு முன்னால செய்ய வேண்டிய வேலையைச் செய்ய

முடியாதோன்னு கவலைப்பட்டேன்!'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவனின் பேச்சு, முதலில் புரியாவிட்டாலும், கணவனின் பார்வையில் விஷயத்தைப் புரிந்து கொண்ட வந்தனா,

''அடடா! எப்ப பாரு இதே பேச்சுத்தானா?'' என்று போலியாக சலித்துக் கொண்டாள்.

''என்ன வது? நீதானே கல்யாணம் ஆன புதிசில, நாம எப்பவுமே சந்தோஷமா இருக்கணும்னு சொல்லி இருக்க?'' 'சந்தோஷமாக' என்பதில் அவன் கொடுத்த அழுத்தம் சிரிப்பை வரவழைத்த போதும்,

''ஆரம்பிச்சிட்டீங்களா? மறந்து போய்ட்டிங்கன்னு சந்தோஷமா இருந்தேன்!'' என்று வந்தனா சொல்ல,

''அதெப்படி? பொண்டாட்டி சொன்னா கேட்டுக்கணும் வது! அதுவும் இந்த மாதிரி விஷயத்தை எல்லாம் கண்டிப்பா கேட்டுக்கணும்! மறக்கவே கூடாது!'' என்று கர்ம சிரத்தையாகச் சொல்லி விட்டு ஆதி அவளை நோக்கி கையை நீட்ட, அதற்கு மேல் சிரிப்பை அடக்க முடியாமல், கலகலவென நகைத்தபடியே கணவனின் தோளில் சாய்ந்தாள், அந்த அன்பு மனைவி.

அவர்கள் இல்லற வாழ்க்கை சிறப்பாக அமைந்ததைப் போலவே, அவர்கள் செய்யப் போகும் பொது நலப்பணியும் சிறப்பாகவே அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

★